கேள்வி: மேலே சொல்லப்பட்ட மூன்றுவிதமான ப்ராணாயாமங்களுடன் கூட, ஜபம் செய்வது அவசியமா, இல்லையா? அவசியமானால் ஓம்கார ஜபமா? மற்ற ஏதாவது பகவந்நாம ஜபமா?

பதில்: ஓம்காரம் ஸத் சித் ஆனந்தமயமான பூரண ப்ரம்மத்தைச் சொல்வது *(17/23)*. எந்தவிதமான நல்ல கார்யத்தைச் செய்ய ஆரம்பித்தாலும் இதை உச்சரிப்பது அவசியம்; உத்தமம் *(17/24)*. ஆகவே, இங்கு கூறப்பட்ட யாகங்கள் அனைத்திலும் பகவந்நாம ஜபமும் சேர்ந்தே இடம் பெறுகிறது. ஆம், ஓம்கா்ரத்தின் இடத்தில் **ஸ்ரீ**ராம, **ஸ்ரீ**க்ருஷ்ண, **ஸ்ரீ**சிவ முதலிய பகவந்நாமங்களில் யாருக்கு எது பிடிக்குமோ, எதில் ருசியும், ச்ரத்தையும் உள்ளதோ, அந்த நாமத்தைச் சொல்லலாம். ஏனெனில், பரமாத்மாவினுடைய எந்த நாமமும், ச்ரத்தையையும், நம்பிக்கையையும் பொறுத்துப் பயனளிக்கக் கூடியதுதான். இங்கு எல்லா ஸாதனைகளும் யக்ஞம் என்ற உருவகத்தில் கூறப்பட்டுள்ளன. மந்த்ரமில்லாத யக்ஞம் தாமஸமானது *(17/13)*. ஆகவே மந்த்ரத்தின் இடத்தில் பகவந்நாமத்தைச் சொல்வது மிகவும் அவசியம். மேலே சொல்லப்பட்ட ப்ராணாயாமம் என்கிற யாகத்தில் ஒன்று, இரண்டு, மூன்று என்ற எண்ணிக்கைகளை விரலை மடக்குவதாலும், மாத்ரை முதலிய கணக்குகள் பண்ணிக்கொண்டே இருப்பதாலும் மந்த்ரஜபம் குறைவுபடுகிறது. ஆகவே அது ஸாத்விக யக்ஞம் ஆகாது. ஆகவே ப்ராணாயாம யக்ஞத்தில் நாமஜபம் மிகவும் அவசியம். கூடவே இஷ்ட தெய்வத்தை த்யானம் செய்யவும் வேண்டும்.

கேள்வி: மேலே சொன்ன ஸாதனை புரிபவர்கள் 'யாகத்தின் மூலம் பாவங்களை அழிக்கிறார்கள், யக்ஞங்களை அறிகிறார்கள்' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: 23வது ச்லோகத்தில் யக்ஞத்தின் பொருட்டுக் கர்மங்களை அனுஷ்டிப்பவர்களுடைய கர்மங்கள் அனைத்தும் லயமடைகின்றன என்று சொன்னதைத்தான் இங்குத் தெளிவாக விளக்குகிறார். 24வது ச்லோகம் முதல் இதுவரை, எந்த யாக அனுஷ்டானம் பண்ணுபவர்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறதோ, அவர்கள் எல்லோரும் மமகாரம், பற்று, பயனில் கருத்து இவையில்லாமல் யக்ஞத்திற்காகக் கடமைகளையாற்றி, அவற்றின் மூலம் முன்வினையான, மனப்பதிவுகளான ஸம்ஸ்காரங்கள் ஆகிய நல்லதும், தீயதுமான கர்மங்களை அழிக்கிறார்கள். இவர்களே யக்ஞத்தின் தத்வம் அறிந்தவர்கள். ஆனால் மேலே சொன்ன ஸாதனைகளைப் பயனில் கருத்துக் கொண்டு, உலகியல் போகம் பெறுவதற்காகச் செய்பவர்கள் கர்மங்களைச் செய்யாமல் விட்டவர்களைக் காட்டிலும் மேலானவர்களானாலும் யக்ஞத்தின் தத்வம் அறிந்து யக்ஞத்திற்காகக் கடமை செய்தவர்கள் ஆகமாட்டார்கள். ஆகவே அவர்கள் கர்மபந்தத்திலிருந்து விடுதலை பெறமாட்டார்கள்.

பொருத்தம்: **இவ்விதம் யக்ஞம் செய்பவர்களின் பெருமையைப் பேசி, அந்த யக்ஞங்களைப் புரிவதால் விளையும் லாபத்தையும், செய்யாமல் விட்டால் நேரும் தீங்கையும் விளக்கி, பகவான் மேலே சொன்னபடி யாகங்கள் செய்யவேண்டிய அவசியத்தை நிரூபிக்கிறார்—**

यज्ञशिष्टामृतभुजो यान्ति ब्रह्म सनातनम्।
नायं लोकोऽस्त्ययज्ञस्य कुतोऽन्यः कुरुसत्तम॥ ३१॥

யஜ்ஞஶிஷ்டாம்ருதபு₄ஜோ யாந்தி ப்₃ரஹ்ம ஸநாதநம் ।

நாயம் லோகோऽஸ்த்யயஜ்ஞஸ்ய குதோऽந்ய: குருஸத்தம ॥ 31 ॥

குருஸத்தம – குரு வம்சத்தில் சிறந்தவனான அர்ஜுன! **யஜ்ஞ ஶிஷ்ட அம்ருத–பு₄ஜ:** – யக்ஞத்தில் எஞ்சிய அமுதத்தைப் பருகுகின்ற (யோகிகள்), **ஸநாதநம்** – ஶாஶ்வதமான, **ப்₃ரஹ்ம** – பரப்ரம்ம பரமாத்மாவை, **யாந்தி** – அடைகிறார்கள். **அயஜ்ஞஸ்ய** – யக்ஞம் செய்யாதவருக்கு, **அயம் லோக:** – மனித உலகமே (இவ்வுலகமே ஸுகமளிப்பதாக), **ந அஸ்தி** – இல்லை. (அப்படியிருக்க), **அந்ய:** – பரலோகம், **குத:** – எப்படி (ஸுகமளிக்கும்)?

குரு வம்சத்தில் சிறந்தவனான அர்ஜுன! யக்ஞத்தில் எஞ்சிய அமுதத்தைப் பருகுகின்ற யோகிகள் ஶாஸ்வதமான பரப்ரம்ம பரமாத்மாவை அடைகிறார்கள். யக்ஞம் செய்யாதவருக்கு (மனித உலகமே) இவ்வுலகமே ஸுகமளிப்பதாக இல்லை. அப்படியிருக்கப் பரலோகம் எப்படி ஸுகமளிக்கும்?

கேள்வி: யக்ஞத்தில் எஞ்சிய அமுதம் என்றால் என்ன? அதைப் பருகுதல் என்றால் என்ன?

பதில்: உலக வழக்கில், தேவதைகளுக்காக அக்னியில் நெய் முதலிய த்ரவ்யங்களை ஹோமம் செய்வது 'யாகம்' ஆகும். அதில் மிகுந்ததை ப்ரஸாதமாக உண்பது உண்டு. அதுதான் யக்ஞத்தில் மிஞ்சிய அமுதம். இவ்விதமே ஸ்ம்ருதிகாரர்கள் ஐந்து மஹாயக்ஞங்களைப் பற்றிக் கூறுகிறார்கள். அதாவது தெய்வம், ரிஷிகள், முன்னோர்கள், மனிதர்கள், மற்ற உயிரினங்கள் இவர்களுக்குத் தம் சக்திக்கேற்றவாறு முறைப்படி உணவைப் பகுத்தளித்தபிறகு மீதமுள்ளதை யாகத்தின் மீதமான அமுதம் என்பர். ஆனால் இங்கு பகவான் யாகங்களின் பேரால் பரமாத்மாவை அடைதற்கான ஞானம், ஸம்யமம், தவம், யோகம், சாஸ்த்ரங்களைக் கற்பது, ப்ராணாயாமம் முதலிய ஸாதனங்களைக் கூறுகிறார். இவற்றுக்கும், உணவுக்கும் ஸம்பந்தம் இல்லை. ஆகவே மேலே சொன்ன ஸாதனைகளைச் சரிவரக் கடைப்பிடித்து, ஸாதகர்களுடைய உட்புலன்கள் தூய்மை பெற்று, அதனால் பெறும் ப்ரஸாதமான மன அமைதியை *(2/64,65; 18/36,37)* 'யக்ஞத்தில் எஞ்சிய அமுதம்' என்று கொள்ள வேண்டும். ஏனெனில் அவை அமுதமயமான பரமாத்மாவை அடையும் உபாயங்கள். அப்படி பரிசுத்தமான மனநிலையில் உண்டாகும் ஸுகத்தில் எப்பொழுதும் த்ருப்தி அடைவதே இங்குச் சொல்லப்பட்ட 'அமுத அனுபவம்' (அமுதத்தைப் பருகுதல்) ஆகும்.

கேள்வி: மேலே சொன்ன பரமாத்மாவை அடைவதற்கான ஸாதனைகளைப் புரிகின்ற ஸாதகர்களுக்குப் பரமாத்ம லாபம் இப்பிறவியிலேயே உண்டா? அல்லது அடுத்துவரும் பிறவிகளிலா?

பதில்: இது அவரவர் ஸாதனையின் நிலையைப் பொறுத்தது. ஸாதனையில் மன ஈடுபாடு குறைவற்று இருப்பவருக்கு, இதே பிறவியில் வெகுவிரைவில் ஸநாதன ப்ரம்மத்துடன் ஐக்யம் கிடைத்துவிடும். ஸாதனையில் குறைபாடுள்ளவருக்கு, அந்தக் குறை நீங்கிய பிறகு அது கிடைக்கும். ஆனால் மேலே சொன்ன ஸாதனை வீண் போவதில்லை. இந்த ஸாதகர்களுக்கு பரமாத்ம ப்ராப்தியென்ற லாபம் அவசியம் உண்டு *(6/40)*. இதை உறுதி செய்வதற்காகவே பொதுவாக இங்கே இத்தகைய ஸாதகர்கள் ஸநாதனமான ப்ரம்மத்தை அடைவர் என்று சொன்னார்.

கேள்வி: ஸநாதன ப்ரம்மத்தை அடைவதென்றால் ஸகுண ப்ரம்மத்தை அடைவதா, அல்லது நிர்குண ப்ரம்மத்தையா?

பதில்: ஸகுண ப்ரம்மம், நிர்குண ப்ரம்மம் என்று இரண்டு இல்லை. ஸத் சித் ஆனந்தமயமான பரமேசுவரன்தான் ஸகுண ப்ரம்மம்; அவரே நிர்குண ப்ரம்மமுமாவார். அவரவர் பாவனை, நம்பிக்கைக்கு ஏற்றாற்போல, ஸாதகர்களுடைய பார்வையில் ஸகுணம் என்றும், நிர்குணம் என்றும் வேறுபாடு தோன்றுகிறது; அது உண்மையன்று. ஸநாதன ப்ரம்ம நிலையை எட்டினபிறகு எந்த வேறுபாடும் இருக்காது.

கேள்வி: இங்கு 'அயஜ்ஞஸ்ய' என்ற சொல் யாரைக் குறிக்கிறது? அவனுக்கு இவ்வுலகமே ஸுகமளிக்காது. பரலோகம் எப்படி அளிக்கும் என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: மேற்கூறிய யக்ஞங்களில் அதாவது ஸாதனைகளில் ஒன்றையோ அல்லது சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ள பற்பலவிதமான, மற்ற யக்ஞங்களில் ஒன்றையோ, எந்தவிதத்திலும் செய்யத் தவறும் ஒருவன் மனிதப்பிறவியின் கடமையை ஆற்றத் தவறிவிடுகிறான். அவனை 'அயஜ்ஞஸ்ய' என்ற சொல் குறிக்கிறது. அவனுக்கு இவ்வுலகமே ஸுகமளிக்காது எனில், பரலோகம் எப்படி ஸுகம் அளிக்கும்? மேலே சொன்ன யக்ஞங்களைச் செய்யத் தகுதி பெற்றபிறகு கூட, அவற்றில் ஈடுபடாததால், அவனுக்கு முக்தியே

கிடைக்காது என்பது மட்டுமன்று; ஸ்வர்கமும் கிடைக்காது. முக்திக்கு வழியான இந்த மனிதப் பிறவியில் மனஅமைதியும் கிடைக்காது. பரதத்வ ஸாதனையில் ஈடுபடாத மனிதனை, எப்பொழுதும் இடைவிடாமல் பலவிதக் கவலைகள் நெருப்புக்கொழுந்தாகச் சூழ்ந்து வாட்டும். பிறகு துன்பத்தை மட்டும் அனுபவிக்கக் கூடிய பிறவிகளில் ஆழ்த்தும். அப்பிறவிகளில் மேன்மைக்குரிய செயல்களைச் செய்ய முடியாதென்பது மட்டுமன்று; அமைதியும் கிட்டாது. மனிதப்பிறவியில் செய்த புண்ய பாவப் பயன்களைத்தான் ஏனைய பிறவிகளில் அனுபவிக்க முடியும். ஆகவே, இந்த மனிதப் பிறவியில் கடமைகளைச் செய்யத் தவறுபவர்களுக்கு எப்பிறவியிலும் ஸுகம் கிடையாது.

கேள்வி: இவ்வுலகில் சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட உத்தம கர்மங்களைச் செய்யாமல் இருப்பவர்களுக்கும், சாஸ்த்ர விபரீதமாக நடப்பவர்களுக்கும் கூட மனைவி-மக்கள், செல்வம், மதிப்பு, பெருமை, கீர்த்தி முதலிய விருப்பமான நலன்கள் கிடைத்து ஸுகமாக இருப்பதைப் பார்க்கிறோமே! அப்படியிருக்க யக்ஞம் செய்யாதவருக்கு இவ்வுலக ஸுகம் இல்லை என்று சொல்வது எப்படி?

பதில்: மேலே சொன்ன விருப்பமான நலன்கள் பெற்று அவர்கள் ஸுகமாக இருப்பது கூட முன்பு சாஸ்த்ர முறைப்படி செய்யப்பட்ட புண்ய கர்மங்களின் பயன்தான்; பாவச் செயல்களின் பயன்கள் அல்ல. இந்த ஸுகங்கள் இப்பிறவியில் செய்த பாவ கர்மங்களின் பயன் என்றோ, புண்ய கர்மங்களைச் செய்யாமல் விட்டதன் பயன் என்றோ நினைக்கவே கூடாது. மேலும் மேற்படி ஸுகங்கள் உண்மையில் ஸுகங்களும் அல்ல. அதனால்தான் பரமாத்மாவை அடைவதற்கு முக்ய ஸாதனமான இந்த மனிதப்பிறவி கிடைத்தும், ஸாத்விகமான, ஸத்யமான ஸுகத்தைப் பெறாமல், அறியாமையினால், பலவிதமான போக வாஸனைகளினால் ஈர்க்கப்பட்டுத் துன்பத்திலும், கவலையிலும் ஆழ்ந்து போகிறான். பகவானின் அபிப்ராயம் இதுவே.

கேள்வி: மகன் தாய்-தந்தையருக்கு ஸேவை செய்யவேண்டும்; மனைவி கணவனுக்கு ஸேவை புரியவேண்டும். சிஷ்யன் குருவிற்கு ஸேவை புரியவேண்டும். இப்படி சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட பல கடமைகள் யக்ஞத்திற்கான கர்மங்களில் அடங்குமா இல்லையா? அத்தகைய கடமைகளை ஆற்றுபவர்கள் ஸநாதனமான ப்ரம்மத்தை அடைய முடியுமா, முடியாதா?

பதில்: மேலே சொன்ன கடமைகள் அனைத்தும் ஸ்வதர்மத்தைக் கடைப்பிடிப்பதில் அடங்கும். இத்தகைய ஸ்வதர்மத்தைக் கடைப்பிடித்தல் என்ற யக்ஞத்தின் தொடர்ச்சி நன்கு காக்கப்பட வேண்டும் என்ற பகவானின் கட்டளையையேற்றுக் கொண்டு, தன்னலம் கருதாமல் செய்யப்படும் போர், வேளாண்மை, வணிகம் முதலியவை யக்ஞ கர்மத்தில் அடங்கும். அதைச் செய்பவர்கள் ஸநாதன ப்ரம்மத்தை அடைவது போலவே, மகன் தாய்-தந்தையரைப் பேணுவது, சிஷ்யன் குருவிற்கு ஸேவை செய்வது, மனைவி கணவனைப் பரமாத்மாவாகவே கருதி அவருக்கு ஸேவை செய்வது, இவர்கள் பணிவிடைக்குரியோரின் ஸுகத்திற்காகவே தன்னலம் கருதாது உழைப்பது - இவையெல்லாமே யக்ஞத்திற்கான கர்மங்கள்தாம். அவற்றால் மனிதன் ஸநாதன ப்ரம்மத்தை அடைவான் என்று சொல்லவும் வேண்டுமா?

கேள்வி: இந்த ஸந்தர்பத்தில் வெவ்வேறு யக்ஞங்களின் பெயர்களைச் சொல்லி, வெவ்வேறு ஸாதனைகள் கூறப்பட்டன. இவை ஞானயோகிகளுக்கு உரியனவா அல்லது கர்மயோகிகளுக்கா?

பதில்: 24வது ச்லோகத்தில் சொல்லப்பட்ட ப்ரம்மயக்ஞம், 25வது ச்லோகத்தின் பின்பாதியில் கூறப்பட்ட ஆத்மா, பரமாத்மாக்களின் அபேத தர்சன யக்ஞம் - இவையிரண்டும் ஞானயோகிகளுக்கு உரியவை. ஏனெனில் அந்த ஸாதகர்கள் ப்ரம்மத்தைத் தவிர வேறானவர் அல்லர். கர்மயோகி இவற்றைக் கடைப்பிடிக்க முடியாது. இவை தவிர, மற்ற எல்லா யக்ஞங்களையும் ஞானயோகியும் செய்யலாம்; கர்மயோகியும் செய்யலாம். இவற்றில் எந்தவிதமான தடையும் இல்லை.

பொருத்தம்: 16வது ச்லோகத்தில் பகவான் அர்ஜுனனைப் பார்த்து 'உனக்குக் கர்ம தத்வத்தைச் சொல்வேன். அதனால் நீ பாவத்திலிருந்து விடுபடுவாய்' என்று கூறியபடி 18வது ச்லோகம் முதல் இதுவரை கர்ம தத்வத்தை விளக்கி, இந்த ச்லோகத்தில் அதைத் தலைக்கட்டுகிறார்—

एवं बहुविधा यज्ञा वितता ब्रह्मणो मुखे।
कर्मजान्विद्धि तान्सर्वानेवं ज्ञात्वा विमोक्ष्यसे॥ ३२॥

ஏவம் ப₃ஹுவித₄ா யஜ்ஞா விததா ப்₃ரஹ்மணோ முகே₂ ।

கர்மஜாந்வித்₃தி₄ தாந்ஸர்வாநேவம் ஜ்ஞாத்வா விமோக்ஷ்யஸே ॥ 32 ॥

ஏவம் – இவ்விதம் (இன்னும்), **ப₃ஹுவித₄ா:** – அநேகவிதமான, **யஜ்ஞா:** – யக்ஞங்கள், **ப்₃ரஹ்மண: முகே₂** – வேதங்களில், **விததா:** – விரிவாகக் கூறப்பட்டுள்ளன. **தாந் ஸர்வாந்** – அவை எல்லாவற்றையும், **கர்மஜாந்** – மனம், புலன்கள், உடல் ஆகியவற்றால் செய்து நிறைவேற்றப்பட வேண்டியவை என்று, **வித்₃தி₄** – (நீ) அறிந்து கொள். **ஏவம் ஜ்ஞாத்வா** – இவ்வாறு தத்வரீதியாக அறிந்து (அவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் நீ கர்மபந்தத்திலிருந்து முற்றிலும்), **விமோக்ஷ்யஸே** – விடுதலை பெறுவாய்.

இவ்விதம் இன்னும் அநேகவிதமான யக்ஞங்கள் வேதங்களில் விரிவாகக் கூறப் பட்டுள்ளன. அவை எல்லாம் மனம், புலன்கள், உடல் ஆகியவற்றால் செய்து நிறைவேற்றப்பட வேண்டியவை என்று நீ அறிந்து கொள். இவ்வாறு தத்வரீதியாக அறிந்து அவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் நீ கர்மபந்தத்திலிருந்து முற்றிலும் விடுதலை பெறுவாய்.

கேள்வி: 'இவ்விதம் இன்னும் பலவிதமான யக்ஞங்கள் வேதங்களில் கூறப்பட்டிருக் கின்றன' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: இதுவரை ஸாதனைகள் என்ற முறையில், எந்த யக்ஞங்களைக் குறிப்பிட்டேனோ, அவ்வளவுதான் என்றில்லை. இன்னும் ப்ரதீக உபாஸனை (உருவ வழிபாடு) முதலிய ப்ரம்மத்தை அடையும் பலவிதமான உபாயங்கள் வேதங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. செருக்கு, மமகாரம், பற்று, பயனில் விருப்பம் இவற்றைத் துறந்து, அந்த ஸாதனைகளை நிறைவேற்றும் ஸாதகர்கள் அனைவரும் யக்ஞத்தின் பொருட்டுக் கடமை ஆற்றுபவர்கள்தாம். ஆகவே மேலே சொன்ன யக்ஞங்களைச் செய்பவர்களைப் போல அவர்களும் கர்மபந்தத் திலிருந்து விடுதலை பெற்று, ஸநாதன ப்ரம்மத்தை அடைவார்கள் என்று கூறுகிறார்.

கேள்வி: இங்கு 'ப்ரஹ்ம' என்ற சொல்லுக்கு வேதம் என்று பொருள் கூறப்பட்டது. ப்ரம்மாவின் வாய்மொழி அல்லது பரமாத்மாவின் வாய்மொழி என்று கூறினால் என்ன? ஏனெனில் ப்ரஜாபதியான ப்ரம்மா யக்ஞங்களோடு கூட ப்ரஜைகளைப் படைத்தார் *(3/10)* என்றும், பரமேசுவரனால் வேதங்கள், யக்ஞங்கள், ப்ராம்மணர்கள் படைக்கப்பட்டனர் *(17/23)* என்றும் சொல்லப்பட்டிருக்கிறதே!

பதில்: ப்ரஜாபதியான ப்ரம்மா பரமாத்மாவிடம்தான் உண்டானார். ஆகவே வேதங்கள், ப்ராம்மணர்கள், யக்ஞம் முதலியவை ப்ரம்மாவிடமிருந்து தோன்றின என்றோ, பரமாத்மாவிலிருந்தே உண்டாயின என்றோ, எப்படிச் சொன்னாலும் எல்லாம் ஒன்றுதான். அதுபோல வெவ்வேறு யக்ஞங்கள் விரிவாக வேதங்களில் கூறப்பட்டுள்ளன. வேதங்கள் ப்ரம்மாவின் முகத்திலிருந்து வெளிப்பட்டன. ப்ரம்மா பரமாத்மாவிடமிருந்தே உண்டானார். இக்காரணங்களால் யக்ஞங்கள் பரமாத்மாவிடமிருந்தோ, ப்ரம்மாவிடமிருந்தோ, வேதங்களிலிருந்தோ பிறந்தன என்று கூறுவது எல்லாம் ஒன்றுதான். *3/15*ல் யக்ஞங்கள் வேதங்களிலிருந்து உண்டாயின என்று கூறப்பட்டது. அவற்றின் விரிவும் வேதங்களிலேயே காணப்படுகின்றது. ஆகவே இங்கு 'ப்ரஹ்ம' என்ற சொல்லுக்கு வேதம் என்று பொருள் சொன்னது சரிதான்.

கேள்வி: 'இவை அனைத்தையும் நீ மனம், புலன்கள், உடல் இவற்றினால் செய்து நிறைவேற்றவேண்டும் என்று அறிந்து கொள்' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: இப்படிச் சொல்வதன் மூலம் பகவான் மூன்று விஷயங்களை அறிய வேண்டும் என்று உணர்த்துகிறார். (1) இங்கு ஸாதனை என்ற முறையில் சொல்லப்பட்ட யக்ஞங்கள், இவை தவிர சாஸ்த்ரங்களில் செய்யவேண்டியதாகக் கூறப்பட்ட கடமைகள் இவையெல்லாமே மனம், புலன்கள், உடல் இவற்றினால் , செய்யப்பட வேண்டியவை. அவற்றில் சில மனதினாலும், சில மனம், புலன்களாலும், மற்றும் சில மனம், புலன்கள், உடலினாலும் ஆற்றப்பட வேண்டியவை. இவை மூன்றின் ஸம்பந்தமில்லாமல் ஆற்றக்கூடிய யக்ஞங்களே கிடையா. ஆகவே ஸாதகன், உடல், புலன் மற்றும் ப்ராணன்களின் செயலையோ, ஸங்கல்பம், விகல்பம் போன்ற மனதின் செயலையோ த்யாகம் செய்யும் எந்த த்யாக வடிவான ஸாதனையையும் கர்மமாகவே கருதவேண்டும். மேலும் அந்த த்யாகத்தையும், பயனில் ஆசையின்றி, பற்றற்று, மமகாரமற்றுச் செய்யவேண்டும். இல்லாவிடில் அதுவும் பந்தத்திற்குக் காரணமாகிவிடலாம்.

(2) 'யக்ஞம்' என்ற பெயரால் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கடமைகளும், பரமாத்மாவை அடைவதற்காகக் கூறப்பட்ட ஸாதனைகளும் வெவ்வேறானவை. அனைத்துமே ப்ரக்ருதியின் விளைவான மனம், புலன்கள், உடலால் ஆகக்கூடியவை. இவற்றோடு ஆத்மாவுக்கு ஸம்பந்தமே இல்லை. ஆகவே இவற்றைச் செய்யும்போது ஞானயோகி 'தான் கர்த்தா' என்ற அபிமானம் கொள்ளக் கூடாது.

(3) மனம், புலன்கள், உடல் இவற்றின் செய்கையாகிய கர்மங்களின்றிப் பரமாத்மாவை அடைவதோ, கர்மபந்தத்திலிருந்து விடுபடுவதோ முடியாது (3/4). மனம், புலன்கள், உடல் இவற்றின் உதவியின்றி, கர்மபந்தத்திலிருந்து விடுதலை பெறுவதற்காகச் சொல்லப்பட்ட உபாயங்கள் எவற்றையுமே கடைப்பிடிக்க முடியாது. ஆகவே பரமாத்மாவை அடையவும், கர்மபந்தத்திலிருந்து விடுதலை பெறவும் விரும்புபவர்கள் மமகாரம், அபிமானம், பற்று, பயனில் கருத்து இவற்றைத் துறந்து, மேற்கூறியவற்றில் ஏதாவது ஒரு ஸாதனையை அவசியம் முயற்சியுடன் செய்யத்தான் வேண்டும்.

கேள்வி: 'இவ்விதம் தத்வரீதியாக அறிந்து, நீ கர்மபந்தத்திலிருந்து முற்றிலும் விடுதலை பெறுவாய்' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: ச்லோகம் 18 முதல் இதுவரை சொல்லப்பட்ட கர்ம தத்வங்களை அறிந்து, அதன்மூலம் அனைத்து யக்ஞங்களையும் தத்வரீதியாக உணர்ந்து, நீ கர்மபந்தத்திலிருந்து விடுதலை பெறுவாய். ஏனெனில், இவ்வாறு தத்வம் உணர்ந்து செய்யப்படும் கர்மங்கள் பந்தத்திற்குக் காரணமாகா என்பது மட்டுமன்று; அவை முன்வினையால் சேர்ந்துள்ள செயல்களையும் அழித்து, மோக்ஷத்தையும் அளிக்கும் என்பது கருத்து.

பொருத்தம்: **இதுவரை பகவான் பலவிதமான யக்ஞங்களை வர்ணித்தார். இவை தவிர வேறு பல யக்ஞங்கள் வேத சாஸ்த்ரங்களில் கூறப்பட்டிருக்கின்றன என்றும் சொன்னார். இவற்றில் எந்த யக்ஞம் சிறந்தது என்ற கேள்வி பிறக்கிறது. இதற்கு விடை அளிக்கிறார்—**

श्रेयान्द्रव्यमयाद्यज्ञाज्ज्ञानयज्ञः परन्तप।
सर्वं कर्माखिलं पार्थ ज्ञाने परिसमाप्यते॥ ३३॥

ச்ரேயாந்த்₃ரவ்யமயாத்₃யஜ்ஞாஜ்ஜ்ஞாநயஜ்ஞ: பரந்தப ।

ஸர்வம் கர்மாகி₂லம் பார்த₂ ஜ்ஞாநே பரிஸமாப்யதே ॥ 33 ॥

பரந்தப பார்த₂ – பரந்தப அர்ஜுன! **த்₃ரவ்யமயாத்** – த்ரவ்யங்களால் நிறைவேற்றக் கூடிய, **யஜ்ஞாத்** – யக்ஞத்தைவிட, **ஜ்ஞாநயஜ்ஞ:** – ஞான யக்ஞம், **ச்ரேயாந்** – மிகவும்

சிறந்தது. (ஏனெனில்), **அகி$_{2}$லம் கர்ம** – என்னென்ன கர்மங்கள் உண்டோ, **ஸர்வம்** – அந்தக் கர்மங்கள் அனைத்தும், **ஜ்ஞாநே** – ஞானத்தில், **பரிஸமாப்யதே** – நிறைவு பெறுகின்றன.

பரந்தப அர்ஜுன! த்ரவ்யங்களால் நிறைவேற்றக்கூடிய யக்ஞத்தைவிட ஞானயக்ஞம் மிகவும் சிறந்தது. ஏனெனில் என்னென்ன கர்மங்கள் உண்டோ அந்தக் கர்மங்கள் அனைத்தும் ஞானத்தில் நிறைவு பெறுகின்றன.

கேள்வி: இங்கு 'த்ரவ்யயஜ்ஞம்' என்றால் என்ன? 'ஜ்ஞாநயஜ்ஞம்' என்றால் என்ன? த்ரவ்யயக்ஞத்தைவிட ஞானயக்ஞம் சிறந்தது என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: த்ரவ்யங்கள் அதாவது உலகியல் பொருட்கள் முக்யமாகத் தேவைப்படும் யக்ஞம் 'த்ரவ்யயஜ்ஞம்' எனப்படும். அக்னியில் நெய், சர்க்கரை, தயிர், பால், எள், அரிசி, உலர்ந்த பழம், சந்தனம், கற்பூரம், அகில், மணமுள்ள மூலிகைகள், அன்னம் இவற்றை விதிப்படி ஹோமம் செய்வது, தானம் கொடுப்பது, பரோபகாரமாகக் கிணறு, ஓடை, குளம் வெட்டுவது, தர்மசாலைகள் கட்டுவது, பலிவைச்வதேவம் செய்வது என்று உலகியல் பொருட்களைப் பயன்படுத்தி, சாஸ்த்ரமுறைப்படி செய்யப்படும் நல்ல செயல்கள் எல்லாமே த்ரவ்ய யக்ஞங்கள்தாம். மேற்கூறிய ஸாதனைகளில் இவை தெய்வயக்ஞம் என்றும், அனுபவ விஷயங்களை அர்ப்பணம் செய்கின்ற யக்ஞம் என்றும், த்ரவ்யயக்ஞம் என்றும் கூறப்பட்டுள்ளன. இவை தவிர, விவேகம், ஆராய்ச்சி முதலிய ஆத்ம ஸம்பந்தமான ஞானத்துடன் கூடிய ஸாதனைகள் அனைத்தும் ஞானயக்ஞத்தில் அடங்கும். இங்கு த்ரவ்ய யக்ஞத்தைக் காட்டிலும் ஞானயக்ஞம் சிறந்தது என்றால், ஸாதகர்கள் தம் பொறுப்புக்கு ஏற்றவாறு சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட அக்னிஹோத்ரம், ஸாதுக்களுக்கு அன்னம் இடுதல், தானம் இவற்றைச் செய்யாமல், ஆத்மஸம்யமம், சாஸ்த்ரங்களைப் படிப்பது, தத்வ ஆராய்ச்சி, யோகஸாதனை முதலிய விவேகம், விஞ்ஞானம் ஸம்பந்தப்பட்ட நற்செயல்களுள் ஒன்றில் ஈடுபட்டிருந்தால், அவனை நல்ல கார்யங்களைச் செய்யாமல் விட்டவனாக நினைக்கக் கூடாது. அவன் முன்னதைக் காட்டிலும் சிறந்த செயலைச் செய்பவனாகவே நினைக்க வேண்டும். ஏனெனில் த்ரவ்யயக்ஞம் கூட மமகாரம், பற்று, பயனில் கருத்து இவற்றைத் துறந்து ஞானத்தோடு செய்தால்தான் முக்திக்குக் காரணமாகின்றது. இல்லாவிட்டால் பந்தத்திற்குக் காரணமாகின்றது. மேலே சொன்ன ஞான ஸாதனைகளில் ஈடுபட்டவர்கள் அனுபவ விஷயங்களையே முற்றிலுமாகத் துறந்து விடுகிறார்கள். அவர்களுடைய செயல்களில் ஹிம்ஸை முதலியன அறவே இல்லை. ஆகவே அவை உத்தமமானவை என்று பொருள். தத்வ ஞானத்தைப் பெறுவதில் பாவனைதான் முக்யம்; உலகியல் பொருட்களின் தேவையில்லை. ஆகவே த்ரவ்ய யக்ஞத்தைக் காட்டிலும், ஞானயக்ஞம் சிறந்தது என்று சொன்னார்.

கேள்வி: இங்கு 'அகிலம்', 'ஸர்வம்' என்ற அடைமொழிகளோடு கூறப்படும் 'கர்ம' என்ற சொல் எதைக் குறிக்கிறது? 'முழுமையான எல்லாக் கர்மங்களும் ஞானத்தில் முடிகின்றன' என்று கூறுவதன் பொருள் என்ன?

பதில்: மேலே கூறப்பட்ட பலவிதமான ஸாதனைகள் என்ற கர்மங்கள், இவை தவிர வேத சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட நல்ல கர்மங்கள் *(4/32)* இவை எல்லாம் சேர்ந்ததே 'அகிலம் ஸர்வம் கர்ம' என்பதன் பொருள் ஆகும்.

(அகிலம் என்றால் என்னென்ன கர்மங்கள் உண்டோ அவை என்று பொருள். ஸர்வம் என்றால் அவை எல்லாம் என்று பொருள்.) இத்தனை ஸாதனைகளுக்கும் மிகப் பெரிய பயன் பரமாத்மாவைப் பற்றி உள்ளபடி அறிந்து கொள்வதுதான். அப்படி உள்ளபடி அறிவதன் மூலம் பரமாத்மாவை அடைந்தபிறகு, மேலும் அடைய வேண்டியது எதுவும் மீதமில்லை என்று கூறுகிறார்.

கேள்வி: இந்த ச்லோகத்தில் வரும் 'ஜ்ஞாநயஜ்ஞம்', 'ஜ்ஞாநம்' இரண்டுக்கும் பொருள் ஒன்றுதானா, வெவ்வேறா?

பதில்: வெவ்வேறுதான். 'ஞானயக்ஞம்' என்பதில் வரும் ஞானம் என்ற சொல்லுக்கு, ப்ரம்மத்தை உள்ளபடி அறிவதற்காகச் செய்யப்படும் விவேகம், ஆராய்ச்சி, ஸம்யமம் முதலிய ஸாதனைகள் என்று பொருள். இரண்டாம் பாதியில் வரும் ஞானம் என்ற சொல்லுக்குப் பரமாத்மாவைப் பற்றிய உண்மை அறிவு – அந்த ஸாதனைகளின் பயனான தத்வஞானம் என்று பொருள். இவ்விதம் இரண்டுக்கும் பொருள் வேறுபாடு உண்டு.

பொருத்தம்: இவ்விதம் ஞானயக்ஞம், அதன் பயனான பரமாத்ம தத்வஞானம் இவற்றின் பெருமைகளைக் கூறி, அடுத்து இரண்டு ச்லோகங்களால் 'ஞானத்தைப் பெறுவாயாக' என்று அர்ஜுனனுக்கு ஆணையிட்டு, அதைப் பெறும் வழியையும், பயனையும் கூறுகிறார்—

तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया।
उपदेक्ष्यन्ति ते ज्ञानं ज्ञानिनस्तत्त्वदर्शिनः॥ ३४॥

தத்$_3$வித்$_3$தி$_4$ ப்ரணிபாதேந பரிப்ரஶ்நேந ஸேவயா ।

உபதே$_3$க்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ்தத்த்வத$_3$ர்ஶிந: ॥ 34 ॥

தத் – அந்த ஞானத்தை (தத்வதர்சிகளான ஞானிகளை அணுகி), **வித்$_3$தி$_4$** – அறிந்துகொள். (அவர்களை), **ப்ரணிபாதேந** – ஸாஷ்டாங்கமாகத் தரையில் விழுந்து வணங்குவதாலும், **ஸேவயா** – ஸேவை செய்வதாலும், **பரிப்ரஶ்நேந** – (கபடமில்லாமல்) நேர்மையாகக் கேள்வி கேட்பதாலும், **தே** – அந்த, **தத்த்வத$_3$ர்ஶிந:** – பரமாத்ம தத்வத்தை நன்கு அறிந்துள்ள, **ஜ்ஞாநிந:** – மஹாத்மாக்களான ஞானிகள் (உனக்கு அந்த), **ஜ்ஞாநம்** – தத்வ ஞானத்தை, **உபதே$_3$க்ஷ்யந்தி** – உபதேசிப்பார்கள்.

அந்த ஞானத்தைத் தத்வதர்சிகளான ஞானிகளை அணுகி அறிந்துகொள். அவர்களை ஸாஷ்டாங்கமாகத் தரையில் விழுந்து வணங்குவதாலும், ஸேவை செய்வதாலும், கபடமில்லாமல் நேர்மையாகக் கேள்வி கேட்பதாலும், அந்த பரமாத்ம தத்வத்தை நன்கு அறிந்துள்ள மஹாத்மாக்களான ஞானிகள் உனக்கு அந்தத் தத்வ ஞானத்தை உபதேசிப்பார்கள்.

கேள்வி: இந்த ச்லோகத்தில் 'தத்' என்று எதைக் குறிப்பிடுகிறார்?

பதில்: எல்லா ஸாதனைகளுக்கும் உரிய பயனை, முன் ச்லோகத்தில் புகழ்ந்துரைத்த தத்வஞானத்தை, பரமாத்மாவைப் பற்றிய அந்த உண்மை அறிவை 'தத்' என்ற சொல் குறிப்பிடுகிறது.

கேள்வி: 'அந்த ஞானத்தைப் பெறுவதற்காக' என்றால் என்ன?

பதில்: பரமாத்மாவைப் பற்றிய உண்மை அறிவைப் பெறாமல் மனிதன், பிறப்பு–இறப்பு என்ற கர்ம பந்தத்திலிருந்து விடுதலை பெறமுடியாது. ஆகவே கட்டாயம் அந்த ஞானத்தைப் பெற வேண்டும் என்று பொருள்.

கேள்வி: 'தத்வம் உணர்ந்த ஞானிகளிடமிருந்து ஞானம் பெறவேண்டும்' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: பகவான் அடிக்கடி பரமாத்ம தத்வத்தை எடுத்துக் கூறியும்கூட, அர்ஜுனன் அதை அறிந்து கொள்ளாததால் அவனிடம் ச்ரத்தைக் குறைவு இருப்பது தெரிகிறது. மேலும் ச்ரத்தை வளர்வதற்காக மற்ற ஞானிகளிடம் சென்று ஞானம் பெறுமாறு பகர்கிறார்.

கேள்வி: 'ப்ரணிபாத' என்றால் என்ன?

பதில்: ச்ரத்தையுடனும், பக்தியுடனும், நேர்மையுடனும், ஸாஷ்டாங்கமாகத் தரையில் வீழ்ந்து வணங்குவது 'ப்ரணிபாதம்' ஆகும்.

கேள்வி: 'ஸேவா' என்றால் என்ன?

பதில்: ச்ரத்தையுடனும், பக்தியுடனும் பெரியோர்களை அணுகுவது, அவர்களது கட்டளைகளை நிறைவேற்றுவது, அவர்களின் உள்ளம் அறிந்து எல்லாவிதத்திலும் அவர்கள் மனமகிழுமாறு ஊழியம் செய்வது இவையெல்லாம் ஸேவையில் அடங்கும்.

கேள்வி: *'பரிப்ரஸ்ந' என்றால் என்ன?*

பதில்: பரமாத்ம தத்வத்தை உள்ளபடி அறியவேண்டும் என்ற ஆவலோடு, ச்ரத்தையுடனும், பக்தியுடனும் குருவினிடம் கேள்வி கேட்பது 'பரிப்ரஸ்ந'மாகும். அதாவது 'நான் யார்? மாயை என்றால் என்ன? பரமாத்மாவின் ஸ்வரூபம் என்ன? எனக்கும், பரமாத்மாவுக்கும் என்ன ஸம்பந்தம்? பந்தம் என்றால் என்ன? மோக்ஷம் என்றால் என்ன? எவ்விதம் ஸாதனை புரிந்தால் பரமாத்மாவை அடையலாம்?' இப்படி ஆத்மாவைப் பற்றி எல்லா விஷயங்களிலும் ச்ரத்தையுடனும், பக்தியுடனும், பணிவுடனும், நேர்மையுடனும் கபடமின்றிக் கேள்வி கேட்பது 'பரிப்ரஸ்நம்' ஆகும். தர்க்கம் புரிவதோ, விதண்டாவாதம் செய்வதோ 'பரிப்ரஸ்நம்' அல்ல.

கேள்வி: *'வணங்குவதாலும், ஸேவை புரிவதாலும், நேர்மையாகக் கேள்வி கேட்பதாலும் பெரியோர்கள் உனக்குத் தத்வத்தை உபதேசிப்பார்கள்' என்று கூறுவதன் கருத்து என்ன? இவ்வாறு ஸேவை முதலியன செய்யாவிட்டால் ஞானிகள் உபதேசிக்க மாட்டார்களா?*

பதில்: தத்வஞானத்தைப் பெறுவதில் ச்ரத்தை, பக்தி, கபடமின்மை இவை அவசியம் என்று வலியுறுத்துவதுதான் பகவானின் அபிப்ராயம். ச்ரத்தையும், பக்தியும் இல்லாதவனுக்குச் செய்யப்படும் உபதேசம் மனதில் ஏறாது. பிறரது வணக்கம், பணிவிடை, மரியாதை இவற்றால் அவர்களுக்கு ஆகவேண்டியது ஒன்றும் இல்லாவிடினும், தனக்கு எல்லாம் தெரியும் என்ற செருக்குடனும், முரட்டுத்தனத்துடனும், 'இவருக்குத் தெரிகிறதா பார்ப்போம்' என்ற எண்ணத்துடனும், கபடமாகவும் கேள்வி கேட்பவர்களுக்குத் தத்வஞானம் பற்றிக் கூறப் பெரியோர்கள் முன்வர மாட்டார்கள். ஆகவே தத்வஞானம் பெற விரும்புபவன் ச்ரத்தையுடனும், பக்தியுடனும் பெரியோர்களை அண்டி, அவர்களிடம் தன்னை ஒப்புவித்து, அவர்களுக்கு ஸேவை புரிந்து, அவர்களாக விரும்பிச் சொல்லும்வரை காத்திருந்து, அவர்களிடம் பரமாத்மாவைப் பற்றிக் கேட்க வேண்டும். இப்படி நடந்தால், கன்றைப் பார்த்த பசுவுக்கு மடியில் பால் சுரப்பது போல, அந்தத் தகுதி பெற்ற சீடனுக்கு உபதேசம் செய்ய வேண்டும் என்ற உவகை ஞானியின் உள்ளத்தில் கடல் போலப் பொங்கி எழும். இதைத்தான் வேதமும் கூறுகிறது: **'தத்$_3$விஜ்ஞாநார்த$_2$ம் ஸ கு$_3$ருமேவாபி$_4$க$_3$ச்சே$_2$த் ஸமித்பாணி: ஸ்ரோத்ரியம் ப்$_3$ரஹ்மநிஷ்ட$_2$ம்'** (முண்ட$_3$கோபநிஷத்$_3$ 1/2/12). தத்வத்தை அறிய விரும்பும் ஸாதகன் சக்திக்கேற்றவாறு ஸமித் முதலிய காணிக்கைகளை ஏந்தி, கர்வமின்றி வேத சாஸ்த்ரங்களை அறிந்த, ப்ரம்மத்தில் நிலைபெற்ற குருநாதரை அணுகவேண்டும்.

கேள்வி: *'ஜ்ஞாநிந:' (மஹாத்மாக்களான ஞானிகள்) என்பதற்கு 'தத்வதர்ஸிந:' என்று அடைமொழி கொடுப்பதும், பன்மையில் கூறுவதும் ஏன்?*

பதில்: பரமாத்மாவின் தத்வத்தை உள்ளபடி நன்றாக உணர்ந்த, வேதம் அறிந்த பெரியோர்கள்தான் அந்த தத்வஞானத்தை உபதேசிக்க முடியும். சாஸ்த்ரம் மட்டும் படித்தவன் உபதேசம் செய்ய முடியாது. பன்மை இங்கு மரியாதையைக் குறிக்கிறது. ஞானிகள் பலர் கூடி உனக்கு உபதேசிப்பார்கள் என்பது பொருளன்று.

यज्ज्ञात्वा न पुनर्मोहमेवं यास्यसि पाण्डव।
येन भूतान्यशेषेण द्रक्ष्यस्यात्मन्यथो मयि॥ ३५॥

யஜ்ஜ்ஞாத்வா ந புநர்மோஹமேவம் யாஸ்யஸி பாண்ட$_3$வ ।

யேந பூ$_4$தாந்யஸேஷேண த்$_3$ரக்ஷ்யஸ்யாத்மந்யதோ$_2$ மயி ॥ 35 ॥

யத் – எதை (எந்த ஞானத்தை), **ஜ்ஞாத்வா** – அறிந்து கொண்டபின்னர், **புந:** – திரும்பவும் (நீ), **ஏவம்** – இவ்விதமான, **மோஹம்** – குழப்பத்தை, **ந யாஸ்யஸி** –

அடையமாட்டாயோ, பாண்ட₃வ – அர்ஜுன! யேந – அந்த (தத்வ ஞானத்தினால்), பூ₄தாநி – சராசரங்கள் அனைத்தையும், அஸேஷேண – மீதமின்றி (முதலில்), ஆத்மநி – தன்னிடமும், அதோ₂ – பிறகு, மயி – ஸத் சித் ஆனந்தமயனான என்னிடமும், த்₃ரக்ஷ்யஸி – காண்பாய்.

எந்த ஞானத்தை அறிந்து கொண்டபின்னர் திரும்பவும் நீ இவ்விதமான குழப்பத்தை அடையமாட்டாயோ, அர்ஜுன! அந்தத் தத்வ ஞானத்தினால் சராசரங்கள் அனைத்தையும் மீதமின்றி முதலில் தன்னிடமும் பிறகு ஸத் சித் ஆனந்தமயனான என்னிடமும் காண்பாய்.

கேள்வி: இங்கு 'யத்' என்று எதைக் குறிப்பிடுகிறார்? அதை அறிவது என்பது என்ன? 'பிறகு இவ்விதம் மோஹமடைய மாட்டாய்' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: 'யத்' என்றால் முன் ச்லோகத்தில் சொல்லப்பட்டபடி ஞானியால் உபதேசிக்கப்படும் தத்வஞானம் என்று பொருள். அந்த உபதேசத்தின்படி பரமாத்ம ஸ்வரூபத்தை நன்கு, நேரிடையாக உணர்வதே அந்த ஞானத்தைப் பெறுவது என்பதன் பொருள். இப்பொழுது 'அர்ஜுன! நீ எந்த மோஹத்தினால் சோகத்தில் ஆழ்ந்திருக்கிறாயோ (1/28–47; 2/6,8), பெரியோர்கள் உபதேசித்த ஞானம் பெற்றபிறகு, மறுபடியும் நீ அந்த மோஹத்தில் கலங்கமாட்டாய்' என்பது 'மோஹத்திற்கு ஆட்படமாட்டாய்' என்று கூறுவதன் பொருள். ஏனெனில், இரவில் பரவிய இருள் ஆதவன் உதயமானவுடன் இல்லாமல் போய் விடுவதைப்போல, பரமாத்மாவை உள்ளபடி அறிந்த பிறகு, 'நான் யார்? உலகம் எப்படிப்பட்டது? மாயை என்றால் என்ன? ப்ரம்மம் என்றால் என்ன?' முதலியவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டியது எதுவும் எஞ்சியிராது. அதன் பயனாக உடலை ஆத்மா என்று நினைத்து அத்துடன் தொடர்பு கொண்ட ஜீவர்களிடமும், பொருட்களிடமும் மமகாரம், உடல் பிறந்து இறப்பதால் ஆத்மாவும் பிறந்து இறப்பதாக நினைத்து அவற்றின் சேர்க்கை, பிரிவுகளால் ஸுக-துக்கமடைவது, வேறு காரணங்களுக்காக விருப்பு–வெறுப்புகள், மகிழ்ச்சி–துயரம் அடைவது ஆகிய மோஹத்தினால் ஏற்படும் குழப்பங்கள் எவையும் சிறிதும் இரா. உலகியலில் கதிரவன் உதித்து மறைவதும் உண்டு; இருள் சூழ்ந்து பின்னர் மறைவதும் உண்டு. ஆனால் ஞானசூரியன் உதித்த பிறகு எப்பொழுதும் அஸ்தமனம் ஆவதில்லை. பரமாத்மாவைப் பற்றிய தத்வஞானம் நித்யமானது; அழியாதது; அசைக்க முடியாதது. ஆகவே பரமாத்ம ஞானம் பெற்றபிறகு மோஹம், குழப்பம் உண்டாகா. ஈஸாவாஸ்யோபநிஷத் (7) கூறுகிறது—

யஸ்மிந் ஸர்வாணி பூ₄தாந்யாத்மைவாபூ₄த்₃விஜாநத: ।
தத்ர கோ மோஹ: க: ஸோக ஏகத்வமநுபஸ்யத: ॥

எப்பொழுது தத்வமறிந்தவனுக்கு எல்லாமே ஆத்மஸ்வரூபம் ஆகிவிடுகின்றனவோ, அப்பொழுது ஒன்றையே காணும் அவனுக்கு ஏது குழப்பம், ஏது துயரம்? அதாவது ஒன்றும் ஏற்பட முடியாது.

கேள்வி: ஞானத்தின் வாயிலாக எல்லா உயிரினங்களையும் மீதமின்றித் தன்னிடமே அடங்கியதாகப் பார்ப்பது எப்படி?

பதில்: மஹாத்மாவிடம் பரமாத்ம ஞான உபதேசம் பெற்று, 'ஆத்மா எங்கும் நிறைந்தது; எல்லையற்றது' என்று அறிந்து, எல்லா ப்ராணிகளிடமும் பேதபுத்தி அகன்று, அனைத்தையும் தானாகவே பார்க்கவேண்டும். எவ்விதம் கனவில் ஆழ்ந்தவன் விழித்தபிறகு, கனவில் கண்டதையெல்லாம் தன்னிடமே பார்த்ததாகவும், தன்னைத் தவிர வேறொன்றும் இருக்கவில்லையென்றும் உணர்ந்து கொள்வதுபோல, அகில உலகமும் தன்னிலும் வேறன்று, தன்னிடமே அடக்கம் என்று அறிந்து, எல்லாவற்றையும் மீதமின்றி, ஆத்மாவில் உள்ளதாக ஆத்மஞானி பார்க்கிறான் (6/29). இவ்விதம் ஆத்மஞானம் பெற்றபிறகு மனிதனுக்கு சோகமும், மோஹமும் என்றும் இரா.

கேள்வி: இவ்விதம் ஆத்மதர்சனம் பெற்றபிறகு சராசரங்களனைத்தையும், உயிரினங்களையும், ஸத் சித் ஆனந்தமயமான ப்ரம்மத்தில் பார்ப்பது எப்படி?

பதில்: சராசரங்களனைத்தையும் ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மாவில் பார்ப்பது என்பது முன் சொன்ன ஆத்மதர்சனத்தின் பயனாகும். இதுவே பரமபதத்தை அடைவது – நிர்வாண ப்ரம்மத்தை அடைவது – பரமாத்மாவில் இரண்டறக் கலந்துவிடுவது என்பதற்கெல்லாம் பொருள். இந்த நிலையை அடைந்தவனுக்கு அஹம் (நான்) என்பது அறவே ஒழிந்துவிடும். அந்த யோகி பரமாத்மாவினிடமிருந்து பிரிந்து தனியாக நிற்கமாட்டான். ஸத் சித் ஆனந்த ப்ரம்மமாகவே ஆகிவிடுவான். அவன் பரமாத்மாவிடமே எல்லாவற்றையும் பார்ப்பான் என்பது கூட சாஸ்த்ர முறைப்படி கூறப்பட்டதே தவிர, உண்மையில் பார்க்கிறவன், பார்க்கப்படும் பொருள், பார்வை என்ற பேதமே இருக்காது. யார் பார்க்கிறான்? யாரைப் பார்க்கிறான்? எதுவுமே கிடையாதே. இந்த நிலை சொல்லுக்கு அப்பாற்பட்டது. சொல்லால் வெறும் குறிப்பு மட்டும் காட்டப்பட்டது. உலகநோக்கில் அந்த ஞானிக்கு மனம், புத்தி, உடல் ஆகியவை இருக்கலாம். அவன் ஸத் சித் ஆனந்த மயமான ப்ரம்மத்தில் எல்லாவற்றையும் பார்க்கிறான் என்று சொல்லலாம். ஏனெனில் நீரில் பனிக்கட்டியும், விண்ணில் மேகமும், பொன்னில் அணிகலன்களும் உண்மையில் நீராகவே, வெளியாகவே, பொன்னாகவே இருப்பதுபோல ஞானியின் நோக்கில் உலகம் அனைத்தும் ப்ரம்மமே. சராசரங்களனைத்தும் ப்ரம்மத்தைத் தவிர வேறாக இரா. யோகி 'ப்ரம்மபூதன்' ஆகிறான் (6/27). யோகி 'யோக₃யுக்தாத்மா' ஆகிறான் (6/29). எங்கும் ஸமதர்சனம் பெற்றவன், எல்லா உயிரினங்களையும் ஆத்மாவில் இருப்பதாகப் பார்க்கிறான்; எல்லா உயிரினங்களிலும் ஆத்மாவைக் காண்கிறான். இங்கே 'த்₃ரக்ஷ்யஸி ஆத்மநி' என்று கூறப்படுவது முதல்நிலை. அந்த முதல்நிலையின் பயனாக ஏற்டுவதுதான் 6/28ல் கூறப்படும் ப்ரம்மஸம்ஸ்பர்சம் என்ற உயர்ந்த ஆன்மிக ஸுகம். அதைத்தான் 'அதோ மயி' என்று இங்கே கூறுகிறார். எல்லாவற்றையும் தன்னில் பார்ப்பது முதல் நிலை. பரமாத்மாவிடம் பார்ப்பது இரண்டாவது நிலை; 6/27, 6/29ல் கூறப்படுவது முதல் நிலை. 6/28ல் கூறப்படுவது இரண்டாவது நிலை; 18வது அத்யாயத்திலும் ஞானயோகத்தை வர்ணிக்குங்கால் 54ல் யோகி ப்ரம்மபூதன் ஆகிறான் என்று முதல்நிலையையும், 55ல் பராபக்தியின்மூலம் பரமாத்மாவில் புகுந்து கலந்து விடுகிறான் என்று இந்த இரண்டாவது நிலையையும் கூறுகிறார்.

பொருத்தம்: **இவ்விதம் பெரியோரிடம் தத்வஞானம் பெறவேண்டியதையும், அதன் பயனையும் கூறி, அதன் பெருமையை மேலே கூறுகிறார்—**

अपि चेदसि पापेभ्यः सर्वेभ्यः पापकृत्तमः ।
सर्वं ज्ञानप्लवेनैव वृजिनं सन्तरिष्यसि ॥ ३६ ॥

அபி சேத₃ஸி பாபேப்₄ய: ஸர்வேப்₄ய: பாபக்ருத்தம: ।
ஸர்வம் ஜ்ஞாநப்லவேநைவ வ்ருஜிநம் ஸந்தரிஷ்யஸி ॥ 36 ॥

ஸர்வேப்₄ய: – மற்ற எல்லா, **பாபேப்₄ய: அபி** – பாவம் செய்தவர்களைக் காட்டிலும், **பாபக்ருத்தம:** – அதிகமான பாவத்தைச் செய்தவனாக, **அஸி சேத்** – ஒருகால் நீ இருந்தாலும் கூட, **ஜ்ஞாநப்லவேந** – ஞானம் என்னும் படகினால், **ஏவ** – ஸந்தேஹமின்றி, **ஸர்வம் வ்ருஜிநம்** – பாவக்கடல் முழுவதையும், **ஸந்தரிஷ்யஸி** – நன்கு கடந்துவிடுவாய்.

மற்ற எல்லா பாவம் செய்தவர்களைக் காட்டிலும் அதிகமான பாவத்தைச் செய்தவனாக நீ ஒருகால் இருந்தாலும்கூட ஞானம் என்னும் படகினால் ஸந்தேஹமின்றி பாவக்கடல் முழுவதையும் நன்கு கடந்துவிடுவாய்.

கேள்வி: இந்த ச்லோகத்தில் 'சேத், அபி' என்ற சொற்களைக் கூறுவதன் கருத்து என்ன?

பதில்: பகவான் கூறுகிறார்: "உண்மையில் நீ பாவி அல்ல. தெய்வ ஸம்பத்திற்குரிய லக்ஷணம் பெற்றவன் (16/5). மேலும் நீ என் ப்ரிய பக்தன்; நண்பன் (4/3). உன்னிடம் பாவம் எப்படி இருக்க முடியும்? ஆகவே ஒரு பேச்சுக்காக அதாவது பாவிகளனைவரிலும் நீ அதிகப் பாவம் செய்தவன் என்று வைத்துக் கொண்டாலும், இந்த ஞானம் என்ற படகில் ஏறி, கடல் போன்ற ஆழ்ந்த பாவங்களை முயற்சியின்றிக் கடந்து விடுவாய். எவ்வளவு பெரிய பாவமாயினும் உன்னை அது தீண்டாது" என்று ஞானத்தின் ப்ரபாவத்தையும், பெருமையையும் கூறுகிறார்.

கேள்வி: உள்ளத்தூய்மையற்ற, இந்த ஞானம் பெறவே தகுதியுள்ளவன் என்று கூடக் கருத முடியாத, மிகப் பெரிய பாவி ஒருவன் இந்த ஞானப் படகில் ஏறிப் பாவங்களை எப்படிக் கடக்க முடியும்?

பதில்: 'பாவி ஆயினும்' என்பது ஒரு பேச்சுக்குத்தான். பாவிக்கு ஞானம் பெறத் தகுதி கிடையாது; அவனுக்கு 'ஞானப்படகு' கிடைத்தற்கரியதுதான் என்பது உண்மையாயினும், பகவானுடைய க்ருபையினாலோ, பெரியோர்களுடைய க்ருபையினாலோ, அவனுக்கு ஞானம் கிடைத்துவிட்டால், அவன் பாவியாயினும் அக்கணமே பாவத்திலிருந்து விடுதலை அடைவான் என்பது பொருள்.

கேள்வி: 'பாவங்களைக் கடப்பது' என்ற பேச்சு இங்கே எப்படி வந்தது? ஏனெனில் பற்றுடன் புண்யகர்மம் செய்வதுகூட பந்தத்திற்குக் காரணமாகிவிடுகிறதே!

பதில்: புண்யகர்மம் கூடப் பயனில் பற்றுடன் செய்யப்பட்டால் பந்தத்திற்குக் காரணம் ஆகும்; கர்மபந்தம் அனைத்தும் விலகினால்தான் பாவங்களிலிருந்து விடுதலை அடைய முடியும் என்பது சரிதான். ஆனால் புண்யகர்மங்களைச் செய்யாமல் விடுவதற்கு மனிதனுக்குச் சுதந்திரம் உண்டு. அவற்றின் பயனையும் அவன் நினைத்தால் துறந்துவிடலாம். ஆனால் ஞானம் பெறாமல் பாவங்களைக் கடப்பது என்பது அவன் கையில் இல்லை. ஆகவே பாவங்களைக் கடக்கிறான் என்று சொல்லும்போது, 'புண்யகர்மங்களின் பந்தத்திலிருந்தும் விடுபடுகிறான்' என்பதும் அதற்குள் அடங்கிவிடுகிறது.

கேள்வி: ஞானப்படகு ஏறிப் பாவக்கடலை முழுமையாகக் கடப்பது எப்படி?

பதில்: படகில் அமர்ந்தவன், ஆழமான கடலில் போய்க் கொண்டே அக்கரை சேர்ந்து விடுகிறான். அது போன்று ஞானத்தில் நிலை பெற்றவன் தான் உலகியலில் ஒட்டாதவன், விகாரமடையாதவன், நித்யன், முடிவற்றவன் என்று உணர்ந்துவிட்டால், அந்த ஞானத்தினால் பல முற்பிறவிகளில் செய்த பாவக்குவியலைத் தாண்டி, எல்லாவிதமான கர்மபந்தங்களிலிருந்தும் விடுதலை பெறுகிறான். இதுதான் ஞானப்படகில் ஏறிப் பாவக் கடலை நன்கு கடக்கிறான் என்பதன் பொருளாகும்.

கேள்வி: இந்த ச்லோகத்தில் 'ஏவ' என்று அழுத்தமாகச் சொல்வதன் கருத்து என்ன?

பதில்: 'ஏவ' என்றால் நிச்சயமாக - ஐயமின்றி என்று பொருள். பொதுவாக மரப்படகில் பயணம் செய்பவன், படகு உடைந்தோ, ஓட்டை ஏற்பட்டோ, புயற்காற்றால் பாறையில் மோதுண்டோ படகுடன் மூழ்கி விடலாம். ஆனால் ஞானப்படகில் ஏறியவன் பாவங்களைக் கடப்பதில் சிறிதும் ஐயமில்லை; அவனுக்கு வீழ்ச்சியே கிடையாது என்பது பொருள்.

பொருத்தம்: எவ்விதமான எடுத்துக்காட்டும் பரமாத்மாவின் விஷயத்தில் முழுமையாகப் பொருந்துவதில்லை. ஓரளவு தெளிவுபடுத்துவதற்குத்தான் பயன்படுகிறது. ஆகவே முன் ச்லோகத்தில் சொன்ன ஞானத்தின் பெருமையை நெருப்பின் உதாரணம் கூறி, மேலும் விளக்குகிறார்—

यथैधांसि समिद्धोऽग्निर्भस्मसात्कुरुतेऽर्जुन।
ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात्कुरुते तथा॥ ३७॥

யதை₂த₄ாம்ஸி ஸமித்₃தே₄ாऽக்₃நிர்ப₄ஸ்மஸாத்குருதேऽர்ஜுந ।

ஜ்ஞாநாக்₃நி: ஸர்வகர்மாணி ப₄ஸ்மஸாத்குருதே தத₂ா ॥ 37 ॥

அர்ஜுந – அர்ஜுன! **யத₂ா** – எப்படி, **ஸமித்₃த₄:** – கொழுந்து விட்டெரியும், **அக்₃நி:** – நெருப்பு, **ஏத₄ாம்ஸி** – விறகுகளை, **ப₄ஸ்மஸாத்** – சாம்பலாக, **குருதே** – செய்கிறதோ, **தத₂ா** – அதே போன்று, **ஜ்ஞாநாக்₃நி:** – ஞானம் என்னும் நெருப்பு, **ஸர்வகர்மாணி** – எல்லாக் கர்மங்களையும், **ப₄ஸ்மஸாத்** – சாம்பலாக, **குருதே** – செய்கிறது.

அர்ஜுன! எப்படி கொழுந்து விட்டெரியும் நெருப்பு விறகுகளைச் சாம்பலாகச் செய்கிறதோ, அதே போன்று ஞானம் என்னும் நெருப்பு எல்லாக் கர்மங்களையும் சாம்பலாகச் செய்கிறது.

கேள்வி: இந்த ச்லோகத்தில் நெருப்பை உதாரணம் காட்டி ஞானம் என்ற நெருப்பு எல்லாக் கர்மங்களையும் பொசுக்கிவிடும் என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: கொழுந்துவிட்டு எரியும் நெருப்பு விறகுகளனைத்தையும் பொசுக்கிவிடுவதுபோல தத்வஞானம் என்ற நெருப்பு நல்லதும், தீயதுமான அனைத்துக் கர்மங்களையும், அதாவது அவற்றின் பயனான ஸுக–துக்கங்களையும், அவற்றிற்குக் காரணமான அவித்யை, அஹங்காரம், மமகாரம், விருப்பு–வெறுப்பு முதலிய எல்லா விகாரங்களோடும் சேர்த்து முற்றிலும் அழித்துவிடும். முண்டகோபநிஷத் 2/2/8ல் கூறுகிறது:

பி₄த்₃யதே ஹ்ருத₃யக்₃ரந்தி₂ஶ்சி₂த்₃யந்தே ஸர்வஸம்ஶயா: ।
க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந்த்₃ருஷ்டே பராவரே ॥

இதன் பொருள்: கார்ய காரண ரூபமான அந்தப் பரமாத்மாவைப் பார்த்தவனுக்கு, ஜட–சேதனங்களின் ஒருமித்த வடிவான இதய முடிச்சு அவிழ்ந்து, உடல் முதலியவற்றில் அஞ்ஞானத்தினால் ஏற்படும் ஆத்மா என்ற அபிமானம் முதலிய எல்லா ஐயங்களும், தவறான முடிவுகளும் தீர்ந்துவிடும், கர்மங்களும், அனைத்துப் பயன்களோடு அழிந்துவிடும். பிறகு பரமாத்மா பற்றிய உண்மையான அறிவில் எவ்வித ஸந்தேஹமும், குழப்பமும் இரா. 4/19ல் சொன்ன 'ஜ்ஞாநாக்நிதக்தகர்மாணம்' என்பதற்கும் இதுதான் பொருள்.

இப்பிறவியிலும், முற்பிறவிகளிலும் செய்யப்பட்ட கர்மங்கள் மனப்பதிவுகளாக – ஸம்ஸ்காரங்களாக உள்ளத்தில் ஒன்று சேர்ந்திருக்கின்றன. அவற்றிற்கு 'ஸஞ்சிதம்' என்று பெயர். அவற்றில் இப்பிறவியில் பயனளிக்க ஆரம்பத்திருக்கும் கர்மங்களுக்கு 'ப்ராரப்தம்' என்று பெயர். இப்பொழுது செய்யப்படும் கர்மங்களுக்கு 'க்ரியமாணம்' அல்லது 'ஆகாமி' என்று பெயர். தத்வஞானம் என்ற நெருப்பு பற்றினால், முன்வினை மனப்பதிவுகள் எல்லாம் பொசுங்கிவிடும். ஆனால் மனம், புத்தி, உடலுடன் ஆத்மாவுக்குத் தொடர்பில்லை என்ற ஞானம் ஒருவனுக்குத் தோன்றிய பின்னர், மனம், புத்தி, உடல் இவற்றுடன் ப்ராரப்த கர்மத்தின் பயனான ஸுக–துக்கங்களின் தொடர்பு ஏற்பட்டாலும், அவனது மனதில் மகிழ்ச்சி, துயரம் என்ற விகாரங்களை ஏற்படுத்தா. ஆகவே இவ்விதம் ப்ராரப்தமும் அழிந்து விடுகிறது. இப்பொழுது செய்யப்படும் கர்மங்களில் 'நான் கர்த்தா' என்ற அபிமானமும், மமகாரமும், பற்றும், வாஸனையும் அழிந்து போய்விட்டதால், அவை மனப்பதிவுகளை ஏற்படுத்தா. எனவே அவை கர்மங்களே அல்ல.

இவ்விதம் அவனுடைய கர்மங்களனைத்தும் நாசமடைகின்றன. கர்மங்கள் அழிந்துவிட்டால் அவற்றின் பயன் எப்படி இருக்கக் கூடும்? மனப்பதிவுகளே ஏற்படாதபோது விருப்பு–வெறுப்புகள், மகிழ்ச்சி–துயரங்கள் என்ற விகாரங்கள் எப்படி ஏற்படும்? ஆகவே எல்லா விகாரங்களும், கர்ம பயன்களும் கர்மங்களுடன் சேர்ந்து அழிந்துவிடும்.

பொருத்தம்: **இவ்விதம் ச்லோகம் 34 முதல் இதுவரை தத்வஞானியரான பெரியோர்களுக்குப் பணிவிடை முதலியன செய்து தத்வஞானம் பெற வேண்டும் என்று கூறி, அதன் பயன், பெருமையையெல்லாம் பகவான் விவரித்தார். ஞானிகளான**

பெரியோர்களிடமிருந்து கேட்டறிதல் (ச்ரவணம்), முறைப்படி சிந்தித்தல் (மனனம்), நிதித்யாஸனம் முதலிய ஞானயோகப்பயிற்சிகளினால்தான் இந்தத் தத்வஞானத்தைப் பெற முடியுமா அல்லது இதை அடைய வேறு மார்க்கம் உண்டா என்ற கேள்வி எழுகிறது. அடுத்த ச்லோகத்தில், மேலும் தத்வஞானத்தின் பெருமை பகர்ந்து கர்மயோகத்தின் மூலமாகவும் அந்த ஞானம் தானாகவே பிறக்கும் என்று கூறுகிறார்—

न हि ज्ञानेन सदृशं पवित्रमिह विद्यते।
तत्स्वयं योगसंसिद्धः कालेनात्मनि विन्दति॥ ३८॥

ந ஹி ஜ்ஞாநேந ஸத்₃ருஶம் பவித்ரமிஹ வித்₃யதே ।
தத்ஸ்வயம் யோக₃ஸம்ஸித்₃த₄: காலேநாத்மநி விந்த₃தி ॥ 38 ॥

இஹ – இவ்வுலகில், **ஜ்ஞாநேந** – ஞானத்திற்கு, **ஸத்₃ருஶம்** – நிகராக, **பவித்ரம்** – பரிசுத்தம் செய்யக்கூடியது, **ஹி** – ஸந்தேஹமின்றி, **ந வித்₃யதே** – (எதுவும்) இல்லை. **தத்** – அந்த ஞானத்தை, **காலேந** – நெடுங்காலமாக, **யோக₃ஸம்ஸித்₃த₄:** – (கடைப்பிடித்த) கர்மயோகத்தின் மூலம் உள்ளத்தூய்மையடைந்த மனிதன், **ஸ்வயம்** – தனக்குத் தானே, **ஆத்மநி** – ஆத்மாவினிடம், **விந்த₃தி** – எய்தப் பெறுகிறான்.

இவ்வுலகில் ஞானத்திற்கு நிகராகப் பரிசுத்தம் செய்யக்கூடியது ஸந்தேஹமின்றி எதுவும் இல்லை. அந்த ஞானத்தை நெடுங்காலமாகக் கடைப்பிடித்த கர்மயோகத்தின் மூலம் உள்ளத்தூய்மையடைந்த மனிதன் தனக்குத் தானே ஆத்மாவினிடம் எய்தப் பெறுகிறான்.

கேள்வி: 'இவ்வுலகில் ஞானம் போலப் பரிசுத்தப்படுத்துவது எதுவும் இல்லவே இல்லை' என்று ஐயமறக் கூறுவதன் கருத்து என்ன?

பதில்: யாகம், தானம், தவம், பெரியோர்களுக்குப் பணிவிடை, பகவானுக்குப் பூஜை, வ்ரதம், உபவாஸம், ப்ராணாயாமம், மனவடக்கம், புலனடக்கம், ஸம்யமம், ஜபம், த்யானம் போன்ற மனிதனைப் பரிசுத்தனாக்கும் ஸாதனங்கள் பல உலகில் உள்ளன. கங்கை, யமுனை, த்ரிவேணி, காவேரி போன்ற புண்ய தீர்த்தங்களும் மனிதனுடைய பாவங்களைப் போக்கித் தூய்மை செய்கின்றன. ஆனால் இவற்றில் ஒன்றுகூட ஞானத்திற்கு ஈடாகாது. ஏனெனில் இவையெல்லாமே தத்வஞானத்திற்கு ஸாதனங்கள்தான். தத்வஞானமே அவற்றின் பயன். இவையெல்லாம் தத்வஞானமுண்டாக உதவி செய்பவை என்ற கருத்தில்தான் பவித்ரமானவை என்று கருதுகிறோம். ஆகவே மனிதன் பரமாத்மாவின் உண்மை ஸ்வரூபத்தை உணர்வதன் மூலம், அவனிடமுள்ள பொய், கபடம், சூது, திருட்டு, சுற்பழிப்பு முதலிய பாவச் செயல்களும், விருப்பு–வெறுப்பு, மகிழ்ச்சி–துயரம், அஹங்காரம்–மமகாரங்கள் ஆகிய மன விகாரங்களும், அஞ்ஞானமும் அறவே அழிந்து, அவன் பரிசுத்தனாகிவிடுகிறான். அவனுடைய மனம், புலன்கள், உடல் இவையும் மிகவும் புனிதமாகின்றன. இக்காரணத்தினால் இத்தகைய மஹாபுருஷனை ச்ரத்தையுடன் பார்ப்பதாலும், தொடுவதாலும், வணங்குவதாலும், நினைப்பதாலும், அவனுடன் உரையாடுவதாலும் மற்றவர்களும் புனிதமடைகின்றனர். ஆகவே உலகில் பரமாத்ம தத்வஞானத்திற்கு ஈடான பவித்ரமான பொருள் வேறொன்றும் இல்லவே இல்லை என்று கூறுகிறார்.

கேள்வி: 'இஹ' (இவ்வுலகில்) என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: 'இஹ' (இவ்வுலகில்) என்ற சொல்லினால் விளக்கப்படும் கருத்தாவது – ப்ரக்ருதியின் விளைவான இவ்வுலகில், ஞானத்திற்கு நிகரான பொருள் வேறொன்றுமில்லை; ஞானத்தைப்போல் புனிதப்படுத்தும் திறன் வேறொன்றுக்கும் கிடையாது. ஆனால் ப்ரக்ருதிக்கு அப்பாற்பட்ட, எங்கும் நிறைந்த, ஸர்வ வல்லமை படைத்த, எல்லா உலகையும் கட்டி ஆள்கின்ற, குணங்களின் கடலான, ஸகுண–நிர்குணமான, ஸாகார–நிராகாரமான, பரமேசுவரனான, அனைவரிடமும் தோழமை கொண்ட, அனைத்துக்கும் ஆதாரமான, பரம

பவித்ரமான, அந்தப் பரமாத்மாவை அடையச் செய்வதால்தான் ஞானத்தைப் 'பவித்ரமானது' என்று கூறுகிறோம். ஆனால் இந்த ஞானம், பரமாத்மாவைக் காட்டிலும் பவித்ரமானதன்று. ஏனெனில் பரமாத்மாவிற்கு நிகராக ஒன்றுமில்லை என்னும்போது, அவரிலும் மிக்கது எப்படி இருக்க முடியும்? அர்ஜுனனும் சொல்கிறார்: **'பரம் ப்3ரஹ்ம பரம் தா4ம பவித்ரம் பரமம் ப4வாந்'** *(10/12)*. நீங்கள்தான் பரப்ரம்மம்; அடையக்கூடிய உயர்ந்த நிலை; மிகவும் பவித்ரமானவர். பீஷ்மரும் சொல்கிறார்: **'பவித்ராணாம் பவித்ரம் யோ மங்க3ளாநாம் ச மங்க3ளம்'** அதாவது பரிசுத்தம் செய்பவர்களைக் காட்டிலும் பரிசுத்தமானவர்; மங்களமான எல்லோரைக் காட்டிலும் மங்களமானவர் *(மஹா. அநு. 149/10)*.

கேள்வி: 'யோகஸம்ஸித்த:' என்ற சொல்லுக்கு என்ன பொருள்? 'அவன் தனக்குத் தானாகவே அந்த ஞானத்தைப் பெறுவான்' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: பல காலம் கர்மயோகத்தைக் கடைப்பிடித்து விருப்பு-வெறுப்புகள் விலகியதால் மனத்தூய்மை பெற்றுவிட்டவனும், கர்மயோகத்தில் ஸித்தி பெற்றவனும், செயல் அனைத்தையும் மமகாரம், பற்று, பயனில் கருத்து இவையின்றி பகவானின் ஆணைப்படி பகவானுக்காகவே செய்பவனும் 'யோகஸம்ஸித்தன்' ஆவான். அந்த யோகஸம்ஸித்தனைத் தானாகவே ஞானம் வந்து அடையும். அதாவது அவன் தன்னுடைய ஸாதனையில் முழுமையாக எல்லை வரை சென்றவன், அதே கணம் பகவானுடைய அருளினால் அவன் உள்ளத்தில் தானாகவே ஞானம் ஒளி வீசுவதைப் பார்ப்பவன். ஞானத்தைப் பெறுவதற்காக அவன் வேறு எந்த முயற்சியையும் மேற்கொள்ள அவசியம் இல்லை. ஞானத்தை அடைவதற்காக ஞானிகளை அண்டியிருக்க வேண்டியதுமில்லை. வேறு எவ்விதமான ஸாதனையோ, உதவியோ இன்றி, கர்மயோக ஸாதனையினாலேயே அவனுக்கு, பகவானுடைய க்ருபையினால் ஞானம் தானாகவே மலரும்.

பொருத்தம்: **இவ்விதம் தத்வஞானத்தின் பெருமையையும் அதை அடையும் உபாயமாக ஞானயோகம், கர்மயோகம் இரண்டையும் கூறி, அப்படி ஞானம் பெறுபவனின் தகுதிகளைக் கூறி ஞானத்தின் பயன் பரமசாந்திதான் என்று விளக்குகிறார்—**

श्रद्धावाँल्लभते ज्ञानं तत्परः संयतेन्द्रियः ।
ज्ञानं लब्ध्वा परां शान्तिमचिरेणाधिगच्छति ॥ ३९ ॥

ஶ்ரத்3தா4வாந்லப4தே ஜ்ஞாநம் தத்பர: ஸம்யதேந்த்3ரிய: ।
ஜ்ஞாநம் லப்3த்4வா பராம் ஶாந்திமசிரேணாதி4க3ச்ச2தி ॥ 39 ॥

ஸம்யதேந்த்3ரிய: – புலன்களை அடக்கி வெற்றி கொண்ட, **தத்பர:** – ஸாதனையிலேயே ஒன்றிய, **ஶ்ரத்3தா4வாந்** – ச்ரத்தை உடைய மனிதன், **ஜ்ஞாநம் லப4தே** – ஞானத்தைப் பெறுகிறான். **ஜ்ஞாநம்** – ஞானத்தை, **லப்3த்4வா** – பெற்று (அவன்), **அசிரேண** – தாமதமின்றி அதே கணத்தில் (பகவானை அடைவது என்ற), **பராம் ஶாந்திம்** – பரமசாந்தியை, **அதி4க3ச்ச2தி** – பெறுகிறான்.

புலன்களை அடக்கி வெற்றி கொண்டு ஸாதனையிலேயே ஒன்றிய ச்ரத்தை உடைய மனிதன் ஞானத்தைப் பெறுகிறான். ஞானத்தைப் பெற்று அவன் தாமதமின்றி அதே கணத்தில் பகவானை அடைவது என்ற பரமசாந்தியைப் பெறுகிறான்.

கேள்வி: **'ஶ்ரத்தாவாந்'** என்று யாரைக் குறிப்பிடுகிறார்? அவன் 'ஞானத்தைப் பெறுகிறான்' என்றால் என்ன பொருள்?

பதில்: வேதம், சாஸ்த்ரம், பகவான், பெரியோர்கள் இவர்களின் சொற்களிலும், பரலோகத்திலும், நேரில் பார்ப்பது போன்ற நம்பிக்கையும், மேலும் அவர்கள் போற்றத்தக்க உத்தமர்கள் என்ற பாவனையும்தான் ச்ரத்தை எனப்படும். இந்த ச்ரத்தை

உடையவன் ச்ரத்தாவான். இப்படி ச்ரத்தையுள்ளவன்தான் மஹாத்மாக்களை அணுகி, வணங்கி, ஸேவை புரிந்து, பணிவுடன் கேள்வி கேட்டு, அவர்களிடம் உபதேசம் பெற்று, ஞானயோக ஸாதனையாலோ, கர்மயோக ஸாதனையாலோ தத்வஞானம் பெறமுடியும். ச்ரத்தையில்லாதவனுக்கு அந்த ஞானம் கிட்டாது.

கேள்வி: *ச்ரத்தையில்லாமல் கூட மனிதர் பெரியோர்களை அண்டி, வணங்கி, ஸேவை செய்து கேள்வி கேட்கலாமே! ஞானம் பெறுவதற்கு ச்ரத்தை முக்யம் என்று கூறுவதற்கு என்ன கருத்து?*

பதில்: ச்ரத்தையின்றிப் பெரியோர்களைப் பரீக்ஷித்துப் பார்க்கலாம் என்ற நோக்கத்துடனோ, தான் கற்றிருப்பதைப் பறைசாற்றுவதற்காகவோ, பெருமை, புகழுக்காகவோ, பகட்டுக்காகவோ, பெரியோர்களை அண்டி வணங்கி ஸேவை செய்து கேள்வி கேட்கலாம். ஆனால் அவர்களுக்கு இதனால் ஞானம் கிட்டாது. ச்ரத்தையின்றிச் செய்யப்படும் யாகம், தானம், தவம் முதலிய எல்லா ஸாதனங்களும் வீண்தான் *(17/28)* எனக் கூறப்பட்டுள்ளது. ஆகவே ஞானம் பெறுவதற்கு முக்ய ஸாதனமான ச்ரத்தை எவ்வளவுக்கெவ்வளவு அதிகம் உள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு விரைவாக, அந்த ஸாதனை ஞானத்தை உதிக்கச் செய்யும்.

கேள்வி: *ஞானத்தைப் பெறுவதற்கு ச்ரத்தை முக்யமானால் அதையும் கூறிவிட்டு, மேலே 'தத்பர:' (அதிலேயே ஒன்றியவன்) என்றும் அடைமொழி கொடுப்பானேன்?*

பதில்: ஸாதனையில் குறியாக இருப்பது கூட ச்ரத்தையினால்தான். ச்ரத்தைக்கு உரைகல் ஸாதனையில் ஒருமைப்பாடு. ச்ரத்தை குறைந்திருந்தால் ஸாதனையில் குறைபாடும், சோம்பேறித்தனமும் கூடிவிடும். ஆகவே ஸாதனையில் பயிற்சி ஒருமைப்பாட்டுடன் அமையாது. ச்ரத்தையின் உண்மையறியாதவர், மேலெழுந்தவாரியாகத் தாம் காட்டும் ஈடுபாட்டைக் கூட ச்ரத்தை என்று பெரிதாக நினைத்து விடுவர். ஆனால், அதனால் காரியம் நிறைவேறாது. அப்பொழுது அவர்கள் தமது ஸாதனையில் ஒருமைப்பாடு அற்ற குறையைக் கவனியாது, ச்ரத்தையிருந்தும் கூட, பகவானை அடைய முடியவில்லை என்று நினைப்பார்கள். இப்படி நினைப்பது தவறு. ஸாதனையில் எவ்வளவு ச்ரத்தை உள்ளதோ, அவ்வளவுதான் அதில் ஒன்றிய தன்மையும் இருக்கும். ஒருவன் பணத்திற்கு ஆசைப்படுகிறான். ஏதோ ஒரு வியாபாரம் செய்கிறான். இந்த வியாபாரத்தினால் தனக்குச் செல்வம் கிடைக்கும் என்ற நம்பிக்கையினால் அவன் அதிலேயே குறியாக ஈடுபடுகிறான். உண்பது, அருந்துவது, தூங்குவது, ஓய்வு கொள்வது, இவற்றைக் கூடப் புறக்கணிக்கிறான். உடல் ச்ரமத்தைப் பாராட்டுவதில்லை. இந்தக் கஷ்டங்களைக் கஷ்டங்களாகவே நினைப்பதில்லை. மேன்மேலும் செல்வம் பெருகுவதால் மனதில் த்ருப்தி அடைகிறான். அதுபோல மற்ற எல்லா விஷயங்களிலும் நம்பிக்கை இருந்தால்தான் அதில் ஒருமைப்பாடு ஏற்படுகிறது. ஒப்பற்ற சாந்தியையும், ஆனந்தத்தையும் அளிக்கின்ற நித்யமான, விஞ்ஞான, ஆனந்தச்செறிவான, ஒளிமயமான பரமாத்மாவை அடைவதற்கு நேரிடை உபாயமான பரமாத்ம தத்வஞானத்திலும் அதன் ஸாதனத்திலும், ச்ரத்தையும், நம்பிக்கையும் உண்டான பிறகுதான், அதில் ஒருமைப்பாடு ஏற்படுவது இயல்பாக அமையும். ஸாதனை புரிவதில் ஒருமைப்பாடு குறைவாக இருந்தால், ச்ரத்தையும், நம்பிக்கையும் குறைவு என்று அறியவேண்டும். இதைத் தெளிய வைப்பதற்காகத்தான் 'ஶ்ரத்தாவாந்' என்பதற்கு அடைமொழியாக 'தத்பர:' என்ற சொல் சேர்க்கப்பட்டிருக்கிறது.

கேள்வி: *ச்ரத்தையும், ஒருமைப்பாடும் இருந்தால் ஞானம் ஏற்படத் தடை ஒன்றுமில்லையானால், 'ஶ்ரத்தாவாந்' என்பதற்கு 'ஸம்யதேந்த்ரிய:' என்று மற்றோர் அடைமொழி கொடுப்பானேன்?*

பதில்: ச்ரத்தையுடன் முழுமையாக ஈடுபட்டுவிட்டால் பாவங்கள் அழிந்து, உலகியல் போகங்களில் வைராக்யம் ஏற்பட்டு, மனமுடன் கூடிய புலன்கள் தாமாக அடங்கிவிடும்; பரமாத்மாவின் உண்மை அறிவும் ஏற்பட்டுவிடும் என்பதில் ஸந்தேஹமே இல்லை. ஆனால் இந்த ரஹஸ்யத்தை உணராத ஸாதகன் கொஞ்சம் முயற்சி செய்தவுடன், ஏதோ முழுமையாக

ஈடுபட்டுவிட்டாற்போல நினைத்துக் கொண்டு, அதிலே வெற்றி கிடைக்கவில்லையே என்று நிராசை அடைந்து, முயற்சியைக் கைவிட்டு விடுகிறான். இப்படி நழுவாமல் ஸாதகன் கவனமாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் 'ஸம்யதேந்த்ரிய:' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது புலன்களும், மனமும் கட்டுப்படும்வரை ச்ரத்தையுடன், முழுமூச்சுடன், மேலும் மேலும் தீவிரமான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டே இருக்கவேண்டும். ஏனெனில் ச்ரத்தையுடன் கூடிய முழு முயற்சிக்கு உரைகல் புலன்களின் கட்டுப்பாடே. எவ்வளவுக்கெவ்வளவு ச்ரத்தையும், முயற்சியும் தீவிரமாகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு மனமும், புலன்களும் கட்டுப்படுகின்றன. மனமும், புலன்களும் கட்டுப்படுவது எந்த அளவு குறைகின்றதோ, அந்த அளவு ஸாதனையில் ஈடுபாடு குறையும். ஸாதனையில் ஈடுபாடு குறைந்தால், அது ச்ரத்தையின் குறைவுதான் என்று தெரிந்து கொள்ளவேண்டும். இதற்காகத்தான் 'ஸம்யதேந்த்ரிய:' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டிருக்கிறது.

கேள்வி: 'ஞானம் பெற்றவுடன் தாமதமின்றி அதே கணத்தில் பகவானை அடைவது என்ற பரமசாந்தியைப் பெறுவான்' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: ஆதவன் உதித்த அக்கணமே இருள் விலகி எல்லாப் பொருட்களும் கண்களுக்கு விளங்குவதுபோல, பரமாத்ம தத்வஞானம் ஏற்படுகின்ற அதே கணத்தில், அஞ்ஞானம் விலகிப் பரமாத்மாவை அடைந்துவிடுகிறான் (5/16). அஞ்ஞானமும், அதன் விளைவான கர்மவாஸனை, விருப்பு-வெறுப்பு, மகிழ்ச்சி-துயரம் முதலிய விகாரங்களும், நல்லதும், தீயதுமான கர்மவினைகளும் அறவே ஒழிவது, தத்வஞானம் கிட்டுவது, பரமாத்ம ஐக்யம் இம்மூன்றும் ஒரே நேரத்தில் ஏற்படுகின்றன. விஞ்ஞான, ஆனந்த, ஒளிமயமான பரமாத்மாவை அடைவதுதான் 'பரமசாந்தி' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

பொருத்தம்: இவ்விதம் ச்ரத்தையுடையவனுக்கு ஞானம் பெறுவதும் அந்த ஞானத்திலிருந்து, பரமசாந்தியை அடைவதும் பயன் என்று கூறி, ச்ரத்தையும், விவேகமும் இல்லாது ஸந்தேஹப்படுபவனை இகழ்கிறார்—

अज्ञश्चाश्रद्दधानश्च संशयात्मा विनश्यति।
नायं लोकोऽस्ति न परो न सुखं संशयात्मनः॥४०॥

அஜ்ஞஶ்சாஶ்ரத்₃த₃தா₄நஶ்ச ஸம்ஶயாத்மா விநஶ்யதி ।

நாயம் லோகோऽஸ்தி ந பரோ ந ஸுக₂ம் ஸம்ஶயாத்மந: ॥ 40 ॥

அஜ்ஞ: ச — விவேகமற்றவனும், **அஶ்ரத்₃த₃தா₄ந:** ச — ச்ரத்தை இல்லாதவனுமான, **ஸம்ஶயாத்மா** — ஸந்தேஹமுடையவன், **விநஶ்யதி** — பகவத் விஷயத்தில் தத்வஞானம் பெறாமல் வீணாக அழிவான். **ஸம்ஶயாத்மந:** — (இந்த) ஸந்தேஹமுடையவனுக்கு, **அயம் லோக:** — இவ்வுலகம், **ந அஸ்தி** — இல்லை, **பர: ந** — பரலோகமும் இல்லை, **ஸுக₂ம் ச ந** — ஸுகமும் கிடையாது.

விவேகமற்றவனும் ச்ரத்தை இல்லாதவனுமான ஸந்தேஹமுடையவன் பகவத் விஷயத்தில் தத்வஞானம் பெறாமல் வீணாக அழிவான். இந்த ஸந்தேஹமுடையவனுக்கு இவ்வுலகம் இல்லை. பரலோகமும் இல்லை. ஸுகமும் கிடையாது.

கேள்வி: 'அஜ்ஞ:', 'அஶ்ரத்ததாந:' என்ற இரண்டு அடைமொழிகளின் பொருள் என்ன? 'ஸம்ஶயாத்மா' என்றால் யார்? அவன் வீணாக அழிவான் என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: உண்மை எது? பொய் எது? ஆத்மா எது? அநாத்மா எது என்று பகுத்தறியும் சக்தி இல்லாமையால், எதைச் செய்யலாம், எதைச் செய்யக் கூடாது என்ற முடிவுக்கு வர இயலாத விவேகமற்றவனை 'அஜ்ஞ:' என்ற சொல் குறிப்பிடுகிறது. ஈசுவரன், பரலோகம்,

அவற்றை அடையும் உபாயம், அவற்றைக் கூறும் சாஸ்த்ரங்கள், பெரியோர்கள், அவர்கள் கூறும் ஸாதனங்கள், அவற்றினால் ஏற்படும் பயன் இவற்றில் நம்பிக்கையற்றவனே 'அச்ரத்ததாந:'. ஈசுவரன், பரலோகம் ஆகிய எந்த விஷயத்திலும் ஒரு நிச்சய புத்தியில்லாமல் எதிலும் ஸந்தேஹப்படுபவன் 'ஸம்சயாத்மா'. விவேகமும், நம்பிக்கையும் இல்லாத இத்தகைய ஸந்தேஹ ப்ராணியைப் பற்றித் தொகுத்துக் கூறுகிறார். அவன் பகவத் விஷயத்தில் தத்வஞானம் பெறாமல் அழிவான். வேதங்களிலும், சாஸ்த்ரங்களிலும், பெரியோர்களிடமும் அவர்கள் சொல்வதிலும், அவர்கள் கூறும் ஸாதனங்களிலும், சரியான அறிவு ஏற்படாத காரணத்தாலும், அறிந்த சிறிதிலும் நம்பிக்கை ஏற்படாத காரணத்தாலும், ஒவ்வொரு விஷயத்திலும் ஸந்தேஹப்பட்டுக் கொண்டே இருப்பான். எதைச் செய்வது என்பது புரியாமல் எதிலும் ஸந்தேஹப்பட்டுக் கொண்டு தன் வாழ்க்கையை வீணாக்கிக் கொள்வான். அதனால், தான் பெற வேண்டிய நன்மைகளை இழப்பான். ஆனால் ஒவ்வொன்றையும் பகுத்தறியும் சக்தி படைத்தவனோ அல்லது வேதம், சாஸ்த்ரம் இவற்றிலும், பெரியோர்களிடத்தும் நம்பிக்கை கொண்டவனோ மேலே சொன்னவிதம் சீரழியமாட்டான்; மாறாகப் பெரியோர்தம் உதவியினால், அர்ஜுனன் போல, தன் ஸந்தேஹங்களைப் போக்கிக் கொண்டு, கடமைகளை ஆற்றுவதில் பூரணமாக ஈடுபடுவான். செய்யவேண்டியதைச் செய்த நிம்மதியுடன் மனிதப்பிறவி பெற்ற பயனை அடைவான். விவேகமில்லாதவனுக்கு ச்ரத்தை மட்டும் இருந்தாலும் போதும். அந்த ச்ரத்தையின் காரணமாகப் பெரியோர்கள் சொன்னபடி கேட்டு, ஸந்தேஹங்களை விலக்கி ஸாதனங்களில் ஈடுபடுவான். அவனுக்கும் அவர்களுடைய அருளினால் மங்களம் உண்டாகும் *(13/25)*. ஒருவனுக்கு ச்ரத்தையும், விவேகமும் ஏற்படாதவரை எந்த ஸந்தேஹமும் தீர்வதற்கு வேறு உபாயமே இல்லை. எனவே அவன் வீழ்ச்சியையே அடைவான்.

கேள்வி: 'ஸந்தேஹமுடையவனுக்கு இவ்வுலகமில்லை; பரலோகமுமில்லை; ஸுகமுமில்லை' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: ஸந்தேஹமுடையவன் உண்மையறிவு பெறான் என்பது மட்டுமன்று. ஸந்தேஹமுள்ளவரை, அதை அழிக்காதவரை, அவன் இம்மையில் இந்த மனிதப் பிறவியில் இருந்தும் செல்வம், புகழ் முதலியவற்றையும் பெறமாட்டான்; இறந்தபிறகு, மறுமையில் ஸ்வர்கம் முதலியவற்றையும் பெறமாட்டான். உலகியல் ஸுகமும் அவனுக்குக் கிட்டாது. ஸந்தேஹமிருக்கும்வரை ஒரு முடிவுக்கும் வரமாட்டான். அவனுக்கு எதிலும் வெற்றி கிட்டாது. ஆகவே மனிதன் விவேகத்தினாலும், நம்பிக்கையினாலும் ஸந்தேஹத்தை அறவே ஒழிக்கவேண்டும்.

பொருத்தம்: இவ்விதம் விவேகமின்மை, ச்ரத்தையின்மை, ஸந்தேஹம் ஆகியன ஞானம் பெறுவதற்குத் தடையாகும் என்று கூறி, விவேகத்தினால் ஸந்தேஹத்தை ஒழித்து, கர்மயோகத்தில் அர்ஜுனனை உற்சாகத்துடன் ஈடுபடுத்துவதற்காக, ஸந்தேஹமின்றிப் புலன்களை அடக்கியவனான கர்மயோகியைப் புகழ்கிறார்—

योगसन्न्यस्तकर्माणं ज्ञानसंछिन्नसंशयम् ।
आत्मवन्तं न कर्माणि निबध्नन्ति धनञ्जय ॥ ४१ ॥

யோகஸந்ந்யஸ்தகர்மாணம் ஜ்ஞாநஸஞ்சிந்நஸம்சயம் ।
ஆத்மவந்தம் ந கர்மாணி நிபத்நந்தி தநஞ்ஜய ॥ 41 ॥

தநஞ்ஜய – அர்ஜுன! **யோக ஸந்ந்யஸ்த கர்மாணம்** – கர்மயோக முறைப்படி கர்மங்கள் அனைத்தையும் (நிறைவேற்றி), பரமாத்மாவிடம் அர்ப்பணம் செய்து, **ஜ்ஞாந ஸஞ்சிந்ந ஸம்சயம்** – விவேக ஞானத்தினால் ஸந்தேஹங்களைப் போக்கிக் கொண்டு, **ஆத்மவந்தம்** – மனதைத் தன்வசமாக்கிக் கொண்டுவிட்டவனை, **கர்மாணி** – கர்மங்கள், **ந நிபத்நந்தி** – கட்டுப்படுத்துவதில்லை.

அர்ஜுன! கர்மயோக முறைப்படி கர்மங்கள் அனைத்தையும் நிறைவேற்றிப் பரமாத்மா விடம் அர்ப்பணம் செய்து விவேக ஞானத்தினால் ஸந்தேஹங்களைப் போக்கிக் கொண்டு மனதைத் தன்வசமாக்கிக் கொண்டுவிட்டவனைக் கர்மங்கள் கட்டுப்படுத்துவதில்லை.

கேள்வி: 'யோகஸந்யஸ்தகர்மாணம்' என்ற தொடரில் 'யோகம்' என்ற சொல்லுக்கு ஞானயோகம் என்று பொருள் கொண்டு, ஞானயோகத்தைக் கொண்டு, சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட கர்மங்களை த்யாகம் செய்பவன் என்று பொருள் கொண்டால் என்ன தவறு?

பதில்: இங்கே கர்மங்களைச் செய்யாமல் த்யாகம் செய்யும்படி சொல்லும் ஸந்தர்பமில்லை. இங்கே பகவான் 'யோகத்தின் வழியாகக் கர்மங்களை ஸந்யாஸம் செய்யும் மனிதனைக் கர்மங்கள் கட்டுப்படுத்தா' என்று கூறுகிறார். அடுத்த ச்லோகத்தில் 'ஆகவே' என்று ஆரம்பித்து, இதை லக்ஷ்யமாகக் காட்டி, அர்ஜுனனை 'யோகத்தில் நிலைபெற்று யுத்தம் செய்வாயாக' என்று ஆணையிடுகிறார். இந்த ச்லோகத்தில் 'யோகஸந்யஸ்தகர்மாணம்' என்ற தொடருக்கு 'கர்மங்களைச் செய்யாமல் த்யாகம் செய்வது' பகவானின் கருத்தாக இருந்தால் பகவான் இவ்வாறு சொல்லமாட்டார். ஆகவே இங்கு யோகஸந்யஸ்தகர்மாணம் என்ற சொல்லுக்குக் கர்மங்களைச் செய்யாமலே த்யாகம் செய்பவன் என்று பொருள் கொள்ளக் கூடாது. கர்மயோக முறையில் எல்லாக் கடமைகளையும் ஆற்றி, அவற்றில் பயனில் விருப்பம், மமகாரம், பற்று, ஆசை இவற்றை அறவே துறந்து, பகவானுக்கு அர்ப்பணம் செய்துவிடும் த்யாகியைத்தான் குறிப்பிடுகிறார் *(3/30, 5/10)* என்று கொள்ளவேண்டும். இந்த ஸந்தர்பத்திற்கு இதுதான் ஏற்ற பொருள்.

கேள்வி: 'ஜ்ஞாநஸம்சிந்நஸம்ஶயம்' என்ற தொடரில் ஞானம் என்றால் எது? கீதையில் ஞானம் என்ற சொல் எந்தெந்த ச்லோகங்களில் எந்தெந்த அர்த்தங்களில் விவரிக்கப்பட்டுள்ளது?

பதில்: மேலே சொன்ன தொடரில் எந்த ஒரு பொருளைப் பற்றியும் விவேகத்தினால் ஆராய்ந்து, ஸந்தேஹம் தீர்ந்து, முடிவுக்கு வரக்கூடிய விவேக சக்தியை 'ஞானம்' என்ற சொல் குறிக்கிறது. 'ஜ்ஞாநம்' என்ற ஸம்ஸ்க்ருதச் சொல், ஸம்ஸ்க்ருத இலக்கணப்படி 'ஜ்ஞா அவபோதநே' (அறிந்து கொள்ளுதல்) என்பதையே குறிக்கும். கீதையில் இடத்திற்கேற்றவாறு 'ஜ்ஞாநம்' என்ற சொல் பல பொருட்களில் உபயோகப்படுகிறது.

*(1) 12/12*ல் ஞானத்தைக் காட்டிலும் த்யானம், அதைக் காட்டிலும் கர்மத்தின் பயனை த்யாகம் செய்வது சிறந்தது என்று கூறியுள்ளார். இக்காரணத்தினால் அங்கு 'ஞானம்' என்ற சொல்லுக்கு, சாஸ்த்ரங்கள் அல்லது பெரியோர்கள் வாயிலாகக் கிடைக்கும் விவேக புத்தி என்று பொருள்.

*(2) 13/17*ல் அறியத்தக்க பொருள் என்ற பொருளில் ஞானம் என்ற சொல் வருகிறது. ஆகவே ஞானமென்றால் அங்கு நித்யமான, ஞான வடிவான, ஆனந்தமயமான பரமாத்மா என்று பொருள்.

*(3) 18/42*ல் ப்ராம்மணர்களின் இயல்பான கடமைகளைக் கூறும் சாஸ்த்ரங்களைக் கற்பது, கற்பிப்பது என்ற பொருளில் ஞானம் என்ற சொல் வருகிறது.

*(4) 4/36*லிருந்து *4/39* வரை வரும் 'ஜ்ஞாநம்' என்பதற்கு, பரமாத்ம தத்வஞானம் என்று பொருள். ஏனெனில் இது எல்லாக் கர்மங்களையும் பொசுக்கிவிடக் கூடியது; எல்லாப் பாவங்களிலிருந்தும் கரை ஏற்றக்கூடியது; எல்லாவற்றைக் காட்டிலும் பவித்ரமானது; யோகஸித்தியின் பயனான பரமசாந்திக்குக் காரணமானது என்று சொல்லப்படுகிறது. *5/16*லும் பரமாத்ம ஸ்வரூபத்தை நேரிடையாக தர்சிக்க வைப்பது என்றும், *14/1,2*லும் எல்லா ஞானங்களைக் காட்டிலும் சிறந்தது என்றும் கூறப்படுவதால் அங்கெல்லாம் 'ஞானம்' என்பதற்குப் பரம தத்வஞானம் என்றுதான் பொருள். மற்ற இடங்களிலும் ஸந்தர்பத்தை அனுஸரித்து இப்படிப் பொருள் கொள்ளலாம்.

(5) 18/21ல் 'பொருட்கள் வெவ்வேறானவை; ஜீவர்கள் வெவ்வேறானவை' என்றறிவது ராஜஸ ஞானம் ஆகும்.

(6) 13/11ல் தத்வஞானங்களின் ஸாதனத் தொகுப்பு என்று 'ஞான'த்திற்குப் பொருள்.

(7) 3/3ல் யோக என்ற சொல்லுடன் ஞானம் என்பது வருவதால் அங்கு ஞானயோகம் அதாவது ஸாங்க்யயோகம் என்று பொருள். இவ்விதம் இன்னும் சில இடங்களில் ஸந்தர்பத்திற்கேற்றவாறு ஞானம் என்பது ஸாங்க்யயோகத்தைக் குறிக்கும். மேலும் பல இடங்களில் ஞானம் என்ற சொல் வேறு பல பொருள்களிலும் வருவதை ஆங்காங்கே பார்த்தறியலாம்.

கேள்வி: 'ஜ்ஞாநஸம்சிந்நஸம்ஶயம்' என்ற தொடரில் 'ஞானம்' என்பதற்கு, 'தத்வஞானம்' என்று பொருள் கொண்டால் என்ன தவறு?

பதில்: தத்வ ஞானம் பெற்றுவிட்டால் எல்லா ஸந்தேஹங்களும் அடியோடு தீர்ந்துவிடும். அக்கணமே பரமாத்மாவை அடைந்துவிடலாம். பரமாத்மாவை அடைவதற்காக வேறு எந்த ஸாதனையும் புரியவேண்டியதில்லை. ஆகவே இங்கு ஞானம் என்பதற்குத் தத்வஞானம் என்று பொருள் கூறுவது சரியன்று. தத்வஞானம் என்பது கர்மயோகத்தின் பயன். அடுத்த ச்லோகத்தில் பகவான் அர்ஜுனனை ஞானத்தின் மூலம், அஞ்ஞானத்தினால் உண்டான ஸந்தேஹத்தை அழித்துக் கர்மயோகத்தில் நிலை பெறுமாறு சொல்கிறார். ஆகவே இங்கு 'விவேக ஞானம்' என்று பொருள் கொள்வதுதான் சரி ஆகும்.

கேள்வி: விவேக ஞானத்தினால் எல்லா ஸந்தேஹங்களையும் அழிப்பது என்றால் என்ன பொருள்?

பதில்: ஈசுவரன் இருக்கிறாரா, இல்லையா? எப்படி இருக்கிறார்? பரலோகம் என்பது உண்டா, இல்லையா? இருந்தால் எப்படி இருக்கிறது? எங்கே இருக்கிறது? உடல், மனம், புலன்கள், புத்தி இவையெல்லாம் ஆத்மாவா? ஆத்மாவைத் தவிர வேறானவையா? அவை ஜடங்களா? சேதனங்களா? எங்கும் நிறைந்தவையா? குறிப்பிட்ட இடத்தில் உள்ளவையா? 'கர்த்தா' – 'அனுபவிக்கிறவன்' என்று ஜீவனைக் கொள்வதா, அல்லது ப்ரக்ருதியைக் கொள்வதா? ஆத்மா ஒன்றா, பலவா? ஒன்றானால் எப்படி உள்ளது? பலவானால் எப்படி இருக்கும்? ஜீவன் சுதந்திரமுடையவனா, கட்டுப்பட்டவனா? கட்டுப்பட்டவனானால் யாருக்கு? எப்படி? கர்மபந்தத்திலிருந்து விடுதலை பெறுவதற்காகக் கர்மங்களைச் செய்யாமல் விடுவது சரியா? அல்லது கர்மயோக முறைப்படி செய்வது சரியா? அல்லது ஸாங்க்யயோக முறைப்படி ஸாதனை புரிவது நல்லதா? என்று எத்தனை வகையான ஸந்தேஹங்கள், யுக்தியுடன் ஆராய்ச்சி செய்கின்ற மனிதனுடைய புத்தியில் ஏற்படுமோ, அவையெல்லாம் 'ஸம்ஶயம்' எனப்படும்.

இந்த எல்லா ஸந்தேஹங்களையும் விவேக ஞானத்தின் மூலம் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவது; அதாவது எந்த விஷயத்திலும் ஸந்தேஹமில்லாமல் இருப்பது, தான் செய்ய வேண்டியதைத் தீர்மானிப்பது – இவைதான் 'ஜ்ஞாநஸம்சிந்நஸம்ஶயம்' என்பதற்குப் பொருள்.

கேள்வி: 'ஆத்மவந்தம்' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

பதில்: ஆத்மா என்று கூறக்கூடிய புலன்களுடன் சேர்ந்த மனதை முழுமையாகத் தன்வசப்படுத்தியவனுக்கு 'ஆத்மவந்தம்' என்ற சொல் கூறப்பட்டுள்ளது.

கேள்வி: 'மேலே சொன்ன அடைமொழிகளுடன் கூடியவனைக் கர்மங்கள் பந்தப்படுத்தா' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: அத்தகையவனால் சாஸ்த்ர முறைப்படி கடைப்பிடிக்கப்பட்ட கர்மங்கள், மமகாரம், பற்று, ஆசை இவற்றைத் துறந்து செய்யப்படுவதால், அந்தக் கர்மங்களில் பந்தப்படுத்தும் சக்தி இருக்காது என்று பொருள்.

பொருத்தம்: இவ்விதம் கர்மயோகியின் பெருமை கூறி, அர்ஜுனனிடம் 'கர்மயோகத்தில் நிலைபெற்று யுத்தம் செய்வாயாக' என்று ஆணையிட்டு, பகவான் அத்யாயத்தை நிறைவு செய்கிறார்—

तस्मादज्ञानसम्भूतं हृत्स्थं ज्ञानासिनात्मनः।
छित्त्वैनं संशयं योगमातिष्ठोत्तिष्ठ भारत॥४२॥

தஸ்மாத₃ஜ்ஞாநஸம்பூ₄தம் ஹ்ருத்ஸ்த₂ம் ஜ்ஞாநாஸிநாத்மந: ।

சி₂த்த்வைநம் ஸம்ஶயம் யோக₃மாதிஷ்டே₂ாத்திஷ்ட₂ ப₄ாரத ॥ 42 ॥

தஸ்மாத் – ஆகவே, ***ப₄ாரத*** – பரதகுலத்தோன்றலே, அர்ஜுன! (நீ), ***ஹ்ருத்ஸ்த₂ம்*** – உள்ளத்தில் இருக்கும், ***அஜ்ஞாந ஸம்பூ₄தம்*** – அஞ்ஞானத்தில் உண்டான, ***ஆத்மந:*** – உன்னுடைய, ***ஏநம் ஸம்ஶயம்*** – இந்த ஸந்தேஹத்தை, ***ஜ்ஞாந அஸிநா*** – விவேக ஞானம் என்ற வாளினால், ***சி₂த்த்வா*** – சிதைத்து, ***யோக₃ம்*** – ஸமத்வயோகம் என்ற கர்மயோகத்தில், ***ஆதிஷ்ட₂*** – நிலைத்து நில். (மேலும் யுத்தத்திற்காக), ***உத்திஷ்ட₂*** – எழுந்திரு.

ஆகவே 'பரதகுலத்தோன்றலே, அர்ஜுன! நீ உள்ளத்தில் இருக்கும் அஞ்ஞானத்தில் உண்டான உன்னுடைய இந்த ஸந்தேஹத்தை விவேக ஞானம் என்ற வாளினால் சிதைத்து ஸமத்வயோகம் என்ற கர்மயோகத்தில் நிலைத்து நில். மேலும் யுத்தத்திற்காக எழுந்திரு.'

கேள்வி: *'தஸ்மாத்' என்று கூறுவதற்கு என்ன பொருள்?*

பதில்: முன் ச்லோகத்தில் கர்மயோகத்தில் நிலைபெற்றவன் கர்ம பந்தத்திலிருந்து விடுபடுவான் என்று கூறினார். அக்காரணத்தினால் 'நீயும் கர்மயோகத்தில் நிலைபெறுவாய்' என்று அர்ஜுனனை உத்ஸாஹப்படுத்துகிறார் என்று பொருள்.

கேள்வி: *அர்ஜுனனை 'பாரத' என்று அழைப்பதன் கருத்து என்ன?*

பதில்: ராஜரிஷியான பரதன் வரலாற்றை நினைவுபடுத்துகிறார். பரதன் மிகப் பெரிய கர்மயோகி; ஸாதனைகளில் தீவிர ஈடுபாடு உடையவர்; உற்சாகமுடையவர்; அவருடைய குலத்தில் பிறந்த நீ, அவரைப் போல, வீரம், தைர்யம், உறுதியோடு கடமையை ஆற்றுவதில் ஒன்றி இருப்பாயாக என்று அறிவுறுத்துகிறார்.

கேள்வி: *'ஏநம் ஸம்ஶயம்' என்பது எந்த ஸந்தேஹத்தைக் குறிக்கிறது? 'அஜ்ஞாநஸம்பூதம், ஹ்ருத்ஸ்தம்' என்ற அடைமொழிகளுக்கு என்ன பொருள்?*

பதில்: 41வது ச்லோகத்தில் 'ஜ்ஞாநஸம்சிந்நஸம்ஶயம்' என்ற தொடரினால் எந்த ஸந்தேஹத்தை எடுத்துக் கூறினாரோ, அந்த ஸந்தேஹம் விரிவாக உரையில் விளக்கப்பட்டது. அதைத்தான் 'ஏநம் ஸம்ஶயம்' என்று கூறுகிறார். 'இது அஞ்ஞானத்தினால் உண்டானது' என்றால் இந்த ஸந்தேஹத்திற்குக் காரணம் விவேகமின்மை என்று பொருள். விவேகத்தினால் விவேகமின்மையைக் களைந்து, அத்துடன் ஸந்தேஹத்தையும் அழிக்கவேண்டும். 'உள்ளத்தில் உள்ளது' என்றால் இந்த ஸந்தேஹத்தின் உற்பத்தி ஸ்தானம் இதயம் அதாவது உள்ளம். எவனுடைய உள்ளம் வசப்படுத்தப்பட்டிருக்கிறதோ, அவனுக்கு இந்த ஸந்தேஹத்தைத் தீர்த்துக் கொள்வது எளிதான செயல்.

கேள்வி: *அர்ஜுனனைப் பார்த்து 'இந்த ஸந்தேஹத்தைச் சிதைத்துக் கொள்' என்று கூறுவதற்கு என்ன பொருள்? அர்ஜுனனுடைய உள்ளத்திலும் இவ்வித ஸந்தேஹம் உள்ளதா?*

பதில்: முதலில் அர்ஜுனன் யுத்தம் செய்வது உசிதம் என்றுதான் யுத்தத்திற்குத் தயார் ஆகி யுத்தகளத்தில் வந்திருக்கிறார். தம்முடைய ரதத்தை இரு ஸேனைகளுக்கும் மத்தியில் கொண்டு வந்து நிறுத்துமாறு பகவானை வேண்டுகிறார். பிறகு அவர் இரண்டு ஸேனைகளிலும் தமது உறவுமுறையார் கூடி, இறப்பதற்குத் தயாராக வந்து நிற்பதைப் பார்க்கிறார். மோஹமடைந்து கவலையில் ஆழ்ந்துவிடுகிறார். 'யுத்தம் செய்வது பாவம்'

என்று நினைக்கிறார் (1/28–47). யுத்தம் செய்வது ந்யாயம்தான் என்று பகவான் எடுத்துக் கூறின பிறகும் கூட (2/3) தாம் செய்யவேண்டியதை அவரால் தீர்மானிக்க முடியவில்லை. என்ன செய்வது என்று புரியாமல், "நான் பெரியோர்களை எதிர்த்து எப்படிப் போர் புரிவேன்? (2/4) நான் எது செய்வது நல்லது? யாருக்கு வெற்றி கிடைக்கும் என்பதும் தெரியவில்லை (2/6) எனக்கு எது மங்களத்தைக் கொடுக்குமோ, அதை எனக்கு எடுத்துச் சொல்லுங்கள். என் உள்ளம் குழம்பியிருக்கிறது" (2/7) என்று சொல்கிறார். இதிலிருந்து அர்ஜுனனுடைய உள்ளத்தில் ஸந்தேஹம் உள்ளது என்பது நன்றாகத் தெரிகிறது. அவருடைய விவேக சக்தி மோஹத்தினால் மழுங்கி இருக்கிறது; அதனால், என்ன செய்யவேண்டும் என்பதை அவரால் தீர்மானிக்க முடியவில்லை. தவிர ஆறாவது அத்யாயத்தில் அர்ஜுனன் கூறுகிறார்: 'என் ஸந்தேஹத்தைத் தீர்க்க உங்களால்தான் முடியும்' (6/39). கீதை உபதேசம் கேட்ட பிறகு சொல்கிறார்: 'என் ஸந்தேஹங்கள் தீர்ந்துவிட்டன' (18/73). பகவானும் கூட ஆங்காங்கு (8/7, 12/8) 'இதில் ஸந்தேஹமில்லை. இவ்விஷயத்தில் ஸந்தேஹப்படாதே' என்று கூறுகிறார். ஆகவே அர்ஜுனனுடைய உள்ளத்தில் ஸந்தேஹமிருந்தது; அதன் காரணமாகத்தான் ஸ்வதர்மமாகிய யுத்தத்தைத் தவிர்ப்பதற்கும் தயாராகிவிட்டார் என்பது தெரிகிறது. ஆகவே, பகவான் இங்கு 'உன் உள்ளத்தில் உள்ள ஸந்தேஹத்தைத் தீர்த்துக் கொள். நான் என்ன ஆணையிடுகிறேனோ, அதில் எவ்விதமான ஐயமுமின்றி, அதை ஏற்று நடத்துவதற்குத் தயாராவாய்' என்கிறார்.

கேள்வி: இங்கு அர்ஜுனனைத் தமது உள்ளத்தில் உள்ள ஸந்தேஹத்தைத் தீர்த்துக் கொள்ளும்படி கூறுவதன் கருத்து என்ன?

பதில்: 'நீ என்னுடைய பக்தன், நண்பன். பிறர் உள்ளத்தில் ஸந்தேஹம் இருந்தால் தீர்த்துவைக்க வேண்டிய நீ இப்படி ஸந்தேஹப்படுவது அழகன்று. அப்படிப் பிறர் ஸந்தேஹத்தைத் தீர்க்க முடியாவிட்டாலும், உன்னுடைய ஸந்தேஹத்தையாவது தீர்த்துக் கொள்ளலாமே!' என்கிறார் பகவான்.

கேள்வி: 'யோகத்தில் நிலைத்து நில்; யுத்தத்திற்காக எழுந்திரு' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: 'நான் சொல்வதெல்லாம் உன்னுடைய நன்மைக்காகத்தான். ஆகவே அதில் ஸந்தேஹம் கொள்ளாமல், நான் சொல்கிறபடி கர்மயோகத்தில் நிலைத்து நின்று, யுத்தத்திற்குத் தயாராவாயாக. அதனால் உனக்கு எல்லாவிதத்திலும் மங்களமுண்டாகும்' என்று இந்த அத்யாயத்திற்கு முடிவுரை போன்று பகவான் சொல்கிறார்.

ॐ तत्सदिति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे श्रीकृष्णार्जुनसंवादे
ज्ञानकर्मसन्न्यासयोगो नाम चतुर्थोऽध्याय: ॥ ४ ॥

ஓம் தத்ஸதி₃தி ஸ்ரீமத்₃ப₄க₃வத்₃கீ₃தாஸூபநிஷத்ஸு ப்₃ரஹ்மவித்₃யாயாம்
யோக₃ஶாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே₃ ஜ்ஞாநகர்மஸந்ந்யாஸயோகோ₃
நாம சதுர்தோ₂ऽத்₄யாய: ॥ 4 ॥

ஓம் தத் ஸத் – ப்ரம்ம வித்யை, யோக ஶாஸ்த்ரம், உபநிஷத்
எனப்படும் ஸ்ரீமத்பகவத்கீதையாகிய ஸ்ரீக்ருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் இடையே
நிகழ்ந்த உரையாடலில் 'ஞானகர்மஸந்யாஸயோகம்' எனப் பெயர் படைத்த
நான்காவது அத்யாயம் நிறைவுற்றது.

ஓம் ஸ்ரீபரமாத்மநே நம:

அத₂ பஞ்சமோऽத்₄யாய:

ஐந்தாவது அத்யாயம்

கர்மஸந்யாஸயோகம்

அத்யாயத்தின் பெயர் இந்த ஐந்தாவது அத்யாயத்தில், 'கர்மயோக நிஷ்டை', 'ஸாங்க்யயோக நிஷ்டை' இவற்றின் விளக்கம் கொடுக்கப்படுகிறது. ஸாங்க்யயோகத்திற்கு மற்றொரு பெயர் 'ஸந்யாஸம்'. ஆகவே இந்த அத்யாயத்திற்கு, 'கர்மஸந்யாஸயோகம்' என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது.

அத்யாயச் சுருக்கம் முதல் ச்லோகத்தில், 'ஸாங்க்யயோகம், கர்மயோகம் இவற்றில் எது சிறந்தது' என்ற அர்ஜுனனின் கேள்விக்கு, 2ல் பகவான் பதில் அளிக்கும் வாயிலாக, ஸாங்க்யயோகம், கர்மயோகம் இரண்டுமே மேன்மை அளிக்கக் கூடியவை; கர்ம ஸந்யாஸத்தைக் காட்டிலும் கர்மயோகம் சிறந்தது என்றும், 3ல் கர்மயோகியின் பெருமையைக் கூறி, 4, 5ல் ஸாங்க்யயோகம், கர்மயோகம் இரண்டிற்கும் பயன் ஒன்றேயாதலால், இரண்டுமே ஒன்றுதான் என்று நிரூபிக்கிறார். 6ல் கர்மயோகமின்றி ஸாங்க்யயோகத்தைக் கடைப்பிடிப்பது கடினம் என்றும், கர்மயோகத்தில் தாமதமின்றிப் பரமாத்மாவை அடைய முடியும் என்றும், 7ல் கர்மயோகிக்கு எந்த விஷயத்திலும் ஒட்டுதல் கிடையாது என்றும், 8, 9ல் ஸாங்க்யயோகியிடம் 'நான் கர்த்தா' என்ற எண்ணம் இல்லை என்றும் நிரூபிக்கிறார். 10, 11ல் 'பகவானுக்கு அர்ப்பணம்' என்னும் நினைவோடு, கர்மத்தைச் செய்பவர்கள், 'கர்மமே முக்யம்' என்ற எண்ணம் உடைய கர்மயோகி ஆகியோரைப் புகழ்ந்து, கர்மயோகியின் செயல்கள் ஆத்மசுத்திக்குக் காரணமாகின்றன என்று கூறுகிறார். 12ல் கர்மயோகிக்கு நிலையான சாந்தியும், பயனில் விருப்பம் கொண்டு கர்மங்களைச் செய்பவர்களுக்கு பந்தமும் ஏற்படும் என்றும், 13ல் ஸாங்க்யயோகியின் நிலையையும், 14, 15ல் 'கர்மம்', 'கர்த்தா', 'கர்மபயனோடு ஒட்டுதல்' ஆகியவற்றை பகவான் படைப்பதில்லை; எவருடைய புண்ய பாவங்களையும் அவர் ஏற்பதில்லை; அஞ்ஞானத்தால் ஞானம் மூடப்பட்டிருப்பதால், எல்லா ஜீவர்களும் மோஹம் அடைந்திருக்கிறார்கள் என்றும், 16ல் ஞானத்தின் பெருமையையும் கூறி, 17ல் ஞானயோகமே முடிவான ஸாதனை என்று விளக்குகிறார். பின்னர், 18 முதல் 20 வரை, பரமாத்மாவில் இரண்டறக் கலந்துவிட்ட மஹாபுருஷர்களின் ஸமத்வபாவனையையும், நிலையையும் விளக்கி, அவர்கள் பரகதியை அடைவதை விவரிக்கிறார். 21ல் குறையாத ஆனந்தத்தை அடைவதற்கான ஸாதனமும், அதை அடைவதையும் சொல்கிறார். 22ல் 'போகங்கள் துக்கத்திற்குக் காரணம்' என்றும், அழியக்கூடியவை என்றும், விவேகியான மனிதன் அவற்றில் பற்றுதல் கொள்ளலாகாது என்றும், 23ல் காமக்ரோதங்களின் தாக்குதலைப் பொறுத்துக் கொள்ளக் கூடியவனை 'யோகி'

என்றும், 'ஸுகமுடையவன்' என்றும் சொல்கிறார். 24 முதல் 26 வரையில் ஸாங்க்யயோகியின் முடிவான நிலையும், ப்ரம்ம நிர்வாணத்தை அடைந்த ஞானிகளான மஹாபுருஷர்களின் இலக்கணமும், 27, 28ல் பயனோடு கூடிய த்யானயோகத்தின் சுருக்கமான விளக்கமும், இறுதியாக 29ல் "தாமே எல்லா யாகங்களையும் ஏற்பவர்; அகில உலகத்தையும் ஆள்பவர்; அனைத்து ப்ராணிகளுக்கும் உற்ற நண்பர்" என்று அறிந்து கொள்வதன் பயன் மேலான சாந்தியை அடைவதே என்று கூறி அத்யாயத்தை நிறைவு செய்கிறார்.

முன் அத்யாயத்துடன் இவ்வத்யாயத்திற்குப் பொருத்தம்: மூன்றாவது, நான்காவது அத்யாயங்களில் பகவானுடைய திருவாயிலிருந்து, கர்மயோகத்தின் பெருமையை அர்ஜுனன் பலவாறாகக் கேட்டறிந்தார். அத்துடன், அப்படிச் செய்வதற்கான தூண்டுதலையும், ஆணையையும் பெற்றார். கூடவே, 'கர்ம யோகத்தின் மூலமாக பகவத் ஸ்வரூப தத்வஞானம் தானாகவே ஏற்படுகிறது' (4/38) என்பதையும் கேட்டறிந்தார். நான்காவது அத்யாயத்தின் இறுதியிலும், அவருக்கு பகவானிடமிருந்து கர்மயோகமே செய்யவேண்டும் என்ற ஆணையும் கிடைத்தது. ஆனால் இடையிடையே அவர் பகவானின் திருவாயிலிருந்தே, 'ப்$_3$ரஹ்மார்பணம் ப்$_3$ரஹ்ம ஹவி:'; 'ப்$_3$ரஹ்மாக்$_3$நாவபரே யஜ்ஞம் யஜ்ஞேநைவோபஜுஹ்வதி'; 'தத்$_3$வித்$_3$தி$_4$ ப்ரணிபாதேந' என்றெல்லாம் ஞானயோகத்தை, அதாவது கர்ம ஸந்யாஸத்தைப் புகழ்வதையும் கேட்டார். இதனால் அர்ஜுனனுக்கு இந்த இரண்டில் எந்த ஸாதனம் சிறந்தது என்ற முடிவுக்கு வரமுடியவில்லை. பகவானே இதற்கு முடிவு சொல்லட்டும் என்ற கருத்துடன் அர்ஜுனன் கேள்வி கேட்கிறார்—

अर्जुन उवाच

सन्न्यासं कर्मणां कृष्ण पुनर्योगं च शंससि।
यच्छ्रेय एतयोरेकं तन्मे ब्रूहि सुनिश्चितम्॥ १॥

அர்ஜுந உவாச

ஸந்ந்யாஸம் கர்மணாம் க்ருஷ்ண புநர்யோக$_3$ம் ச ஶம்ஸஸி ।

யச்ச்$_2$ரேய ஏதயோரேகம் தந்மே ப்$_3$ரூஹி ஸுநிஶ்சிதம் ॥ 1 ॥

அர்ஜுந உவாச — அர்ஜுனன் சொன்னார்: **க்ருஷ்ண** — க்ருஷ்ணா! (நீங்கள்), **கர்மணாம்** — கர்மங்களுடைய, **ஸந்ந்யாஸம்** — ஸந்யாஸத்தைப் பற்றியும், **புந:** — பின்னர், **யோக$_3$ம் ச** — கர்மயோகத்தைப் பற்றியும், **ஶம்ஸஸி** — புகழ்ந்து பேசுகிறீர்கள். (ஆகையால்), **ஏதயோ:** — இவை இரண்டில், **யத் ஏகம்** — எந்த ஒன்று, **மே** — எனக்கு, **ஸுநிஶ்சிதம்** — நிச்சயமாக, **ஶ்ரேய:** — மேன்மையைத் தரக் கூடியதோ, **தத்** — அதை, **ப்$_3$ரூஹி** — சொல்லுங்கள்.

அர்ஜுனன் சொன்னார்: 'க்ருஷ்ணா! நீங்கள் கர்மங்களுடைய ஸந்யாஸத்தைப் பற்றியும், பின்னர் கர்மயோகத்தைப் பற்றியும் புகழ்ந்து பேசுகிறீர்கள். ஆகையால் இவை இரண்டில் எந்த ஒன்று எனக்கு நிச்சயமாக மேன்மையைத் தரக்கூடியதோ அதைச் சொல்லுங்கள்.

கேள்வி: 'க்ருஷ்ண' என்று அழைப்பதன் கருத்து என்ன?

பதில்: 'க்ருஷ்' என்ற ஸம்ஸ்க்ருத வினைச்சொல்லுக்கு ஈர்ப்பது, இழுப்பது என்று பொருள். 'ண' என்றால் ஆனந்தம். 'க்ருஷ்ணன்' என்றால் பரமானந்தஸ்வரூபன் என்று

பொருள். ஆகவே அனைத்தையும் தம்பால் ஈர்க்கிறார். ஆகவே 'க்ருஷ்ண' என்று அழைத்து, "பகவானே! நீங்கள் எல்லா வல்லமையும் படைத்தவர்; எல்லாமறிந்தவர்; பரமேசுவரன். ஆகவே, உங்களால் மட்டுமே என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்ல முடியும்" என்று குறிப்பிடுகிறார்.

கேள்வி: *இங்கு 'கர்மஸந்யாஸம்' என்ற சொல்லுக்குக் கர்மங்களைச் செய்யாமல் விடுவது என்பதுதான் பொருளா?*

பதில்: இல்லை; நான்காவது அத்யாயத்தில் பகவான் ஓர் இடத்தில்கூட கர்மங்களைச் செய்யாமல் விட்டுவிடுவது சிறந்தது என்று கூறவில்லை. இப்படிச் செய்யும்படி அர்ஜுனனுக்கு ஆணையிடவும் இல்லை. மாறாக ஆங்காங்கு, 'பற்றற்றுக் கடமைகளை ஆற்று' என்றுதான் கூறுகிறார் *(4/15,42)*. ஆகவே 'கர்மஸந்யாஸம்' என்றால் 'கர்மங்களைச் செய்யாமல் விடுவது' என்று பொருள் அன்று. 'கர்மஸந்யாஸம்' என்றால், எல்லாக் கர்மங்களையும், 'செய்பவன் நான்' என்ற எண்ணமில்லாமல், 'குணங்கள் குணங்களின் செயல்களில் ஈடுபடுகின்றன' *(3/28)* என்று உணர வேண்டும் என்று பொருள். மேலும் எப்பொழுதும் பரமாத்மாவில் ஒன்றி லயித்து நின்று, எங்கும் ப்ரம்மத்தைப் பார்ப்பதுதான் 'ஞானயோகம்' *(4/24)*. இதுவே 'கர்மஸந்யாஸம்'. நான்காவது அத்யாயத்தில் இவ்விதமான ஞானயோகத்தைத்தான், பகவான் கொண்டாடி இருக்கிறார். அதனாலேதான் அர்ஜுனன் இக்கேள்வியைக் கேட்கிறார்.

பகவான் இதற்குப் பதில் சொல்கையில், 'ஸந்யாஸம்', 'கர்மயோகம்' இரண்டுமே மிகவும் மேன்மையைத் தருபவை என்கிறார். ச்லோகங்கள் 4,5ல் இந்த ஸந்யாஸத்தையே 'ஸாங்க்யம்' என்கிறார். 6ல் இதையே 'ஸந்யாஸம்' என்று கூறி, இங்கு கர்மஸந்யாஸம் என்பதன் பொருள் 'ஸாங்க்யயோகம்', அதாவது 'ஞானயோகம்'; 'கர்மங்களைச் செய்யாமல் விடுவது அல்ல' என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். மேலும் பகவானுடைய கருத்தில் செயல்களைத் துறப்பதால் மட்டும் நன்மை கிடைக்காது *(3/4)*. அத்துடன் கர்மங்களை முற்றிலுமாகச் செய்யாமல் இருப்பதும் ஸாத்யமில்லை *(3/5, 18/11)*. ஆகவே 'கர்மஸந்யாஸம்' என்றால், 'ஞானயோகம்' என்றுதான் கொள்ள வேண்டும். கர்மங்களைச் செய்யாமல் விடுவது என்று பொருள் அன்று.

கேள்வி: *மூன்றாவது அத்யாயத்தின் ஆரம்பத்தில் 'ஞானயோகம், கர்மயோகம் இவற்றில் மேன்மை தரக்கூடிய ஒரு ஸாதனத்தைக் கூறுங்கள்' என்று அர்ஜுனன் கேட்டார். அதே கேள்வியை இங்கே திரும்பவும் கேட்கிறாரே. இதன் பொருள் என்ன?*

பதில்: அங்கு அர்ஜுனன் ஞானயோகம், கர்மயோகம் பற்றிக் கேட்கவில்லை. "உங்கள் அபிப்ராயத்தில் கர்மத்தைக் காட்டிலும் ஞானம் சிறந்ததானால், என்னை ஏன் பயங்கரமான கர்மத்தில் ஈடுபடுத்துகிறீர்கள்? உங்கள் பேச்சை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. உங்கள் பேச்சு என்னைக் குழப்புவது போல இருக்கிறது. அதனால் ஒன்றை நிச்சயமாகக் கூறுங்கள்" என்று கேட்டார். இங்கு அர்ஜுனனின் கேள்வி வேறுவிதமானது. 'கர்மத்தைக் காட்டிலும் ஞானம் சிறந்தது' என்று அர்ஜுனன் நினைக்கவில்லை. பகவான் பேச்சில் குழப்பத்தையும் காணவில்லை. 'நீங்கள் ஞானயோகத்தையும், கர்மயோகத்தையும் ஒருங்கே புகழ்கிறீர்கள். அவை வேறு வேறானவை என்றும் சொல்கிறீர்கள் *(3/3)*. இவை இரண்டில் எனக்கு எது சிறந்த ஸாதனம்?' என்று கேட்கிறார். ஆகவே அர்ஜுனன் மூன்றாவது அத்யாயத்தில் கேட்ட கேள்வியைத் திரும்பவும் கேட்கவில்லை.

கேள்வி: *3/19, 3/30, 4/15, 4/42வது ச்லோகங்களில் பகவான் அர்ஜுனனுக்குத் தெளிவாகக் 'கர்மயோகத்தைக் கடைப்பிடிப்பாய்' என்றுதான் கூறிவிட்டாரே! மறுபடியும் கேட்பதன் நோக்கம் என்ன?*

பதில்: இது சரிதான். ஆயினும் *4/24* முதல் *30* வரையில், கர்மயோகம், ஞானயோகம் இருவகைகளிலும் வெவ்வேறு ஸாதனங்களை 'யாகம்' என்ற பெயரில் கூறினார். அதன்

இடையே த்ரவ்யயக்ஞத்தைக் காட்டிலும் ஞானயக்ஞம் சிறந்தது என்றார் (4/33). 'தத்வமறிந்த ஞானிகளை அண்டி ஞானோபதேசம் பெற்றுக் கொள், அதுதான் சிறந்தது' என்றார் (4/34,35). மேலும் 'கர்மயோகத்தில் தேர்ச்சி பெற்றவன் தத்வஞானத்தைத் தானாகவே பெறுவான்' (4/38) என்றும் கூறினார். இவ்விதம் இரண்டு ஸாதனங்களும் சிறந்தவை என்று கேட்டறிந்த அர்ஜுனன், தான் எதைக் கைக்கொள்வது என்று தீர்மானிக்க முடியாமல், பகவான் எதை உறுதியாக நினைக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ளவே கேட்கிறார். இங்கு அர்ஜுனன் பகவானிடம் தெளிவாகக் கேட்க விரும்புவது என்னவென்றால், "ஆனந்தமயனான க்ருஷ்ண! தத்வஞானத்தை தத்வமறிந்த பெரியோர்களை அணுகி ச்ரவணம், மனனம் முதலிய ஸாதனைகள் புரிந்து, ஞானயோகத்தைக் கைக்கொள்ளட்டுமா? அல்லது பலனில் கருத்து இல்லாமல் கர்மங்களைச் செய்து, பகவானுக்கு அர்ப்பணம் செய்வது என்கின்ற கர்மயோகத்தைக் கைக்கொள்ளட்டுமா?" என்பதே.

பொருத்தம்: **அர்ஜுனனின் இந்தக் கேள்விக்கு பகவான் பதில் அளிக்கிறார்—**

श्रीभगवानुवाच

संन्यासः कर्मयोगश्च निःश्रेयसकरावुभौ ।
तयोस्तु कर्मसन्न्यासात्कर्मयोगो विशिष्यते ॥ २ ॥

ஸ்ரீப$_4$க$_3$வாநுவாச

ஸந்ந்யாஸ: கர்மயோக$_3$ஶ்ச நி:ஶ்ரேயஸகராவுபெ$_4$ள ।
தயோஸ்து கர்மஸந்ந்யாஸாத்கர்மயோகே$_3$ா விஶிஷ்யதே ॥ 2 ॥

ஸ்ரீப$_4$க$_3$வாநுவாச – ஸ்ரீபகவான் சொன்னார்: **ஸந்ந்யாஸ:** – கர்ம ஸந்யாஸம், **கர்மயோக$_3$:** – கர்மயோகம், **உபெ$_4$ள ச** – இரண்டுமே, **நி:ஶ்ரேயஸகரௌ** – மிகவும் மேன்மையளிப்பவைதான். **து** – ஆயினும், **தயோ:** – இவ்விரண்டிலும், **கர்மஸந்ந்யாஸாத்** – கர்ம ஸந்யாஸத்தைக் காட்டிலும், **கர்மயோக$_3$:** – கர்மயோகம் (ஸாதனை முறையில் எளிதானதால்), **விஶிஷ்யதே** – சிறந்தது.

ஸ்ரீபகவான் சொன்னார்: 'கர்ம ஸந்யாஸம், கர்மயோகம் இரண்டுமே மிகவும் மேன்மையளிப்பவைதான். ஆயினும் இவ்விரண்டிலும் கர்ம ஸந்யாஸத்தைக் காட்டிலும் கர்மயோகம் ஸாதனை முறையில் எளிதானதால் சிறந்தது.

கேள்வி: இங்கு 'ஸந்ந்யாஸம்' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

பதில்: 'ஸம்' என்ற உபஸர்கம் 'நல்ல முறையில்' என்று பொருள்படும். 'ந்யாஸ' என்றால் த்யாகம் செய்வது. எனவே 'ஸந்யாஸம்' என்றால் நன்றாக த்யாகம் செய்வது; முழுமையாக த்யாகம் செய்வது என்று பொருள். அதாவது மனம், சொல், உடல் இவற்றால் ஆகக்கூடிய எல்லாச் செயல்களிலும், 'தான் கர்த்தா' என்ற அபிமானத்தை விட்டு, உடலிலும், மற்ற உலகியலிலும் அஹங்காரம், மமகாரம் இவற்றை முற்றிலும் துறப்பதுதான் ஸந்யாஸம். கீதையில் ஸந்யாஸம், ஸந்யாஸி என்ற சொற்கள் ஸந்தர்பத்திற்கு ஏற்றவாறு பல பொருட்களில் உபயோகப்படுத்தப்படுகின்றன. சில இடங்களில் கர்மங்களை பகவானுக்கு அர்ப்பணம் செய்வதை 'ஸந்யாஸம்' என்று கூறுகிறார் (3/30, 12/6, 18/57). இன்னோரிடத்தில் பயனை விரும்பிச் செய்யப்படும் கர்மத்தை த்யாகம் செய்வது (18/2) என்றும், பிறிதோரிடத்தில் மனதால் கர்மத்தைத் துறப்பது (5/13) என்றும், கர்மயோகம் (6/2) என்றும், வேறு சில இடங்களில் கர்மங்களைச் செய்யாமல் விடுவது (3/4, 18/7) என்றும், இன்னும் சில இடங்களில் ஸாங்க்யயோகம் அதாவது ஞான நிஷ்டை (5/6, 18/49) என்றும் சொல்லியிருக்கிறார். இதுபோலச் சில இடங்களில் கர்மயோகியை 'ஸந்ந்யாஸீ' (6/1, 18/12) என்றும், 'ஸந்ந்யாஸயோகயுக்தாத்மா' (9/28) என்றும் சொல்கிறார். ஆகவே, கீதையில் எல்லா

இடங்களிலும், 'ஸந்யாஸம்' என்ற சொல் ஒரே பொருளில் வரவில்லை. ஸந்தர்பத்திற்கு ஏற்றவாறு வெவ்வேறு பொருட்களில் வருகிறது. இங்கு ஸாங்க்யயோகம், கர்மயோகம் இவை இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து விமர்சனம் செய்யப்படுகிறது. பகவான் *5/4, 5/5* ச்லோகங்களில், 'ஸந்யாஸம்' என்றால் ஸாங்க்யம் என்று தெளிவாகக் கூறுகிறார். ஆகவே, இங்கு ஸாங்க்யயோகத்தையே ஸந்யாஸம் என்ற சொல்லுக்குப் பொருளாகக் கொள்ளவேண்டும்.

கேள்வி: *ஸந்யாஸம் (ஸாங்க்யயோகம்), கர்மயோகம் இரண்டும் மேன்மை தரவல்லவை என்று பகவான் கூறுவதற்கு, இரண்டும் சேர்ந்துதான் மேன்மை தரும் என்று பொருள் கூறினால் என்ன?*

பதில்: ஸாங்க்யயோகம், கர்மயோகம் இரண்டையும் ஒரே நேரத்தில் ஒரு ஸாதகன் கடைப்பிடிக்க முடியாது. ஏனெனில்,

கர்மயோகி	ஸாங்க்யயோகி
1. ஸாதனை புரியும் நேரத்தில் கர்மத்தையும், கர்மத்தின் பயனையும், பரமாத்மாவையும், தன்னையும் வெவ்வேறாகப் பார்த்துப் பற்றுதலையும், பயனையும் விலக்கி பகவானுக்கு அர்ப்பணம் எனும் புத்தியுடன் கர்மம் செய்கிறான் *(3/30; 5/10; 9/27,28; 12/10; 18/56,57)*.	1. மாயையினால் உண்டான எல்லா குணங்களும் குணங்களில் செயல் படுகின்றன *(3/28)* அல்லது புலன்கள் புலன்களுக்குரிய பொருட்களில் ஈடுபடுகின்றன *(5/8,9)* என்று அறிந்து மனம், புலன்கள், உடல் இவற்றால் ஆகும் எல்லாச் செயல்களிலும் 'தான் கர்த்தா' என்ற அபிமானமின்றி முழுமையாக, ஸர்வவ்யாபியான ஸத் சித் ஆனந்தமயனான பரமாத்மாவின் ஸ்வரூபத்திலேயே ஒன்றிவிடுகிறான்.
2. தன்னைக் கர்த்தா என்று நினைக்கிறான் *(5/11)*.	2. தன்னைக் கர்த்தா என்று நினைப்பதில்லை *(5/8,9)*.
3. தான் செய்த கர்மங்களை பகவானுக்கு அர்ப்பணம் செய்கிறான் *(9/27,28)*.	3. மனம், புலன்களால் ஆகும் செயல்களில் 'நான் செய்கிறேன்' என்ற நினைப்பு இல்லாததால், கர்மம் என்றே நினைப்பதில்லை *(18/17)*.
4. பரமாத்மாவைத் தன்னிலிருந்து வேறாக நினைக்கிறான் *(12/6,7)*.	4. பரமாத்மா வேறு, தான் வேறு என்று நினைப்பதில்லை *(18/20)*.
5. ப்ரக்ருதியும் அதன் விளைவான பொருட்களும் இருப்பதாக நினைக்கிறான் *(18/61)*.	5. ப்ரம்மத்தைத் தவிர வேறு பொருளுக்கு இருப்பே இல்லை என்று நினைக்கிறான் *(13/30)*.
6. கர்மம் உண்டு, கர்மத்திற்குப் பயனும் உண்டு என்று நினைக்கிறான்.	6. ப்ரம்மத்தைத் தவிரக் கர்மமோ, கர்மபலனோ இருப்பதாகவே நினைப்பதில்லை. மேலும், அவற்றோடு தனக்குத் தொடர்பு இருப்பதாகவும் நினைப்பதில்லை.

இவ்விதம் இருவருக்கும் ஸாதனை முறையிலும், மனப்பாங்கிலும் கிழக்கு–மேற்கு போன்ற பெரிய வேறுபாடு இருக்கிறது. இந்த நிலையில் இரண்டு நிஷ்டைகளுடைய ஸாதனைகளையும் ஒருவன் ஒரே சமயத்தில் கைக்கொள்ள முடியாது. தவிர இரண்டும்

சேர்ந்தே மேன்மை அளிக்கும் என்று இருந்தால், அர்ஜுனன், 'இவை இரண்டில் எது சிறந்தது? மேன்மையளிக்கக் கூடிய தீர்மானமான ஸாதனம் எது? எனக்குச் சொல்லுங்கள்' என்று கேட்பதும் பொருந்தாது. மேலும் பகவான் கர்மஸந்யாஸத்தைக் காட்டிலும் கர்மயோகம் சிறந்தது என்றும், ஸாங்க்ய யோகி அடையும் பேற்றையே கர்மயோகியும் பெறுவான் என்றும் கூறுவதும் பொருந்தாது போய்விடும். ஆகவே இரண்டு நிஷ்டைகளும் வெவ்வேறானவை. இரண்டினுடைய பயனும் உண்மையறிவின் மூலம் பரமகல்யாணரூபமான பரமாத்மாவை அடைவதுதான் என்றாலும், ஸாதகனுடைய தகுதிக்கேற்றவாறு ஸாதனை எளிதாக அமைய வேண்டியதைக் கருதி, அர்ஜுனனுக்கு ஸாங்க்யயோகத்தைக் காட்டிலும் கர்மயோகம் சிறந்தது என்று கூறுகிறார்.

கேள்வி: ஸந்யாஸம் (ஞானயோகம்), கர்மயோகம் இரண்டும் தனித்தனியாகவே, ஒன்றை ஒன்று சாராமலே, மிக்க மேன்மையை அளிக்கக்கூடியவை என்னும்போது, இங்கு 'ஸாங்க்யயோக'த்தைக் காட்டிலும் 'கர்மயோகம்' உயர்ந்தது என்று பகவான் ஏன் கூறினார்?

பதில்: கர்மயோகி கர்மம் செய்து கொண்டே இருந்தாலும் எப்பொழுதும் அவன் ஸந்யாஸிதான். அவன் ஸுகமாகவும், அனாயாஸமாகவும் ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுபடுகிறான் (5/3). விரைவில் பரமாத்மாவை அடைந்து விடுகிறான் (5/6). ஒவ்வொரு நிலையிலும் பகவான் அவனைக் காக்கிறார் (9/22). கர்மயோகத்தைச் சிறிதளவே கடைப்பிடித்தாலும் பிறப்பு, இறப்பு என்ற பெரிய பயத்திலிருந்து தப்பிவிடலாம் (2/40). ஆனால் ஞானயோக ஸாதனம் கஷ்டமானது (12/5). முதலில் கர்மயோகத்தைக் கடைப்பிடிக்காமல் ஞானயோகம் செய்வதும் கடினம்தான் (5/6). இக்காரணங்களால் ஞானயோகத்தைக் காட்டிலும் கர்மயோகம் சிறந்தது என்கிறார்.

பொருத்தம்: ஸாங்க்யயோகத்தைக் காட்டிலும் கர்மயோகம் சிறந்தது என்றார். இதை உறுதிப்படுத்தும் பொருட்டு இங்கு கர்மயோகியைப் புகழ்கிறார்—

ज्ञेयः स नित्यसन्न्यासी यो न द्वेष्टि न काङ्क्षति।
निर्द्वन्द्वो हि महाबाहो सुखं बन्धात्प्रमुच्यते ॥ ३ ॥

ஜ்ஞேய: ஸ நித்யஸந்ந்யாஸீ யோ ந த்₃வேஷ்டி ந காங்க்ஷதி ।
நிர்த்₃வந்த்₃வோ ஹி மஹாபா₃ஹோ ஸுக₂ம் ப₃ந்தா₄த்ப்ரமுச்யதே ॥ 3 ॥

மஹாபா₃ஹோ – அர்ஜுன! **ய:** – எவன், **ந த்₃வேஷ்டி** – எதையும் வெறுப்பதில்லையோ, **ந காங்க்ஷதி** – எதையும் விரும்புவதில்லையோ, **ஸ:** – அந்த கர்மயோகி, **நித்யஸந்ந்யாஸீ** – எப்பொழுதும் ஸந்யாஸியேதான் என்று, **ஜ்ஞேய:** – அறியத்தக்கவன். **ஹி** – ஏனெனில், **நிர்த்₃வந்த்₃வ:** – விருப்பு–வெறுப்பு எனும் இரட்டைகள் அற்றவன், **ஸுக₂ம்** – எளிதாகவே, **ப₃ந்தா₄த்** – ஸம்ஸார பந்தத்திலிருந்து, **ப்ரமுச்யதே** – விடுதலை பெறுகிறான்.

அர்ஜுன! எவன் எதையும் வெறுப்பதில்லையோ, எதையும் விரும்புவதில்லையோ அந்த கர்மயோகி எப்பொழுதும் ஸந்யாஸியேதான் என்று அறியத்தக்கவன். ஏனெனில் விருப்பு–வெறுப்பு எனும் இரட்டைகள் அற்றவன் எளிதாகவே ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுதலை பெறுகிறான்.

கேள்வி: இங்கு 'கர்மயோகியை நித்ய ஸந்யாஸி' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: கர்மயோகி எவரிடமும் வெறுப்புக் கொள்வதில்லை, எந்தப் பொருளையும் விரும்புவதுமில்லை. இரட்டைகளுக்கு முற்றிலும் அப்பாற்பட்டவன் ஆகிறான். உண்மையில் 'ஸந்யாஸம்' என்று இந்நிலைக்குத்தான் பெயர். விருப்பு–வெறுப்பற்றவன்தான் உண்மையான ஸந்யாஸி. அவன் ஸந்யாஸ ஆசிரமத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை.

ஸாங்க்யயோகத்தில் ஈடுபடவும் தேவையில்லை. ஆகவே இங்கு கர்மயோகியை 'நித்ய ஸந்யாஸி' என்று கூறி, "எல்லாக் கர்மங்களையும் செய்து கொண்டிருந்தாலும், அவன் எப்போதும் ஸந்யாஸியே. மேலும், அவன் ஸுகமாகவும், எளிதாகவும் கர்மபந்தத்திலிருந்து விடுதலை பெறுவான்" என்று அவனுடைய பெருமையை வெளிப்படுத்துகிறார்.

கேள்வி: கர்மயோகி கர்மபந்தத்திலிருந்து எப்படி இனிதே விடுதலை பெறுவான்?

பதில்: மனிதனுக்குத் தன் முன்னேற்றத்தில் தடையாக இருப்பவை விருப்பு–வெறுப்புகள்தான். இவ்வற்றாலேதான் அவன் கர்மபந்தத்தில் சிக்குகிறான். கர்மயோகி விருப்பு–வெறுப்பற்று, பகவானுக்காகக் கடமைகளை ஆற்றுகிறான். பகவானுடைய க்ருபையினால் எளிதாகக் கர்மபந்தத்திலிருந்து விடுதலை பெறுகிறான்.

கேள்வி: 'பந்தத்திலிருந்து விடுதலை' என்று எதைச் சொல்கிறார்கள்?

பதில்: அஞ்ஞானத்தினால் செய்யப்படும் நல்லவும், தீயவுமான செயல்களும், அவற்றின் பயன்களுமே பந்தங்கள். இவற்றிற்கு ஆட்பட்டு இருப்பதாலேயே ஜீவன் ஓயாமல் பிறப்பு, இறப்பாகிய சக்ரத்தில் சுழன்று கொண்டிருக்கிறான். இந்தப் பிறப்பு, இறப்பு என்ற ஸம்ஸாரத்திலிருந்து நிரந்தரமாக விடுபடுவதுதான் பந்தத்திலிருந்து விடுதலை ஆகும்.

பொருத்தம்: ஸாதனை முறை எளிதாக இருப்பதால், ஸாங்க்யயோகத்தைக் காட்டிலும் கர்மயோகம் சிறந்தது என்று விளக்கிவிட்டு, இரண்டாவது ச்லோகத்தில் இரணடு நிஷ்டைகளுக்கும் பயன் 'நி:ஶ்ரேயஸ்' அதாவது 'பரமகல்யாணம்' என்ற ஒன்றேதான் என்று கூறினார். அதற்கேற்ப இரண்டு ச்லோகங்களில் இரண்டு நிஷ்டைகளின் பயனும் ஒன்றுதான் என்று நிரூபிக்கிறார்—

साङ्ख्ययोगौ पृथग्बालाः प्रवदन्ति न पण्डिताः ।
एकमप्यास्थितः सम्यगुभयोर्विन्दते फलम् ॥ ४ ॥

ஸாங்க்₂யயோகௌ₃ ப்ருத₂க்₃பா₃லா: ப்ரவத₃ந்தி ந பண்டி₂தா: ।

ஏகமப்யாஸ்தி₂த:ஸம்யகு₃ப₄யோர்விந்த₃தே ப₂லம் ॥ 4 ॥

ஸாங்க்₂யயோகௌ₃ – மேலே கூறிய ஸந்யாஸமும், கர்மயோகமும், **ப்ருத₂க்** – வெவ்வேறு (பயன் தரக்கூடியவை) என்று, **பா₃லா:** – அறியாதவர்கள், **ப்ரவத₃ந்தி** – கூறுகிறார்கள். **பண்டி₂தா: ந** – அறிஞர்கள் அப்படி (ச்சொல்வதில்லை. ஏனெனில்), **ஏகம் அபி** – இவற்றில் ஒன்றையாவது, **ஸம்யக் ஆஸ்தி₂த:** – உறுதியாகப் பற்றிக் கொண்டுள்ள மனிதன், **உப₄யோ: ப₂லம்** – இரண்டினுடைய பயனான (பரமாத்மாவை), **விந்த₃தே** – அடைகிறான்.

மேலே கூறிய ஸந்யாஸமும் கர்மயோகமும் வெவ்வேறு பயன் தரக்கூடியவை என்று அறியாதவர்கள் கூறுகிறார்கள். அறிஞர்கள் அப்படிச் சொல்வதில்லை. ஏனெனில் இவற்றில் ஒன்றையாவது உறுதியாகப் பற்றிக் கொண்டுள்ள மனிதன் இரண்டினுடைய பயனான பரமாத்மாவை அடைகிறான்.

கேள்வி: 'ஸாங்க்யயோகமும், கர்மயோகமும் வெவ்வேறானவை என்று கூறுபவர்களை அறியாதவர்கள்' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: ஸாங்க்யயோகம், கர்மயோகம் இரண்டுமே பரமாத்ம தத்வஞானத்தை அளித்து பரமபதத்தை அடைவிக்கும் உபாயங்கள்தாம். இரண்டிற்கும் பயன் ஒன்றே என்று இருக்கும்போது, கர்மயோகத்தின் பயன் வேறு, ஸாங்க்யயோகத்தின் பயன் வேறு என்று கற்பனை செய்துகொண்டு இரண்டு ஸாதனங்களும் வேறுபட்டவை என்று கருதுபவர்கள் அறியாதவர்கள். இரண்டு ஸாதனைகளிலும் முறை வேறானாலும் பயன் ஒன்றாவதால் உண்மையில் இரண்டும் ஒன்றே.

கேள்வி: பரமார்த்த ஞானத்தின் மூலமாகப் பரமபதத்தை அடைவது கர்மயோகத்தின் பயன் என்று கூறுவது சரியே. ஏனென்றால், "என்னை அடைவதற்கான அந்த புத்தியோகத்தை நான் அவர்களுக்குக் கொடுக்கிறேன் *(10/10)*. அவர்கள்பால் இரக்கம் கொண்டே, நான் ஞானரூபமான விளக்கின் மூலமாக, அவர்களுடைய அஞ்ஞானமாகிய இருளைப் போக்குகிறேன் *(10/11)*. கர்மயோகத்தினால் மனத்தூய்மை பெற்றுத் தானாகவே அந்த ஞானத்தை அடைகிறான் *(4/38)*." இவை போன்ற பகவானின் சொற்களால் இது நிரூபணமாகிறது. ஆனால் ஸாங்க்யயோகம் என்றாலே தத்வஞானம்தான். அதற்குப் பயன் தத்வஞானத்தின் மூலமாக மோக்ஷத்தை அடைவது என்பதை எப்படி ஒப்புக் கொள்ள முடியும்?

பதில்: பரமாத்ம தத்வஞானத்திற்கு 'ஸாங்க்யயோகம்' என்று பெயர் அன்று. தத்வஞானிகளிடமிருந்து பெற்ற உபதேசத்தினால், செய்யப்படும் ஸாதனங்களுக்குத்தான் அப்பெயர். 13/24ல் த்யானயோகம், ஸாங்க்யயோகம், கர்மயோகம் இம்மூன்றுமே ஆத்மதர்சனம் பெறுவதற்கான, தனித்தனியான, மற்றொன்றைச் சார்ந்திராத ஸாதனங்கள் என்று கூறுகிறார். ஆகவே ஸாங்க்யயோகத்தின் பயனான பரமாத்ம தத்வஞானத்தின் மூலமாக மோக்ஷமடையலாம் என்று கூறுவது சரிதான். 18/49 முதல் 55 வரை ஞான நிஷ்டையைப் பற்றிக் கூறி, ப்ரம்மபூதனாக ஆனபிறகு, அதாவது ப்ரம்மத்திடம் இரண்டறக் கலந்து ஸாங்க்யயோகத்தை அடைந்துவிட்ட பிறகு, அதன் பயனாகத் தத்வஞானம் என்ற பராபக்தி என்னும் பரமாத்மாவின் ஸ்வரூபத்தை உள்ளபடியே அறிந்து பரமாத்மாவை அடைவதுதான் 'மோக்ஷம்' என்று கூறப்படுகிறது. ஸாங்க்யயோக ஸாதனையினால், உண்மை அறிவு ஏற்படுகிறது. அப்போது மோக்ஷம் கிட்டுகிறது என்பது இதனால் தெளிவாகத் தெரிகிறது.

கேள்வி: 'பண்டிதன்' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: பரதத்வம் பற்றிய உண்மை அறிவு 'பண்டா' எனப்படும். அது உள்ளவன் 'பண்டிதன்'. உண்மையறிவுள்ள பெரியோர் 'பண்டிதர்' ஆவர்.

கேள்வி: ஒரு நிஷ்டையிலேயே முழுமையாக உறுதியோடு இருந்தால் இரண்டு நிஷ்டைக்குமான பயனை எவ்வாறு பெறமுடியும்?

பதில்: இரண்டு நிஷ்டைகளுக்கும் பயன் ஒன்றுதான். அதாவது பகவானைப் பற்றிய உண்மை அறிவின் மூலம் பகவானை அடைவதுதான். ஆகவே ஒன்றில் முழுமையாக நிலைபெற்றுவிட்டால் இரண்டினுடைய பயனையும் பெற்றுவிடலாம். கர்மயோகத்தின் பயன் ஸாங்க்யயோகம்; ஸாங்க்யயோகத்தின் பயன் பரமாத்மாவை அடைவது என்று இருந்தால் இரண்டுக்கும் பயன் வேறாகிவிடும். அதனால் இப்படிச் சொல்வது பொருந்தாது. ஏனெனில் ஸாங்க்யயோகத்தினால் பூரண நிலைபெற்றவன், கர்மயோகத்தின் பயனான ஸாங்க்ய யோகத்தை முன்பே பெற்றுவிட்டான். பிறகு கர்மயோகத்தின் பயனாக என்ன கிடைக்கப் போகிறது? மேலும், கர்மயோகத்தில் நிலைபெற்றவன் அதன் பயனான ஸாங்க்யயோகத்திலும் நிலைபெற்ற பிறகுதான் பரமாத்மாவை அடைய முடியும் என்றால் அது ஸாங்க்யயோகத்தின் பயன்தானே? அப்பொழுது ஏதாவது ஒரு நிஷ்டையில் இரண்டின் பயனையும் பெறுவான் என்று சொல்வது எப்படிப் பொருந்தும்? ஆகவே, இரண்டு நிஷ்டைகளும் ஒன்றையொன்று சார்ந்திராதவை. ஆயினும் இரண்டுக்கும் பயன் ஒன்றுதான். இப்படிச் சொன்னால்தான் பகவானுடைய சொல் அர்த்தமுள்ளதாகும். அதாவது இரண்டில் ஒரு நிஷ்டையை நன்றாகக் கடைப்பிடித்தாலும், இரண்டின் பயனையும் பெறலாம். 13/24ல் கூட பகவான் இரண்டிற்கும் பகவானை அடைவதுதான் பயன்; இரண்டுமே பகவானை அடைவதற்கான சுதந்திரமான ஸாதனங்கள் என்று கூறுகிறார்.

கேள்வி: முதல் ச்லோகத்தில் அர்ஜுனன் 'கர்மஸந்யாஸம்', 'கர்மயோகம்' என்ற பெயரில் கேள்வி கேட்டார். இரண்டாவது ச்லோகத்தில் பகவானும் அதே பெயரில் இரண்டும் மேன்மையளிக்கக் கூடியவை என்று பதில் கூறினார். அதே ஸந்தர்பத்தில் ஸாங்க்யம், யோகம் என்ற பெயர்களில், இரண்டிற்கும் பயன் ஒன்றே என்றும் கூறுவதன் கருத்து என்ன?

பதில்: கர்மஸந்யாஸம் என்றால் கர்மங்களைச் செய்யாமல் விடுவது என்றும், கர்மயோகம் என்றால் எப்படியாவது கர்மங்கள் செய்வதென்றும் தவறான எண்ணம் கொள்கிறார்களே. அதைத் தவிர்ப்பதற்காகவே 'கர்மஸந்யாஸம்' என்றால் ஸாங்க்யயோகம் என்றும், 'கர்மயோகம்' என்றால் செயல்களின் ஸித்தி, அஸித்திகளில் ஸமபாவனையெனும் 'யோகம்' *(2/48)* என்றும் பொருள் – என்று தெளிவுபடுத்தவே மாற்றுச் சொற்களை உபயோகப்படுத்துகிறார். ஆகவே மாற்றுச் சொற்களால் புதிய கருத்து கூறப்படவில்லை.

கேள்வி: 'அபி' என்று 'கூறுவதன் கருத்து என்ன?

பதில்: இரண்டில் ஒன்றைச் சரிவரக் கடைப்பிடித்தாலும், அது பயனைக் கொடுக்கும் என்று பொருள். நல்லமுறையில் செய்யப்படுமேயானால், இரண்டு ஸாதனைகளும் தமது பயனைக் கொடுப்பதில் முற்றிலும் சுதந்திரமான சக்தியுடையவை என்ற கருத்தையே 'அபி' என்ற சொல் குறிக்கிறது.

यत्साङ्ख्यैः प्राप्यते स्थानं तद्योगैरपि गम्यते।
एकं साङ्ख्यं च योगं च यः पश्यति स पश्यति॥ ५॥

யத்ஸாங்க்₂யை: ப்ராப்யதே ஸ்த₂ாநம் தத்₃யோகை₃ரபி க₃ம்யதே ।

ஏகம் ஸாங்க்₂யம் ச யோக₃ம் ச ய: பஶ்யதி ஸ பஶ்யதி ॥ 5 ॥

ஸாங்க்₂யை: – ஞானயோகிகளால், **யத் ஸ்த₂ாநம்** – எந்த பரமபதம், **ப்ராப்யதே** – அடையப்படுகிறதோ, **தத்** – அதுவே, **யோகை₃: அபி** – கர்மயோகிகளாலும், **க₃ம்யதே** – அடையப்படுகிறது. (ஆகவே), **ய:** – எவன் ஒருவன், **ஸாங்க்₂யம்** – ஞானயோகம், **யோக₃ம் ச** – கர்மயோகம், **ஏகம்** – (இரண்டும் ஒரே பயனைக் கொடுக்கக் கூடிய) ஒன்றென, **பஶ்யதி** – காண்கிறானோ, **ஸ: ச** – அவனே (உண்மையை), **பஶ்யதி** – காண்கிறான்.

ஞானயோகிகளால் எந்த பரமபதம் அடையப்படுகிறதோ அதுவே கர்மயோகிகளாலும் அடையப்படுகிறது. ஆகவே எவனொருவன் ஞானயோகம் கர்மயோகம் இரண்டும் ஒரே பயனைக் கொடுக்கக்கூடிய ஒன்றெனக் காண்கிறானோ அவனே உண்மையைக் காண்கிறான்.

கேள்வி: ஸாங்க்யயோகமும், கர்மயோகமும் ஒன்றையொன்று சார்ந்திராத முற்றிலும் தனியான வழிகள். இரண்டாவது ச்லோக விரிவுரையில் கூறப்பட்டது போல, இரண்டிற்கும் ஸாதனை முறையில் கிழக்கு–மேற்கு போல, அவ்வளவு மாறுபாடு உண்டு என்றால், இருவகை ஸாதகர்களுக்கும் பயன் மட்டும் எப்படி ஒன்றாக இருக்க முடியும்?

பதில்: அமெரிக்கா போக விரும்புபவன் பாரத பூமியிலிருந்து கிழக்கே போய்க் கொண்டிருந்தாலும் அமெரிக்காவை அடையலாம். மேற்கே போய்க் கொண்டிருந்தாலும் அமெரிக்காவை அடையலாம். அதுபோல ஸாதனை முறையில் ஸாங்க்யயோக, கர்மயோகங்களிடையே ஸாதனையில் வேறுபாடு இருந்தாலும் மனிதன் ஏதாவது ஒன்றைத் திடமாகப் பற்றிக் கொண்டுவிட்டானானால், இரண்டினுடைய ஒரே உயர்ந்த லக்ஷ்யமான பரமாத்மாவை அடைந்து விடலாம்.

பொருத்தம்: ஸாங்க்யயோகம், கர்மயோகம் இரண்டிற்கும் பயன் ஒன்று என்று சொல்லிவிட்டு, இனி கர்மயோகத்தில் ஸாதனை முறையில் உள்ள தனிப்பட்ட பெருமையை எடுத்துக் கூறுகிறார்—

सन्न्यासस्तु महाबाहो दुःखमाप्तुमयोगतः।
योगयुक्तो मुनिर्ब्रह्म नचिरेणाधिगच्छति॥ ६॥

ஸந்ந்யாஸஸ்து மஹாப$_3$ாஹோ து$_3$:க$_2$மாப்துமயோக$_3$த: ।
யோக$_3$யுக்தோ முநிர்ப்$_3$ரஹ்ம நசிரேணாதி$_4$க$_3$ச்ச$_2$தி ॥ 6 ॥

து – ஆனால், **மஹாப$_3$ாஹோ** – நீண்ட புஜமுடைய அர்ஜுன! **அயோக$_3$த:** – கர்மயோகத்தைக் கடைப்பிடிக்காமலேயே, **ஸந்ந்யாஸ:** – ஸந்யாஸ நிலையை (அதாவது மனம், புலன்கள், உடல் மூலம் நடைபெறக்கூடிய எல்லாச் செயல்களிலும், தான் கர்த்தா என்ற எண்ணத்தை த்யாகம் செய்வது), **ஆப்தும்** – அடைவது, **து$_3$:க$_2$ம்** – மிகக் கடினமானது. (மேலும்), **முநி:** – பகவத் ஸ்வரூபத்தைச் சிந்தித்திருக்கும், **யோக$_3$யுக்த:** – கர்மயோகி, **ப்$_3$ரஹ்ம** – பரப்ரம்ம பரமாத்மாவை, **நசிரேண** – விரைவிலேயே, **அதி$_4$க$_3$ச்ச$_2$தி** – அடைந்து விடுகிறான்.

ஆனால் நீண்ட புஜமுடைய அர்ஜுன! கர்மயோகத்தைக் கடைப்பிடிக்காமலேயே ஸந்யாஸ நிலையை (மனம், புலன்கள், உடல் மூலம் நடைபெறக்கூடிய எல்லாச் செயல்களிலும் தான் கர்த்தா என்ற எண்ணத்தை த்யாகம் செய்வது) அடைவது மிகக் கடினமானது. மேலும் பகவத் ஸ்வரூபத்தைச் சிந்தித்திருக்கும் கர்மயோகி பரப்ரம்ம பரமாத்மாவை விரைவிலேயே அடைந்து விடுகிறான்.

கேள்வி: 'து' என்றால் என்ன பொருள்?

பதில்: ஸந்யாஸம் (ஸாங்க்யயோகம்), கர்மயோகம் இரண்டிற்கும் பயன் ஒன்றுதான். ஆனால் ஸாதனையில் கர்மயோகத்தைக் காட்டிலும் ஸாங்க்யயோகம் கடினமானது என்பதைத் 'து' (ஆனால்) என்ற சொல் பிரித்துக் காட்டுகிறது.

கேள்வி: அர்ஜுனனை 'மஹாபாஹோ' என்று அழைப்பதன் கருத்து என்ன?

பதில்: நீண்ட புஜங்கள் உள்ளவனை 'மஹாபாஹு' என்கிறார்கள். ஸஹோதரர் களையும், நண்பர்களையும்கூட 'பாஹு' என்று கூறுவதுண்டு. ஆகவே பகவான் இப்படி அழைப்பதன் மூலமாக மேலே சொல்லப்பட்ட கருத்தை உணர்த்தி, அர்ஜுனனுக்கு ஆர்வமூட்டுகிறார். 'உனக்கு ஸஹோதரனாக பெரிய தர்மாத்மாவான யுதிஷ்டிரரும், நண்பனாக ஸாக்ஷாத் பகவானாகிய நானும் இருக்கும்பொழுது உனக்கு ஏன் கவலை? உனக்கு எல்லாமே எளிதில் நிறைவேறும்' என்பது கருத்து.

கேள்வி: ஸாங்க்யயோகம், கர்மயோகம் இரண்டுமே தனித்தனி மார்க்கங்கள் என்னும்போது, கர்மயோகத்தைக் கடைப்பிடிக்காமல் ஸந்யாஸத்தை அடைவது கடினம் என்று ஏன் கூறுகிறார்?

பதில்: தனித்தனியான ஸாதனங்களாக இருந்தபோதிலும் இரண்டிலும் ஒன்று எளிது, மற்றது கடினம் என்ற வேறுபாடு இருக்கிறது. அதைத் தெளிவாகக் காட்டவே பகவான் இப்படிச் சொல்கிறார். ஒருவனுக்கு மோக்ஷமடைய விருப்பம் இருக்கிறது. அவன், "காணப்படும் இவ்வுலகம் கனவைப்போலப் பொய்யானது; ஒன்றேயான ப்ரம்மம்தான் ஸத்யம். இவ்வுலகம் அனைத்தும் மாயையினால் ப்ரம்மத்தின் மீது ஏறிட்டுரைக்கப்பட்டுள்ளது. உண்மையில் வேறு எதுவும் ஸத் என்பதாக இல்லவே இல்லை" என்று நினைக்கிறான். ஆனால் அவனுடைய உள்ளத்தில் தூய்மை இல்லை. விருப்பு–வெறுப்புகள், காம–க்ரோதங்கள் எல்லாம் உள்ளன. அவன் உள்ளத்தைத் தூய்மைப்படுத்த முயற்சி செய்யாமல் தன்னுடைய நினைப்பை மட்டும் நம்பிக் கொண்டு ஸாங்க்யயோகத்தைக் கடைப்பிடிக்க விரும்பினானேயானால், அவனால் 2/11–30, 18/49–55 ஆகிய ச்லோகங்களிலே கூறப்பட்டுள்ள ஸாங்க்ய நிஷ்டையை எளிதாக அடைய முடியாது. உடலில், 'நான்' என்ற அஹம்பாவமும், போகங்களில் ஈடுபாடும், அனுகூல–ப்ரதிகூலங்களால் விருப்பு–வெறுப்புகளும் உள்ள வரையில், ஞான நிஷ்டையில் ஸாதனை புரிவது, அதாவது எல்லாச் செயல்களிலும் 'நான் கர்த்தா' என்ற அபிமானத்தைத் துறப்பது முடியாத கார்யம். அதைத் துறந்த பிறகு அல்லவா, ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மாவிடம், தான் வேறு

என்ற பாகுபாடின்றி இடைவிடாது ஒன்றுதல் இயலும்? இதைப் புரிந்து கொள்வதுகூடக் கடினம். இதைத் தவிர மனம் அசுத்தமாக இருப்பதால், மோஹம் கொண்டு ஜகத்தை ஆட்டிப் படைப்பவரும், நாம் செய்யும் கர்மங்களுக்குப் பயனை அளிப்பவருமான பகவானிடத்திலும், ஸ்வர்கம், நரகம் போன்ற வினைப்பயன்களிலும், நம்பிக்கை வைக்காது, பாடுபட்டுக் கர்மங்களை ஏன் செய்யவேண்டும் என்று நினைத்து நல்ல கர்மங்களைச் செய்யாமல் விட்டுவிடுவான். போகங்களின் ருசியினால் பாவமாகிற செயல்களில் ஈடுபட்டு, மேன்மை வழியிலிருந்து விலகி விடுவான். ஆகவே ஸாங்க்ய யோகம்தான் பரமாத்மாவை அடைவதற்குரிய ஒரே வழி என்று கருதும் ஸாதகன், ஸாங்க்யயோக ஸாதனையில் புகுமுன், நிஷ்காமமாக யக்ஞம், தானம், தவம் முதலிய நல்ல கர்மங்களைச் செய்து, தன் மனதில் உள்ள விருப்பு, வெறுப்பு முதலிய மாசுகளை விலக்கித் தூய்மையடையச் செய்த பிறகுதான், அவன் ஸாங்க்யயோக ஸாதனையைத் தடங்கலின்றிக் கடைப்பிடிக்க முடியும். அப்பொழுது எளிதாக அதில் வெற்றியும் கிடைக்கும். இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் இங்கு 'கர்மயோகமில்லாமல் ஸந்யாஸம் பெறுவது கடினம்' என்று சொன்னார்.

கேள்வி: 'முநி:' என்ற அடைமொழியுடன் 'யோகயுக்த:' என்று யாரைக் குறிக்கிறார்? அவன் பரப்ரம்ம பரமாத்மாவை விரைவிலேயே அடைந்துவிடுவது எங்ஙனம்?

பதில்: அனைத்தையும் பகவானுடையது என்று எண்ணி வெற்றி-தோல்விகளில் ஸமபாவனையுடன், பற்றுதலையும், பயனில் விருப்பத்தையும் துறந்து, பகவானுடைய ஆணையின்படி, விதிக்கப்பட்ட எல்லாக் கடமைகளையும் செய்து கொண்டு, ச்ரத்தை, பக்தியுடன் நாமம், குணம், ப்ரபாவத்தோடு கூடிய **ஸ்ரீ**பகவானுடைய திருவுருவத்தைச் சிந்தனை செய்து கொண்டு இருக்கிற பக்தி நிறைந்த கர்மயோகியைக் குறிப்பதற்காக, 'முநி:' என்ற அடைமொழியோடு கூட 'யோகயுக்த:' என்ற சொல் வந்துள்ளது. அவன் கர்மயோகத்தில் ஈடுபட்டவனாக இருப்பதால், பகவானுடைய க்ருபையினால், உண்மையறிவு பெற்று விரைவில் பரப்ரம்மமான பரமாத்மாவை அடைந்து விடுகிறான்.

கேள்வி: இங்கு 'முநி:' என்ற சொல்லுக்குச் 'சொல்லைக் கட்டுப்படுத்தியவன் அல்லது புலன்களை வெற்றி கொண்ட ஸாதகன்' என்று பொருள் கொண்டால் என்ன தவறு?

பதில்: பகவானுடைய ஸ்வரூபத்தைச் சிந்திக்கும் கர்மயோகி என்று பொருள் கொண்டுவிட்டால், அவன் சொல்லைக் கட்டுப்படுத்தியவனாகவும், புலன்களை வென்றவனாகவும் இருப்பான் என்று சொல்ல வேண்டியதே இல்லை.

கேள்வி: இங்கு 'ப்ரஹ்ம' என்ற சொல் ஸகுண பரமேசுவரனைக் குறிக்கிறதா? நிர்குண பரமாத்மாவையா?

பதில்: ஸகுண பரமேசுவரன் என்பதும், நிர்குண பரமாத்மா என்பதும் உண்மையில் வெவ்வேறல்ல. ஒரே பரமாத்மாவின் இரு வடிவங்கள். ஆகவே 'ப்ரஹ்ம' என்ற சொல்லுக்கு ஸகுண பரமேசுவரனையும், நிர்குண பரமாத்மாவையும் பொருளாகக் கொள்ளலாம்.

பொருத்தம்: மேலே சொன்ன கர்மயோகியின் இலக்கணங்களைக் கூறி அவனிடம் கர்மங்கள் ஒட்டா என்று இனிக் கூறுகிறார்—

योगयुक्तो विशुद्धात्मा विजितात्मा जितेन्द्रियः ।
सर्वभूतात्मभूतात्मा कुर्वन्नपि न लिप्यते ॥ ७ ॥

யோக₃யுக்தோ விஶுத்₃தா₄த்மா விஜிதாத்மா ஜிதேந்த்₃ரிய: ।
ஸர்வபூ₄தாத்மபூ₄தாத்மா குர்வந்நபி ந லிப்யதே ॥ 7 ॥

விஜிதாத்மா – மனக்கட்டுப்பாடுடையவனும், **ஜிதேந்த்₃ரிய:** – புலன்களை வென்றவனும், **விஶுத்₃தா₄த்மா** – மனத்தூய்மை உள்ளவனும், **ஸர்வ பூ₄தாத்ம பூ₄தாத்மா** – எல்லா உயிரினங்களுக்கும் ஆத்மாவான பரமாத்மாவைத் தன் ஆத்மா என்று உணர்ந்தவனுமான,

யோக₃யுக்த: – கர்மயோகி, **குர்வந் அபி** – கர்மங்களைச் செய்து கொண்டிருந்தாலும், **ந லிப்யதே** – அவற்றில் ஒட்டுவதில்லை.

மனக்கட்டுப்பாடுடையவனும் புலன்களை வென்றவனும் மனத்தூய்மை உள்ளவனும் எல்லா உயிரினங்களுக்கும் ஆத்மாவான பரமாத்மாவைத் தன் ஆத்மா என்று உணர்ந்தவனுமான கர்மயோகி கர்மங்களைச் செய்து கொண்டிருந்தாலும் அவற்றில் ஒட்டுவதில்லை.

கேள்வி: 'யோகயுக்த:' என்ற சொல்லுக்கு 'விஜிதாத்மா', 'ஜிதேந்த்ரிய:', 'விஶுத்தாத்மா' என்று மூன்று அடைமொழிகள் கொடுத்திருப்பதன் கருத்து என்ன?

பதில்: மனமும், புலன்களும் ஸாதகனுக்குக் கட்டுப்படாவிட்டால், இயற்கையாகவே அவனுக்கு போகங்களில் ஈடுபாடு உண்டாகும். மனதில் விருப்பு, வெறுப்பு முதலிய மாசு இருக்கும் வரை, ஸித்தி, அஸித்திகளில் ஸமபாவனை வருவது கடினம். ஆகவே மனமும், புலன்களும் நன்றாகக் கட்டுப்படாதவரை, மனம் முழுவதும் பரிசுத்தமானதாக ஆகாது. அதுவரை ஸாதகனை உண்மையான கர்மயோகி என்று சொல்ல முடியாது. இந்த எல்லா குணநலன்களும் உள்ளவனே முழுமையான கர்மயோகி. மேலும் அவன்தான் விரைவிலேயே ப்ரம்மத்தை அடைவான் என்பதை மேலே சொன்ன அடைமொழிகள் உணர்த்துகின்றன.

கேள்வி: 'ஸர்வபூதாத்மபூதாத்மா' என்ற தொடருக்கு என்ன பொருள்?

பதில்: ப்ரம்மா முதல் புல்–பூண்டு ஈறாக எல்லா உயிர்களிலும் ஆத்மாவாக உள்ள பகவானே தன்னிடமும் ஆத்மாவாகி, அந்தர்யாமியாக விளங்குகிறார் என்ற உணர்வு கொண்டு, அவருடைய தூண்டுதலுக்கேற்பச் செயல்களில் ஈடுபடுபவனும், பகவானைத் தவிர உடல், மனம், புத்தி முதலிய பிற எந்தப் பொருளிடத்திலும் 'தன்னுடையது' என்ற எண்ணம் (மமத்வம்) இல்லாதவனுமே 'ஸர்வபூதாத்மபூதாத்மா' எனப்படுகிறான்.

கேள்வி: 'அபி' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: ஸாங்க்யயோகி எந்த ஒரு செயலுக்கும், தன்னைக் கர்த்தாவாக நினைப்பதில்லை. அவனுடைய மனம், புத்தி, புலன்கள் எல்லாச் செயல்களிலும் ஈடுபட்டாலும், அவன், "நான் எதுவுமே செய்வதில்லை, முக்குணங்களின் வேலை இது. இவற்றிற்கும், எனக்கும் ஸம்பந்தமில்லை" என்று நினைக்கிறான். ஆகவே செயல்கள் அவனிடம் ஒட்டா என்பது சரிதான். ஆனால் தன்னைக் கர்த்தாவாக நினைக்கும் கர்மயோகி கூட, பகவானுடைய ஆணையின் பேரில், பகவானுக்காக எல்லாக் கர்மங்களையும் செய்வதால், அந்த கர்மங்களின் பயனில் ஆசையும், பற்றும் இல்லாததால், அவனையும் அந்தக் கர்மங்கள் கட்டுப்படுத்தா. இதுதான் கர்மயோகியின் தனிப்பெருமை. இதைத்தான் 'அபி' என்ற சொல் குறிக்கிறது.

பொருத்தம்: இரண்டாவது ச்லோகத்தில் கர்மயோகத்திற்கும், ஸாங்க்யயோகத்திற்கும் பயன் ஒன்றுதான் என்று சுருக்கமாகக் கூறி, ஸாங்க்யயோகத்தைக் காட்டிலும் கர்மயோகம் எளிதானது என்ற காரணத்தினால், கர்மயோகம் சிறந்தது என்று சொன்னார். மேலும் *3ல்* கர்மயோகியின் பெருமை கூறி, *4,5ல்* இரண்டிற்கும் பயன் ஒன்றே என்றும், ஆனால் இரண்டும் ஒன்றிலிருந்து மற்றொன்று தனித்து இருப்பவை என்றும் தெளிவுற விளக்கினார். அதற்குப் பிறகு *6வது* ச்லோகத்தின் முன்பாதியில் கர்மயோகம் இன்றி ஸாங்க்யயோகத்தைக் கைக்கொள்வது கடினம் என்று கூறி, பின்பாதியில் கர்மயோகம் எளிதென்று கூறி, *7ல்* கர்மயோகியின் இலக்கணம் கூறினார். இதனால் பயனில் இரண்டும் ஒன்றானாலும், ஸாதனையில் தமக்குள் வேறுபட்டவை என்பது தெளிவாயிற்று. ஆகவே அவை இரண்டும் எத்தன்மையன என்று சொல்வதற்காக, முதலில் *8,9ல்* ஸாங்க்யயோகியின் உலகியல் நடைமுறையை விளக்குகிறார்—

नैव किञ्चित्करोमीति युक्तो मन्येत तत्त्ववित्।
पश्यञ्शृण्वन्स्पृशञ्जिघ्रन्नश्नन्गच्छन्स्वपञ्श्वसन् ॥८॥

प्रलपन्विसृजन्गृह्णन्नुन्मिषन्निमिषन्नपि ।
इन्द्रियाणीन्द्रियार्थेषु वर्तन्त इति धारयन् ॥ ९ ॥

நைவ கிஞ்சித்கரோமீதி யுக்தோ மந்யேத தத்த்வவித் ।

பஶ்யந் ஶ்ருண்வந் ஸ்ப்ருஶந் ஜிக்₄ரந் அஶ்நந் க₃ச்ச₂ந் ஸ்வபந் ஶ்வஸந் ॥ 8 ॥

ப்ரலபந் விஸ்ருஜந் க்₃ருஹ்ணந் உந்மிஷந் நிமிஷந்நபி ।

இந்த்₃ரியாணீந்த்₃ரியார்தே₂ஷு வர்தந்த இதி த₄ாரயந் ॥ 9 ॥

தத்த்வவித் – தத்வமறிந்த, **யுக்த:** – ஸாங்க்யயோகி(யோ), **பஶ்யந்** – பார்த்தாலும், **ஶ்ருண்வந்** – கேட்டாலும், **ஸ்ப்ருஶந்** – தொட்டாலும், **ஜிக்₄ரந்** – முகர்ந்தாலும், **அஶ்நந்** – உணவு உண்டாலும், **க₃ச்ச₂ந்** – நடந்து சென்றாலும், **ஸ்வபந்** – உறங்கினாலும், **ஶ்வஸந்** – மூச்சுவிட்டாலும், **ப்ரலபந்** – பேசினாலும், **விஸ்ருஜந்** – கழித்தாலும், **க்₃ருஹ்ணந்** – பற்றினாலும், **உந்மிஷந்** – கண்களைத் திறந்தாலும், **நிமிஷந் அபி** – மூடினாலும் கூட, **இந்த்₃ரியாணி** – எல்லாப் புலன்களும், **இந்த்₃ரியார்தே₂ஷு** – (தத்தம் புலன்களுக்குரிய) பொருட்களில், **வர்தந்தே** – செயல்படுகின்றன, **இதி** – என்று (இவ்வாறு) **த₄ாரயந்** – உணர்ந்து கொண்டு, **கிஞ்சித் ஏவ** – ஸந்தேஹமின்றி எதையும், **ந கரோமி** – (நான்) செய்வதேயில்லை, **இதி மந்யேத** – என்று நினைக்க வேண்டும்.

தத்வமறிந்த ஸாங்க்ய யோகியோ பார்த்தாலும், கேட்டாலும், தொட்டாலும், முகர்ந்தாலும், உணவு உண்டாலும், நடந்து சென்றாலும், உறங்கினாலும், மூச்சுவிட்டாலும், பேசினாலும், கழித்தாலும், பற்றினாலும், கண்களைத் திறந்தாலும், மூடினாலும்கூட எல்லாப் புலன்களும் தத்தம் புலன்களுக்குரிய பொருட்களில் செயல்படுகின்றன என்று உணர்ந்து கொண்டு ஸந்தேஹமின்றி எதையும் நான் செய்வதேயில்லை என்று நினைக்க வேண்டும்.

கேள்வி: 'தத்த்வவித்', 'யுக்த:' என்று இரு சொற்கள் கூறுகின்ற கருத்து என்ன?

பதில்: காணப்படும் ப்ரபஞ்சம் முழுவதும் நொடியில் அழிவதாகவும், அநித்யமாகவும் இருப்பதால், அது கானல் நீரில் காணப்படும் நீர் அல்லது கனவில் தோன்றும் உலகம் போல மாயமானது. ஸத் சித் ஆனந்தமயமான ப்ரம்மம் ஒன்றே ஸத்யமானது. அதன் மேல் மாயையினால் இந்த ப்ரபஞ்சம் ஏறிடப்பட்டிருக்கிறது. இவ்விதம் நித்யம் எது? அநித்யம் எது என்று பகுத்தறிந்து, இடைவிடாது நிர்குணமான, உருவமற்ற, ஸத் சித் ஆனந்தமயமான பரப்ரம்மத்தில் இரண்டறக் கலந்து நிற்பவன்தான் தத்வமறிந்த யோகி. ஸாங்க்யயோக ஸாதனை புரிபவன் இப்படித்தான் ஆகவேண்டும். இதை உணர்த்துவதன் பொருட்டே, மேற்குறித்த இரண்டு சொற்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

கேள்வி: இங்கு, 'பார்ப்பது, கேட்பது முதலிய எல்லாச் செயல்களையும் செய்து கொண்டிருந்தாலும், நான் எதுவும் செய்வதில்லை' என்று சொல்வதில் என்ன கருத்து?

பதில்: கனவிலிருந்து விழித்துக் கொண்ட மனிதன், கனவில் தோன்றிய உடல், மனம், ப்ராணன் மற்றும் புலன்கள் வாயிலாக என்னென்ன கார்யங்கள் தன்னால் நடந்ததாகத் தோன்றினவோ, உண்மையில் அந்தச் செயல்கள் நிகழவும் இல்லை; மேலும் அவற்றுடன் தனக்குச் சிறிதளவும் தொடர்பு இல்லை என்று அறிந்து கொள்கிறான். அவ்விதமே தத்வத்தை அறிந்து கொண்டு, மாறுதலற்றதும், செயல்படாததுமான பரமாத்மாவிடம், பேதமற்ற பாவனையுடன் இருக்கும் ஸாங்க்யயோகி, "ஞானேந்த்ரியங்கள், கர்மேந்த்ரியங்கள், ப்ராணன், மனம் முதலியன மூலம் உலகியலில் செய்யப்படுகின்ற, பார்த்தல், கேட்டல் போன்ற எல்லாச் செயல்களையும் செய்யும் காலத்தில், இவையெல்லாம் மாயாமயமான மனம், ப்ராணன், புலன்களே தத்தம் மாயாமயமான விஷயங்களில் ஈடுபட்டுச் செய்கின்றன. உண்மையில் எதுவும் நடந்து

கொண்டிருக்கவும் இல்லை; தனக்கு இவற்றுடன் சிறிதளவு தொடர்பும் இல்லை" என்று அறிந்து கொள்ள வேண்டும்.

கேள்வி: அப்படியானால் விருப்பு-வெறுப்பு, காமம்-க்ரோதம் முதலிய குற்றங்களை உடையவர்களும், தங்களுடைய கருத்தின்படி, தாங்கள் ஸாங்க்யயோகி ஆகிவிட்டதாக நினைத்துக் கொண்டு, 'மனம், புலன்கள் வாயிலாக எந்த நல்ல, தீய செயல்கள் நிகழ்கின்றனவோ, அவற்றோடு தங்களுக்குச் சிறிதும் தொடர்பு இல்லை' என்று சொல்ல முடியுமே! இப்படிப்பட்ட நிலையில் உண்மையான ஸாங்க்யயோகியை அடையாளம் கண்டு கொள்வது எப்படி?

பதில்: வெறும் வார்த்தையளவில் சொல்வதனால் மட்டுமே யாரும் ஸாங்க்யயோகியாக ஆகிவிட முடியாது. கர்மங்களோடு அவனுடைய தொடர்பும் விட்டுப் போகாது. உண்மையான ஸாங்க்யயோகியின் ஞானத்தில் உள்ளபடியே, ப்ரபஞ்சமனைத்தும் கனவுபோல மாயத்தோற்றம் என்பது தெரியும். அதனால் அவனுக்கு எதிலும் சிறிதளவுகூடப் பற்று இருக்காது. விருப்பு-வெறுப்புகள் கொஞ்சம்கூட இரா. காமம், க்ரோதம், பேராசை, மோஹம், அஹங்காரம் ஆகிய தோஷங்கள் அவனிடம் சிறிதுகூட இரா. ஆகவே விலக்கப்பட்ட தீய கார்யத்தைச் செய்யத் தூண்டுதலே இல்லாத காரணத்தால், அந்த நிலையில் பரிசுத்தமான அவனுடைய மனமும், புலன்களும் என்ன செய்தாலும், அது சாஸ்த்ரத்திற்கு ஒத்ததாகவும், உலக நன்மைக்காகவுமே ஆகும். உண்மையான ஸாங்க்யயோகிக்கு இதுதான் அடையாளம். எதுவரையில் தன்னுள்ளத்தில் விருப்பு-வெறுப்புகளும், காம-க்ரோதங்களும் சிறிதளவாவது உள்ளதாகத் தெரிய வருகின்றனவோ, அதுவரை ஸாங்க்யயோக ஸாதகன் 'தன் ஸாதனையில் குறைபாடுள்ளது' என்று அறியவேண்டும்.

கேள்வி: ஸாங்க்யயோகி உடலைப் பேணுவதற்காக மட்டுமே உண்பது, அருந்துவது முதலிய அவசியமான செயல்களைச் செய்வாரா? அல்லது வர்ணாசிரமங்களுக்கு ஏற்ப, சாஸ்த்ரத்திற்கு ஒத்ததான எல்லாக் கர்மங்களையும் செய்வாரா?

பதில்: அப்படி ஒன்றும் கட்டாயம் இல்லை. வர்ணம், ஆசிரமம், ஸ்வபாவம், ப்ராரப்தம், சேர்க்கை, பழக்கம் இவற்றில் மாறுபாடு இருக்குமாதலால், ஸாங்க்யயோகிகளின் செயல்கள் ஒரேவிதமாக இரா. 'பார்த்தல்', 'கேட்டல்', 'தொடுதல்', 'முகர்தல்', 'உண்ணுதல்' ஆகிய ஐந்து சொற்களாலும், கண், காது, சருமம், மூக்கு, நாக்கு ஆகிய ஐந்து அறிவுப் புலன்களுடைய எல்லாச் செயல்களும் முறையே சொல்லப்பட்டிருக்கின்றன. நடத்தல், கைப்பற்றுதல், உரைத்தல் என்பதால் கால், கை, வாய் இவற்றின் செயல்களும் மற்றும் வெளிப்படுத்துதல் என்பதால் புட்டம், பால்குறிகளின் செயல்களும், இவ்விதமான ஐந்து செயற்புலன்களின் செயல்களும் சொல்லப்பட்டு இருக்கின்றன. மூச்சுவிடுதல் என்னும் சொல் ப்ராண-அபானன் முதலிய ஐந்து ப்ராணன்களுடைய செயல்களைக் குறிக்கிறது. அவ்விதமே கண்களைத் திறத்தல், மூடுதல் ஆகிய சொற்கள் கூர்மம் முதலிய ஐந்து வகையான வாயுக்களின் செயல்களைக் குறிப்பன. மேலும் 'உறங்குதல்' அந்தக்கரணத்தின் செயலைக் குறிப்பது. இவ்விதம் அனைத்துப் புலன்கள், ப்ராணன், அந்தக்கரணத்தின் செயல்கள் எடுத்துக்காட்டப்பட்டிருப்பதால், ஸாங்க்யயோகி மூலமாக அவனுடைய வர்ண, ஆசிரம, இயற்கை, ப்ராரப்தம் இவற்றின் சேர்க்கைக்கேற்ப, உடலைப் பேணுவதற்காகவும், உலக நன்மைக்காகவும், சாஸ்த்ரத்திற்கு ஒத்ததான உண்பது, அருந்துவது, வியாபாரம், உபதேசம், எழுதுதல், படித்தல், கேட்டல், நினைத்தல் ஆகிய எல்லாக் கார்யங்களும் நிகழ்கின்றன.

கேள்வி: 3/28ல், 'குணங்கள் குணங்களில் செயல்படுகின்றன' என்கிறார். 13/29ல், 'எல்லாச் செயல்களும் ப்ரக்ருதியின் மூலம் நடைபெறுகின்றன' என்று கூறுகிறார். இங்கு, 'புலன்கள், புலன்களுக்குரிய பொருட்களில் இயங்குகின்றன' என்கிறார். இப்படி மூன்றுவிதமாகக் கூறுவதன் கருத்து என்ன?

பதில்: புலன்களும், அவற்றிற்குரிய பொருட்களும், ஸத்வம் முதலிய முக்குணங்களின் விளைவுகள். முக்குணங்களும் ப்ரக்ருதியின் விளைவுகள். ஆகவே எல்லாக் கர்மங்களும் ப்ரக்ருதியினால் நடைபெறுகின்றன என்றாலும், குணங்களில் குணங்கள் செயல்படுகின்றன என்றாலும், புலன்கள் புலன்களுக்குரிய விஷயங்களில் இயங்குகின்றன என்றாலும் எல்லாம் ஒன்றுதான். ஸித்தாந்தத்தை வலுப்படுத்துவதற்காக, ஒரே விஷயம் ஸந்தர்பத்திற்கு ஏற்றவாறு மூன்றுவிதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

கேள்வி: புலன்களின் செயல்களோடு ப்ராணனும், மனமும் செய்யும் செயல்களையும் சேர்த்துச் சொல்வதால், 'புலன்கள் புலன்களுக்குரிய பொருட்களில் இயங்குகின்றன' என்பதை மட்டும் எப்படி ஏற்றுக் கொள்வது?

பதில்: செயல்களில் புலன்களுக்குத்தான் முக்யத்வம். ப்ராணனும் 'புலன்கள்' என்ற பெயரால் விளக்கப்பட்டுள்ளது. மனமும், உள்ளுறையும் கருவியாதலால் புலனேயாகும். இவ்விதம், 'புலன்' என்ற சொல்லால், எல்லாவற்றையும் சேர்த்துச் சொன்னதாக ஆகிறது. ஆகவே இதில் தவறில்லை.

கேள்வி: இங்கு 'ஏவ' என்ற சொல் என்ன கருத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது?

பதில்: 'கர்த்தா என்ற எண்ணம் சிறிதுகூட இருக்கக் கூடாது' என்பதை வலியுறுத்துவதற்காகவே 'ஏவ' என்று அழுத்தமாகச் சொல்கிறார். ஸாங்க்யயோகி சிறிதளவுகூடத் தன்னைக் கர்த்தாவாக நினைக்கக் கூடாது.

பொருத்தம்: இவ்விதம் ஸாங்க்யயோகியின் ஸாதனை முறையைக் கூறிவிட்டு, இனி 10,11ல் கர்மயோகியின் ஸாதனையையும், அதன் பயனையும் விளக்குகிறார்—

ब्रह्मण्याधाय कर्माणि सङ्गं त्यक्त्वा करोति यः।
लिप्यते न स पापेन पद्मपत्रमिवाम्भसा॥ १०॥

ப்₃ரஹ்மண்யாத₄ாய கர்மாணி ஸங்க₃ம் த்யக்த்வா கரோதி ய: ।
லிப்யதே ந ஸ பாபேந பத்₃மபத்ரமிவாம்ப₄ஸா ॥ 10 ॥

ய: – எவன், **கர்மாணி** – அனைத்துக் கர்மங்களையும், **ப்₃ரஹ்மணி** – பரமாத்மாவிடம், **ஆத₄ாய** – அர்ப்பணம் செய்து, **ஸங்க₃ம்** – (உலகியல்) பற்றுதலை, **த்யக்த்வா** – துறந்து, **கரோதி** – கர்மங்களைச் செய்கிறானோ, **ஸ:** – அவன், **அம்ப₄ஸா** – தண்ணீரில், **பத்₃மபத்ரம் இவ** – தாமரை இலை ஒட்டாமல் இருப்பதுபோல, **பாபேந** – பாவத்தினால், **ந லிப்யதே** – பாதிக்கப்படுவதில்லை.

எவன் அனைத்துக் கர்மங்களையும் பரமாத்மாவிடம் அர்ப்பணம் செய்து உலகியல் பற்றுதலைத் துறந்து கர்மங்களைச் செய்கிறானோ, அவன் தண்ணீரில் தாமரை இலை ஒட்டாமல் இருப்பதுபோலப் பாவத்தினால் பாதிக்கப்படுவதில்லை.

கேள்வி: 'எல்லாக் கர்மங்களையும் பரமாத்மாவிடம் ஸமர்ப்பணம் பண்ணுவது' என்றால் என்ன?

பதில்: பகவானிடம் பக்தி, தேவர்களுக்குப் பூஜை, தாய்–தந்தையர் முதலிய பெரியோர்களுக்கு ஸேவை, யாகம், தானம், தவம், வர்ணாசிரம தர்மத்திற்கு உட்பட்டுச் செல்வம் தேடுவது, உடல் பேணுவதற்குரிய கார்யங்கள் எல்லாவற்றையும் சாஸ்த்ர முறைப்படி மமகாரமின்றி, எல்லாம் பகவானுடையவை; அவருக்காக, அவர் ஆணைப்படி, அவர் விருப்பப்படி, அவர் செய்விக்கும் விதத்தில் செய்கிறோம் என்று, பொம்மலாட்ட பொம்மையைப் போலச் செயல் புரிவதுதான், பரமாத்மாவிடம் எல்லாக் கர்மங்களையும் அர்ப்பணம் செய்வதாகும்.

கேள்வி: பற்றைத் துறந்து கர்மங்களைச் செய்வது என்றால் என்ன?

பதில்: மனைவி, மக்கள், செல்வம், வீடு ஆகிய போகப் பொருட்கள் எல்லாவற்றிலும், ஸ்வர்கம் முதலிய மேலுலகங்களிலும், உடலிலும், செய்கின்ற செயல்களிலும், மதிப்பு, பெருமை, புகழ் முதலிய எல்லாவற்றிலும், பற்றை ஒழித்து, மேலே சொன்னவிதம் கடமைகளை ஆற்றுவதே, 'பற்றைத் துறந்து கர்மங்களைச் செய்வதாகும்'.

கேள்வி: கர்மயோகி சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட நல்ல கர்மங்களைச் செய்கிறான். பாவ கர்மங்கள் செய்வதே இல்லை. பாவ கர்மம் செய்யாதபோது, பாவம் அவனை ஒட்டும் என்று நினைப்பதற்கே இடமேயில்லை. அப்படியிருக்க 'அவனைப் பாவம் ஒட்டாது' என்று இங்கே கூறுவதன் கருத்து என்ன?

பதில்: விதிக்கப்பட்ட கர்மங்கள்கூட முற்றிலும் குற்றமற்றவை அல்ல. எக்கார்யத்திலும் சிற்றுயிர்களுக்குத் தீங்கு ஏற்படக் கூடுமாதலால், சிறிது பாவம் ஏற்படவே செய்யும். இதைத்தான் பகவானும், **'ஸர்வாரம்ப₄ா ஹி தே₃ாஷேண தூ₄மேநாக்₃நிரிவாவ்ருதா:'** *(18/48).* 'எல்லாச் செயல்களையும், நெருப்பைப் புகை சூழ்வதுபோலக் குற்றம் சூழ்ந்துதான் இருக்கும்' என்கிறார். ஆகவே பயனில் விருப்பும், பற்றுதலும் கொண்டு ஸுகபோகத்திற்காகவோ, இன்பவாழ்விற்காகவோ கர்மம் செய்கிறவன் பாவத்திலிருந்து தப்ப முடியாது. ஆசையும், பற்றுதலும்தான் மனிதனைக் கட்டுப்படுத்துகின்றன. ஆகவே ஆசையும், பற்றுதலும் சிறிதுகூட இல்லாதவன்தான், கடமையை ஆற்றும்போது நேரும் சிறிது பாவம் கூட ஒட்டாதவனாக இருப்பான் என்று கூறுகிறார்.

कायेन मनसा बुद्ध्या केवलैरिन्द्रियैरपि।
योगिनः कर्म कुर्वन्ति सङ्गं त्यक्त्वात्मशुद्धये ॥ ११ ॥

காயேந மநஸா பு₃த்₃த்₄யா கேவலைரிந்த்₃ரியைரபி ।

யோகி₃ந: கர்ம குர்வந்தி ஸங்க₃ம் த்யக்த்வாத்மஶுத்₃த₄யே ॥ 11 ॥

யோகி₃ந: – கர்மயோகிகள் (மமகாரமின்றி), **கேவலை:** – வெறும், **இந்த்₃ரியை:** – புலன்களாலும், **மநஸா** – மனதாலும், **பு₃த்₃த்₄யா** – புத்தியினாலும், **காயேந அபி** – உடலாலும்கூட, **ஸங்க₃ம் த்யக்த்வா** – பற்றைத் துறந்து, **ஆத்மஶுத்₃த₄யே** – மனத்தூய்மையை அடையும் பொருட்டு, **கர்ம** – கர்மத்தை, **குர்வந்தி** – செய்கிறார்கள்.

கர்மயோகிகள் மமகாரமின்றி வெறும் புலன்களாலும், மனதாலும், புத்தியினாலும், உடலாலும்கூடப் பற்றைத் துறந்து மனத்தூய்மையை அடையும் பொருட்டு கர்மத்தைச் செய்கிறார்கள்.

கேள்வி: இங்கு 'கேவலை:' என்ற அடைமொழியின் கருத்து என்ன? இதனைப் புலன்களோடு மட்டும் சேர்த்துக் கொள்ள வேண்டுமா? அல்லது மனம், புத்தி, உடலோடும் சேர்த்துக் கொள்ளலாமா?

பதில்: 'கேவலை:' என்பது மமகாரம் இன்மையைக் குறிப்பிடுகிறது. இங்கு அது புலன்களுக்கு அடைமொழியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் மனம், புத்தி, உடலோடும் இதைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். கர்மயோகி மனம், புத்தி, உடல்களைத் தன்னுடையவை என்று நினைப்பதில்லை. இவையெல்லாம் பகவானுடையவை என நினைக்கிறான். உலகியலில் தன்னலம் பாராட்டாமல் நிஷ்காமமாக, பகவானுடைய உந்துதலுக்குக் கட்டுப்பட்டு, அவர் செய்விக்கும் வகையில், எல்லாக் கடமைகளையும் செய்கிறான்.

கேள்வி: 'எல்லாக் கர்மங்களையும் ப்ரம்மத்திடம் அர்ப்பணம் செய்து, பற்றில்லாமல் அவற்றைச் செய்யவேண்டும்' என்று 10வது ச்லோகத்திலேயே பகவான் சொல்லிவிட்டாரே! மறுபடியும் 'பற்றுதலை விட்டுவிட்டு' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: கர்மங்களை 'ப்ரம்மத்திடம் அர்ப்பணம் செய்' என்றும், 'பற்றுதலைத் துறந்து விடு' என்றும் பகவான் முதலில் சொல்லிவிட்டார். ஆனால் அங்கே பக்தியை முக்யமாகக்

கொண்ட கர்மயோகியைப் பற்றிக் கூறினார். இதே அத்யாயத்தில் 8,9வது ச்லோகங்களில், ஸாங்க்யயோகியின் மனம், புத்தி, புலன்கள், ப்ராணன், உடல் இவற்றின் மூலம் ஆற்றப்படும் கர்மங்கள் எவ்வாறு அமைகின்றன என்று சொன்னார். அது போல, இங்கே கர்மத்தை முக்யமாகக் கொண்ட கர்மயோகியின் செயல்கள் எவ்வித மனப்பாங்குடன் அமையவேண்டும் என்பதை விளக்குவதற்காக, மனம், புத்தி, புலன்கள், உடல்களிலும், அவற்றின் இயக்கங்களிலும் மமகாரம், பற்றுதலின்றி மனத்தூய்மைக்காகவே கர்மயோகி கர்மம் செய்யவேண்டுமென்று கூறுகிறார். இப்படிக் கர்மத்தின் அடிப்படையில் ஈடுபடும் கர்மயோகியின் செயலின் தன்மையையும், மனப்பாங்கையும் சொல்லும் முறையில் பற்றினைத் துறக்கவேண்டும் என்கிறார்.

பொருத்தம்: **இவ்விதம் பக்தி ப்ரதானமான கர்மயோகி கர்மங்களைச் செய்யும்போது அவனிடம் பாவம் ஒட்டாது. கர்ம ப்ரதானமான கர்மயோகத்தினால் மனம் பரிசுத்தமாகும் என்று பிரித்துச் சொன்ன பிறகுகூட ஒரு கேள்வி எழலாம். கர்மயோகத்திற்கு மனம் தூய்மை பெறுவது மட்டும்தான் பயனா? அல்லது வேறு பயனும் உண்டா? இவ்விதமாகக் கர்மத்தைச் செய்யாமல், பற்றுடன் நல்ல கார்யம் செய்தால் என்ன தீங்கு விளையும்? இந்த விஷயத்தைத் தெளிவாகத் தெரிவிப்பதற்காக, பகவான் அடுத்துக் கூறுகிறார்—**

युक्तः कर्मफलं त्यक्त्वा शान्तिमाप्नोति नैष्ठिकीम्।
अयुक्तः कामकारेण फले सक्तो निबध्यते॥ १२॥

யுக்த: கர்மப$_{2}$லம் த்யக்த்வா ஶாந்திமாப்நோதி நைஷ்டி$_{2}$கீம் ।
அயுக்த: காமகாரேண ப$_{2}$லே ஸக்தோ நிப$_{3}$த்$_{4}$யதே ॥ 12 ॥

யுக்த: – கர்மயோகி, **கர்மப$_{2}$லம்** – கர்மத்தின் பயனை, **த்யக்த்வா** – துறந்து, **நைஷ்டி$_{2}$கீம்** – பகவானை அடைவது என்கிற, **ஶாந்திம்** – அமைதியை, **ஆப்நோதி** – பெறுகிறான். (ஆனால்), **அயுக்த:** – பயனில் பற்றுடையவன், **காமகாரேண** – ஆசையின் உந்துதலினால், **ப$_{2}$லே** – பயனில், **ஸக்த:** – பற்றுக் கொண்டு, **நிப$_{3}$த்$_{4}$யதே** – தளைக்கப்படுகிறான்.

கர்மயோகி, கர்மத்தின் பயனைத் துறந்து பகவானை அடைவது என்கிற அமைதியைப் பெறுகிறான். ஆனால் பயனில் பற்றுடையவன் ஆசையின் உந்துதலினால் பயனில் பற்றுக் கொண்டு தளைக்கப்படுகிறான்.

கேள்வி: 8வது ச்லோகத்தில் 'யுக்த:' என்ற சொல்லுக்கு ஸாங்க்யயோகி என்று பொருள் கூறப்பட்டது. இங்கு கர்மயோகி என்று பொருள் கூறுவானேன்?

பதில்: ஒரு சொல்லுக்குப் பொருள் ஸந்தர்பத்திற்கு ஏற்றவாறு அமையும். இந்த முறையில் கீதையில் 'யுக்த:' என்ற சொல் ஸந்தர்பத்திற்கு ஏற்றவாறு, வெவ்வேறு பொருள்களில் வருகிறது. 'யுக்த' என்ற சொல் 'யுஜ்' என்ற வேர்ச் சொல்லிலிருந்து உண்டாகிறது. அதன் பொருள் 'சேர்தல்' என்பதாகும். 'யுக்த:' என்றால் 2/61ல் புலன் அடக்கமுள்ளவன்; 6/8ல் பகவானை அடைந்துவிட்ட தத்வஞானி; 6/17ல் உசிதமான உணவு நடைமுறை; 6/18ல் த்யானயோகி; 7/22ல் ச்ரத்தையுடன் கூடினவன்; 5/8ல் ஸாங்க்யயோகி என்றும் பல பொருள்கள் உண்டு. அங்கே புலன்கள் அனைத்தும் அவ்வவற்றின் பொருட்களில் இயங்குகின்றன என்றறிந்து, 'தான் கர்த்தா அல்ல' என்ற தத்வமறிந்தவனை 'யுக்த:' என்ற சொல் குறிப்பதால் ஸாங்க்யயோகி என்று பொருள்படுகிறது. ஆனால், இங்கு கர்மத்தின் பயனை த்யாகம் செய்து என்று கூறுமிடத்தில் வருகிறபடியால், அது கர்மயோகி என்று பொருள்படும்.

கேள்வி: 'நைஷ்டிகீ ஶாந்தி' என்ற தொடருக்கு 'பகவானை அடைவதாகிய சாந்தி' என்று பொருள் கூறுவதன் கருத்து என்ன?

பதில்: 'நைஷ்டிகீ' என்றால் 'நிஷ்டையிலிருந்து தோன்றிய' என்று பொருள். இதை அனுஸரித்து, கர்மயோகத்தில் உறுதியுடன் நிலைபெற்று, பகவானை அடைவது எனும் பேரமைதி நிலைதான் 'நைஷ்டிகீ ஶாந்தி' ஆகும்.

கேள்வி: 'அயுக்த' என்ற சொல்லுக்கு, 'தடுமாறினவன்' அல்லது 'சோம்பேறி', 'கர்மத்தில் ஈடுபடாதவன்' என்று பொருள் கூறாமல், பயனில் பற்றுடையவன் என்று கூறுவானேன்?

பதில்: ஆசையினால் பயனில் கருத்துடையவன் என்று ச்லோகத்தில் வருவதால் இங்கு 'அயுக்த' என்ற சொல்லுக்குப் பயனில் பற்றுடையவன் என்று பொருள் கொள்வதே உசிதம்.

கேள்வி: இங்கு 'பந்தம்' என்றால் என்ன?

பதில்: பயனில் கருத்துடன் கடமைகளை ஆற்றுவதால், அவற்றின் பயனாக, தெய்வ–மனிதப் பிறவிகளில் மாறி மாறிப் பிறப்பது என்று பொருள்.

பொருத்தம்: கர்மயோகி கர்மத்தின் பயனில் கட்டுப்படாமல் பரமாத்மாவை அடைவது என்ற சாந்தியைப் பெறுகிறான். பயனில் பற்றுள்ளவன் பிறப்பு, இறப்புச் சுழலில் சிக்குகிறான் என்று கூறினார். ஸாங்க்யயோகி என்ன ஆவான் என்பதை இனிச் சொல்கிறார்—

सर्वकर्माणि मनसा सन्न्यस्यास्ते सुखं वशी।
नवद्वारे पुरे देही नैव कुर्वन्न कारयन्॥ १३॥

ஸர்வகர்மாணி மநஸா ஸந்ந்யஸ்யாஸ்தே ஸுக$_2$ம் வஶீ ।

நவத்$_3$வாரே புரே தே$_3$ஹீ நைவ குர்வந்ந காரயந் ॥ 13 ॥

வஶீ – மனதைத் தன்வசப்படுத்தி ஸாங்க்யயோகத்தைக் கடைப்பிடிக்கின்ற, **தே$_3$ஹீ** – மனிதன், **ந குர்வந்** – (தான்) செய்யாமலும், **ந காரயந் ஏவ** – செய்விக்காமலுமே, **நவத்$_3$வாரே** – ஒன்பது வாயில்களுடைய உடலாகிய, **புரே** – வீட்டில், **ஸர்வகர்மாணி** – எல்லாச் செயல்களையும், **மநஸா** – மனதால், **ஸந்ந்யஸ்ய** – துறந்து, **ஸுக$_2$ம்** – (ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்ம ஸ்வரூபத்தில்) ஆனந்தமயமாக, **ஆஸ்தே** – ஆழ்ந்து இருக்கிறான்.

மனதைத் தன்வசப்படுத்தி ஸாங்க்ய யோகத்தைக் கடைப்பிடிக்கின்ற மனிதன் தான் செய்யாமலும் செய்விக்காமலுமே ஒன்பது வாயில்களுடைய உடலாகிய வீட்டில் எல்லாச் செயல்களையும் மனதால் துறந்து ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்ம ஸ்வரூபத்தில் ஆனந்தமயமாக ஆழ்ந்து இருக்கிறான்.

கேள்வி: ஸாங்க்யயோகிக்குத்தான் உடல், புலன்கள், மனம் எல்லாம் மாயத்தோற்றம் ஆயிற்றே. அவற்றுடன் அவனுக்கு ஸம்பந்தமே இல்லையே! அப்படி இருக்க அவனை 'தேஹீ' (தேஹம் உடையவன்); 'வஶீ' (வசப்படுத்தியவன்) என்றெல்லாம் கூறுவானேன்?

பதில்: உண்மைதான். ஸாங்க்யயோகி தன் நிலையில், உடல், புலன்கள், மனம் இவற்றுடன் ஸம்பந்தம் வைத்துக் கொள்ளவில்லை. எப்பொழுதும் ஸத் சித் ஆனந்த மயமான பரமாத்மாவிடம் இரண்டறக் கலந்து நிற்கிறான். ஆயினும் உலகத்தார் அவனை உடல் ஸம்பந்தமுடையவனாக நினைப்பதனாலேயே அவனை 'தேஹீ' என்கிறார். இப்படியே 14/20லும் குணாதீதனையும் 'தேஹீ' என்று கூறுகிறார். உலகப் பார்வையில் அவனுடைய மனம், புலன்கள், புத்தியெல்லாம் குறிப்பிட்ட கட்டுப்பாட்டுடன் சாஸ்த்ரத்துக்கு ஒத்த முறையில் உலக நன்மைக்காகவே செயல்படுகின்றன என்பதைக் குறிக்கவே 'வஶீ' என்கிறார்.

கேள்வி: இங்கு 'ஏவ' என்ற சொல், எந்தக் கருத்தைச் சுட்டிக்காட்டுகிறது?

பதில்: ஸாங்க்யயோகிக்கு உடலிலும், புலன்களிலும் அஹங்காரம் இல்லாதபடியால், அவை செயல்படும்போது, அவன் கர்த்தா ஆவதில்லை. மமகாரம் இல்லாததால் அவன் அவற்றைச் செய்விப்பவனாகவும் ஆவதில்லை. ஸாங்க்யயோகிக்கு அஹங்காரம், மமகாரம் அறவே கிடையாது. ஆகவே, எவ்விதத்திலும் உடல், புலன்கள், மனம் இவற்றின் செயல்களில் தன்னைக் கர்த்தா என்றும், இயக்குபவன் என்றும் நினைத்துக் கொள்வதே இல்லை என்று கூறுகிறார்.

கேள்வி: இங்கு 'நவத்வாரே புரே ஆஸ்தே' (ஒன்பது வாயில்கள் உள்ள வீட்டில் வாழ்கிறான்) என்று பொருள் கூறாமல், 'நவத்₃வாரே புரே ஸர்வகர்மாணி மநஸா ஸந்யஸ்ய' (ஒன்பது வாயில்களுள்ள உடலாகிய வீட்டில் எல்லாச் செயல்களையும் மனதால் துறந்து) என்று சொற்களைச் சேர்த்துப் பொருள் கொள்வதன் கருத்து என்ன?

பதில்: ஒன்பது வாயில்கள் உள்ள தேஹமாகிய வீட்டில் ஸாங்க்யயோகி இருக்கிறான் என்பதில் பெருமைக்குரிய விஷயம் ஒன்றுமில்லை. இப்படிச் சொல்வது அவனுடைய நிலைக்கு எதிரானது. உடலாகிற வீட்டிலேதான் ஸாதாரண மனிதனும் இருக்கிறான். ஸாங்க்யயோகிக்கு இதில் என்ன பெருமை இருக்கிறது? உடல் என்ற வீட்டில், புலன்கள் முதலிய ப்ரக்ருதிப் பொருட்களில், கர்மங்களைத் துறப்பதைச் சுட்டிக் காட்டுவதன் மூலம், ஸாங்க்யயோகியின் தனிச்சிறப்பு வெளியாகிறது. ஏனெனில் ஸாங்க்யயோகிதான் இப்படிச் செய்ய முடியும். ஸாதாரண மனிதன் செய்ய முடியாது. அதனால் இப்படிப் பொருள் கொள்வதே முறையாகும்.

கேள்வி: 'புலன்களின் செயல்களைப் புலன்களில் துறந்து' என்று சொல்லாமல் 'ஒன்பது வாயில்கள் உள்ள வீட்டில் துறந்து' என்று ஏன் கூறுகிறார்?

பதில்: இரு கண்கள், இரு காதுகள், இரு நாசி த்வாரங்கள், ஒரு வாய் என்ற ஏழு வாயில்கள் மேலே. பால்குறி, புட்டம் என்று இரு வாயில்கள் கீழே. புலன்களுடன் கூடிய இந்த பிண்ட சரீரத்தில் இந்த ஒன்பது வாயில்களைக் குறிப்பிட்டுச் சொல்வதால், 'கர்மங்களைப் புலன்களிலேயே விட்டுவிடுவது' என்பதுதான் தாத்பர்யம். ஏனென்றால் புலன்கள் முதலிய எல்லாவற்றிற்கும் உடல்தான் ஆதாரம். ஆகவே உடலில் விடுவது என்று சொல்வதில் புதிய இரண்டாவது கருத்து ஒன்றுமில்லை. 8,9வது ச்லோகங்களில் சொன்னவையே இங்கும் கூறப்படுகின்றன. சொற்கள்தான் வேறுபட்டவை. அங்கு புலன்களின் செயல்கள். இங்கு புலன்களின் இடங்கள் கூறப்பட்டன. இவ்வளவுதான் வேறுபாடு. உட்கருத்தில் மாறுபாடு இல்லை.

கேள்வி: 'மனதிலிருந்து கர்மங்களைத் துறப்பது' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: எல்லாக் கர்மங்களையும் விட்டுவிட்டால், மனிதனுடைய அன்றாட வாழ்க்கைகூட நடக்காது. ஆகவேதான் விவேகத்தோடு 'செய்கிறேன் – செய்விக்கிறேன்' என்ற எண்ணத்தை விலக்குவதுதான் ஸாங்க்யயோகியின் த்யாகம் ஆகும். இக்கருத்தைத் தெளிவாகக் காட்டுவதற்காகவே, மனதிலிருந்து கர்மங்களைத் துறக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

கேள்வி: ச்லோகத்திற்குப் பொருள் உரைக்கையில் 'ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்ம ஸ்வரூபத்தில் ஆழ்ந்து இருக்கிறான்' என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் ச்லோகத்தில் இப்படிப்பட்ட சொற்கள் எவையும் இல்லை. அப்படி இருக்கும்போது பொருளுரைக்கையில் ஏன் இந்த வாக்கியத்தைச் சேர்க்க வேண்டும்?

பதில்: 'ஆஸ்தே' (ஆழ்ந்து இருக்கிறான்) என்ற சொல் வருவதால், 'எங்கு' என்ற கேள்வி எழுகிறது. மூல ச்லோகத்தில் இதற்குரிய சொல் இல்லாதபோதிலும், கருத்துக்கேற்ப வருவித்துச் சொல்வதுதான் முறையாகும். இங்கு ஸாங்க்யயோகியைப் பற்றிய ஸந்தர்பம். ஸாங்க்யயோகி உண்மையில் ஸத் சித் ஆனந்த பரமாத்ம ஸ்வரூபத்தில்தான் ஸுகமாக நிலை கொள்ள முடியும். வேறு எங்கும் அன்று. ஆகவே இந்த வாக்கியம் சேர்க்கப்பட்டு இருக்கிறது.

பொருத்தம்: **ஆத்மா உண்மையில் கர்மம் செய்வதுமில்லை; புலன்கள் முதலியவற்றால் செய்விப்பதுவும் இல்லை என்று இருக்கும்போது, எல்லா மனிதர்களும் தங்களையே கர்மத்தைச் செய்பவர்களாக ஏன் நினைக்கிறார்கள்? அவர்கள் கர்மபலனை அனுபவிப்பவர்களாக ஏன் ஆகிறார்கள் என்பதற்குப் பதில் கூறுகிறார்—**

न कर्तृत्वं न कर्माणि लोकस्य सृजति प्रभुः।
न कर्मफलसंयोगं स्वभावस्तु प्रवर्तते ॥ १४ ॥

ந கர்த்ருத்வம் ந கர்மாணி லோகஸ்ய ஸ்ருஜதி ப்ரபு₄: ।

ந கர்மப₂லஸம்யோக₃ம் ஸ்வப₄ாவஸ்து ப்ரவர்ததே ॥ 14 ॥

ப்ரபு₄: – பகவான், **லோகஸ்ய** – மனிதர்களுடைய, **கர்த்ருத்வம்** – கர்த்தா என்னும் தன்மையை, **ந ஸ்ருஜதி** – உண்டுபண்ணுவதில்லை. ***கர்மாணி*** – கர்மங்களையும், **ந (ஸ்ருஜதி)** – உண்டுபண்ணுவதில்லை. ***கர்மப₂லஸம்யோக₃ம்*** – கர்மத்தின் பயனோடு சேர்த்து வைத்தலையும், **ந (ஸ்ருஜதி)** – ஏற்படுத்துவதில்லை. **து** – ஆனால், **ஸ்வப₄ாவ:** – இயல்புதான், **ப்ரவர்ததே** – செயல்படுகிறது.

பகவான் மனிதர்களுடைய கர்த்தா என்னும் தன்மையை உண்டு பண்ணுவதில்லை. கர்மங்களையும் உண்டு பண்ணுவதில்லை. கர்மத்தின் பயனோடு சேர்த்து வைத்தலையும் ஏற்படுத்துவதில்லை. ஆனால் இயல்புதான் செயல்படுகிறது.

கேள்வி: இங்கு 'ப்ரபு' என்ற சொல் யாரைக் குறிக்கிறது? மனிதர்களுடைய கர்த்தா என்னும் தன்மை, கர்மம், மேலும் கர்மபலனோடு ஒட்டுதல் ஆகியவற்றை உலகத்தைப் படைப்போனாகிய பகவான் செய்வதில்லை என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: அகில உலகையும் படைத்துக் காத்துத் தன்னுள் அடக்கிக் கொள்ளும் ஸர்வ வல்லமை படைத்த பகவானை 'ப்ரபு' என்ற சொல் குறிக்கிறது. ஏனெனில் சாஸ்த்ரங்களில் எங்கெல்லாம் ஸ்ருஷ்டி முதலான கர்மங்களைச் செய்கிறவர் என்ற பேச்சு வருகிறதோ, அங்கெல்லாம் அது ஸகுண ப்ரம்மத்தைத்தான் குறிக்கிறது. பகவான் மனிதனிடம் 'தான் செய்பவன்' என்ற எண்ணத்தை உண்டாக்குவதில்லை. மனிதன், தான் செய்யும் கார்யங்களில் கர்த்தா என்ற அபிமானம் கொண்டானானால், அதற்கு பகவான் பொறுப்பு அல்லர். அஞ்ஞானியான மனிதன் அஹங்காரத்திற்கு ஆட்பட்டு, தன்னைக் கர்த்தா என்று நினைக்கிறான் (3/27). நல்ல செயலையோ, தீய செயலையோ, இவன் செய்யவேண்டும் என்று பகவான் திட்டமிடுவதில்லை. இப்படி பகவானே திட்டமிட்டால், 'செய்–செய்யாதே' என்று கூறும் சாஸ்த்ரங்கள் பயனற்றுப் போய்விடும். கர்மபயனின் சேர்க்கையை அமைப்பதும் பகவான் அல்லர். பயன் மனிதனுடைய அஞ்ஞானத்தினால் மனிதனிடம் ஒட்டிக் கொள்கிறது என்று பொருள். சிலர் பயனில் ருசி கொண்டு, தான் கர்த்தா; தனக்கு இன்ன பயன் வேண்டுமென்று நினைத்துக் கர்மத்தைச் செய்து, அதில் ஒட்டிக் கொள்கிறார்கள்.

கர்த்தா, கர்மம், பயன் மூன்றும் பகவானுடைய செயலானால் மனிதன் இவற்றிலிருந்து மீளவே முடியாது. மனிதனைக் கரையேற்றுவதற்கு எந்த வழியும் இல்லாமல் போகும். ஆகவே ஸாதகன் கர்மங்களில் கர்த்தா என்ற அபிமானத்தை முன் சொன்னவாறு ப்ரக்ருதியிடம் தள்ளி (5/8,9) அல்லது பகவானிடம் அர்ப்பணம் செய்து (5/10) அல்லது கர்மத்தின் பயனையும், பற்றுதலையும் அறவே துறந்து (5/12), கர்மங்களிலிருந்து தொடர்பைத் துண்டித்துக் கொள்ளவேண்டும் (4/20). இந்த எல்லாக் கருத்துக்களையும் தெரிவிப்பதற்காகவே பகவான், மனிதனுக்கு 'கர்த்தா' என்ற அபிமானத்தையும், கர்மத்தையும், கர்மத்தின் பயனையும் படைப்பதில்லை என்று இங்கே கூறப்பட்டுள்ளது.

கேள்வி: இங்கு இயல்புதான் இயங்குகிறது என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: ஆத்மாவுக்கு, கர்த்தா, கர்மம், கர்மத்தின் பயன் ஆகியவற்றோடு உண்மையில் ஸம்பந்தமில்லை என்றால், பகவானும் இப்படிச் சுமத்தவில்லை என்றால், எப்படி இவை தோன்றலாயின என்கிற கேள்விக்கு இதுதான் பதில். ஸத்வ, ரஜஸ், தமோ குணங்கள், விருப்பு–வெறுப்பு முதலிய மனவிகாரங்கள், முன் செய்த நல்லவும், தீயவுமான கர்மங்கள், அவற்றின் மனப்பதிவுகளான ஸம்ஸ்காரங்கள் இவையெல்லாம் சேர்ந்த உருவமான ப்ரக்ருதியே – இயற்கையே எல்லாவற்றையும் செய்கிறது. இந்த இயற்கைக்கு, ஜீவர்களுடன் அநாதிகாலமாகத் தொடர்பு இருக்கிறது. ஆகையால் ஜீவர்களிடம் 'தானே கர்த்தா' என்ற எண்ணம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அதாவது அஹங்காரத்தினால் மயக்கமடைந்து, தங்களையே அவற்றின் 'கர்த்தா' (செய்கிறவன்) என்று நினைத்துக் கொள்கிறார்கள் (3/27). இவ்விதமே கர்மத்துடனும், கர்மபலனுடனும் அவர்களுக்குப் பிணைப்பு உண்டாகி விடுகிறது. அவர்கள் அவற்றினுடைய பந்தத்தில் சிக்கிவிடுகிறார்கள். உண்மையில் ஆத்மாவுக்கு இவற்றுடன் ஒருவித ஸம்பந்தமுமில்லை. இதுவே 'இயல்புதான் இயங்குகிறது' என்பதன் கருத்து.

பொருத்தம்: ஸாதகன் எல்லாக் கர்மங்களையும், கர்மபலன்களையும் பகவானுக்கு அர்ப்பணம் செய்வதன் மூலம் கர்மபலன்களில் இருந்து தனது தொடர்பைத் துண்டித்துக் கொள்கிறானேயானால், அவனுடைய நல்ல–தீய கர்மங்களின் பயன்களுக்கு பகவான் உரிமையாளராக ஆகிறாரா, இல்லையா என்பதற்குப் பதில் கூறுகிறார்—

नादत्ते कस्यचित्पापं न चैव सुकृतं विभुः।
अज्ञानेनावृतं ज्ञानं तेन मुह्यन्ति जन्तवः॥ १५॥

நாத₃த்தே கஸ்யசித்பாபம் ந சைவ ஸுக்ருதம் விபு₄: ।

அஜ்ஞாநேநாவ்ருதம் ஜ்ஞாநம் தேந முஹ்யந்தி ஜந்தவ: ॥ 15 ॥

விபு₄: – எங்கும் நிறைந்த பகவான், **கஸ்யசித்** – யாருடைய, **பாபம்** – பாவச் செயலையும், **ந ஆத₃த்தே** – ஏற்பது இல்லை. **ஸுக்ருதம் ஏவ ச** – நற்செயல்களையும், **ந (ஆத₃த்தே)** – ஏற்பது இல்லை. (ஆனால்), **அஜ்ஞாநேந** – அஞ்ஞானத்தினால், **ஜ்ஞாநம்** – ஞானம், **ஆவ்ருதம்** – மூடப்பட்டிருக்கிறது. **தேந** – அதனால், **ஜந்தவ:** – அஞ்ஞானிகளான எல்லா மனிதர்களும், **முஹ்யந்தி** – மோஹம் அடைகிறார்கள்.

எங்கும் நிறைந்த பகவான் யாருடைய பாவச் செயலையும் ஏற்பது இல்லை. நற்செயல் களையும் ஏற்பது இல்லை. ஆனால் அஞ்ஞானத்தினால் ஞானம் மூடப்பட்டிருக்கிறது. அதனால் அஞ்ஞானிகளான எல்லா மனிதர்களும் மோஹம் அடைகிறார்கள்.

கேள்வி: இங்கு 'விபு:' என்ற சொல்லுக்கு என்ன பொருள்? அவர் யாருடைய புண்ய பாவங்களையும் ஏற்பதில்லை என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: 'விபு:' என்ற சொல், எல்லோர் இதயத்திலும் விளங்குகின்றவரும் (13/17; 15/15; 18/61), தன்னுடைய ஸங்கல்பத்தின் மூலமாக அனைத்து உலகங்களையும் நடத்திச் செல்கின்றவரும், பேராற்றல் படைத்தவரும், ஸகுணமானவரும், உருவமற்றவருமான பகவானைக் குறிக்கிறது. அவர் யாருடைய புண்ய பாவத்தையும் ஏற்பதில்லை என்று கூறுவதன் கருத்து என்னவென்றால், அவருடைய சக்தியினாலேயே மனிதர்கள் எல்லாக் கர்மங்களையும் செய்கிறார்கள். எல்லோருக்கும் சக்தி, புத்தி, புலன்கள் முதலியவற்றை, அவர்களுடைய கர்மத்துக்கு ஏற்றபடி அவரே அளிக்கிறார். இருப்பினும் அவர், மனிதர்கள் செய்கின்ற கர்மங்களை ஏற்பதில்லை; அதாவது தாமே அந்தக் கர்மங்களின் பயனை ஏற்பதில்லை.

கேள்வி: இதே அத்யாயத்தின் முடிவிலும், *9/24*லும் பகவான், 'எல்லா வேள்விகளையும், தவங்களையும் நானே அனுபவிக்கிறேன்' என்று சொல்லியிருக்கிறார். பிறகு இங்கு பகவான் யாருடைய நல்ல கர்மத்தையும்கூட ஏற்பதில்லை என்று எப்படிச் சொல்லலாம்?

பதில்: எல்லா உலகமும் ஸகுணமான பகவானுடைய உருவமே. அதனால்தான் தேவதைகளுடைய உருவத்தில் பகவான் எல்லா வேள்விகளையும் ஏற்கிறார். ஆனால் இவ்விதமாக இருந்தபோதிலும், உண்மையில் பகவான் கர்மத்திலிருந்தும், கர்மபலனிலிருந்தும் முற்றிலும் தொடர்பு அற்றவர். இதைத் தெளிவாகக் கூறுவதற்காகவே, 'பகவான் யாருடைய புண்ய பாவத்தையும் ஏற்பதில்லை' என்று இங்குச் சொல்லப்பட்டது. கருத்து என்னவென்றால் தேவர், மனிதர் ஆகியோருடைய உருவமாக இருந்து, எல்லா வேள்விகளையும் அனுபவித்தபோதிலும், அவ்விதமே பக்தர்கள் மூலமாக அர்ப்பணிக்கப் படுகின்ற பொருட்கள், செய்கைகள் முதலியவற்றை ஏற்றுக் கொண்டபோதிலும், உண்மையில் அவை எல்லாவற்றிலிருந்தும் தொடர்பற்றவராக இருக்கிறார். அதாவது எவ்வாறு பிறப்பு எடுத்தாலும்கூட பகவான் பிறப்பு இல்லாதவரோ *(4/6)*, படைப்பு முதலிய கார்யங்களைச் செய்தாலும்கூட அவர் கர்த்தா அல்லரோ *(4/13)* அவ்வாறே, இங்கு பகவான் எவருடைய நல்ல கர்மங்களையும் ஏற்றுக் கொள்வதில்லை என்று சொல்வது உசிதம்தான்.

கேள்வி: 'அஞ்ஞானத்தினால் ஞானம் மறைக்கப்பட்டு இருக்கிறது. அதனால் அஞ்ஞானிகளான எல்லா மனிதர்களும் மோஹமடைந்துள்ளனர்' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: இங்கு ஒரு ஐயம் எழக்கூடும். உண்மையில் மனிதரோ, பகவானோ கர்மங்களோடும், அவற்றின் பயன்களோடும் ஸம்பந்தப்படவில்லை என்றால், உலகத்தில் 'நான் இந்தக் கர்மத்தைச் செய்கிறேன். இது என்னுடைய வேலை, எனக்கு இதனுடைய பயன் கிடைக்கும்' என்று மனிதர்கள் சொல்கிறார்களே, அது எப்படி? இந்த ஐயத்தை நீக்குவதற்காக, இவ்விளக்கத்தைக் கூறுகிறார். பன்னெடுங்காலமாக இருக்கின்ற அஞ்ஞானத்தினால் எல்லா ஜீவர்களுக்கும் உண்மையான ஞானம் மறைக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே அவர்கள் தங்களுடையதும், பகவானுடையதுமான ஸ்வரூபத்தையும், அவ்விதமே கர்மங்களுடைய தத்வத்தையும் அறியாத காரணத்தினால், தன்மேலும், பகவான்மேலும் 'கர்த்தா', 'கர்ம', 'கர்மபலன்' ஆகியவற்றிற்குத் தொடர்பைக் கற்பித்து, மோஹத்திலே ஆழ்ந்து போயிருக்கிறார்கள்.

ज्ञानेन तु तदज्ञानं येषां नाशितमात्मनः।
तेषामादित्यवज्ज्ञानं प्रकाशयति तत्परम्॥ १६॥

ஜ்ஞாநேந து தத₃ஜ்ஞாநம் யேஷாம் நாஶிதமாத்மந: ।
தேஷாமாதி₃த்யவஜ்ஜ்ஞாநம் ப்ரகாஶயதி தத்பரம் ॥ 16 ॥

து – ஆனால், **யேஷாம்** – எவர்களுடைய, **தத்** – அந்த, **அஜ்ஞாநம்** – அஞ்ஞானம், **ஆத்மந:** – பரமாத்மாவினுடைய, **ஜ்ஞாநேந** – தத்வ ஞானத்தினால், **நாஶிதம்** – அழிக்கப்பட்டதோ, **தேஷாம்** – அவர்களுடைய, **ஜ்ஞாநம்** – (அந்த) ஞானம், **ஆதி₃த்யவத்** – ஆதவன்போல, **தத்பரம்** – ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மாவை, **ப்ரகாஶயதி** – ப்ரகாசிக்கச் செய்கிறது (அதாவது பரமாத்ம ஸ்வரூபத்தைக் கண்கூடாகக் காட்டித் தருகிறது).

ஆனால் எவர்களுடைய அந்த அஞ்ஞானம் பரமாத்மாவினுடைய தத்வ ஞானத்தினால் அழிக்கப்பட்டதோ அவர்களுடைய அந்த ஞானம் ஆதவன்போல ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மாவை ப்ரகாசிக்கச் செய்கிறது. பரமாத்ம ஸ்வரூபத்தைக் கண்கூடாகக் காட்டித் தருகிறது.

கேள்வி: இங்கு 'து' என்று கூறுவதன் உட்கருத்து என்ன?

பதில்: அஞ்ஞானத்தினால் ஞானம் மறைக்கப்பட்டு இருக்கிறது. அதனால் எல்லா மனிதர்களும் மோஹித்துப் போய் இருக்கிறார்கள் என்ற விஷயத்தை, 15வது ச்லோகத்தில் கூறினார். இங்கு அந்த ஸாதாரண மனிதர்களிடமிருந்து, ஆத்மதத்வத்தை அறிந்த ஞானிகளை, 'து' என்ற சொல்லினால் பிரித்துக் காட்டுகிறார்.

கேள்வி: இங்கு 'அஜ்ஞாநம்' என்பதுடன் 'தத்' என்ற சொல் சேர்க்கப்பட்டிருப்பதன் கருத்து என்ன?

பதில்: 15வது ச்லோகத்தில், அநாதிகாலமாக அஞ்ஞானத்தினால் எல்லா ஜீவர்களுடைய ஞானமும் மறைக்கப்பட்டிருக்கிறது. இதனால் மோஹம் அடைந்த எல்லா மனிதர்களும் ஆத்மா, பரமாத்மா ஆகியவர்களை உள்ளபடி அறியவில்லை என்று அஞ்ஞானத்தை விளக்கினார். அதைத் தான் 'தத் அஜ்ஞாநம்' என்று கூறுகிறார். எவர்கள் பன்னெடுங்காலமாக இருந்து வருகின்ற அஞ்ஞானத்தை, பரமாத்மாவினுடைய உண்மையான ஞானத்தை அறிந்து கொண்டதன் மூலமாக அழித்துவிட்டார்களோ, அவர்கள் மோஹமடைவது இல்லை என்பது கருத்து.

கேள்வி: இங்கு ஆதவனை உதாரணமாகக் கூறுவதன் கருத்து என்ன?

பதில்: கதிரவன் கன இருளை முற்றிலுமாக அழித்துக் காணத்தக்கதையெல்லாம் தெளிவுறக் காட்டுவதுபோல, பகவானைப் பற்றிய உண்மை அறிவு அஞ்ஞானத்தை அடியோடு அழித்து, பரமாத்ம ஸ்வரூபத்தைத் தெள்ளென விளக்குகிறது. பகவானுடைய உண்மை ஸ்வரூபத்தை அறிந்தவன் எக்காலத்திலும், எந்த நிலையிலும் அஞ்ஞானமடைவதில்லை.

பொருத்தம்: உண்மை அறிவினால் பரமாத்மாவை அடைய முடியும் என்று சுருங்கச் சொல்லி, இனி 26வது ச்லோகம் வரை, ஞானயோகத்தின் மூலம் பரமாத்மாவை அடைவதற்குரிய ஸாதனங்கள், பரமாத்மாவை அடைந்துவிட்ட ஸித்தபுருஷர்களின் இலக்கணம், நடத்தை, நிலை, பெருமை இவற்றை விளக்கும் நோக்கத்துடன், முதலில் ஞானயோகத்திற்கான தனிப்பட்ட ஸாதனையின் மூலம் பரமாத்மாவை அடைவது பற்றிச் சொல்கிறார்—

तद्बुद्धयस्तदात्मानस्तन्निष्ठास्तत्परायणाः ।
गच्छन्त्यपुनरावृत्तिं ज्ञाननिर्धूतकल्मषाः ॥ १७ ॥

தத்₃பு₃த்₃த₄யஸ்தத₃ாத்மாநஸ்தந்நிஷ்ட₂ாஸ்தத்பராயணா: ।
க₃ச்ச₂ந்த்யபுநராவ்ருத்திம் ஜ்ஞாநநிர்தூ₄தகல்மஷா: ॥ 17 ॥

தத₃ாத்மாந: — எவர்களுடைய மனம் பரமாத்மாவில் ஒன்றியிருக்கிறதோ, **தத்₃பு₃த்₃த₄ய:** — எவர்களுடைய புத்தி பரமாத்மாவில் ஒன்றியிருக்கிறதோ, **தந்நிஷ்ட₂ா:** — ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மாவிடம் எவர்களுக்கு இடையறாத ஐக்ய நிலை இருக்கிறதோ, **தத்பராயணா:** — பகவானை மட்டுமே சார்ந்திருக்கின்ற அத்தகைய மனிதர்கள், **ஜ்ஞாந நிர்தூ₄த கல்மஷா:** — ஞானத்தினால் பாவமற்றவர்களாக ஆகி, **அபுநராவ்ருத்திம்** — மீண்டும் திரும்பி வருதலில்லாத நிலையை அதாவது பிறவாப்பெருநிலையான பரமகதியை, **க₃ச்ச₂ந்தி** — அடைகிறார்கள்.

எவர்களுடைய மனம், புத்தி பரமாத்மாவில் ஒன்றியிருக்கிறதோ, ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மாவிடம் எவர்களுக்கு இடையறாத ஐக்யநிலை இருக்கிறதோ, பகவானை மட்டுமே சார்ந்திருக்கின்ற அத்தகைய மனிதர்கள் ஞானத்தினால் பாவமற்றவர்களாக ஆகி மீண்டும் திரும்பி வருதலில்லாத நிலையை அதாவது பிறவாப்பெருநிலையான பரமகதியை அடைகிறார்கள்.

கேள்வி: *மனதைப் பரமாத்மாவிலே லயிக்கச் செய்வது என்றால் என்ன? ஸாங்க்யயோக முறையில் எப்படிப் பயிற்சி செய்தால் மனம் பரமாத்மாவில் லயிக்கும்?*

பதில்: ஸாங்க்யயோக (ஞானயோக)ப் பயிற்சியில் ஈடுபட்டவன் ஆசார்யர்களிடமிருந்தும், சாஸ்த்ரங்களிலிருந்தும் 'அகில உலகும் மாயத்தோற்றம்' என்றும், 'ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மாவே ஸத்யம்' என்றும் அறிந்து, ஆத்மாவல்லாத வஸ்துவின் சிந்தனையற்று, மனதைப் பரமாத்மாவிடமே அசையாமல் நிறுத்தி வைப்பதற்காக, அந்த ஆனந்தமய ஸ்வரூபத்தையே நினைக்க வேண்டும். அடிக்கடி பூர்ணானந்தம், அபாரானந்தம், சாந்தானந்தம், கனானந்தம், அசலானந்தம், த்ருவானந்தம், நித்யானந்தம், போதஸ்வரூபானந்தம், ஞானஸ்வரூபானந்தம், பரமானந்தம், மஹானந்தம், அனந்தானந்தம், ஸமானந்தம், அசிந்த்யானந்தம், சின்மயானந்தம், 'ஆனந்தமே ஆனந்தம் நிரம்பியது' என்று ஆனந்தத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லி, 'ஆனந்தத்தைத் தவிர வேறு பொருளே இல்லை' என்பதாக நெஞ்சில் நினைத்து, இடையறாது மனனம் செய்து, ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மாவிடம் சிதறாத சிந்தனையுடன் ஒன்றி, மனம் அசைவற்றிருப்பதுதான், 'பரமாத்மாவில் லயிப்பது' என்பதாகும்.

கேள்வி: *'புத்தி பகவானில் லயிக்கிறது' என்றால் என்ன? மனம் பரமாத்மாவாகவே ஆனபிறகு புத்தி எந்தவிதப் பயிற்சியினால் பரமாத்மாவாகவே ஆகிவிடும்?*

பதில்: மேலே சொன்னவிதம் மனம் பரமாத்ம மயமாக ஆனபிறகு புத்தியில் ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மாவினுடைய உண்மை ஸ்வரூபத்தை நேரிடையாகவே காண்பது போன்ற தீர்மானம் ஏற்படும். அந்தத் தீர்மானத்தின் உறுதியில் நிலைத்து த்யானம் செய்து, புத்தி என்ற தனித்தோற்றமில்லாது ஸத் சித் ஆனந்தமயமாகவே ஆகிவிடுவது புத்தி பரமாத்ம மயம் ஆவது ஆகும்.

கேள்வி: *'தந்நிஷ்டா:' (தத்+நிஷ்டா:) அதாவது ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மாவில் ஐக்ய பாவத்தோடு நிலைத்தல் என்பது எப்போது ஏற்படும்? மனம், புத்தி இரண்டும் பகவானிடம் லயித்த பின்னர், அது எப்படி உண்டாகும்?*

பதில்: மேலே சொன்னபடி மனமும், புத்தியும் பரமாத்மாவில் ஐக்யமாகாத வரையில், ஸாங்க்யயோகிக்குப் பரமாத்மாவோடு இரண்டற்ற நிலை உண்டாவதில்லை. ஏனெனில் ஆத்மா, பரமாத்மாவில் வேற்றுமை மயக்கத்தைத் தோற்றுவிப்பதற்கு மனமும், புத்தியுமே முக்ய காரணங்களாகும். ஆகவே மேலே கூறியபடி மனமும், புத்தியும் பரமாத்மாவுடன் ஐக்யமான பின்னர், ஸாதகனுடைய பார்வையில் ஆத்மா, பரமாத்மா என்ற வேற்றுமை மயக்கம் அழிகிறது. அப்போது த்யானிப்பவன், த்யானம், த்யானப் பொருள் என்ற 'த்ரிபுடி' அற்றுப்போய் விடுகிறது. ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மாவாகிய ஒரு பொருள் மட்டுமே தனித்து விளங்கும். இதுதான் ஸாங்க்யயோகியினுடைய 'அதுவாக ஆகுதல்' அதாவது பரமாத்மாவுடன் ஒன்றியிருக்கும் நிலை ஆகும்.

கேள்வி: *'தத்பராயணா:' என்ற சொல் எவர்களைக் குறிக்கிறது?*

பதில்: மேலே சொன்னவிதம் ஆத்மா, பரமாத்மா என்ற வேறுபாடு அகன்று, ஸாங்க்யயோகி ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மாவில் இரண்டறக் கலந்துவிட்டபோது உண்மையில் பரமாத்மாவைத் தவிர வேறு பொருள் இருக்கிறது என்ற உணர்வே இருக்காது. அவனுடைய மனம், புத்தி, ப்ராணன் முழுவதுமே பரமாத்மாவாகவே இருக்கும். இவ்விதம் ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மாவின் நேரிடை உணர்வு பெற்று அவரிடம் இரண்டறக் கலந்து நிலைத்து நிற்பவர்களை, 'தத்பராயணா:' என்ற சொல் குறிப்பிடுகிறது.

கேள்வி: *'தத்' என்ற சொல்லுக்கு ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மா என்று எப்படிப் பொருள் கொள்ளலாம்?*

பதில்: முன் ச்லோகத்தில் 'பரம்' என்ற சொல்லுடன், 'தத்' என்ற சொல் இடம் பெறுகிறது. உண்மை அறிவு மூலம் பரமாத்மாவின் நேரிடை அனுபவம் ஏற்படுவது பற்றிக் கூறப்பட்டது. அதையே இந்த ச்லோகத்தில் உள்ள 'தத்' என்ற சொல்லும் குறிப்பிடுவதால்,

ஸந்தர்பத்திற்கு ஏற்றவாறு 'தத்' என்ற சொல்லுக்கு ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மா என்று பொருள் வந்தது.

கேள்வி: 'ஜ்ஞாந நிர்தூத கல்மஷா:' என்ற தொடரில் வரும் 'ஜ்ஞாநம்' என்ற சொல் எந்த ஞானத்தைக் குறிக்கிறது? 'நிர்தூத', 'கல்மஷ' என்ற சொற்களுக்கு என்ன பொருள்?

பதில்: 16வது ச்லோகத்தில் ஞானம் அஞ்ஞானத்தை அழிக்கும்; பரமாத்மாவை விளக்கும் என்றார். அந்த உண்மை அறிவுதான் இங்கே கூறப்படும் 'ஜ்ஞாநம்'. நல்ல-தீய கர்மங்கள், விருப்பு-வெறுப்பு ஆகிய தீய இயல்புகள், விக்ஷேபம், ஆவரணம் (தடுமாற்றம்-திரை) இவையெல்லாம் கல்மஷங்கள். ஏனெனில் இவையெல்லாம் ஆத்மாவை பந்தப்படுத்துகின்ற பாவங்கள். இவற்றை அறவே ஒழிப்பதை 'நிர்தூத' என்ற சொல் கூறுகிறது. மேலே கூறப்பட்ட ஸாதனை மூலம் அடையப் பெற்ற உண்மையறிவினால், எவனுக்கு மலம், விக்ஷேபம், ஆவரணம் என்ற எல்லாப் பாவங்களும் நீங்கி, சிறிதளவு கூடப் பாவம் எஞ்சுவதில்லையோ, அவன் 'ஜ்ஞாந நிர்தூத கல்மஷ:' எனப்படுவான்.

கேள்வி: மீண்டும் திரும்பி வருதலில்லாத பதவியையடைவது என்றால் என்ன?

பதில்: எந்த நிலை எய்திய பிறகு யோகி மீண்டும் திரும்புவதில்லையோ, எதைப் 16வது ச்லோகத்தில் 'தத்பரம்' என்ற பெயரால் பகவான் குறிப்பிடுகிறாரோ, கீதையில், எதை 'அக்ஷய ஸுகம்', 'நிர்வாணப்ரம்மம்', 'உத்தமஸுகம்', 'பரமகதி', 'பரமதாமம்', 'அவ்யயபதம்', 'திவ்ய பரமபுருஷன்' என்ற பெயர்களால் பகவான் வர்ணிக்கிறாரோ, உண்மை அறிவின் பயனாக ஏற்பட்ட பரமாத்மாவிடம் ஒன்றிவிட்ட அந்த நிலையே திரும்பி வருதலில்லாப் பதவி ஆகும்.

பொருத்தம்: **பரமாத்மாவை அடையும் ஸாதனத்தைப் பற்றிக் கூறிவிட்டு, பரமாத்மாவை அடைந்துவிட்ட ஸித்த புருஷனின் 'ஸமநிலை'யை வர்ணிக்கிறார்—**

विद्याविनयसम्पन्ने ब्राह्मणे गवि हस्तिनि।
शुनि चैव श्वपाके च पण्डिताः समदर्शिनः॥ १८॥

வித்₃யாவிநயஸம்பந்நே ப்₃ராஹ்மணே க₃வி ஹஸ்திநி ।
ஶுநி சைவ ஶ்வபாகே ச பண்டி₃தா: ஸமத₃ர்ஶிந: ॥ 18 ॥

பண்டி₃தா: – தத்வஞானிகள், **வித்₃யா விநய ஸம்பந்நே** – கல்வியோடும், பணிவோடும் கூடிய, **ப்₃ராஹ்மணே** – ப்ராம்மணனிடமும், **க₃வி** – பசுவிடமும், **ஹஸ்திநி** – யானையிடமும், **ஶுநி ச** – நாயிடமும், **ஶ்வபாகே ச** – சண்டாளனிடமும்கூட, **ஸமத₃ர்ஶிந: ஏவ** – ஸமநோக்குடையவர்களே (அதாவது ஆத்மாவான பகவான் எல்லோரிடமும் ஸமமாக விளங்குகிறார் எனும் நோக்குடையவர்களே).

தத்வஞானிகள் கல்வியோடும், பணிவோடும் கூடிய ப்ராம்மணனிடமும், பசுவிடமும், யானையிடமும், நாயிடமும், சண்டாளனிடமும்கூட ஸமநோக்குடையவர்களே. (ஆத்மாவான பகவான் எல்லோரிடமும் ஸமமாக விளங்குகிறார் எனும் நோக்குடையவர்களே).

கேள்வி: 'பண்டிதா:' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

பதில்: 'தத்வமறிந்த ஸித்த புருஷர்களான மஹாத்மாக்கள்' என்று பொருள்.

கேள்வி: 'படிப்பும், பணிவும் உள்ள ப்ராம்மணனையும், யானையையும், பசுவையும், நாயையும், சண்டாளனையும் ஸமமாகப் பார்ப்பது' என்பதன் கருத்து என்ன?

பதில்: தத்வமறிந்த ஸித்த புருஷர்களிடம் ஏற்றத்தாழ்வு மனப்பான்மை முற்றிலும் அற்றுப் போகிறது. அவர்களின் பார்வையில் ஒரே ஸத் சித் ஆனந்தமயமான பரப்ரம்ம பரமாத்மாவைத் தவிர வேறு எதற்கும் இருப்பு (ஸத்தா) கிடையாது. அதனால் அவர்களுக்கு எங்கும் ஸமபாவனை ஏற்படும். இதை விளக்குவதற்காகத்தான் மனிதர்களில்

ப்ராம்மணனையும், சண்டாளனையும், விலங்குகளில் சிறந்ததான பசுவையும், நடுவில் உள்ள யானையையும், தாழ்ந்த நாயையும் உதாரணம் காட்டி, தத்வஞானிகளிடம் உள்ள ஸமபாவனையைச் சுட்டிக்காட்டுகிறார். இவற்றினிடையே நடைமுறையில் எல்லோரும் வேற்றுமை பாராட்டத்தான் நேரிடுகிறது. பசுவின் பாலை எல்லோரும் அருந்துவார்கள். நாயின் பாலைக் குடிக்கமாட்டார்கள். யானை மீது சவாரி செய்வார்கள். நாய் மீது சவாரி செய்யமாட்டார்கள். உடலைப் பேணுவதற்காக மிருகங்களுக்கு எது தேவையோ, அது மனிதனுக்கு உணவாகப் பயன்படாது. உயர்ந்த அந்தணரைப் போற்றிப் பூஜிக்க வேண்டும் என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. சண்டாளனைப் பூஜிக்கச் சொல்லவில்லை. இவ்வளவு வேற்றுமைகள் நடைமுறையில் இருப்பினும், ஞானிகள் ஸமபாவனையுடன் இருப்பார்கள். எப்பொழுதும் எக்காரணத்திற்காகவும் அவர்களிடம் ஏற்றத்தாழ்வு மனப்பான்மை இருக்காது.

கேள்வி: *எல்லா இடத்திலும் ஸமபாவனை ஏற்பட்டுவிட்ட காரணத்தால் ஞானிகள் எல்லோரிடமும் ஒரே மாதிரியாகப் பழகுவார்களா?*

பதில்: அப்படியன்று. எல்லோரிடமும் ஒரேவிதம் பழகுவது என்பது எவருக்கும் ஸாத்யமே இல்லை. சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ள நடைமுறை வேறுபாடுகள் எல்லோரிடமும் உள்ளவைதான். ஞானியும் உலகத்தார்போல அந்தணருடனும், சண்டாளனோடும், பசு, யானை, நாய்களோடும் அவற்றிற்குத்தக்கபடி நல்லமுறையில் நடந்து கொண்டாலும், அவை பரமாத்மா என்ற எண்ணத்தில் ஒரேவிதமாக அன்பு செலுத்துவான். இதுதான் அவனுடைய சிறப்பு.

மனிதன் தன்னுடைய தலை, கை, கால் முதலிய உறுப்புக்களில்கூட அந்தணர், க்ஷத்ரியர், வைச்யர், நான்காம் வர்ணத்தாரிடம் போல வேற்றுமை பாராட்டுகிறான். தலையினாலும், வாயினாலும் ஆகக்கூடியதைக் காலினால் செய்வதில்லை. கைகால்களால் ஆகக்கூடியதைத் தலையால் செய்வதில்லை. அந்த உறுப்புக்களைப் பேணுவதிலும், சுத்தி செய்வதிலும்கூட மாறுபாடு உண்டு. மதிப்பிலும் ஏற்றத்தாழ்வு உண்டு. ஆனால் அவை தன்னுடையவை என்ற எண்ணத்தினால் தலை வலித்தாலும், கால் வலித்தாலும் ஒரேவிதம் துயரப்படுகிறான். எல்லா உடல் உறுப்புக்களிலும் அவனுக்கு அன்பு ஒரேவிதம் இருப்பதால், உறுப்புக்களில் ஏற்றத்தாழ்வு என்கிற பாவனை கிடையாது. அதுபோல, தத்வஞானிகூட எங்கும் ப்ரம்மத்தையே காண்பதால், உலகியலில் அவரவர்க்குத் தக்கபடி மாறுதலாக நடந்து கொண்டாலும், அவர்கள் ஆத்மா ஒன்றே என்ற எண்ணமும், ப்ரேமையும் எங்கும் ஸமமாக இருக்கும். ஆகவே எங்ஙனம் தனது ஏதோவொரு உறுப்பில் அடிபடினும் மனிதன் ஸமபாவனையுடன் அதை குணப்படுத்துவதற்கு முயற்சி செய்கிறானோ, அதுபோலவே தத்வஞானி நடைமுறையில் எந்த ஒரு ஜீவனுக்கோ, ஜீவ ஸமுதாயத்திற்கோ துன்பம் நேரிடினும், எவ்விதமான வேற்றுமையுமின்றி அத்துன்பத்தைப் போக்க முயற்சி செய்வான்.

பொருத்தம்: **இவ்விதம் தத்வஞானியின் ஸமபாவனையை வர்ணித்துவிட்டு 'இந்த ஸமபாவனையே ப்ரம்மநிலை' என்று கூறி, அதில் நிலைத்திருக்கும் மஹாபுருஷர்களின் பெருமையைக் கூறுகிறார்—**

इहैव तैर्जितः सर्गो येषां साम्ये स्थितं मनः ।
निर्दोषं हि समं ब्रह्म तस्माद्ब्रह्मणि ते स्थिताः ॥ १९ ॥

இஹைவ தைர்ஜித: ஸர்கோ₃ யேஷாம் ஸாம்யே ஸ்தி₂தம் மந: ।

நிர்தோ₃ஷம் ஹி ஸமம் ப்₃ரஹ்ம தஸ்மாத்₃ப்₃ரஹ்மணி தே ஸ்தி₂தா: ॥ 19 ॥

யேஷாம் மந: — எவர்களுடைய மனம், **ஸாம்யே ஸ்தி₂தம்** — ஸமபாவனையில் நிலைத்துள்ளதோ, **தை:** — அவர்களால், **இஹ ஏவ** — உயிர் வாழும்போதே (சரீரத்தோடு உள்ள நிலையிலேயே), **ஸர்க₃:** — அகில உலகமும், **ஜித:** — வெற்றி கொள்ளப்பட்டது. **ஹி** — ஏனெனில், **ப்₃ரஹ்ம** — ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மாவான பரப்ரம்மம்,

நிர்தோ₃ஷம் – மாசற்றது, **ஸமம்** – ஸமமானது. **தஸ்மாத்** – ஆகவே, **தே** – அவர்கள், **ப்₃ரஹ்மணி** – ஸத் சித் ஆனந்தமயமான ப்ரம்மத்திலேயே, **ஸ்தி₂தா:** – நிலைபெற்றிருக்கிறார்கள்.

எவர்களுடைய மனம் ஸமபாவனையில் நிலைத்துள்ளதோ அவர்களால் உயிர் வாழும் போதே (சரீரத்தோடு உள்ள நிலையிலேயே) அகில உலகமும் வெற்றி கொள்ளப்பட்டது. ஏனெனில் ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மாவான பரப்ரம்மம் மாசற்றது, ஸமமானது. ஆகவே அவர்கள் ஸத் சித் ஆனந்தமயமான ப்ரம்மத்திலேயே நிலைபெற்றிருக்கிறார்கள்.

கேள்வி: *'எவர்களுடைய மனம் ஸமபாவனையில் நிலைத்து நிற்கிறதோ, அவர்கள் இவ்வுலகை வென்று விடுவார்கள்' என்று கூறுவதன் கருத்து என்ன?*

பதில்: மேலே சொன்னவிதம் எவர்களுடைய மனம் ஸமபாவனையில் நிலைத்து நிற்கிறதோ, அதாவது எல்லாவற்றையும் ஸமமாக மதிக்கிறதோ, அவர்கள் இங்கேயே, இப்பிறவிலேயே, இவ்வுலகை வென்றுவிடுவார்கள். அவர்கள் பிறப்பு–இறப்பிலிருந்து முற்றிலுமாக விடுபட்டு, ஜீவன்முக்தர்கள் ஆகிவிடுவார்கள். உலகப் பார்வையில் அவர்கள் உடலில் இருந்தாலும், உண்மையில் அவர்களுக்கு அவ்வுடலுடன் எவ்விதத் தொடர்பும் கிடையாது.

கேள்வி: *ப்ரம்மத்தை 'மாசற்றது', 'ஸமமானது' என்று கூறுவதன் கருத்து என்ன? 'ஹி' (ஏனெனில்), 'தஸ்மாத்' (ஆகவே) என்ற சொற்கள் எதற்கு?*

பதில்: ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களில்தான் எல்லா தோஷங்களும் நிறைந்திருக்கின்றன. உலகமனைத்தும் முக்குணங்களின் விளைவுகளாதலால் தோஷ மயமானதே. இக்குணங்களின் சேர்க்கையினால் ஏற்றத்தாழ்வுகள், விருப்பு–வெறுப்புகள், மோஹம் முதலிய எல்லா விகாரங்களும் உண்டாகின்றன. ப்ரம்மம் என்ற பெயரால் அழைக்கப்படும் ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மா முற்றிலும் முக்குணங்களைக் கடந்தவர். ஆகவே அவர் குற்றமற்றவர்; ஸமமானவர். அதுபோல, தத்வஞானியும் முக்குணங்களைக் கடந்தவன். அவனிடம் விருப்பு–வெறுப்புகள், மோஹம், மமகாரம், அஹங்காரம் முதலிய விகாரங்களும், ஏற்றத்தாழ்வு மனப்பான்மை என்ற குறையும் முற்றிலும் அழிந்துபோய் அவன் ஸமபாவனையில், அதாவது பரமாத்மாவில் நிலைத்து நிற்கிறான். 'ஹி', 'தஸ்மாத்' என்பன காரணத்தைக் கூறும் சொற்கள். ஸமபாவனையே ப்ரம்மஸ்வரூபம் ஆனதால், அந்த ஸமபாவனையில் நிலைத்தவர் ப்ரம்மத்தில் நிலை பெறுகிறார். உலகத்தினர் அவர்களை முக்குணங்களுக்கு ஆட்பட்டவர்களாகவும் உலகியலில் உடலோடு இருப்பதாகக் கண்டாலும்கூட, உண்மையில் அவர்கள் ஸமபாவனையில் ஊன்றி நிற்பதால் முக்குணங்களுக்கு ஆட்பட்ட ப்ரபஞ்சத்துடனும், உடலுடனும் அவர்களுக்குத் தொடர்பு கிடையாது. அவர்கள் ப்ரம்மத்தில் நிலைத்து நிற்கிறார்கள்.

கேள்வி: *தமோகுணமும், ரஜோகுணமும் குற்றங்களின் இருப்பிடம். ஏனெனில் கீதையில் ஆங்காங்கே பகவான் இந்த இரண்டையும் எல்லாத் தீமைகளுக்கும் காரணம் எனக் குறிப்பிட்டு, இவற்றைத் தவிர்க்கவேண்டும் என்கிறார். இங்ஙனமிருக்க பகவானை அடைவதற்குகந்ததான ஸத்வகுணத்தை ரஜஸ், தமோகுணங்களோடு சேர்த்துக் குற்றம் உள்ளதாகக் கூறலாமா?*

பதில்: ரஜோகுண, தமோகுணங்களைக் காட்டிலும் ஸத்வகுணம் சிறந்ததுதான. மனித மேம்பாட்டிற்கு உதவியாக இருப்பதுதான். ஆயினும் அஹங்காரத்தோடு கூடின ஸுகத்திற்கும், ஞானத்திற்கும் தொடர்புடையதாகையால், அதுவும் பந்தத்திற்குக் காரணமாகும் (14/6) என்கிறார். உண்மையில் முக்குணங்களைக் கடந்தால் ஒழிய, மனிதன் குற்றமற்றவன் ஆகமுடியாது. அவன் முழுமையாக ஸமபாவனையில் நிலை பெறவும் முடியாது. இங்கு குணாதீதனுடைய நிலையைச் சொல்வதால், ஸத்வகுணத்தையும் குறை கூறுவதில் தவறில்லை.

பொருத்தம்: அடுத்ததாக, நிர்குண, நிராகார ஸத் சித் ஆனந்தமயமான ப்ரம்மத்துடன் கலந்துவிட்ட, ஸமபாவனையுள்ள, ஸித்த புருஷனுடைய இலக்கணம் கூறுகிறார்—

न प्रहृष्येत्प्रियं प्राप्य नोद्विजेत्प्राप्य चाप्रियम्।
स्थिरबुद्धिरसम्मूढो ब्रह्मविद् ब्रह्मणि स्थितः॥२०॥

ந ப்ரஹ்ருஷ்யேத்ப்ரியம் ப்ராப்ய நோத்₃விஜேத்ப்ராப்ய சாப்ரியம் ।
ஸ்தி₂ரபு₃த்₃தி₄ரஸம்மூடோ₄ ப்₃ரஹ்மவித்₃ ப்₃ரஹ்மணி ஸ்தி₂த: ॥ 20 ॥

ப்ரியம் – விருப்பமான பொருளை, **ப்ராப்ய** – அடையும்போது, **ந ப்ரஹ்ருஷ்யேத்** – மகிழ்ச்சியடையாமலும், **ச** – மேலும், **அப்ரியம்** – விரும்பாததை, **ப்ராப்ய** – அடையும்போது, **ந உத்₃விஜேத்** – கலக்கம் அடையாமலும் இருக்கும், **ஸ்தி₂ரபு₃த்₃தி₄:** – நிலைத்த மதியுடைய, **அஸம்மூட₄:** – ஐயம் நீங்கிய, **ப்₃ரஹ்மவித்** – ப்ரம்மஞானி, **ப்₃ரஹ்மணி** – ஸத் சித் ஆனந்தமய பரப்ரம்ம பரமாத்மாவில், **ஸ்தி₂த:** – (எப்பொழுதும் ஒன்றி) நிலைத்து நிற்கிறான்.

விருப்பமான பொருளை அடையும்போது மகிழ்ச்சியடையாமலும் விரும்பாததை அடையும் போது கலக்கம் அடையாமலும் இருக்கும் நிலைத்த மதியுடைய ஐயம் நீங்கிய ப்ரம்மஞானி ஸத் சித் ஆனந்தமய பரப்ரம்ம பரமாத்மாவில் எப்பொழுதும் ஒன்றி நிலைத்து நிற்கிறான்.

கேள்வி: விருப்பமான பொருள் கிடைத்தால் மகிழ்வது, விரும்பாதது கிடைத்தால் கலங்குவது என்றால் என்ன?

பதில்: மனதிற்கும், புத்திக்கும், புலன்களுக்கும், உடலுக்கும் அனுகூலமாக உள்ள பொருளை ப்ரியம் என்பார்கள். அஞ்ஞானியான மனிதன் அனுகூலமான பொருட்களில் பற்று வைக்கிறான். அவற்றை அடைந்தால் மகிழ்ச்சி அடைகிறான். ஆனால் தத்வஞானிக்கு ஸமபாவனை உள்ளதால், அவனுக்கு ஒரு பொருளிலும் அனுகூலம் என்ற எண்ணம் கிடையாது; பற்றும் கிடையாது. ப்ராரப்தத்தின் பயனாக உடல், மனம், புத்தி, புலன்களுக்கு அனுகூலமான ஏதாவது பொருள் கிடைத்தால், அவன் அதற்காக மகிழ்வதில்லை. ஏனெனில் அவனுக்கு மனம், புலன்கள், உடல் இவற்றில் மமகாரமோ, அஹங்காரமோ, பற்றுதலோ கிடையாது. அதுபோல, ஒரு பொருள் மனம், புத்தி, புலன், உடலுக்கு ப்ரதிகூலமானதானால் அது ப்ரியமற்றதாகிறது. அந்தப் பொருளில் அஞ்ஞானிக்கு த்வேஷம் உண்டாகிறது. ஆகவே அதையடைந்தால் மனிதன் பயப்படுகிறான்; வருத்தமும் அடைகிறான். ஞானிக்கு வெறுப்பு அறவே கிடையாதாகையால், மனம், உடல், புலன், புத்திக்குப் பிடிக்காத பொருள் வந்து சேர்ந்தால், அதற்காக வருந்துவதோ, கலங்குவதோ இல்லை.

கேள்வி: 'ஸ்திரபுத்தி:' என்ற அடைமொழியின் கருத்து என்ன?

பதில்: தத்வஞானியான ஸித்த புருஷனின் நோக்கில் ப்ரம்மத்தைத் தவிர உலகியல் பொருள் ஒன்றுக்கும் இருப்பு என்பதே கிடையாது. ஆகவே, அவன் புத்தி எப்பொழுதும் ஸ்திரமாக ப்ரம்மத்தில் லயித்திருக்கிறது. உலகத்தார் நோக்கில் பலவிதமான மான—அவமானங்கள், ஸுக—துக்கங்கள் அவனுக்கு நேரலாம். ஆனால் எக்காரணம் கொண்டும் அவனது புத்தி, ப்ரம்ம நிலையிலிருந்து ஒருபொழுதும் விலகியிராது. எந்த நிலையிலும் அவன் ஸத் சித் ஆனந்தமயமான ப்ரம்மத்திலேயே அசையாமல் நிலைத்திருப்பான்.

கேள்வி: 'அஸம்மூட:' என்றால் என்ன பொருள்?

பதில்: ஞானியின் உள்ளத்தில் ஸந்தேஹம், தடுமாற்றம், மோஹம் இவை சிறிதுகூட இரா. அவருடைய எல்லா ஸந்தேஹங்களும் அஞ்ஞானத்தோடு தீர்ந்துவிடும்.

கேள்வி: 'ப்ரஹ்மவித்' என்றால் என்ன பொருள்?

பதில்: ஸத் சித் ஆனந்தமயமான ப்ரம்ம தத்வத்தை நன்கு உணர்ந்தவன். 'ப்ரம்மம் என்றால் என்ன? ப்ரபஞ்சமென்றால் என்ன? ப்ரம்மத்திற்கும் ஜகத்திற்கும் என்ன தொடர்பு? ஆத்மா, பரமாத்மா என்றால் என்ன? ஜீவனுக்கும், ஈசுவரனுக்கும் என்ன வேறுபாடு?' ஆகிய ப்ரம்மத்தைப் பற்றிய உண்மைகள் அனைத்தையும் அறிந்தவன்; ப்ரம்மஸ்வரூபத்தை நேரிடையாக உணர்ந்தவன்; அவனே 'ப்ரஹ்மவித்'.

கேள்வி: 'ப்ரஹ்மணிஸ்தித:' (ப்ரம்மத்தில் நிலைபெற்றவன்) என்றால் என்ன?

பதில்: விழிப்பு, கனவு, ஆழ்ந்த தூக்கம் என்ற மூன்று நிலைகளிலும், 'ப்ரம்மத்திலேயே எப்பொழுதும் ஊன்றி நிற்பவன்' என்று பொருள். எந்த நிலையிலும் அவன் உடலை ஆத்மா என்று நினைக்க மாட்டான். ப்ரம்மத்தோடு அவன் ஒன்றிவிட்ட காரணத்தால் ப்ரம்மத்திடமிருந்து பிரிவு என்பது ஒருபோதும் கிடையாது. எப்பொழுதும், எக்காலத்திலும் ஒரே நிலையில் நிலைத்திருப்பான். அவன்தான் 'ப்ரம்மத்தில் நிலை பெற்றிருப்பவன்' எனப்படுகிறான்.

பொருத்தம்: **இவ்விதம் ப்ரம்மத்தில் நிலைபெற்ற புருஷனுடைய இலக்கணம் கூறி, இத்தகைய நிலையை அடைவதற்கான ஸாதனம், பயன் இவற்றைக் கூறுகிறார்—**

बाह्यस्पर्शेष्वसक्तात्मा विन्दत्यात्मनि यत्सुखम्।
स ब्रह्मयोगयुक्तात्मा सुखमक्षयमश्नुते॥ २१॥

பா₃ஹ்யஸ்பர்ஶேஷ்வஸக்தாத்மா விந்த₃த்யாத்மநி யத்ஸுக₂ம் ।
ஸ ப்₃ரஹ்மயோக₃யுக்தாத்மா ஸுக₂மக்ஷயமஶ்நுதே ॥ 21 ॥

பா₃ஹ்ய ஸ்பர்ஶேஷு – வெளியிலுள்ள புலன்நுகர் பொருட்களில், **அஸக்தாத்மா** – பற்றற்ற மனமுடைய ஸாதகன், **ஆத்மநி** – உள்ளத்தில், **யத் ஸுக₂ம்** – த்யானத்தினால் ஏற்படுகின்ற ஸாத்விகமான எந்த ஸுகம் உள்ளதோ, (**தத்** – அதை), **விந்த₃தி** – பெறுகிறான். (அதன் பிறகு), **ப்₃ரஹ்மயோக₃யுக்தாத்மா** – ஸத் சித் ஆனந்தமயமான பரப்ரம்ம பரமாத்மா விடம் த்யானயோகத்தினால் இரண்டறக் கலந்துவிட்ட, **ஸ:** – அவன், **அக்ஷயம்** – அழியாத, **ஸுக₂ம்** – ஆனந்தத்தை, **அஶ்நுதே** – அனுபவிக்கிறான்.

வெளியிலுள்ள புலன்நுகர் பொருட்களில் பற்றற்ற மனமுடைய ஸாதகன் உள்ளத்தில் த்யானத்தினால் ஏற்படுகின்ற ஸாத்விகமான எந்த ஸுகம் உள்ளதோ அதைப் பெறுகிறான். அதன் பிறகு ஸத் சித் ஆனந்தமயமான பரப்ரம்ம பரமாத்மாவிடம் த்யானயோகத்தினால் இரண்டறக் கலந்துவிட்ட அவன் அழியாத ஆனந்தத்தை அனுபவிக்கிறான்.

கேள்வி: 'பாஹ்யஸ்பர்ஶேஷு அஸக்தாத்மா' என்று யாரைக் கூறுகிறார்?

பதில்: ஒலி, தொடுதல், உருவம், ரஸம், மணம் என்ற புலன் நுகர் பொருட்களை 'பாஹ்யஸ்பர்ஶம்' (வெளிப்பொருட்கள்) என்கிறார். விவேகத்தினால் தன்னுடைய மனதிலிருந்து இவற்றில் உள்ள பற்றை அறவே அகற்றி, அவற்றை அனுபவிப்பதில் வைராக்யம் அடைந்து, முழுமையாக ஓய்ந்து விட்டவன், 'வெளிப் பொருட்களிலிருந்து பற்று நீங்கிய மனம் உடையவன்,' 'பாஹ்யஸ்பர்ஶேஷு அஸக்தாத்மா' எனப்படுகிறான்.

கேள்வி: ஆத்மாவில் உள்ள ஆனந்தத்தைப் பெறுவது என்றால் என்ன?

பதில்: இங்கே ஆத்மா என்றால் உள்ளம் என்று பொருள். உள்ளத்தில் எங்கும் நிறைந்த ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மாவை எப்போதும் இடைவிடாது த்யானம் செய்வதால் உண்டாகும் ஸாத்விக ஆனந்தத்தை அனுபவிப்பதையே 'ஆனந்தத்தைப் பெறுவது' என்று கூறுகிறோம். புலன்களால் அடையப் பெறும் போகங்களை ஸுகம் என்று நினைப்பவனுக்கு, இப்படி த்யானத்தினால் ஏற்படும் ஸுகம் கிடைக்காது. வெளியிலுள்ள புலன் நுகர் பொருட்களில் உண்மையில் ஸுகமே இல்லை; ஸுகம் என்பது

வெறும் தோற்றம்தான். அதனோடு ஒப்பிட்டால் வைராக்யத்தினால் ஏற்படும் ஸுகம் சிறந்ததே. ஆனால் அதைக் காட்டிலும் உபரதியால் விளையும் ஸுகம் மிக உயர்ந்தது. ஆயினும், பரமாத்ம த்யானத்தில் அசையாமல் அமர்ந்து விடுவதால் ஏற்படும் ஸுகம் எல்லாவற்றையும் விடச் சிறந்தது. இதுதான் ஆத்மாவில் நிலை பெற்று ஸுகம் அடைவது என்பதாகும்.

கேள்வி: இங்கு 'ப்ரஹ்மயோகயுக்தாத்மா' என்று யாரைக் குறிப்பிடுகிறார்? 'ஸ:' என்று யாரைக் குறிப்பிடுகிறார்?

பதில்: மேற்சொன்னவிதம் புலன்களுக்குரிய ஸகல போகங்களிலும் பற்றுதலற்று, உபரதி (மனம், உலகியல் பொருட்களிலிருந்து விலகுதல்) அடைந்து, பரமாத்ம த்யானத்தில் ஊன்றி நின்று, பேரானந்தத்தை அனுபவிப்பவனை 'ப்ரஹ்மயோகயுக்தாத்மா' என்று குறிப்பிடுகிறார். முன் சொன்ன இரண்டு இலக்கணங்களோடுகூட 'ப்ரஹ்மயோகயுக்தாத்மா' என்ற இந்த இலக்கணத்தையும் சேர்த்துக் கொள்வதற்காக 'அவன்' என்று கூறுகிறார்.

கேள்வி: குறையாத ஆனந்தம் எது? அந்த அனுபவம் பெறுவது எப்படி?

பதில்: எப்பொழுதும் ஒரே ரஸமாக, பரமானந்த ஸ்வரூபமாக, அழிவற்றதாக இருக்கும் பரமாத்மாவே 'அக்ஷய ஸுகம்' எனப்படுகிறார். எப்பொழுதும் இடைவிடாது த்யானம் செய்து அந்தப் பரமாத்மாவை நேரிடையாகத் தன்னுடன் இரண்டறக் கலந்து கொண்டு விடுவதுதான் அவனுடைய பரமாத்ம அனுபவம்.

இந்த ஸுகம் ஈடு இணையற்றது. உலகியலில் ஸுகத் தோற்றமளிக்கும் எல்லாமே நொடியில் அழியக்கூடியவை; பொருட்படுத்தத் தகாதவை. அதைக்காட்டிலும் வைராக்யம், உபரதி இவற்றினால் ஏற்படும் ஸுகம் த்யானத்தில் விளையும் ஸுகத்திற்கு அடிப்படை ஆவதால் அதிகம் நிலைத்திருக்கும். த்யான ஸுகம் பரமாத்மாவை நேரிடையாகவே அடையக் காரணம் ஆவதால் மற்றவற்றைக் காட்டிலும் அதிகம் நிலைத்திருக்கும். ஆனால் ஸாதனை புரியும் நேரத்தில் இந்த ஸுகங்களை அக்ஷயம் (குறையாதவை) என்று சொல்ல முடியாது. 'அக்ஷய ஆனந்தம்' என்பதே பரமாத்மாவின் வடிவமேதான்.

பொருத்தம்: **இவ்விதம் புலன்கள் போகப் பொருட்களில் உள்ள பற்றுதலைத் துறப்பது பரமாத்மாவை அடைவதற்கு உபாயம் என்று கூறி, இந்த ச்லோகத்தில் புலன்களால் ஏற்படும் போகங்கள் துக்கத்திற்குக் காரணமாவதாலும், அநித்யமானவை என்பதாலும் அவற்றில் பற்றுதலை விடவேண்டும் என்கிறார்—**

ये हि संस्पर्शजा भोगा दुःखयोनय एव ते।
आद्यन्तवन्तः कौन्तेय न तेषु रमते बुधः॥२२॥

யே ஹி ஸம்ஸ்பர்ஶஜா போ₄கா₃ து₃:க₂யோநய ஏவ தே ।

ஆத்₃யந்தவந்த: கௌந்தேய ந தேஷு ரமதே பு₃த₄: ॥ 22 ॥

ஸம்ஸ்பர்ஶஜா: – புலன்களும், புலன்நுகர் பொருட்களும் ஒன்று சேரும்போது ஏற்படும், **யே** – எந்த, **போ₄கா₃:** – போகங்கள் உள்ளனவோ, **தே** – அவை அனைத்தும் (உலகப் பற்றுடையவர்களுக்கு ஸுகமாகத் தோன்றியபோதிலும்), **ஹி** – நிச்சயமாக, **து₃:க₂யோநய: ஏவ** – துக்கத்திற்குக் காரணமாகவே உள்ளன. (மேலும்), **ஆதி₃ அந்தவந்த:** – ஆரம்பமும், முடிவும் கொண்டவை (அநித்யமானவை). (ஆகையால்), **கௌந்தேய** – அர்ஜுன! **பு₃த₄:** – அறிவாளி, **தேஷு** – அவற்றில், **ந ரமதே** – இன்புறுவதில்லை.

புலன்களும், புலன்நுகர் பொருட்களும் ஒன்று சேரும்போது ஏற்படும் போகங்கள் அனைத்தும் உலகப் பற்றுடையவர்களுக்கு ஸுகமாகத் தோன்றிய போதிலும் அவை நிச்சய மாக துக்கத்திற்குக் காரணமாகவே உள்ளன. மேலும் ஆரம்பமும் முடிவும் கொண்டவை. அநித்யமானவை. ஆகையால் அர்ஜுன! அறிவாளி அவற்றில் இன்புறுவதில்லை.

கேள்வி: புலன்களும், போகப் பொருட்களும் சேர்ந்து அளிக்கும் ஸுகங்கள் துக்கத்திற்கே காரணமாகும் என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: விட்டில்பூச்சி அறிவின்மையால் பின்விளைவையறியாமல் தீபத்தின் ஒளியை ஸுகமென நினைத்து, அதை அடைவதற்காகச் சுற்றிச் சுற்றிப் பறந்து அதில் விழுந்து தன்னையே அழித்துக் கொள்வதுபோல, அஞ்ஞானியான மனிதன், 'போகங்களை ஸுகத்திற்குக் காரண'மென நினைத்து, அதில் பற்று கொண்டு அவற்றை அனுபவிக்க முயன்று, முடிவில் பெரிய துன்பத்தையே அனுபவிக்கிறான். இப்படி போக விஷயங்களை ஸுகத்திற்குக் காரணமென நினைத்து, அவற்றை அனுபவிப்பதில் மேலும் ஈடுபாடு கொள்கிறான். அந்தப் பற்றினால் காம, க்ரோதங்கள் முதலிய தீங்குகள் விளைகின்றன. மேலும் மேலும் பலவிதமான தீய எண்ணங்களும், தீய நடத்தைகளும் வந்து அவனை நாற்புறமும் சூழ்ந்து கொள்கின்றன. முடிவில் அவன் வாழ்க்கையே பாவமயமாகி, அதன் பயனாக இவ்வுலகிலும், பரலோகத்திலும் பலவிதமான கொடிய வேதனைகளை அனுபவிக்க நேரிடுகிறது.

போகங்களை அனுபவிக்கும் நேரத்தில், மனிதன் ப்ரமையினால் சிற்றின்பங்களை ஸுகமென்று கருதுவதால், முடிவில் அவையே அவனுடைய பலம், வீர்யம், ஆயுள், மனம், புத்தி, ப்ராணன், புலன்களின் திறமை இவற்றையெல்லாம் அழித்து, சாஸ்த்ர விரோதமாக நடந்து கொள்ளச் செய்து, பரலோகத்திலும் பயங்கரமான நரகவேதனைகளை அனுபவிக்கச் செய்து பெரிய துயரத்திற்கு ஆளாக்குகிறது.

மேலும் அஞ்ஞானி பிறரிடம் இப்படிப்பட்ட போகப் பொருள் அதிகம் இருப்பதைப் பார்த்து மனதில் பொறாமை கொள்கிறான். அதனால் மனம் வெதும்புகிறான்.

இன்பமயமானது என்று எண்ணி, அனுபவிக்கப்பட்ட புலன் நுகர் பொருட்கள், ஊழ்வினை காரணமாக ஒருகால் கைநழுவிப் போகுமேயானால், அவற்றால் ஏற்பட்ட மனப்பதிவுகள் அடிக்கடி நினைவில் தோன்றி மனிதனைத் துயரத்தில் மூழ்கச் செய்து, அழுது அரற்றி ஏங்கச் செய்கிறது. இவ்வளவையும் ஆலோசித்துப் பார்த்தால் போகப் பொருட்களின் தொடர்பினால் ஏற்படும் அனுபவம் உண்மையில் துன்பமயம்தான். அணுவளவுகூட ஸுகமில்லை என்பது உறுதியாகிறது. அஞ்ஞானத்தில் ஏற்பட்ட ப்ரமையினால் அது ஸுகத்தோற்றத்தை உண்டாக்குகிறது. அதனால்தான் பகவான் அதை துக்கத்திற்கே காரணம் என்கிறார்.

கேள்வி: 'போகங்களுக்கு ஆரம்பமும், முடிவும் உள' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: புலன்களால் ஏற்படும் போகங்கள் கனவு போலவும், மின்னல் போலவும் அநித்யமானவை; நொடிப்பொழுதில் அழிபவை என்பதைத்தான், ஆரம்பமும், முடிவும் உள்ளவை என்று கூறுகிறார். உண்மையில் இவற்றில் ஸுகமே இல்லை. ஆனால் அஞ்ஞானத்தால் ஸுகம் ஓரளவு இருக்கத்தான் இருக்கிறது என்று நினைத்தாலும், அதுவும் நெடுநேரம் நிலைக்காது. நொடிப்பொழுதில் முடிந்துவிடும். ஏனெனில் அந்தப் பொருளே அநித்யம்தானே. அதிலிருந்து நிலையான ஸுகம் எப்படிக் கிடைக்கும்? *2/14*ல் கூட பகவான், புலன்கள் தரும் இன்பம் தோன்றி அழியக்கூடியவை, அநித்யமானவை என்று கூறியிருக்கிறார்.

கேள்வி: இங்கு அர்ஜுனனை 'கௌந்தேய' என்று அழைப்பதற்குப் பொருள் உண்டா?

பதில்: அர்ஜுனனுடைய தாயாரான குந்திதேவி மிகுந்த மதிநலம் படைத்தவர்; அடக்கமும், விவேகமும், நுகர் பொருட்களில் வைராக்யமும் உடையவர். பெண்ணாகப் பிறந்தும், வைராக்யத்துடன் தர்மங்களைக் கடைப்பிடிப்பதிலும், பகவானுடைய பக்தியிலும் வாழ்க்கையைக் கழித்தவர். இப்படி குந்தியின் பெருமையைச் சுட்டிக்காட்டி, 'அர்ஜுன! அத்தகைய நெறிபிறழாத குந்தியின் செல்வனாயிற்றே நீ! உனக்குச் சிற்றின்ப போகங்களில் புத்தி போகும் வாய்ப்பே கிடையாதே!' என்று கொண்டாடுகிறார்.

கேள்வி: 'அஞ்ஞானியான மனிதன் விஷய போகங்களில் திளைக்கிறான்; ஆனால், விவேகிகள் அவற்றில் திளைக்கமாட்டார்கள்' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: போகங்கள் உண்மையில் அநித்யமானவை; நொடிப்பொழுதில் மறையக் கூடியவை; துன்பம் தருபவை. இருப்பினும் விவேகமில்லாதவன் இதைப் புரிந்து கொள்ளாமல் அவற்றில் திளைத்துப் பலவிதமான இன்னல்களை அனுபவிக்கிறான். ஆனால் விவேகியான மனிதன் அவை அநித்யமானவை; நொடியில் அழியக்கூடியவை என்றறிந்து, 'அவை காம-க்ரோதம், பாவம்-வேதனை முதலிய தீமைகளை வளர்க்கும்' என்பதை உணர்ந்து அவற்றில் உள்ள பற்றைத் துறப்பதே குறைவற்ற ஸுகம் பெறுவதற்குக் காரணம் என்று அறிகிறான். அதனால், அவன் அவற்றில் திளைப்பதில்லை.

பொருத்தம்: காம-க்ரோதங்களின் காரணமாக நுகரப்படும் விஷய போகங்கள் துன்பத்திற்குக் காரணம் என்று கூறி, மனிதப்பிறவியின் பெருமையை எடுத்துக் கூறி, எளிதில் வெற்றி கொள்ள முடியாத பகைவரான காம-க்ரோதங்களை இப்பிறவியிலேயே வெற்றி கொள்பவனின் பெருமையைக் கூறுகிறார்—

शक्नोतीहैव यः सोढुं प्राक्शरीरविमोक्षणात्।
कामक्रोधोद्भवं वेगं स युक्तः स सुखी नरः॥२३॥

ஶக்நோதீஹைவ ய: ஸோடு₄ம் ப்ராக்ஶரீரவிமோக்ஷணாத் ।

காமக்ரோதோ₄த்₃ப₄வம் வேக₃ம் ஸ யுக்த: ஸ ஸுகீ₂ நர: ॥ 23 ॥

ய: – எந்த ஸாதகன், ***இஹ ஏவ*** – இம்மனிதப்பிறவியிலேயே, ***ஶரீரவிமோக்ஷணாத்*** – உடல் அழிவதற்கு, ***ப்ராக்*** – முன்பே, ***காம க்ரோத₄ உத்₃ப₄வம்*** – காமத்தினாலும், கோபத்தினாலும் உண்டாகின்ற, ***வேக₃ம்*** – எழுச்சியை, ***ஸோடு₄ம்*** – பொறுத்துக் கொள்வதற்கு, ***ஶக்நோதி*** – திறன் பெற்றுவிட்டானோ, ***ஸ: நர:*** – அந்த மனிதனே, ***யுக்த:*** – யோகி. ***ஸ:*** – அவனே, ***ஸுகீ₂*** – ஸுகம் பெற்றவன்.

எந்த ஸாதகன் இம்மனிதப் பிறவியிலேயே உடல் அழிவதற்கு முன்பே காமத்தினாலும் கோபத்தினாலும் உண்டாகின்ற எழுச்சியைப் பொறுத்துக் கொள்வதற்குத் திறன் பெற்றுவிட்டானோ அந்த மனிதனே யோகி. அவனே ஸுகம் பெற்றவன்.

கேள்வி: 'இஹ ஏவ' (இம்மனிதப் பிறவியிலேயே) என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: மனிதப்பிறவியின் பெருமையை இவ்விரு சொற்களினால் கூறுகிறார். தேவர் முதலிய பிறவிகளில் உல்லாஸமும், புலன் நுகர்ச்சியும் மிக அதிகமாக இருக்கும். விலங்கினப் பிறவிகள் அறிவீனம் மிக்கனவாக இருக்கும். ஆகவே அப்பிறவிகளில் காம-க்ரோதங்களை வசப்படுத்துவது முடியாத கார்யம். 'இந்தப் பிறவியிலேயே' என்று பகவான் எச்சரிக்கை செய்கிறார். இது தவறினால் மறுபடியும் மனிதப் பிறவி வாய்ப்பது அரிது. இந்த உடல் அழிவதற்குள் இந்த மனித உடலிலேயே ஸாதனைகளில் குறியாக நின்று, காம-க்ரோதங்களின் வேகத்தை மன அமைதியோடு பொறுத்துக் கொள்ளும் ஆற்றல் பெறவேண்டும். அஜாக்ரதையினாலும், அலக்ஷ்யத்தினாலும் இந்த அரிய மனித வாழ்வைச் சிற்றின்பங்களில் கழித்துவிட்டால், பிறகு மிகவும் வருத்தப்பட வேண்டியிருக்கும். கேநோபநிஷத் கூறுகிறது:

இஹ சேத₃வேதீ₃த₂த₂ ஸத்யமஸ்தி ந சேதி₃ஹாவேதீ₃ந்மஹதீ விநஷ்டி: । *(2/5)*

'இந்த மனிதப்பிறவியில் பகவானை அறிந்துவிட்டால் நல்லது. இப்பிறவியில் அறியாமற்போனால் மிகப் பெரிய நஷ்டம்.'

கேள்வி: 'ப்ராக் ஶரீரவிமோக்ஷணாத்' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: உடல் அழியக் கூடியது; அது பிரியப் போவது நிச்சயம். எந்த விநாடியில் உடலைவிட்டுவிட நேரும் என்பதும் நமக்குத் தெரியாது. ஆகவே மரண நேரம் நெருங்கும் முன்னரே காம-க்ரோதங்களை ஜயித்துவிட வேண்டும். மேலும் மேலும் ஸாதனை புரிந்து, காம-க்ரோதமாகிற பெரும் பகைவர்கள் தலைதூக்காதவாறும், நம்முடைய வாழ்க்கையைத்

தடுமாற வைக்காதவாறும் தடுத்து நிறுத்தும் ஆற்றலைப் பெறவேண்டும். கடலில் வந்து கலக்கும் ஆறுகளனைத்தும், வேகத்துடன்கூட அதிலேயே மறைந்து விடுவதுபோல, காம–க்ரோதங்கள் வந்து புகுந்தாலும் வேகம் அழிந்து மறைந்துவிட வேண்டும். அதற்குரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

கேள்வி: *காம–க்ரோதத்தினால் ஏற்படும் வேகம் எது? அதைப் பொறுத்துக் கொள்ளும் திறமை என்று எதைச் சொல்கிறார்கள்?*

பதில்: (ஆணுக்குப்) பெண், (பெண்ணுக்கு) ஆண்; (இருவருக்கும்) மக்கள், செல்வம், வீடு, ஸ்வர்கம் என்று பார்த்தும், கேட்டும் உள்ள மனதிற்கும், புலன்களுக்குமுரிய போகங்களில் ருசி பிறப்பதால் அவற்றை அடையவேண்டும் என்று எழுகின்ற அவாவுக்குக் காமம் என்று பெயர். அதன் காரணமாக உள்ளத்தில் ஏற்படும் பலவிதமான எழுச்சிகள்தான் வேகம். அதுபோல, மனம், புத்தி, புலன்களுக்கு இடையூறாகத் தோன்றும் பொருட்கள் வந்து சேரும் போதும், விரும்பியது கிடைப்பதில் இடையூறு நேரும் போதும், அவற்றிற்குக் காரணமானவற்றில் ஏற்படும் வெறுப்பு, அதனால் மனதில் ஏற்படும் கொந்தளிப்பு – இவையே 'க்ரோதம்' எனப்படும். அந்த க்ரோதத்தினால் மனதில் ஏற்படும் பலவித எழுச்சிகளே க்ரோதத்தின் வேகம் எனப்படும். இந்த மன எழுச்சிகளை அமைதியாக, அதாவது அவற்றினால் உந்தப்பட்டுச் செயலில் இறங்காமல், தடுப்பதற்குரிய சக்தியைப் பெறுவதுதான், இவற்றைப் பொறுத்துக் கொள்வதில் திறமை ஆகும்.

கேள்வி: *'யுக்த:' என்ற அடைமொழி இங்கு யாரைக் குறிப்பிடுகிறது?*

பதில்: காமக்ரோதங்கள் எனும் பகைவர்களால் பெருமுயற்சி செய்தும் அசைக்க முடியாதவனை, இவற்றின் வேகத்தையடக்கியவனை, மனம், புலன்கள் இவற்றை வசப்படுத்திய ஸாங்க்யயோக ஸாதகனை 'யுக்த:' என்ற அடைமொழியோடு கூறுகிறார்.

கேள்வி: *அவன் ஸுகம் பெற்றவன் (ஸுகீ) என்று கூறுவதன் கருத்து என்ன?*

பதில்: உலகியலில் எல்லோரும் ஸுகத்தை நாடுகிறார்கள். ஆனால் உண்மையில் ஸுகம் என்ன? அது எப்படிக் கிடைக்கும்? இதைப் புரிந்து கொள்ளாமல், ப்ரமையினால் போகங்களை ஸுகம் என்று நினைத்து, அவற்றைப் பெறுவதற்கு முயல்கிறார்கள். அதற்குத் தடை ஏற்பட்டால் க்ரோதம் அடைகிறார்கள். ஆனால் காம–க்ரோதங்களுக்கு வசப்பட்டவன் ஒரு நாளும் ஸுகம் பெறுவதில்லை. காமத்திற்கு ஆட்பட்டவன் மனைவி--மக்கள், செல்வம்–பெருமை முதலியவற்றை அடைவதற்காகவும், க்ரோதத்திற்கு வசப்பட்டவன் பிறருக்குத் தீங்கு விளைவிப்பதற்காகவும் முயன்று, பலவித பாவச் செயல்களில் ஈடுபடுகிறான். முடிவில் இவ்வுலகில் நோய், துயரம், அவமானம், கெட்ட பெயர், கலக்கம், அச்சம், அமைதியின்மை, கொந்தளிப்பு ஆகிய பலவிதத் தொல்லைகளையும், பரலோகத்தில் நரகத்தையும், மறுபிறவியில் விலங்கு–பறவை, புழு–பூச்சிகளாகப் பிறந்து பற்பல துயரங்களையும் அனுபவிக்கிறான் *(16/18–20)*. இவ்விதம் ஸுகமடையாமல் எப்போதும் துன்பத்தையே அடைகிறான். எவர்கள் போகங்கள் துன்பத்திற்குக் காரணம் என்றும், நொடியில் அழிபவை என்றும் அறிந்து, காம–க்ரோதங்களாகிற பகைவர்களை முற்றிலுமாக வென்று அவற்றின் பிடியிலிருந்து முழுமையாக விடுபடுகிறார்களோ, அவர்கள் எப்போதும் ஸுகமாகவே இருப்பார்கள். இதைத்தான் இப்படிப்பட்டவர்கள் ஸுகம் பெற்றவர்கள் என்று கூறுகிறார்.

கேள்வி: *இங்கு 'நர:' (மனிதன்) என்று ஏன் குறிப்பிடுகிறார்?*

பதில்: காமம், க்ரோதம் முதலிய துர்குணங்களை வென்று, போகங்களில் வைராக்யம் அடைந்து, உபரதியுடன் ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மாவை அடைபவன்தான் உண்மையான மனிதன். உடலமைப்பில் ஆணாகவோ, பெண்ணாகவோ இருக்கலாம். அஞ்ஞானத்தில் மோஹமடைந்தவன், பற்றினால் மேற்பார்வைக்கு ஸுகத்தோற்றமுடைய பொருட்களின் கவர்ச்சியில் வீழ்ந்து, பரமாத்மாவை மறந்து, காம க்ரோதங்களுக்கு ஆட்பட்டு, இழிபிறப்புக்களான விலங்கு, பிசாசுகளைப் போல உணவிலும், உறக்கத்திலும், சிற்றின்பத்திலும் திளைத்து சச்சரவுகளில் ஈடுபடுகிறான். அவன் மனிதனே அல்லன்.

விலங்கைக் காட்டிலும் ஈனமான, கொம்பும் வாலும் இல்லாத, அமங்களமான, உலகிற்குத் துன்பமளிக்கின்ற வெறும் பயனற்ற ஒரு ப்ராணியே. பரமாத்மாவை அடைந்துவிட்ட உண்மையான மனிதனை அவனுடைய குணங்களையும், நடத்தைகளையும் ஆதர்சமாகக் கொண்டு, ஸாதகன் காம–க்ரோதங்களை ஜயிக்க முயன்றால், அவனும் நரன்தான் என்று குறிப்பிடுவதற்காகவே, இங்கு 'நர:' என்ற சொல் வருகிறது.

கேள்வி: காம–க்ரோதங்களை வென்றவனை 'யுக்தன்', 'ஸுகீ' என்கிறார். அவனை ஸாதகன் என்று ஏன் கொள்ள வேண்டும்? 'ஸித்தன்' என்று ஏற்றுக் கொண்டால், என்ன குற்றம்?

பதில்: காம–க்ரோதங்களை வென்றுவிட்டதனாலேயே ஒருவன் ஸித்த புருஷன் ஆகிவிட மாட்டான் (16/22). ஸித்த புருஷனிடம் காமம், க்ரோதம் என்பதே இரா. 5/26ல் பகவான் இதைச் சொல்கிறார். ஆனால், இங்கு 'அவன் ஸுகம் பெற்றவன்' என்று மட்டும் சொல்கிறார். அவன் அக்ஷய ஸுகமடைந்த ஸித்த புருஷனானால் பரமஸுகீ என்றோ, வேறு விசேஷமான அடைமொழிகளுடனோ கூறியிருப்பார். இங்கு, அவன் 5/21வது ச்லோகத்தின் முற்பகுதியில் கூறியுள்ளபடி, பரமாத்ம த்யானத்தில் அடையும் ஸாத்விக ஸுகத்தை அனுபவிக்கிறவன். ஆகவே இந்த ச்லோகத்தில் குறிப்பிடப்படுபவன் ஸாதகன் என்று கொள்ளவேண்டும்.

பொருத்தம்: மேலே சொன்னபடி, வெளி விஷயங்களால் ஏற்படும் ஸுகபோகங்கள் நொடிப் பொழுதானவை; துக்கத்திற்குக் காரணமானவை என்றறிந்து, அவற்றின் மீதுள்ள பற்றைத் துறந்து, காம–க்ரோதங்களை ஜயித்துவிட்ட ஸாங்க்யயோகியின் முடிவான நிலையை அதன் பயனோடு சேர்த்துக் கூறுகிறார்—

योऽन्तःसुखोऽन्तरारामस्तथान्तर्ज्योतिरेव यः ।
स योगी ब्रह्मनिर्वाणं ब्रह्मभूतोऽधिगच्छति ॥ २४ ॥

யோऽந்த:ஸுகோ₂ऽந்தராராமஸ்தத₂ாந்தர்ஜ்யோதிரேவ ய: ।
ஸ யோகீ₃ ப்₃ரஹ்மநிர்வாணம் ப்₃ரஹ்மபூ₄தோऽதி₄க₃ச்ச₂தி ॥ 24 ॥

ய: – எவன், **ஏவ** – உறுதியுடன் தீர்மானம் செய்து கொண்டு, **அந்த:ஸுக₂:** – ஆத்மாவிலேயே ஸுகம் காண்கிறானோ, **அந்தராராம:** – ஆத்மாவிடமே இன்புற்றிருப்பானோ, **தத₂ா** – அவ்விதமே, **ய:** – எவன், **அந்தர்ஜ்யோதி:** – ஆத்மாவிலேயே உள்ளொளி (ஞானம்) பெற்றவனோ, **ஸ:** – அந்த, **ப்₃ரஹ்மபூ₄த:** – ஸத் சித் ஆனந்தமயமான ப்ரம்மத்தில் ஒன்றிவிட்டவனான, **யோகீ₃** – ஸாங்க்யயோகி, **ப்₃ரஹ்மநிர்வாணம்** – அமைதி நிறைந்த ப்ரம்மத்தை, **அதி₄க₃ச்ச₂தி** – அடைகிறான்.

எவன் உறுதியுடன் தீர்மானம் செய்து கொண்டு ஆத்மாவிலேயே ஸுகம் காண்கிறானோ ஆத்மாவிடமே இன்புற்றிருப்பானோ அவ்விதமே எவன் ஆத்மாவிலேயே உள்ளொளி (ஞானம்) பெற்றவனோ ஸத் சித் ஆனந்தமயமான ப்ரம்மத்தில் ஒன்றிவிட்டவனான அந்த ஸாங்க்ய யோகி அமைதி நிறைந்த ப்ரம்மத்தை அடைகிறான்.

கேள்வி: 'அந்த:ஸுக:' என்றால் என்ன பொருள்?

பதில்: 'அந்த:' என்பது அகில ஜகத்துக்குள்ளும் இருக்கும் பரமாத்மாவைக் குறிக்கும். இதற்கு 'உள்ளம்' என்று பொருள் அன்று. எவன் ஒருவன் வெளிப் பொருட்களில் 'போகம்' என்ற உலகியல் ஸுகத்தைக் கனவு போல அநித்யமானது என்றறிந்து, அதை ஸுகம் என்று கருதமாட்டானோ, எல்லாவற்றிற்குள்ளும் இருக்கின்ற பரமானந்த ஸ்வரூபனான பரமாத்மாவையே ஸுகமாக நினைப்பானோ, அவனையே 'அந்த:ஸுக:' அதாவது பரமாத்மாவிலேயே ஸுகத்தை அனுபவிக்கிறவன் என்று கூறுகிறார்.

கேள்வி: 'அந்தராராம:' (ஆத்மாவிலேயே திளைப்பவன்) என்றால் என்ன பொருள்?

பதில்: நுகர் பொருட்களினால் ஸுகம் இல்லை என்றறிந்து அவன் அவற்றில் திளைப்பதில்லை. இவற்றில் ருசியற்று, பரமாத்மாவிலேயே திளைத்திருப்பவன் இடைவிடாமல் பரமாத்மாவுடனேயே இரண்டறக் கலந்து, அதே சிந்தனையாக உள்ளவனாதலால், அவனே 'அந்தராராம:' எனப்படுவான்.

கேள்வி: 'அந்தர்ஜ்யோதி:' என்றால் என்ன பொருள்?

பதில்: பரமாத்மா எல்லா ஒளிகளைக் காட்டிலும் பெரிய ஒளி *(13/17)*. அகில உலகமும் அவருடைய ஒளியினால் , ப்ரகாசிக்கிறது. எவன் இடைவிடாது, இரண்டற, ஞானஸ்வரூபனான பரமாத்மாவை அனுபவிக்கிறானோ, பரமாத்மாவிடமே நிலைத்திருக்கிறானோ, எவனுடைய பார்வையில் விஞ்ஞான ஆனந்தஸ்வரூபமான பரமாத்மாவைத் தவிர, வெளியே காணப்படும் பொருட்களுக்குத் தனி இருப்பு இல்லையோ, அவன்தான் 'அந்தர்ஜ்யோதி:' (உள்ளொளி பெற்றவன்). எவனுக்குக் காணப்படும் இந்த ப்ரபஞ்சமே ஸத்யமாகத் தோன்றுகிறதோ, தூங்கினவன் கனவு காண்பது போல, எவன் அஞ்ஞானத்திற்கு ஆட்பட்டு, வெளி உலகியலிலேயே மூழ்கி இருக்கிறானோ, அவன் உள்ளொளி பெற்றவன் அல்லன். ஏனெனில் பரம ஞான வடிவமான பரமாத்மா அவனுக்குப் புலப்படமாட்டார்.

கேள்வி: 'ஏவ' என்று கூறுவதன் கருத்து என்ன? அதற்கு எந்தச் சொல்லுடன் தொடர்பு உள்ளது?

பதில்: 'ஏவ' என்பது பிரிநிலைப் பொருளை (வ்யாவ்ருத்தி – நிச்சயத்தை) உணர்த்துவது. இது 'அந்த:ஸுக:', 'அந்தராராம:', 'அந்தர்ஜ்யோதி:' ஆகிய மூன்றுடனும் தொடர்புடைய சொல் ஆகும். அந்த யோகி பரமாத்மாவிலேயே ஸுகம், ஈடுபாடு, ஞானம் ஆகியவற்றை அனுபவிப்பதால் கண்ணுக்குப் புலப்படும் வெளி உலகத்துடன் அவனுக்கு எவ்வித உறவும் இல்லை.

கேள்வி: 'ப்ரஹ்மபூத:' என்றால் என்ன பொருள்?

பதில்: இந்தச் சொல் ஸாங்க்யயோகிக்கு அடைமொழி. ஸாங்க்யயோக ஸாதனை புரிகின்ற யோகி அஹங்காரம்–மமகாரம், காம–க்ரோதங்கள் என்ற விகாரங்கள் அற்று இடைவிடாது பகவானையே சிந்தனை செய்து, அந்த ப்ரம்மமாகவே ஆகிவிடுகிறான். இந்த இறுதியான ப்ரம்மநிலையை அடைந்த ஸாங்க்யயோகியை 'ப்ரஹ்மபூத:' என்கிறார்.

கேள்வி: 'ப்ரஹ்மநிர்வாணம்' என்றால் என்ன பொருள்? அதை அடைவது என்றால் என்ன?

பதில்: 'ப்ரஹ்மநிர்வாணம்' என்பது ஸத் சித் ஆனந்தமயமான, நிர்குண, நிராகார, மாறுதலற்ற, சாந்தமான பரமாத்மாவைக் குறிக்கும். இரண்டறக் கலந்து நேரிடையாக ப்ரம்மமாகவே ஆகிவிடுவதுதான் அதனை அடைவது ஆகும். ஸாங்க்யயோகியின் முடிவான நிலையை 'ப்ரஹ்மபூத:' என்ற சொல்லால் குறிப்பிட்டு, அதுவே அதனுடைய பயன் என்கிறார். ப்ருஹதாரண்யகம் கூறுகிறது: **'ப்₃ரஹ்மைவ ஸந் ப்₃ரஹ்மாப்யேதி'** *(4/4/6)*. அவன் ப்ரம்மமாகவே ஆகி ப்ரம்மத்தை அடைந்து விடுகிறான். இதையே பரம சாந்தியை அடைவது; அக்ஷய ஸுகத்தை அடைவது; ப்ரம்மத்தை அடைவது; மோக்ஷத்தை அடைவது; பரமகதியை அடைவது என்றெல்லாம் கூறுவர்.

பொருத்தம்: இவ்விதம் பரப்ரம்ம பரமாத்ம நிலையை அடைந்தவர்களின் இலக்கணத்தை இரண்டு ச்லோகங்களில் கூறுகிறார்—

लभन्ते ब्रह्मनिर्वाणमृषयः क्षीणकल्मषाः ।
छिन्नद्वैधा यतात्मानः सर्वभूतहिते रताः ॥ २५ ॥

லப₄ந்தே ப்₃ரஹ்மநிர்வாணம்ருஷய: க்ஷீணகல்மஷா: ।

சி₂ந்நத்₃வைத₄ா யதாத்மாந: ஸர்வபூ₄தஹிதே ரதா: ॥ 25 ॥

க்ஷீண கல்மஷா: — எவர்களுடைய எல்லாப் பாவங்களும் அழிந்துவிட்டனவோ, **சி₂ந்நத்₄வைத₄ா:** — எவர்களுடைய எல்லா ஐயங்களும் ஞானத்தினால் தெளிவாக்கப்பட்டு விட்டனவோ, **ஸர்வபூ₄தஹிதே:** — எவர் அனைத்து உயிரினங்களின் நலனிலும், **ரதா:** — ஈடுபாடு கொண்டவர்களோ (மேலும்), **யதாத்மாந:** — எவர்களுடைய மனம் சஞ்சலமின்றிப் பரமாத்மாவிடமே நிலைத்துள்ளதோ (அந்த), **ருஷய:** — ப்ரம்மத்தை அறிந்தவர்கள், **ப்₃ரஹ்ம-நிர்வாணம்** — ஸத் சித் ஆனந்தமயனான, நிர்குண, நிராகார, பரப்ரம்ம பரமாத்மாவை, **லப₄ந்தே** — அடைகிறார்கள்.

எவர்களுடைய எல்லாப் பாவங்களும் அழிந்துவிட்டனவோ, எவர்களுடைய எல்லா ஐயங்களும் ஞானத்தினால் தெளிவாக்கப்பட்டுவிட்டனவோ, எவர் அனைத்து உயிரினங்களின் நலனிலும் ஈடுபாடு கொண்டவர்களோ, மேலும் எவர்களுடைய மனம் சஞ்சலமின்றிப் பரமாத்மாவிடமே நிலைத்துள்ளதோ அந்த ப்ரம்மத்தை அறிந்தவர்கள் ஸத் சித் ஆனந்த மயனான, நிர்குண, நிராகார, பரப்ரம்ம பரமாத்மாவை அடைகிறார்கள்.

கேள்வி: *'க்ஷீணகல்மஷா:' (பாவம் அழிந்துவிட்டவர்கள்) என்று அடைமொழி கொடுப்பதன் கருத்து என்ன?*

பதில்: இப்பிறவியிலும், முற்பிறவிகளிலும் செய்த கர்மங்களின் ஸம்ஸ்காரங்கள், விருப்பு-வெறுப்பு முதலிய விகாரங்கள், அவற்றின் மெய்ப்பாடுகள் இவையெல்லாம் உள்ளத்திலே குவிந்து பந்தத்திற்குக் காரணம் ஆகின்றன. ஆகவே, இவையெல்லாம் கல்மஷங்கள் — பாவங்கள். பரமாத்மாவை நேரிடையாக அடைந்ததும், அக்கணமே பாவங்கள் அழிகின்றன. பின் அவருடைய உள்ளத்தில் சிறிது கூட மாசு இருக்காது. இப்படி உள்ளத்து 'மாசு' அகன்றவர்களையே 'க்ஷீணகல்மஷா:' (பாவம் அழிந்துவிட்டவர்கள்) என்கிறார்.

கேள்வி: *'சிந்நத்வைத₄ா:' என்றால் என்ன கருத்து?*

பதில்: 'த்வைத₄' என்றால் ஐயம். இப்படியோ, அப்படியோ என்று தீர்மானிக்க முடியாத நிலை. இதற்குக் காரணம் அஞ்ஞானம். பரமாத்மாவைப் பற்றி உண்மை அறிவு உண்டாகிவிட்டால் ஸந்தேஹங்கள் அனைத்தும், அவற்றுக்குக் காரணமான அஞ்ஞானத்தோடுகூட அழிந்துவிடும். பரமாத்மாவை அடைந்துவிட்ட நிர்மலமான மனதுடையவனின் உள்ளத்தில் விக்ஷேபம் (தடுமாற்றம்), ஆவரணம் (திரை) முதலிய மாசுகள் இரா. இதையே 'சிந்நத்வைதா:' என்ற அடைமொழியால் கூறுகிறார்.

கேள்வி: *'யதாத்மாந:' என்றால் என்ன பொருள்?*

பதில்: எவருடைய மனம் வசப்பட்டு, சஞ்சலம் முதலிய குறைபாடுகள் முற்றிலுமாக நீங்கி, பரமாத்ம ஸ்வரூபத்தில் ஐக்யமாகிவிடுகிறதோ, அவரை 'யதாத்மா' என்கிறார்.

கேள்வி: *'ஸர்வபூதஹிதே ரதா:' என்றால் என்ன பொருள்?*

பதில்: பரமாத்மாவின் நேரிடை அனுபவம் பெற்ற பிறகு, 'தனது-பிறரது' என்ற வேறுபாடு இருக்காது. எல்லா உயிரினங்களிடத்திலும் தானே என்கிற ஆத்மபுத்தி ஏற்படுகிறது. அஞ்ஞானி தன் உடலை ஆத்மா என்று நினைத்து, அதன் நலனில் ஈடுபடுவது போல, ஞானியான மேலான மனிதன் எல்லோரிடமும் ஸமபாவனையுடன் ஆத்மபுத்தி கொண்டு எல்லோருடைய ஹிதத்திற்காகவும் இயல்பாகவே பாடுபடுவான். இதைத்தான் 'ஸர்வபூதஹிதே ரதா:' என்ற தொடர் கூறுகிறது. இப்படிச் சொல்வதுகூட உலகத்தாரின் பார்வையில் ஞானியின் ஆதர்ச வாழ்க்கையைக் கோடி காட்டுவதற்குத்தான். உண்மையில், ஞானியின் நிலையில் ஒன்றேயான ப்ரம்மம் தவிர மற்ற சராசர வஸ்துக்களுக்குத் தனியான இருப்பு என்பதும் இல்லை; தான் அவற்றின் நலனில் ஈடுபாடுள்ளவன் என்ற எண்ணமும் இல்லை.

கேள்வி: *இங்கு ரிஷிகள் என்றால் 'ப்ரம்மத்தை அறிந்தவர்கள்' என்று ஏன் பொருள் கொள்ளவேண்டும்?*

பதில்: 'ருஷ்' என்ற வேர்ச்சொல்லுக்கு ஞானம் அல்லது பொருளை உள்ளபடி அறிவது என்று பொருள். இந்த முறையில் பரமாத்ம தத்வத்தை உள்ளபடி அறிந்தவர்கள் ரிஷிகள் ஆவார்கள். ஆகவே, இங்கு ரிஷிகள் என்றால் ப்ரம்மத்தை அறிந்தவர்கள் என்று பொருள் கூறுவது பொருத்தம்தான். பாவம் அழிந்தவர்கள், ஸந்தேஹமற்றவர்கள், வசப்பட்ட மனமுடையவர்கள் என்ற அடைமொழிகளும் இதைத்தான் நிரூபிக்கின்றன. முண்டகோபநிஷத் கூறுகிறது:

பி₄த்₃யதே ஹ்ருத₃யக்₃ரந்தி₂ஸ்சி₂த்₃யந்தே ஸர்வஸம்ஸ்யா: ।
க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந்த்₃ருஷ்டே பராவரே ॥ *(2/2/8)*

அனைத்து சராசரங்களின் காரண கார்ய ரூபமான பரமாத்மாவை நேரிடையாகக் கண்டுவிட்ட ஞானியினுடைய உள்ளத்தில் உள்ள முடிச்சு அவிழ்ந்து விடுகிறது; அனைத்து ஐயங்களும் நீங்கிவிடுகின்றன; எல்லாச் செயல்களும் அற்றுப் போய் விடுகின்றன.

कामक्रोधवियुक्तानां यतीनां यतचेतसाम्।
अभितो ब्रह्मनिर्वाणं वर्तते विदितात्मनाम्॥ २६ ॥

காமக்ரோத₄வியுக்தாநாம் யதீநாம் யதசேதஸாம் ।

அபி₄தோ ப்₃ரஹ்மநிர்வாணம் வர்ததே விதி₃தாத்மநாம் ॥ 26 ॥

காம க்ரோத₄ வியுக்தாநாம் – காமக்ரோதங்கள் விலகிய, **யதசேதஸாம்** – மனதை வசப்படுத்தி வெற்றி கொண்ட, **விதி₃தாத்மநாம்** – பரப்ரம்ம பரமாத்மாவை நேரிடையாக அனுபவித்த, **யதீநாம்** – ஞானிகளுடைய, **அபி₄த:** – நாற்புறங்களிலும், **ப்₃ரஹ்ம–நிர்வாணம்** – அமைதியின் இருப்பிடமாகிய பரப்ரம்ம பரமாத்மாவே, **வர்ததே** – நிறைந்து இருக்கிறார்.

காமக்ரோதங்கள் விலகிய, மனதை வசப்படுத்தி வெற்றி கொண்ட, பரப்ரம்ம பரமாத்மாவை நேரிடையாக அனுபவித்த ஞானிகளுடைய நாற்புறங்களிலும் அமைதியின் இருப்பிடமாகிய பரப்ரம்ம பரமாத்மாவே நிறைந்து இருக்கிறார்.

கேள்வி: 'காம–க்ரோதங்கள் விலகிய' என்று கூறுவதன் கருத்து என்ன? ஞானிகளான மஹாத்மாக்கள் மனம் மூலமாகவும், புலன்கள் மூலமாகவும் காம–க்ரோதங்களின் விளைவான செயல்களைப் புரியமாட்டார்களா?

பதில்: ஞானி மஹாத்மாக்களின் உள்ளம் எப்பொழுதும் பரிசுத்தமாகவே இருக்கும். அதனால் அவர்களிடம் சிறிதுகூட காம–க்ரோத விகாரங்கள் இருக்கமாட்டா. இப்படிப்பட்ட மஹாத்மாக்களின் மனதாலோ, புலன்களாலோ என்ன செயல் நடந்தாலும், அது இயல்பாகவே பிறருடைய நலனுக்காகவே நடைபெறும். நடைமுறையில் எப்பொழுதாவது அவர்கள் உள்ளத்தில் சாஸ்த்ரங்களுக்கு ஒத்தவாறு ஏதாவது காமமோ, கோபமோ வெளிப்பட்டால், அது ஒரு நாடகத்தில் பாத்திரங்கள் நடிப்பில் ஏறிட்டுக் கொள்ளும் காம–க்ரோத அபிநயம் போல உலக நன்மையின் பொருட்டு அவர்கள் செய்யும் லீலையே.

கேள்வி: 'யதி:' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

பதில்: மலம், விக்ஷேபம், ஆவரணம் என்ற மனதின் மும்மலங்கள் ஞானத்திற்கு இடையூறுகள். இம்மூன்றும் ஞானிகளிடம் அறவே இரா. இங்கே காம–க்ரோதங்கள் அற்றவர்கள் மலதோஷம் நீங்கியவர்; மனவடக்கமுடையவர்கள் என்போர் விக்ஷேப தோஷம் நீங்கியவர்கள். ஆத்மாவை உள்ளவாறு அறிந்தவர்கள் என்போர் ஆவரண தோஷம் நீங்கியவர் என்று கூறுகிறார். இம்மூன்றும் நீங்கிவிட்டால் பரமாத்மாவைப் பற்றிய பூரண ஞானம் ஏற்படுகிறது. ஆகவே, இங்கு 'யதி:' என்ற சொல்லுக்கு ஸாங்க்யயோக ஸாதனை மூலம் பரமாத்மாவை அடைந்துவிட்ட ஆத்மஸம்யமம் பெற்ற தத்வஞானி என்று பொருள்.

கேள்வி: ஞானிகளைச் சுற்றி எல்லாப்புறங்களிலும் சாந்த பரப்ரம்ம பரமாத்மாவே நிறைந்திருக்கிறார் என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: பரமாத்மாவை அடைந்துவிட்ட ஞானியான மஹாபுருஷனின் அனுபவத்தில் மேலும்–கீழும், உள்ளும்–புறமும், இங்கும்–அங்கும், எங்கும் நித்யமான, நிரந்தரமான, விஞ்ஞான ஆனந்தமயமான பரப்ரம்ம பரமாத்மாவே இருப்பார். ஒப்பில்லாத பரமாத்மாவைத் தவிர வேறு ஒரு பொருளுக்கும் 'இருப்பு' என்பதே கிடையாது. இதைத்தான் எல்லாப்புறங்களிலும் ப்ரம்மம் நிறைந்திருக்கும் என்று கூறுகிறார்.

பொருத்தம்: கர்மயோகம், ஸாங்க்யயோகம் என்ற இரண்டு ஸாதனைகளின் மூலம் பரமாத்மாவை அடைவதையும், அப்படி பரமாத்மாவை அடைந்தவரின் இலக்கணங்களையும் கூறினார். இந்த இருவித ஸாதகர்களுக்கும், வைராக்யத்துடன் மனதையும், புலன்களையும் வசப்படுத்தி த்யானயோக ஸாதனை புரிவது உதவியாக இருக்கும். ஆகவே, த்யானயோகத்தையும், அதன் பயனையும் சுருக்கமாகக் கூறுகிறார்—

स्पर्शान्कृत्वा बहिर्बाह्यांश्चक्षुश्चैवान्तरे भ्रुवोः ।
प्राणापानौ समौ कृत्वा नासाभ्यन्तरचारिणौ ॥ २७ ॥
यतेन्द्रियमनोबुद्धिर्मुनिर्मोक्षपरायणः ।
विगतेच्छाभयक्रोधो यः सदा मुक्त एव सः ॥ २८ ॥

ஸ்பர்ஶாந்க்ருத்வா ப$_3$ஹிர்பா$_3$ஹ்யாம்ஶ்சக்ஷுஶ்சைவாந்தரே ப்$_4$ருவோ: ।
ப்ராணாபானௌ ஸமௌ க்ருத்வா நாஸாப்$_4$யந்தரசாரிணௌ ॥ 27 ॥
யதேந்த்$_3$ரியமனோபு$_3$த்$_3$தி$_4$ர்முநிர்மோக்ஷபராயண: ।
விக$_3$தேச்ச$_2$ாப$_4$யக்ரோதே$_4$ா ய: ஸதா$_3$ முக்த ஏவ ஸ: ॥ 28 ॥

பா$_3$ஹ்யாந் ஸ்பர்ஶாந் – வெளி விஷய போகங்களை (ச்சிந்தியாமல் அவற்றை), **ப$_3$ஹி: ஏவ** – வெளியிலேயே, **க்ருத்வா** – தள்ளி, **சக்ஷு:** – கண்களின் பார்வையை, **ப்$_4$ருவோ:** – இருபுருவங்களின், **அந்தரே** – நடுவிலும், **நாஸாப்$_4$யந்தர சாரிணௌ** – நாசியின் உள்ளே ஸஞ்சரிக்கின்ற, **ப்ராண அபானௌ** – ப்ராண, அபான வாயுக்களை, **ஸமௌ க்ருத்வா ச** – ஸமமாக்கி, **யதேந்த்$_3$ரிய மனோ பு$_3$த்$_3$தி$_4$:** – புலன்கள், மனம், புத்தி இவற்றை அடக்கி, **விக$_3$த இச்ச$_2$ா ப$_4$ய க்ரோத$_4$:** – ஆசை, பயம், கோபம் இவற்றிலிருந்து முற்றிலும் விடுபட்டு, **மோக்ஷபராயண:** – மோக்ஷத்தில் குறியுள்ள, **ய: முநி:** – பரமாத்மாவையே சிந்தித்துக் கொண்டிருக்கின்ற முனிவனான, **ஸ:** – அவன், **ஸதா$_3$** – எப்பொழுதும், **முக்த: ஏவ** – விடுதலைப் பெற்றவனே.

வெளி விஷய போகங்களைச் சிந்தியாமல் அவற்றை வெளியிலேயே தள்ளிக் கண்களின் பார்வையை இருபுருவங்களின் நடுவிலும் நாசியின் உள்ளே ஸஞ்சரிக்கின்ற ப்ராண, அபான வாயுக்களை ஸமமாக்கி புலன்கள், மனம், புத்தி இவற்றை அடக்கி ஆசை, பயம், கோபம் இவற்றிலிருந்து முற்றிலும் விடுபட்டு மோக்ஷத்தில் குறியுள்ள பரமாத்மாவையே சிந்தித்துக் கொண்டிருக்கின்ற முனிவனான அவன் எப்பொழுதும் விடுதலைப் பெற்றவனே.

கேள்வி: வெளி விஷயங்களை வெளியே தள்ளுவது என்பதன் கருத்து என்ன?

பதில்: வெளியேயுள்ள போக விஷயங்களுடன் ஜீவனுக்குத் தொடர்பு பன்னெடுங்காலமாக இருந்து வருகிறது. அவற்றினுடைய பதிவுகள் மனதில் எண்ணற்ற சித்திரங்களாக நிரம்பியுள்ளன. போக விஷயங்களில் ஸுகமும், கவர்ச்சியும் உள்ளன எனும் எண்ணத்தால் மனிதன் போகப் பொருட்களையே நினைத்துக் கொண்டிருக்கிறான். அத்துடன்

முன்வினை மனப்பதிவுகளான ஸம்ஸ்காரங்களும் வெளிப்பட்டு, அவன் மனதில் பற்றுதலையும், ஆசைத்தீயையும் வளர்த்து விடுகின்றன. ஆகவே சிறிது நேரம்கூட, அவன் மனம் அமைதியாக இருப்பதில்லை. எப்பொழுதாவது போக விஷயங்களைத் துறந்துவிட்டுத் தனிமையில் த்யானம் செய்ய உட்கார்ந்தால்கூட, அந்த போகப் பொருட்களின் மனப்பதிவு அவன் மனதைவிட்டு அகலுவதில்லை. அதனால், அவன் பரமாத்ம த்யானம் செய்ய முடிவதில்லை. இதற்கு முக்ய காரணம் இடைவிடாமல் மனதில் ஓடும் போக சிந்தனையே. போக விஷயங்கள் ஸுகம் தரும் என்ற எண்ணம் இருக்கும்வரை இந்தச் சிந்தனை அற்றுப் போகாது. ஆகவே விவேகம், வைராக்யம் இவற்றின் உதவியைக் கொண்டு, 'எல்லா வெளி போக விஷயங்களும் கணத்தில் நசிப்பவை; அநித்யமானவை; துக்கமயமானவை; துக்கத்திற்குக் காரணமானவை' என்று அறிந்து, அவற்றின் ஸம்ஸ்காரங்களான மனப்பதிவுச் சித்திரங்களை உள்ளத்திலிருந்து அகற்றிவிட வேண்டும். அவற்றின் நினைவை அறவே அழித்து விடவேண்டும். அப்போதுதான் மனம் நிலைப்படும்; அமைதியையும் பெறும் என்று பகவான் சொல்கிறார்.

கேள்வி: *கண்பார்வையைப் புருவமத்தியில் நிறுத்துவது எதற்காக?*

பதில்: கண்கள் நாற்புறமும் பார்த்தால் த்யானத்தில் இடையூறு ஏற்படும். கண்களை மூடிக் கொள்வதால் சோம்பலும், தூக்கமும் வரலாம். ஆகவே இப்படிச் சொன்னார். இது தவிர, யோக சாஸ்த்ர முறையின்படியும் ஒரு காரணம் உண்டு. புருவ மத்தியில் இரண்டு இலைகள் கொண்ட ஆக்ஞாசக்ரம் இருக்கிறது. இதன் அருகில் ஏழு உறைகள் (கோசங்கள்) உள்ளன. அவற்றில் கடைசிக் கோசத்தின் பெயர் 'உந்மநீ'. அதை எட்டிவிட்டால் ஜீவன் மறுபிறவி எடுக்கமாட்டான். அதனால்தான் யோகிகள் ஆக்ஞாசக்ரத்தில் பார்வையை நிலைக்க வைக்கிறார்கள்.

கேள்வி: *'ப்ராண, அபான வாயுக்கள் நாசியில் ஸஞ்சரிக்கின்றன' என்று கூறுவதன் கருத்து என்ன?*

பதில்: இங்கு ப்ராணனும், அபானனும் ஸமமாக ஸஞ்சரிக்க வேண்டுமென்று கூறுகிறார். அவற்றைத் தடுக்க வேண்டும் என்று கூறவில்லை. அதற்காகத்தான் நாசியில் ஸஞ்சரிப்பவை என்று கூறுகிறார்.

கேள்வி: *ப்ராண, அபான வாயுக்களைச் சீராக வைப்பது எப்படி?*

பதில்: ப்ராண, அபான வாயுக்களின் போக்கு இயல்பாகவே தாறுமாறாக இருக்கும். சில சமயம் இடது நாசியில் ஸஞ்சரிக்கும். மற்ற சமயம் வலது நாசியில் ஸஞ்சரிக்கும். இடது நாசியில் ஸஞ்சரிக்கும் போது இடா நாடியில் ஸஞ்சரிப்பதாகவும், வலது நாசியில் ஸஞ்சரிக்கும்போது பிங்களா நாடியில் ஸஞ்சரிப்பதாகவும் சொல்வார்கள். இந்த நிலையில் மனிதனுடைய மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டுதான் இருக்கும். இப்படித் தாறுமாறாக ஸஞ்சரிக்கும் ப்ராண, அபானன்களை இரு நாசிகளிலும் ஸமமாக ஸஞ்சரிக்க வைப்பதுதான், அவற்றை ஸமப்படுத்துவதாகும். அதாவது ப்ராண, அபானன்களை ஸுஷும்னா நாடியில் செலுத்துவதாகும். ஸுஷும்னா நாடியில் ப்ராண, அபானன்கள் ஸஞ்சரிக்கும்போது ப்ராண, அபான ஸஞ்சாரம் நுட்பமாகவும், சீராகவும் இருக்கும். அப்பொழுது மனதின் சஞ்சலம், அமைதியின்மை ஆகியவை தாமே அழிந்துவிடும். அவன் இயல்பாக பகவானை த்யானம் பண்ணுவான்.

ப்ராண, அபான வாயுக்களை ஸமப்படுத்துவதற்கு வழி:- முதலில் இடது நாசி மூலம் அபான வாயுவை உள்ளே இழுத்து வலது நாசி மூலம் ப்ராண வாயுவை வெளியே தள்ளவேண்டும். பிறகு அபான வாயுவை வலது நாசி மூலம் உள்ளே இழுத்து ப்ராண வாயுவை இடது நாசி மூலம் வெளிப்படுத்தவேண்டும். இவ்விதம் ப்ராண, அபான வாயுக்களைச் சீராக்கும் பயிற்சி செய்யும்போது பகவந்நாமத்தை ஜபம் பண்ணவேண்டும். வாயுவை வெளிப்படுத்தும்போதும், உள்ளிழுக்கும்போதும், சரியான – சீரான – ஒரே

வினாடிக் கணக்கில் செய்வதுடன் அந்தப் போக்குவரத்தை ஸமமாகவும், கொஞ்சம் கொஞ்சமாக நுட்பமாகவும் செய்யவேண்டும். இவ்விதம் தொடர்ந்து பயிற்சி செய்து மூச்சுவிடுவதும், உள்ளிழுப்பதும், ஸமமாகவும், அமைதியாகவும், நுட்பமாகவும் ஆகிவிடும்போது, மூச்சு வெளியிலே செல்வதோ, உள்ளே கண்டத்திலே வருவதோகூடத் தெரியாது. இதுதான் ப்ராணனும், அபானனும் ஸமமாகவும், நுட்பமாகவும் செல்கின்றன என்பதற்கு அடையாளம்.

கேள்வி: புலன்கள், மனம், புத்தி இவற்றை அடக்குவது என்றால் என்ன? அவற்றை எவ்வாறு அடக்க வேண்டும்? எதற்காக ஜயிக்கவேண்டும்?

பதில்: புலன்கள் தம் போக்கில் போக விஷயங்களில் அலைந்தாலும், மனம் அலைந்துகொண்டே தன் வழக்கத்தை விடாமல், எதையாவது சிந்தித்துக் கொண்டிருந்தாலும், புத்தி ஒருவிதமான முடிவுக்கும் வராமல் பேதலித்தாலும், இவை கட்டுப்பாடற்றுக் கண்டபடி திரிகின்றன என்று பொருள். விவேகத்துடனும், வைராக்யத்துடனும் பயிற்சி செய்து இவற்றைக் கட்டுக்குள் வசப்படுத்திச் சொன்னபடி நடக்கச் செய்து உள்நோக்குமாறோ, பகவானை நினைக்குமாறோ செய்வதுதான் இவற்றை வெற்றி கொள்வதாகும். இப்படிச் செய்து விட்டால் புலன்கள் தம் இஷ்டப்படி போக விஷயங்களில் திளைக்காமல், நம் இஷ்டப்படி நாம் எங்கு தடுத்து நிறுத்துகிறோமோ, அங்கேயே ஈடுபடும். மனமும் நம் விருப்பப்படி ஒரு குறியில் நிலைத்து நிற்கும். புத்தியும் ஒரு நிலைக்கு வந்து பேதலிக்காமல் இருக்கும். புலன்களைத் தன்வசப்படுத்துவதனால் அதாவது புலனடக்கத்தால் ப்ரத்யாஹாரமும், மனதைத் தன்வசப்படுத்துவதால் அதாவது மனவடக்கத்தால் தாரணையும், புத்தியைத் தன்வசப்படுத்துவதால் அதாவது புத்தியை அசையாது ஓரிடத்திலே நிலை கொள்ளச் செய்வதால் த்யானமும் எளிதாகின்றன. ஆகவே 'த்யானம் செய்தல்' எனும் யோகத்தில் இம்மூன்றையும் தன்வசப்படுத்துவது மிகவும் அவசியம். இதுவே இவற்றை வெற்றி கொள்வது.

கேள்வி: 'மோக்ஷபராயண:' என்ற தொடருக்கு என்ன பொருள்?

பதில்: பரமாத்மாவை அடைவது, பரமகதி, பரமபதத்தை அடைவது, விடுதலை இவற்றிற்கெல்லாம் 'மோக்ஷம்' என்று பெயர். இந்த நிலை மனதிற்கும், சொல்லுக்கும் எட்டாதது. இந்த நிலையில், மனிதன் எல்லா பந்தங்களிலிருந்தும் முற்றிலுமாக விடுபட்டு, முடிவற்ற, இரண்டற்ற பரம மங்களமயமான, பரம ஆனந்த நிலையை அடைகிறான் என்று சொல்லலாம். 'பரமாத்மாவை அடைவது' என்ற இந்த மோக்ஷத்திற்காக ஒருவன் புலன்கள், மனம், புத்தி இவற்றை முற்றிலும் பரமாத்ம மயமாகவே ஆக்கிவிடுகிறான்; அதே முயற்சியில் இடைவிடாது ஈடுபடுகிறான்; வாழ்க்கையின் லக்ஷ்யமே அதுதான் என்ற உறுதியுடன் இருக்கிறான்; பரமாத்மாவைத் தவிரப் பெறவேண்டியது வேறொன்றுமில்லை என்ற உறுதியுடன் இருக்கிறான்; அவன்தான் மோக்ஷத்தில் குறியுள்ளவன்.

கேள்வி: 'முநி:' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

பதில்: 'முநி:' என்றால் சிந்தனையில் ஈடுபட்டவன் என்று பொருள். த்யானம் செய்யும்போது மட்டுமல்ல. நடைமுறை வாழ்க்கையிலும் பரமாத்மாதான் எங்கும் வ்யாபித்து இருக்கிறார் என்ற உறுதியான நம்பிக்கையின் காரணமாகப் பரமாத்மாவையே எப்பொழுதும் சிந்தனை புரிந்து கொண்டிருப்பவர் முனிவர்.

கேள்வி: 'விகத இச்சா பய க்ரோத:' (ஆசை, பயம், கோபம் இவை நீங்கியவர்) என்றால் என்ன பொருள்?

பதில்: ஏதேனும் ஒரு பொருள் தன்னிடம் இல்லை என்று உணரும்போது அப்பொருளை அடைய ஆசை உண்டாகிறது. தனக்கு வேண்டாதது நடந்துவிடுமோ என்ற ஸந்தேஹத்தால் பயம் உண்டாகிறது. ஆசையில் இடையூறு ஏற்பட்டாலோ, மனம் விரும்பிய செயல் நிறைவேறாவிட்டாலோ கோபம் உண்டாகிறது. மேலே சொன்னபடி, த்யானயோகப் பயிற்சி

செய்து ஸித்தி அடைந்து விட்டவனுக்கு, எங்கும், எப்பொழுதும், முற்றிலும் பரமாத்மாவின் அனுபவமே உண்டாவதால், அவன் எந்த ஓர் இடத்திலும் பரமனின் இல்லாமையைக் காண்பதில்லை என்னும்போது, அவனுக்கு ஒரு பொருள் மேல் ஆசை என்பது எப்படி ஏற்படும்? தன்னிடம் இல்லாத பொருளில் அல்லவா ஆசை ஏற்படும்? பரமாத்மா ஒருவரைத் தவிர வேறொரு பொருளே இல்லை என்னும் போது நித்ய – ஸத்ய – ஸநாதன – அனந்த – அவிநாசி – பரமாத்ம அனுபவத்திலிருந்து ஒருபொழுதும் நழுவுவதே இல்லை என்கையில், அவனுக்கு வேண்டாதது வந்துவிடுமோ என்ற பயம் எப்படி ஏற்படும்? மேலும், நித்யமாகவும், பூர்ணமாகவும் உள்ள பரமாத்மாவை அடைந்துவிட்ட காரணத்தால், எவ்வித ஆசையோ, விருப்பமோ இல்லாததால், கோபம் எப்படி – எதன் மேல் – தோன்றும்? ஆகவே, இந்த நிலையில் அவனுடைய உள்ளத்தில் நடைமுறையிலோ, கனவிலோ, எந்த நிலையிலும் அவனுக்கு ஆசையே உண்டாகாது. எந்த ஒரு நிகழ்ச்சியைக் கண்டும் அவன் பயப்படமாட்டான். கோபம் கொள்ளவும் மாட்டான்.

கேள்வி: 'ஏவ' என்ற சொல்லின் பொருள் என்ன? 'எப்போதும் அவன் முக்தன்தான். விடுதலை பெற்றவனே' என்பதன் கருத்து என்ன?

பதில்: 'ஏவ' என்பது உறுதியை வெளியிடுவது. ஸாதனைகளின் மூலம் எந்த மாமனிதன் அவா, பயம், க்ரோதம் இவை சிறிதும் அற்று விளங்குகிறானோ, அவன் மேலே கூறிய த்யானம் செய்யும் போதும், நடைமுறையிலும், உடல் உள்ள போதும், போன பிறகும், எந்நிலையிலும் விடுதலை பெற்றுப் பரமாத்மாவை அடைந்தவனே. இதில் ஐயம் இல்லை என்று பொருள்.

பொருத்தம்: அர்ஜுனனுடைய கேள்விக்குப் பதில் சொல்லும் முறையில் பகவான், கர்மயோக–ஸாங்க்யயோகங்களின் உண்மையைத் தெளிவாகக் கூறி, இரண்டு ஸாதனைகள் மூலமாகவும் பரமாத்மாவை அடையலாம் என்றும், ஸித்த புருஷர்களின் இலக்கணங்களையும் கூறினார். பிறகு அந்த இரண்டு நிஷ்டைகளுக்கும் உதவி புரியக்கூடிய த்யானயோகம் பற்றிச் சுருக்கமாகச் சொன்னார். முடிவில், ஒருவன் மனம், புலன்களை அடக்கிக் கர்மயோகத்தையோ, ஸாங்க்யயோகத்தையோ, த்யானயோகத்தையோ ஸாதிப்பது தன்னால் முடியாதென்று தயங்கினால், அவன் எளிதாக பகவானை அடைவதற்குரிய வழியான பக்தியோகத்தைச் சுருக்கமாகச் சொல்கிறார்—

भोक्तारं यज्ञतपसां सर्वलोकमहेश्वरम् ।
सुहृदं सर्वभूतानां ज्ञात्वा मां शान्तिमृच्छति ॥ २९ ॥

போ₄க்தாரம் யஜ்ஞதபஸாம் ஸர்வலோகமஹேஶ்வரம் ।
ஸுஹ்ருத₃ம் ஸர்வபூ₄தாநாம் ஜ்ஞாத்வா மாம் ஶாந்திம்ருச்ச₂தி ॥ 29 ॥

மாம் – (என் பக்தன்) என்னை, **யஜ்ஞதபஸாம்** – எல்லா யாகங்களையும், தவங்களையும், **போ₄க்தாரம்** – ஏற்பவன் (என்றும்), **ஸர்வலோகமஹேஶ்வரம்** – அகில லோக நாயகர்களுக்கும் மேலான ஈசுவரன் (என்றும்), **ஸர்வபூ₄தாநாம்** – அகில சராசர ப்ராணிகளுக்கும், **ஸுஹ்ருத₃ம்** – உற்ற நண்பன் அதாவது தன்னலம் கருதாத அன்பும், அருளும் உடையவன் (என்றும்), **ஜ்ஞாத்வா** – தத்வரீதியாக அறிந்து, **ஶாந்திம்** – மேலான அமைதியை, **ருச்ச₂தி** – அடைகிறான்.

என் பக்தன் என்னை எல்லா யாகங்களையும் தவங்களையும் ஏற்பவன் என்றும் அகில லோக நாயகர்களுக்கும் மேலான ஈசுவரன் என்றும் அகில சராசர ப்ராணிகளுக்கும் உற்ற நண்பன் அதாவது தன்னலம் கருதாத அன்பும் அருளும் உடையவன் என்றும் தத்வரீதியாக அறிந்து மேலான அமைதியை அடைகிறான்.

கேள்வி: 'யஜ்ஞம்', 'தவம்' என்றால் என்ன? பகவான் அவற்றை ஏற்கிறார் என்றால் என்ன பொருள்? அப்படி அவரை அறிவதால் மனிதனுக்கு எப்படி சாந்தி கிடைக்கும்?

பதில்: அஹிம்ஸை, ஸத்யம், முதலிய நற்பண்புகளைக் கைக்கொள்வது; தெய்வம், ப்ராம்மணர், தாய்-தந்தையர் முதலிய பெரியோர்களை வணங்கிப் பணிவிடை செய்வது; ஏழை-எளியவர்களுக்கும், துயருற்ற உயிரினங்களுக்கும் நட்புடனும், ஆதரவுடனும் தொண்டு செய்வது; அவர்களின் துயரைத் துடைப்பதற்காகச் செய்யப்படும் யக்ஞம், தானம் ஆகிய எல்லா நற்செயல்களும் 'யஜ்ஞம்', 'தவம்' என்ற சொற்களில் அடங்கும். பகவான் எல்லோருக்கும் ஆத்மா (10/20). ஆகவே, அவர்தாம் தெய்வமாகவும், அந்தணராகவும், ஏழை-எளியவராகவும் இருந்து நாம் செய்யும் ஸேவை, பூஜைகளை ஏற்கிறார் என்று நினைக்கவேண்டும் (9/24). பகவானுடைய தத்வத்தையும், ப்ரபாவத்தையும் அறியாத காரணத்தினால்தான், மனிதன் எந்த தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் பூஜை-தொண்டு செய்கிறானோ, அவர்களே அவற்றை ஏற்கிறார்கள் என்று நினைக்கிறான். அதனால், அவன் செய்யும் பூஜையும், ஸேவையும் அற்பமான, அழியக்கூடிய பயனைப் பெறுகின்றன (7/23). உண்மையான அமைதி கிடைப்பதில்லை. எவன் ஒருவன் பகவானுடைய தத்வத்தையும், ப்ரபாவத்தையும் அறிந்து உணர்கிறானோ, அவன் எல்லோர் உள்ளத்திலும் ஆத்மவடிவாக விளங்கும் பகவானைக் காண்கிறான். இவ்விதம் ப்ராணிகள் அனைத்திலும் பகவான் என்ற எண்ணம் ஊன்றிவிடுவதால், அவர்களுக்கு அவன் தொண்டு செய்யும் போது, "நான் இந்த தெய்வத்திற்கும், அந்தணர்க்கும், இந்த ஏழை-எளியவர்களுக்கும் செய்யும் ஸேவை மிகவும் மதித்துப் போற்றவேண்டிய, பரம ப்ரேமைக்குரிய, எங்கும் நிறைந்த பரமாத்மாவுக்கே செய்வதாகும்" என்ற அனுபவம் பெறுகிறான்.

எவரைச் சிறந்தவராக அல்லது மதிக்கத்தக்கவராக மனிதன் நினைக்கிறானோ, தனக்குச் சிறிதளவாவது எவரிடம் மரியாதையும், பக்தியும், உள்ளார்ந்த உண்மையான அன்பும் இருக்கின்றனவோ, அவருக்குப் பணிவிடை செய்வதில் மிகவும் மகிழ்ச்சியையும், தனிப்பட்ட அமைதியையும் பெறுகிறான். தந்தையிடம் பக்தியுள்ள தனயனோ, மகனிடம் பேரன்பு கொண்ட தாயாரோ, கணவனிடம் அன்பு கொண்ட மனைவியோ அவரவர்க்கு ஸேவை செய்யும்போது சலிப்படைவார்களா? உண்மையான சீடன் அல்லது பின்பற்றிச் செல்கிறவன் தன்னுடைய மதிப்பிற்குரிய குருநாதர் அல்லது உயர்வழி காட்டுகின்ற மஹாத்மாவின் பணிவிடையிலிருந்து ஏதேனும் ஒரு காரணம் பற்றி விலகிவிட விரும்புவானா? ஒருவனோ, ஒருத்தியோ யாரிடமாவது பெருமையும், அன்பும் பெற்று விட்டால், அவர்களுக்கு ஸேவை செய்வதற்காக ஒவ்வொரு கணமும் புதிது புதிதாக உற்சாகம் மேலிட்டுக் கொண்டே இருக்குமல்லவா? எவ்வளவு பணிவிடை செய்தாலும், 'இவ்வளவு குறைவாகத் தானே என்னால் செய்ய முடிகிறது' என்ற எண்ணம்தான் அவர்கள் மனதில் தோன்றும். நாம் செய்வது அவர்களுக்கு உபகாரம் என்று நினைத்துக் கர்வப்பட மாட்டார்கள். 'இப்படி ஸேவை செய்ய ஸந்தர்பம் கிடைத்ததே பெரிய பாக்யம்' என்று மகிழ்வார்கள். இப்படி ஸேவை செய்யச் செய்ய மனதில் பணிவும், உண்மையான வணக்கமும் வளரும். கொஞ்சம் அயர்ந்தாலும் நமக்கு இந்த பாக்யம் நழுவிவிடுமோ என்று பயப்படுவார்கள். இப்படி ஸேவை செய்வதன் மூலம் அவர்களுக்கு அமைதியும், ஆனந்தமும் ஏற்படுவதால் அவர்கள் ஸேவை செய்கிறார்கள். ஆகவே ஸேவை செய்வதில் அலுப்பு அடைவதில்லை. ஏனெனில், அவர்கள் உள்ளம் எப்பொழுதும் ஆனந்தக்கடலில் மூழ்கித் தளும்பிக் கொண்டிருக்கிறது. இந்த ஆனந்தத்திலிருந்து கரையேறாமல் மேலும் மேலும் ஸேவை செய்யவே விழைவார்கள்.

இப்படி உலகியல் மரியாதை, பெருமை, ப்ரேமை என்னும் நோக்கில் ஸேவை செய்வதிலேயே இவ்வளவு உண்மையான ஈடுபாடும், அமைதியும் ஏற்படுமானால், அகில உலகிலும் பகவானையே போற்றத்தக்கவராக, தேவாதிதேவனாக, ஸர்வ வல்லமை

படைத்தவராக, சிந்தனைக்கு அப்பாற்பட்ட ப்ரபாவங்களின் கொள்கலனாக, தன் பேரன்புக்கு உரியவராக உணர்ந்து, அவரது தூய, இனிய, அமுதமயமான பக்திப் பெருக்கில் முழுதும் மூழ்கிய பகவானது பக்தன் ஒருவன் தன் உயர்ந்த தொண்டுள்ளத்துடனும், உறுதியான நம்பிக்கையுடனும் வழிபட்டால், அவனுக்கு உலகியல் கடந்த எத்தகைய உயர்ந்த, அபூர்வமான, தெய்விகமான மனஅமைதி கிடைக்கும்! இதை யாரே விளக்கவல்லார்! பகவானுடைய திருவருளால் இத்தகைய பேறு பெற்றவனே உண்மையில் இதை உணர முடியும்.

கேள்வி: பகவானை 'ஸர்வலோகமஹேஶ்வர:' (அகில உலக நாயகர்களுக்கும் மேலான ஈசுவரனாக அறிவது) என்றால் என்ன? அப்படியறிந்தவனுக்கு அமைதி எப்படிக் கிட்டுகிறது?

பதில்: இந்த்ரன், வருணன், குபேரன், யமன் முதலிய லோகபாலகர்கள், இப்படிப் பல ப்ரம்மாண்டங்களில் அந்தந்த ப்ரம்மாண்டங்களைக் காப்பாற்றி வரும் நாயகர்கள் ஆகிய எல்லோருக்கும் பகவானே தலைவன்; மேலான ஈசுவரன். ஶ்வேதாஶ்வதர உபநிஷத் கூறுகிறது: 'தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம்' (6/7) – 'அந்த ஈசுவரர்களுக்கெல்லாம் ஈசனான பரமாத்மா.' விளக்க முடியாத தமது மாயாசக்தியின் மூலம் பகவான் லீலையாகப் பல கோடி ப்ரம்மாண்டங்களைப் படைத்துக் காத்துத் தன்னுள் அடக்கித் தக்கபடி கட்டுப்பாட்டில் வைத்து, அவற்றிற்கெல்லாம் மேலே தனியாக நிற்கிறார். இப்படி பகவான் ஸகல வல்லமை படைத்தவர்; எல்லாவற்றையும் அடக்கி ஆள்பவர்; எல்லாவற்றிற்கும் தலைவர்; எல்லா ஈசுவரர்களுக்கும் ஈசுவரன் என்று அறியவேண்டும். அதைத்தான் 'ஸர்வலோகமஹேஶ்வர:' என்ற தொடர் குறிக்கிறது.

இவ்விதம் அறிந்து கொண்ட பக்தன், பகவானுடைய அளவற்ற ப்ரபாவத்தையும், ரஹஸ்யத்தையும் நன்கு உணர்ந்துவிட்டபடியால், ஒரு கணம்கூட பகவானை மறக்க மாட்டான். அவனுக்கு ஒருபோதும் பயம், கவலை, வேறு சிந்தனைகள் இரா. அவனுடைய அமைதியைக் கெடுக்க, காமக்ரோதங்கள் முதலிய பகைகள் அவனை அணுகமாட்டா. அவனுடைய பார்வையில் பகவானைக் காட்டிலும் பெரியவர் கிடையாது. அந்தச் சிந்தனையில் ஈடுபட்டு இடைவிடாமல் எப்போதும் மேலான அமைதியின் இருப்பிடமாகவும், ஆனந்தத்தின் பெருங்கடலாகவும் உள்ள பகவானின் த்யானத்திலேயே மூழ்கியிருப்பான்.

கேள்வி: பகவான் எல்லா ப்ராணிகளுக்கும் உற்ற நண்பனாக எப்படி இருப்பார்? அப்படி பகவான் உற்ற நண்பன் என்று அறிவதால் மனஅமைதி எப்படிக் கிடைக்கிறது?

பதில்: அகில உலகிலும் பகவானுக்குக் கிடைக்காத பொருள் என்று ஒன்றும் இல்லை. எதைப் பெறுவதற்காகவும் பகவான் யாரையும் எதிர்பார்க்கத் தேவையில்லை. பகவான் எப்பொழுதும், எவ்விதத்திலும் தம் விருப்பம் நிறைவேறியவர் – பூர்ணகாமன் (3/22). அப்படியிருந்தும், அவர் அருள்வடிவினரான ஒரே காரணத்தினால், இயல்பாகவே எல்லோருக்கும் அருள்புரிந்து நன்மையே செய்கிறார். அடிக்கடி அவதாரம் எடுத்துப் பலவிதமான விசித்திரமான லீலைகளைச் செய்கிறார். அவற்றைப் பாடிப் பாடி மக்கள் கரையேறி விடுகிறார்கள். அவருடைய ஒவ்வொரு செயலிலும் உலக நன்மையே நிறைந்து இருக்கிறது. பகவான் யாரையாவது கொன்றாலும் அல்லது யாருக்காவது தண்டனை கொடுத்தாலும், அதுவும் அவருடைய அருள்தான். இரக்கமும், அன்பும் இல்லாத எந்த ஒரு சட்டமும் அவரிடம் இல்லை. ஆகவே, பகவான் எல்லா உயிரினங்களுக்கும் உற்ற நண்பர் ஆவார்.

உலகத்தினர் இவ்வுண்மையை அறியாததாலேயே, உலகியலில் நல்லது, கெட்டது நேர்ந்தால் ஸுக–துக்கமடைகிறார்கள். அதனால்தான் அவர்களுக்கு அமைதி கிடைப்ப தில்லை. இந்த உண்மையை அறிந்து கொண்டவன், "பகவானுக்கு நம்மிடம் காரணமற்ற, இயல்பான பேரன்பு உள்ளது. அவர் எது செய்தாலும், அது நம்முடைய நன்மைக்குத்தான். எந்த நிலையிலும், என்ன நேர்ந்தாலும், அது தனிப்பெருங்கருணையாளராகிய பகவானுடைய ப்ரேமையும், கருணையும் கூடிய மங்களமான அருட்செயல்தான்" என்ற நம்பிக்கையோடு

எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் இருப்பான். அதனால், அவனுக்கு நிலையான அமைதி கிடைக்கிறது. அந்த சாந்திக்கு இடையூறாக எதுவும் அவனுக்கு நேர முடியாது.

உலகியலில் ஒரு ஸாதாரண மனிதனிடம், சக்தி படைத்த ஓர் உயர் அதிகாரியோ, அரசனோ நட்புக் காட்டினால், அப்படிக் காட்டுவதாக அம்மனிதன் அறிந்தாலும், 'அந்த அதிகாரி – அரசன் மிகவும் சக்தி படைத்தவன்; நமக்கு உண்மையாக ஹிதம் செய்ய விரும்புகிறான்; நம்மைக் காப்பாற்ற விரும்புகிறான்' என்று அவனுக்குத் தெரிந்தாலும், அந்த அரசனோ, அதிகாரியோ முற்றிலும் தன்னலம் அற்றவர்களாகவும், சக்தி வாய்ந்தவர்களாகவும், அனைவருக்கும் யஜமானர்களாகவும் இல்லாதிருப்பினும், அந்த அரசனுடைய நட்பிற்குப் பாத்திரமானவன் தன்னை பாக்யசாலியாக நினைக்கிறான்; கவலையையெல்லாம் மறந்துவிடுகிறான்; ஆனந்தத்தில் மூழ்கிவிடுகிறான். ஸாதாரண அதிகாரி, ஓர் அரசனாக உள்ள வெறும் மனிதன் விஷயத்திலேயே இப்படி ஆனந்தப்படுவானேயானால், ஸர்வவல்லமை படைத்த, ஸர்வலோக மஹேசுவரனான, எல்லோரையும் ஆட்டிப் படைக்கின்ற, எல்லோருக்கும் அந்தர்யாமியான, எல்லோரையும் பார்க்கிறவரான, கற்பனைக்கெட்டாத நற்குணங்களின் எல்லையற்ற பெருங்கடலான மிகவும் பேரன்பு கொண்ட பகவானே தம்மை நமக்கு உற்ற நண்பனாகக் கூறி, நாமும் இந்த விஷயத்தில் நம்பிக்கை வைத்து அவரை நம்முடைய நண்பராகக் கருதினால், நமக்கு எத்தகைய உலகானுபவத்துக்கும் மேற்பட்ட ஆனந்தமும், இதற்கு முன் அனுபவித்திராத அமைதியும் கிடைக்கும் என்பதை எண்ணிப் பார்த்து ஊகிக்க முடியுமா?

கேள்வி: இப்படி பகவானை யக்ஞ-தவங்களை ஏற்பவராகவும், ஸர்வலோக மஹேசுவரராகவும், எல்லா ப்ராணிகளுக்கும் உற்ற நண்பராகவும் அறிந்தால்தான் அமைதி கிடைக்குமா? அல்லது இந்த மூன்றில் ஏதாவது ஒன்றை அறிந்தாலும் அமைதி கிடைக்குமா?

பதில்: பகவானைப் பற்றி மேலே சொன்ன அடைமொழிகளில் ஏதாவது ஒன்றைப் புரிந்து கொண்டாலும் அமைதி கிடைக்கும். மூன்றையும் புரிந்து கொண்டவனைப் பற்றிக் கேட்பானேன்? ஏனெனில், மேலே சொன்னவற்றுள் ஏதாவது ஒன்றை நன்கு புரிந்து கொண்டாலும் அதற்காகவே பகவானை வேறு சிந்தனையின்றி வழிபடாமல் இருக்கமுடியாது. அவ்வழிபாட்டின் ப்ரபாவத்தால் அவனுக்கு மேலும் பகவானுடைய அருள் மழை பொழிகிறது. அந்த பகவானுடைய பேரருளினாலே அவன் வெகு விரைவில் பகவானுடைய ஸ்வரூபம், ப்ரபாவம், தத்வம், கல்யாண குணங்கள் எல்லாவற்றையும் உணர்ந்து பூர்ணமான அமைதியைப் பெறுவான்.

ஆஹா! அப்பொழுது அவனுக்கு எவ்வளவு ஆனந்தம்! எப்படிப்பட்ட மனஅமைதி கிடைக்கும்! "எல்லா தேவதைகளும், மஹரிஷிகளும் கொண்டாடும் பகவான்; எல்லா யக்ஞ-தவங்களையும் ஏற்பவர்; எல்லா ஈசுவரர்களுக்கும் ஈசுவரர்; அகில ப்ரம்மாண்டங்களுக்கும் ஒரே நாயகர்; அவர் என்னிடம் பேரன்பு கொண்ட நண்பர். அற்பர்களிலும் அற்பனான – தூசு போன்ற நான் எங்கே! எல்லையற்ற, கற்பனைக்கெட்டாத வல்லமைகள் நின்றுறையும் உன்னத மஹேசுவரரான பகவான் எங்கே! என்னைக் காட்டிலும் பேறு பெற்றவர் யார்?" என்று மனிதன் எண்ணுங்கால், அவன் உள்ளத்தில் எத்தகைய நன்றியுணர்வு தோன்றும்! எத்தகைய புனித சிந்தனையோட்டத்தில் நனைந்திருப்பான்? எத்தகைய ஆனந்தப் பெருங்கடலில் மூழ்கி, பகவானின் புனிதத் திருவடிகளில் எப்போதும் திளைத்திருக்க வேண்டும் என எண்ணத் தலைப்படுவான்.

கேள்வி: பகவான் எல்லா யக்ஞ-தவங்களையும் ஏற்பவர்; ஸர்வலோக மஹேசுவரர்; எல்லா உயிரினங்களுக்கும் உற்ற நண்பர் என்று அறிவதற்கு என்ன உபாயம்? எந்த ஸாதனை புரிந்து ஒரு ஸாதகன் இவ்விதம் பகவானுடைய ஸ்வரூபம், ப்ரபாவம், தத்வம், கல்யாண குணங்களை நன்கு அறிந்து கொண்டு, அவரைத் தவிர வேறு புகல் கிடையாது என்று அவருடைய பக்தனாக ஆவான்?

பதில்: ச்ரத்தையுடனும், அன்புடனும் பெரியோர்களை அணுகவேண்டும். ஸத் சாஸ்த்ரங்களைக் கற்றுச் சிந்திக்க வேண்டும். பகவானைச் சரணடைந்து மிகவும் உவகையுடன் ப்ரார்த்திக்க வேண்டும். அவருடைய க்ருபையால்தான், மனிதன் பகவானுடைய ஸ்வரூபம், ப்ரபாவம், தத்வம், கல்யாண குணங்கள் இவற்றை அறிந்து அநன்ய பக்தன் ஆக முடியும்.

கேள்வி: இங்கு 'மாம்' (என்னை) என்று பகவான் தம்முடைய எந்த ஸ்வரூபத்தைக் குறிப்பிடுகிறார்?

பதில்: பகவான் பிறப்பற்றவராக, அழிவற்றவராக, எல்லா ப்ராணிகளுக்கும் ஆண்டவனாக இருந்தும்கூட, அவ்வப்போது தமது ப்ரக்ருதியை ஏற்று, லீலை புரிவதற்காக யோகமாயையினால் உலகில் அவதாரம் செய்கிறார். இப்பொழுது **ஸ்ரீ**க்ருஷ்ணனாக அவதரித்து, அர்ஜுனனுக்கு உபதேசம் செய்கிறார். அந்த நிர்குண, ஸகுண, நிராகார, ஸாகாரமான, புலப்படாத–புலப்படும் தன்மை கொண்ட, ஸர்வரூபமுமான பரப்ரம்ம பரமாத்மாவான, அனந்த கல்யாண குணங்களுடன் கூடிய, ஸர்வ வல்லமை படைத்த, எங்கும் நிறைந்த, அனைத்திற்கும் ஆதாரமான, ஸர்வலோக மஹேசுவரரான, நிறைந்த விபூதி, பலம், ஐசுவர்யம் முதலிய குணங்கள் கொண்ட, எல்லோருடைய ஆத்மவடிவான ஸமக்ர பரமேசுவரனைக் குறித்தே 'மாம்' என்ற சொல் கையாளப்பட்டிருக்கிறது.

ॐ तत्सदिति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे श्रीकृष्णार्जुनसंवादे
कर्मसन्न्यासयोगो नाम पञ्चमोऽध्याय: ॥ ५ ॥

ஓம் தத்ஸதி3தி ஸ்ரீமத்3ப4க3வத்3கீ3தாஸூபநிஷத்ஸு ப்3ரஹ்மவித்3யாயாம்
யோக3ஶாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே3 கர்மஸந்ந்யாஸயோகோ3
நாம பஞ்சமோऽத்4யாய: ॥ 5 ॥

ஓம் தத் ஸத் – ப்ரம்ம வித்யை, யோக ஶாஸ்த்ரம், உபநிஷத்
எனப்படும் ஸ்ரீமத்பகவத்கீதையாகிய ஸ்ரீக்ருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் இடையே
நிகழ்ந்த உரையாடலில் 'கர்மஸந்யாஸயோகம்' எனப் பெயர் படைத்த
ஐந்தாவது அத்யாயம் நிறைவுற்றது.

ஓம் ஸ்ரீபரமாத்மநே நம:

அத$_2$ ஷஷ்டோ$_2$ऽத்$_4$யாய:

ஆறாவது அத்யாயம்

ஆத்மஸம்யமயோகம்

அத்யாயத்தின் பெயர்

கர்மயோகம், ஸாங்க்யயோகம் ஆகிய இரண்டு ஸாதனைகளுக்கும் உதவும் த்யானயோகம் இந்த அத்யாயத்தில் நன்கு விளக்கப்படுகிறது. த்யானயோகத்தில் உடல், புலன்கள், மனம், புத்தி இவற்றை அடக்குவது மிகவும் அவசியம். உடல், புலன்கள், மனம், புத்தி இவையெல்லாம் 'ஆத்மா' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. இவற்றை அடக்குவது பற்றிச் சொல்வதால் இந்த அத்யாயத்திற்கு 'ஆத்மஸம்யமயோகம்' என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது.

அத்யாயச் சுருக்கம்

முதல் ச்லோகத்தில், பகவான் கர்மயோகியின் பெருமையைக் கூறி, 2ல் ஸந்யாஸமும், கர்மயோகமும் ஒன்று என்று நிரூபித்து, 3ல் கர்மயோக ஸாதனங்களை வர்ணிக்கிறார். 4ல் யோகாரூடனின் இலக்கணம் கூறி, 5ல் யோகாரூட நிலையைப் பெறுவதற்கு மனிதனை உற்சாகப்படுத்தி, செய்ய வேண்டிய கடமைகளைக் கூறுகிறார். 6ல் 'தானே தனக்கு நண்பன்; தானே தனக்குப் பகைவன்' என்று முன்னால் சொல்லப்பட்டதன் ரஹஸ்யத்தை விளக்கி, 7ல் உடல், மனம், புலன்கள் இவற்றை வெற்றி கொள்வதன் பயனைக் கூறுகிறார். 8, 9ல் பரமாத்மாவை அடைந்துவிட்டவனின் இலக்கணத்தையும், பெருமையையும் கூறுகிறார். 10ல் த்யானயோகம் செய்யும்படி தூண்டுதல் செய்து, 11 முதல் 14 வரை வரிசையாக இடம், ஆஸனம் மேலும் த்யானயோக விதிமுறைகளைக் கூறுகிறார். 15ல் த்யானயோகத்தின் பயனைக் கூறி, 16, 17ல் த்யானயோகத்திற்கு உகந்ததான உணவு, உறக்கம், நடைமுறைகள் முதலியவற்றின் விதிமுறைகளையும், அவற்றின் பயனையும் பற்றிக் கூறுகிறார். 18ல் த்யானயோகத்தின் முடிவான நிலையை அடைந்தவனின் இலக்கணத்தைக் கூறி, 19ல் விளக்கின் சுடரை உதாரணமாகக் காட்டி, த்யானயோகியின் உள்ளத்தின் நிலையை வர்ணிக்கிறார். இதற்குப் பிறகு, 20 முதல் 22 வரை த்யானயோகத்தினால் பரமாத்மாவை அடைந்தவனின் நிலையைக் கூறி, 23ல் அந்த நிலைக்குப் பெயர் 'யோகம்' என்று கூறி, அதனை அடையவேண்டும் என்று தூண்டுகிறார். 24, 25ல் அபேத பாவனையுடன், அதாவது ஆத்மாவும், பரமாத்மாவும் ஒன்று என்று பரமாத்மாவையே த்யானிக்கும் முறையைக் கூறி, 26ல் போகப் பொருட்களில் உலவுகின்ற மனதைத் திரும்பத் திரும்பத் தடுத்து நிறுத்தி, பகவானிடம் ஈடுபடுத்த வேண்டும் என்று கூறுகிறார். 27, 28ல் த்யானயோகத்தின் பயனான எல்லையற்ற பரமஸுகத்தை அடைவதை விளக்குகிறார். 29ல் உலக விவகார காலத்தில் ஸாங்க்யயோகியின் நிலையை விளக்கி, 30ல் பக்தியோக ஸாதனை புரிபவனின் முடிவான நிலையையும், அவன் பகவானை எங்கும் காண்பதையும் விவரிக்கிறார். 31ல்

பக்தியின் மூலம் பகவானை அடைவது பற்றியும், 32ல் ஸாங்க்யயோகத்தின் மூலம் பகவானை அடைந்தவனின் இலக்கணத்தையும், பெருமையையும் விளக்கிக் கூறுகிறார். 33ல் அர்ஜுனன் மனதின் சஞ்சலத்தின் காரணமாக ஸமத்வயோகத்தில் நிலைத்திருப்பது கடினமானது என்று கூறி, 34ல் மனதை அடக்குவதும் மிகவும் கடினம் என்கிறார். 35ல் பகவான், அர்ஜுனன் சொன்னதை ஏற்றுக்கொண்டு, மனதை அடக்குவதற்கான உபாயத்தைக் கூறுகிறார். 36ல் மனதை அடக்காவிட்டால் யோகம் கிட்டாது; அடக்கினால் கிட்டும் என்று கூறுகிறார். 37, 38ல் யோகப்ரஷ்டனின் கதியைப் பற்றி அர்ஜுனன் கேட்கிறார். 39ல் ஸந்தேஹத்தைத் தீர்க்க வேண்டுமென அர்ஜுனன் பகவானிடம் வேண்டுகிறார். 40 முதல் 45 வரை அர்ஜுனனுடைய கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் வகையில், யோகப்ரஷ்டன் தாழ்நிலையை அடையமாட்டான்; ஸ்வர்கம் முதலிய உலகங்களை அடைந்தபின் பரிசுத்தமான செல்வந்தர் வீட்டில் பிறக்கிறான்; மற்றும் வைராக்யம் உள்ள யோகப்ரஷ்டன் ஞானியின் வீட்டில் பிறந்து, முற்பிறவியின் புத்தித் தொடர்பை எளிதாகப் பெறுவான். புனிதமான செல்வந்தர் வீட்டில் பிறந்தவன், முன் பயிற்சியினால் பகவான்பால் ஈர்க்கப்படுவான். யோகத்தைப் பற்றி அறிய விரும்புவதே பெருமைக்குரியது. முடிவில் யோகிகளின் குலத்தில் பிறந்த யோகப்ரஷ்டன் உன்னத நிலையைப் பெறுவான் என்று கூறுகிறார். இதற்குப் பிறகு, 46ல் யோகியின் பெருமையைக் கூறி, அர்ஜுனனை, 'யோகி ஆவாய்' என்று ஆணையிடுகிறார். 47ல் எல்லா யோகிகளைக் காட்டிலும், அநன்ய ப்ரேமையோடும், ச்ரத்தையோடும் பகவானைப் பூஜிக்கும் யோகி சிறந்தவன் என்று யோகியின் பெருமையைக் கூறி, அத்யாயத்தை நிறைவு செய்கிறார்.

முன் அத்யாயத்துடன் இவ்வத்யாயத்திற்குப் பொருத்தம்: ஐந்தாவது அத்யாயத்தின் ஆரம்பத்தில், "கர்மஸந்யாஸம் (ஸாங்க்யயோகம்), கர்மயோகம் இந்த இரண்டில் எது எனக்கு நிச்சயமாக மங்களத்தைக் கொடுக்கும்? சொல்லுங்கள்" என்று அர்ஜுனன் பகவானை வேண்டிக் கொண்டார். "இரண்டுமே மங்களத்தை அளிக்கும். இரண்டுக்கும் பயன் ஒன்றுதான். ஆனாலும் கர்மஸந்யாஸத்தைக் காட்டிலும் ஸாதனையில் எளிதானபடியால் கர்மயோகம் சிறந்தது" என்று பகவான் விளக்கிச் சொன்னார். பிறகு, இரண்டு ஸாதனைகளின் ஸ்வரூபம், விதிமுறை, பயன் இவற்றை நன்கு விளக்கி, இவை இரண்டிற்கும் மிகவும் உதவியானதும், பரமாத்மாவை அடைவதற்கான முக்ய உபாயமானதும் ஆன த்யானயோகத்தைச் சுருக்கமாக விளக்கினார். ஆனால், இவ்விரண்டுக்குள் எதைக் கடைப்பிடிப்பது என்பது பற்றி அர்ஜுனனுக்குத் தெளிவான சொற்களில் ஆணையிடவில்லை; த்யானயோகத்தின் பிரிவுகளையும், விரிவாகச் சொல்லவில்லை. அதனால் த்யானயோகத்தை விரிவாக விளக்குவதற்காக ஆறாவது அத்யாயத்தை ஆரம்பிக்கிறார். பக்தி ப்ரதானமான கர்மயோகத்தில் ஈடுபாடு உண்டாக்கும் நோக்கத்துடன் அர்ஜுனனுக்கு முதலில் கர்மயோகத்தின் பெருமையைக் கூறுகிறார்—

श्रीभगवानुवाच

अनाश्रितः कर्मफलं कार्यं कर्म करोति यः।
स सन्न्यासी च योगी च न निरग्निर्न चाक्रियः॥ १॥

ஸ்ரீப₄க₃வாநுவாச

அநாஸ்ரித: கர்மப₂லம் கார்யம் கர்ம கரோதி ய: ।
ஸ ஸந்ந்யாஸீ ச யோகீ₃ ச ந நிரக்₃நிர்ந சாக்ரிய: ॥ 1 ॥

ஸ்ரீப₄க₃வாநுவாச – ஸ்ரீபகவான் கூறினார்: ***ய:*** – எவனொருவன், ***கர்மப₂லம்*** – கர்மத்தின் பயனை, ***அநாஸ்ரித:*** – சார்ந்திராமல், ***கார்யம்*** – செய்யவேண்டிய, ***கர்ம*** – கர்மத்தை, ***கரோதி*** – செய்கிறானோ, ***ஸ:*** – அவன், ***ஸந்ந்யாஸீ*** – ஸந்யாஸியும், ***யோகீ₃ ச*** – யோகியும் (ஆவான்). ***ச*** – மேலும், ***நிரக்₃நி:*** – அக்னி காரியங்களை மட்டும் துறப்பவன், ***ந*** – (ஸந்யாஸி) ஆகமாட்டான். ***அக்ரிய: ச*** – செயல்களைச் செய்யாமல் துறப்பவனும், ***ந*** – (யோகி) ஆகமாட்டான்.

ஸ்ரீபகவான் கூறினார்: 'எவனொருவன் கர்மத்தின் பயனைச் சார்ந்திராமல் செய்ய வேண்டிய கர்மத்தைச் செய்கிறானோ, அவன் ஸந்யாஸியும் யோகியும் ஆவான். மேலும் அக்னி காரியங்களை மட்டும் துறப்பவன் ஸந்யாஸி ஆகமாட்டான். செயல்களைச் செய்யாமல் துறப்பவனும் யோகி ஆகமாட்டான்.

கேள்வி: இங்கே கர்மத்தின் பயனைச் சார்ந்திருப்பதைத் துறக்க வேண்டும் என்று மட்டும் கூறுகிறார். 'பற்றைத் துறக்க வேண்டும்' என்று சொல்லவில்லை. காரணம் என்ன?

பதில்: போகத்திலும், கர்மத்திலும் பற்றுள்ளவனால் கர்மத்தின் பயனைச் சார்ந்திருப்பதை முற்றிலும் ஒதுக்கிவிட முடியாது. பற்று இருந்தால் இயல்பாகக் கர்மத்தின் பயனிலும் ஆசை இருக்கத்தான் இருக்கும். ஆகவே, கர்மத்தின் பயனைச் சார்ந்திருப்பதைத் துறப்பது என்றால், பற்றையும் த்யாகம் செய்யவேண்டும் என்பது தானாகவே சேரும். ஒவ்வோர் இடத்திலும் எல்லாச் சொற்களையும் சேர்த்துச் சொல்ல வேண்டுமென்ற கட்டாயமில்லை. விட்டுப்போன இடங்களில் மற்ற இடங்களில் சொல்லப்பட்டனவற்றையும் சேர்த்து எடுத்துக் கொள்ளவேண்டும். கர்மத்தின் பயனை த்யாகம் செய்யவேண்டுமென்று சொன்ன இடத்தில் பற்றை த்யாகம் செய்வது பற்றிய பேச்சு இல்லையானால் *(2/51; 18/11)*, அங்குப் பற்றின் த்யாகத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். அதுபோலப் பற்றை த்யாகம் செய்யச் சொல்லுமிடத்தில், கர்மத்தின் பயனை த்யாகம் செய்யவேண்டுமென்று சொல்லாவிட்டால் *(3/19; 6/4)*, அங்கே பயனை த்யாகம் செய்வதையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

கேள்வி: 'கர்மத்தின் பயனைச் சாராமல் இருப்பது' என்றால் என்ன பொருள்?

பதில்: மனைவி, மக்கள், செல்வம், மானம், பெருமை முதலிய இவ்வுலக ஸுகங்கள், ஸ்வர்கம் முதலிய பரலோக போகங்கள் எத்தனை உண்டோ, அத்தனையும், 'கர்மபயன்' என்ற சொல்லில் அடங்கும். ஸாதாரண மனிதன் என்ன காரியம் செய்தாலும், ஏதாவது ஒரு பயன் கருதித்தான் செய்கிறான். இதுதான் ஆச்ரயம் ஆகும். ஆகவே, அவனுடைய செயல்கள், திரும்பத் திரும்பப் பல பிறவிகளை எடுக்கவே வழி செய்கின்றன. ஆக, இவ்வுலக, பரலோக போகங்கள் அனைத்தையும் அநித்யமானவை என்றும், கணநேரத்தவை என்றும், துக்கத்திற்குக் காரணமானவை என்றும் அறிந்து, அவற்றில் மமகாரம், பற்று, பயனில் கருத்து எல்லாவற்றையும் த்யாகம் செய்வதே, 'கர்மத்தின் பயனைச் சாராமல் இருப்பது' என்பது ஆகும்.

கேள்வி: செய்யவேண்டிய கர்மங்கள் யாவை? அவற்றை எப்படிச் செய்யவேண்டும்?

பதில்: தத்தம் வர்ணாசிரமத்திற்கு ஏற்றவாறு, அறநூல்களில் விதிக்கப்பட்ட கர்மங்கள் அன்றாடம் செய்யப்பட வேண்டியவை. விசேஷ நாட்களில் செய்ய வேண்டியவைகளான யாகம், தானம், தவம், உடலைப் பேணுவதற்கான காரியம், மேலும் உலக ஸேவைக்கான நற்காரியம் எல்லாமே செய்யப்பட வேண்டிய கர்மங்கள். அவற்றை முறைப்படி, அவரவர் தகுதிக்கு ஏற்றபடி, சோம்பலின்றி, சக்திக்கேற்றவாறு, செய்யத்தான் வேண்டும் என்ற எண்ணத்துடன் உற்சாகமாக எப்பொழுதும் செய்து கொண்டே இருக்கவேண்டும்.

கேள்வி: 'அவன் தான் ஸந்யாஸியும், யோகியும் ஆவான்' என்று சொல்வதன் கருத்து என்ன?

பதில்: இப்படிப்பட்ட கர்மயோகி எல்லா ஸங்கல்பங்களையும் துறந்து விடுகிறான். ஸாங்க்ய-கர்மயோகமாகிற இரண்டு நிஷ்டைகளுடைய இறுதிப் பயனாகிய உண்மையான ஞானத்தை அடைகிறான். ஆகவே, அவன் ஸந்யாஸி-யோகி ஆகிய இருவரின் தன்மையுள்ளவனாகக் கருதப்படுகிறான் என்ற கருத்தை பகவான் சுட்டிக்காட்டுகிறார்.

கேள்வி: 'ந நிரக்நி:' (அக்னி கார்யங்களை மட்டும் துறப்பவன் ஸந்யாஸி ஆகமாட்டான்) என்பதன் பொருள் என்ன?

பதில்: அக்னியில் செய்யவேண்டிய யாகம் முதலிய கர்மங்களைத் துறந்து, துறவறம் மேற்கொள்பவனை 'நிரக்நி:' என்கிறார். "அக்னியைத் துறந்து ஸந்யாஸத்தை ஏற்றுக் கொண்டும்கூட, ஞானயோக (ஸாங்க்யயோகம்) இலக்கணத்தின்படி ஒழுகாதவன் உண்மையில் ஸந்யாஸி அல்லன். ஏனென்றால், அவன் அக்னியை மட்டும்தான் துறந்துள்ளானே தவிர, எல்லாச் செயல்களிலும், 'தானே கர்த்தா' என்ற அபிமானத்தையும், மமகாரம், பற்று, தேஹாபிமானம் (உடற்பற்று) ஆகியவற்றையும் விட்டுவிடவில்லை" என்ற கருத்தை இங்கு, 'ந நிரக்நி:' என்று கூறுவதன் மூலம் பகவான் சுட்டிக்காட்டுகிறார்.

கேள்வி: 'ந ச அக்ரிய:' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: எல்லாச் செயல்களிலிருந்தும் முற்றிலுமாக ஓய்வு பெற்று, த்யானத்தில் அமர்ந்தவனை 'அக்ரிய:' என்று கூறுவர். எல்லாச் செயல்களையும் விட்டு த்யானத்தில் அமர்ந்திருக்கும்போது கூட, எவனது உள்ளத்தில் அஹங்காரம், மமகாரம், ராகம், த்வேஷம், ஆசை முதலிய மாசுகள் உள்ளனவோ, அவன் உண்மையில் யோகி அல்லன். வெளிப்படையாகச் செயல்களில் ஈடுபடவில்லையே தவிர, மமகாரம், அபிமானம், பற்று, ஆசை, க்ரோதங்கள், இவற்றை விடவில்லையே, ஆகவே அவன் கர்மயோகி ஆகமாட்டான்.

கேள்வி: அக்னி கார்யங்களுக்கும், எல்லாச் செயல்களுக்கும் தானே கர்த்தா என்ற அபிமானத்தையும், மமகாரம், பற்று இவற்றையும் முற்றிலுமாகத் துறந்துவிட்டு ஸந்யாஸ ஆசிரமத்தை மேற்கொண்டு, ஞானயோக(ஸாங்க்யயோக)த்திற்குரிய இலக்கணங்கள் (5/8,9,13,24,25,26) அனைத்தும் அமையப் பெற்றவன் ஸந்யாஸி இல்லையா?

பதில்: ஏன் இல்லை? இத்தகைய மஹாபுருஷனே லக்ஷ்ய ஸந்யாஸி. இவ்விதமாக ஸந்யாஸிகளின் பெருமையைக் கூறுவதற்காகத்தான், ஞானயோகிக்குரிய இலக்கணங்கள் பொருந்திய மற்ற ஆசிரமத்தில் உள்ளவனையும் 'ஸந்யாஸி' என்று கூறிப் பெருமைப்படுத்துகிறார். இவ்வாறு அவனை ஸந்யாஸி என்று கூறுவதைக் காட்டிலும் வேறு என்ன பெருமை வேண்டும்?

கேள்வி: அதுபோல எல்லாச் செயல்களையும் துறந்து, இடைவிடாமல் பகவானுடைய த்யானத்தில் நிலைபெற்ற உள்ளத்தில், மமகாரம், ராகம், த்வேஷம், காமம், க்ரோதம் முதலியவற்றை அறவே நீக்கி எல்லா ஸங்கல்பங்களையும் துறந்த ஸந்யாஸி யோகி ஆகமாட்டானா?

பதில்: இப்படி எல்லா ஸங்கல்பங்களையும் துறந்த மஹாத்மா லக்ஷ்ய யோகிதான்.

பொருத்தம்: முதல் ச்லோகத்தில் பகவான் கர்மபயனைச் சாராமல், கர்மத்தைச் செய்பவனை ஸந்யாஸி என்றும், யோகி என்றும் சொன்னார் ஸந்யாஸமும், யோகமும் வெவ்வேறு நிலையாக இருக்குமேயானால் ஸாதகன் அவ்விரண்டு நிலைகளையும் ஒருங்கே எப்படி அடைய முடியும் என்ற ஐயம் எழுகிறது. இந்த ஐயத்தை நீக்குவதற்காக, இரண்டாவது ச்லோகத்தில் ஸந்யாஸமும், யோகமும் ஒன்றுதான் என்று நிரூபிக்கிறார்—

यं सन्न्यासमिति प्राहुर्योगं तं विद्धि पाण्डव।
न ह्यसन्न्यस्तसङ्कल्पो योगी भवति कश्चन॥ २॥

யம் ஸந்ந்யாஸமிதி ப்ராஹுர்யோகம் தம் வித்தி பாண்டவ ।
ந ஹ்யஸந்ந்யஸ்தஸங்கல்போ யோகீ பவதி கஶ்சந ॥ 2 ॥

பாண்டவ – அர்ஜுன! **யம்** – எதை, **ஸந்ந்யாஸம் இதி** – ஸந்யாஸம் என்று, **ப்ராஹு:** – கூறுகிறார்களோ, **தம்** – அதையே (நீ), **யோகம்** – யோகம் (என்று), **வித்தி** – தெரிந்து கொள். **ஹி** – ஏனெனில், **அஸந்ந்யஸ்த ஸங்கல்ப:** – ஸங்கல்பங்களைத் துறக்காத, **கஶ்சந** – எவனும், **யோகீ** – யோகியாக, **ந பவதி** – ஆகமாட்டான்.

அர்ஜுன! எதை ஸந்யாஸம் என்று கூறுகிறார்களோ, அதையே நீ யோகம் என்று தெரிந்து கொள். ஏனெனில் ஸங்கல்பங்களைத் துறக்காத எவனும் யோகியாக ஆகமாட்டான்.

கேள்வி: எதை 'ஸந்யாஸம்' என்று கூறுகிறார்களோ, அதையே 'யோகம்' என்று தெரிந்து கொள் – என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: இங்கு 'ஸந்யாஸம்' என்ற சொல்லுக்குப் பொருளாவது: உடல், புலன்கள், மனம் இவற்றால் ஆற்றப்படும் எல்லாச் செயல்களிலும், 'தான் கர்த்தா' என்ற எண்ணத்தை அழித்துப் பரமாத்மாவிடம் மட்டுமே இரண்டற்ற நிலைபெறுதல். இது ஸாங்க்ய யோகத்தின் முற்றிய நிலை. 'யோகம்' என்ற சொல்லுக்கு மமகாரம், பற்று, ஆசை இவற்றைத் துறந்து பின்பற்றப்படும் கர்மயோகத்தின் முற்றிய நிலையான 'நைஷ்கர்ம்ய ஸித்தி' என்று பொருள். இரண்டிலும், 'ஸங்கல்பங்கள் அறவே அற்றுப் போகின்றன' என்ற நிலையில், இரண்டும் ஒன்றுதான். ஸாங்க்யயோகி எந்தப் பரப்ரம்ம பரமாத்மாவை அடைகிறானோ, கர்மயோகியும் அதே பரப்ரம்ம பரமாத்மாவை அடைகிறான். இவ்விதம், இரண்டு நிஷ்டைகளிலும் எல்லா ஸங்கல்பங்களையும் முற்றிலும் துறப்பதும், பயனும் ஒன்றாகவே அமைகின்றன.

கேள்வி: 'ஸங்கல்பம்' என்றால் என்ன? அதைத் துறப்பது எப்படி?

பதில்: மமகாரத்துடனும், ராக–த்வேஷத்துடனும் உலகியல் பொருட்கள்பால் சிந்தனை செய்யும் அந்தக்கரண வ்ருத்திதான் (உள்ளத்தின் போக்கு) ஸங்கல்பம். இந்த மனப்பாங்கை அறவே துறப்பதுதான் 'ஸந்யாஸம்'.

கேள்வி: 'ஸங்கல்பத்தைத் துறக்காத எவனும் யோகி ஆகமாட்டான்' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: ஸங்கல்பங்களை முழுமையாக த்யாகம் செய்யாத வரையில், மனம் பரமாத்மாவிடம் முழுமையாக லயிக்காது. ஆகவே, ஸங்கல்பங்களை த்யாகம் செய்வது எல்லோருக்கும் அவசியம். தனியான இடத்தில் அமர்ந்து ஆஸனம், ப்ராணாயாமம் மூலம் ஒரு ஸாதகன் பரமாத்ம த்யானப் பயிற்சியைச் செய்கிறான். இன்னொரு ஸாதகன், எப்பொழுதும் பகவானுக்காகவே பகவானுடைய ஆணையென்று, கடமைகளை நிஷ்காமமாகச் செய்கிறான். மூன்றாவது ஸாதகன் அவ்வப்போது பகவானுடைய த்யானப் பயிற்சியையும் செய்கிறான்; நிஷ்காமமாகக் கடமைகளையும் ஆற்றுகிறான். இம்மூவரில் ஒருவர் கூட ஸங்கல்பங்களை அறவே ஒழிக்காவிட்டால், அவர்களை யோகாரூடர்கள் என்றோ, யோகி என்றோ சொல்ல முடியாது. எல்லாக் கர்மங்களிலும், பொருட்களிலும் பற்றற்று, முழுமையாக ஸங்கல்பங்களை த்யாகம் செய்கின்றபோதுதான் ஸாதகன் யோகாரூடனாக ஆக முடியும். ஸாங்க்யயோகியும் மனதில் தோன்றும் ஸங்கல்பங்களை அறவே அற்றுப் போகச் செய்யும்போதுதான், உண்மையான ஸந்யாஸி ஆக முடியும். இதற்காகத்தான் ச்லோகத்தின் முதல் பாதியில் 'இரண்டையும் ஒன்றாகக் கருதவேண்டும்' என்று சொன்னார்.

பொருத்தம்: **கர்மயோகத்தின் பெருமையைச் சொல்லி, அதற்குரிய ஸாதனையைக் கூறுகிறார் —**

आरुरुक्षोर्मुनेर्योगं कर्म कारणमुच्यते।
योगारूढस्य तस्यैव शमः कारणमुच्यते॥ ३॥

ஆருருக்ஷோர்முநேர்யோக₃ம் கர்ம காரணமுச்யதே ।
யோக₃ாரூட₄ஸ்ய தஸ்யைவ ஶம: காரணமுச்யதே ॥ 3 ॥

யோக₃ம் – யோகத்தை, **ஆருருக்ஷோ:** – கடைப்பிடித்து முன்னேற விரும்புகின்ற, **முநே:** – பரம்பொருளைச் சிந்தித்திருக்கின்ற மனிதன் (யோகத்தை அடைவதற்கு), **கர்ம** – நிஷ்காமமாகக் கர்மங்களைச் செய்வதுதான், **காரணம்** – காரணம் (என்று), **உச்யதே** – கூறப்படுகிறது. (இவ்விதம் யோகாரூடன் ஆனபிறகு), **தஸ்ய** – அந்த, **யோக₃ாரூட₄ஸ்ய** – யோகத்தைக் கடைப்பிடிப்பவனுக்கு, **ஶம: ஏவ** – எவ்விதமான ஸங்கல்பங்களும் இல்லா திருத்தல்தான், **காரணம்** – (மேன்மையடைவதற்குக்) காரணம் (என்றும்), **உச்யதே** – கூறப்படுகிறது.

யோகத்தைக் கடைப்பிடித்து முன்னேற விரும்புகின்ற பரம்பொருளைச் சிந்தித்திருக்கின்ற மனிதன் யோகத்தை அடைவதற்கு நிஷ்காமமாகக் கர்மங்களைச் செய்வதுதான் காரணம் என்று கூறப்படுகிறது. இவ்விதம் யோகாரூடன் ஆனபிறகு அந்த யோகத்தைக் கடைப் பிடிப்பவனுக்கு எவ்விதமான ஸங்கல்பங்களும் இல்லாதிருத்தல்தான் மேன்மையடைவதற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

கேள்வி: *'முநே:' என்ற சொல் யாரைக் குறிக்கிறது?*

பதில்: பரமாத்மாவை அடைவதற்கான வழியாக அமைந்துள்ள யோகாரூட நிலையை அடைய விரும்புகிற மனிதனை 'முநி:' என்ற அடைமொழி மூலம் குறிப்பிடுகிறார். ஆகவே, இதிலிருந்து பரமாத்ம ஸ்வரூபத்தைச் சிந்தனை செய்கிற இயல்புடைய – மனனம் செய்கின்ற ஸாதகனை 'முநி:' என்று தெரிந்து கொள்ளவேண்டும்.

கேள்வி: *யோகாரூட நிலையை அடைவதற்கு எந்தவிதமான கர்மம் காரணம் ஆகும்?*

பதில்: வர்ணம், ஆசிரமம், சூழ்நிலை இவற்றிற்கேற்ப அறநூல்களில் சொல்லப்பட்ட கர்மங்கள் எல்லாவற்றையும், அவற்றின் பயனையும், பற்றையும் துறந்து செய்தால், அது யோகாரூட நிலையை அடைவதற்குக் காரணமாக முடியும்.

கேள்வி: *யோகாரூட நிலையை அடைவதற்குக் கர்மங்களை ஏன் காரணமாகக் கூறவேண்டும்? கர்மங்கள் செய்வதை விட்டுவிட்டுத் தனிமையில் அமர்ந்து பகவானை த்யானிப்பது என்ற பயிற்சியினாலும் யோகாரூட நிலையை அடையலாமே?*

பதில்: தனிமையில் உட்கார்ந்து பரமாத்ம த்யானப் பயிற்சி செய்வதும் ஒருவிதமான கர்மம் தானே! இப்படி த்யானப் பயிற்சி செய்பவனும், உடல் சுத்தி, ஸ்நானம், உண்பது, உடுப்பது முதலிய உடலியல் செயல்களையும் செய்யத்தானே வேண்டும்; ஆகவே, தனது வர்ணம், ஆசிரமம், தகுதி, நிலைமை ஆகியவற்றிற்கு அனுகூலமாக, எந்த நேரத்தில், எந்தக் கடமையை ஆற்ற வேண்டுமோ, அதன் பயனையும், பற்றினையும் அகற்றி, அதைச் செய்வதுதான் யோகாரூட நிலையை அடைவதற்குக் காரணம் ஆகும் என்று சொல்வது சரிதான். 3/4ல் கூட 'எந்த ஒரு மனிதனும் கர்மங்களை ஆற்றாமல் நைஷ்கர்ம்ய நிலையை அதாவது யோகாரூட நிலையை அடைய முடியாது' என்று சொல்லியிருக்கிறார்.

கேள்வி: *இங்கு 'ஶம:' என்ற சொல்லுக்குக் கர்மங்களை ஆற்றாமல் அடங்கியிருப்பது என்று பொருள் கூறாமல் ஸங்கல்பங்களே இல்லாமல் போவது என்று கூறுவது எப்படிப் பொருந்தும்?*

பதில்: இரண்டாவது, நான்காவது ச்லோகங்களில் ஸங்கல்பங்களை த்யாகம் செய்வது என்ற பேச்சுத்தான் வருகிறது. 'ஶம:' என்ற சொல்லுக்கு மனதை வசப்படுத்தி,

அமைதி அடையச் செய்வது என்ற பொருளும் உண்டு. 18/42ல் 'ஶம:' என்ற சொல் இப்பொருளில்தான் வருகிறது. மனம் வசப்பட்டு அமைதி அடைந்தால்தான் ஸங்கல்பங்கள் முற்றிலுமாக அழியும். இதுவன்றிக் கர்மங்களை முற்றிலுமாகத் துறப்பது என்பதும் நடக்கக் கூடியதன்று. ஆகவே, இங்கு 'ஶம:' என்ற சொல்லுக்கு ஸங்கல்பங்களைத் துறப்பது என்ற பொருள்தான் பொருந்தும்.

கேள்வி: 'யோகாரூடனுடைய ஶமம் என்பது கர்மங்களுக்குக் காரணம்' என்று சொன்னால் என்ன தவறு?

பதில்: 'ஶம:' என்ற சொல் எல்லா ஸங்கல்பங்களும் அற்றுப் போன அமைதியைக் குறிப்பது ஆகும். அது கர்மத்திற்குக் காரணம் ஆகமுடியாது. யோகாரூடன் செய்யும் செயல்களுக்கெல்லாம், அவனுடையதும், உலகத்தாருடையதுமான ப்ராரப்தம்தான் காரணம். ஆகவே 'ஶமம்' கர்மத்திற்குக் காரணம் என்று கூறுவது யுக்திக்குப் பொருந்தாது; பரமாத்மாவை அடைவதற்குக் காரணம் என்று கூறுவதுதான் சரி.

பொருத்தம்: முன் ச்லோகத்தில் யோகாரூடன் என்ற சொல் வருகிறது. அவனைப் பற்றிய இலக்கணத்தை அறிய விருப்பம் ஏற்படுவதால் அவனுடைய இலக்கணம் கூறுகிறார்—

यदा हि नेन्द्रियार्थेषु न कर्मस्वनुषज्जते।
सर्वसङ्कल्पसन्न्यासी योगारूढस्तदोच्यते॥ ४॥

யத₃ா ஹி நேந்த்₃ரியார்தே₂ஷு ந கர்மஸ்வநுஷஜ்ஜதே ।
ஸர்வஸங்கல்பஸந்ந்யாஸீ யோக₃ாரூட₄ஸ்ததே₃ாச்யதே ॥ 4 ॥

யத₃ா – எப்பொழுது, **இந்த்₃ரியார்தே₂ஷு** – புலன்களுக்குரிய போகப் பொருட்களில், **ந அநுஷஜ்ஜதே** – பற்றுக் கொள்வதில்லையோ, **கர்மஸு ஹி** – கர்மங்களிலும், **ந (அநுஷஜ்ஜதே)** – பற்றுக் கொள்வதில்லையோ, **தத₃ா** – அப்பொழுது, **ஸர்வஸங்கல்ப ஸந்ந்யாஸீ** – எல்லா ஸங்கல்பங்களையும் துறந்தவனான அவன், **யோக₃ாரூட₄:** – யோகரூடன் (என்று), **உச்யதே** – கூறப்படுகிறான்.

எப்பொழுது புலன்களுக்குரிய போகப் பொருட்களில் பற்றுக் கொள்வதில்லையோ, கர்மங்களிலும் பற்றுக் கொள்வதில்லையோ, அப்பொழுது எல்லா ஸங்கல்பங்களையும் துறந்தவனான அவன் யோகாரூடன் என்று கூறப்படுகிறான்.

கேள்வி: இங்கே புலன்களுக்குரிய போகப்பொருட்களிலும், கர்மங்களிலும் பற்றை அகற்றுவது பற்றி மட்டுமே கூறுகிறார். 'ஆசையை அகற்றவேண்டும்' என்று சொல்லவில்லையே! இதற்குக் காரணம் என்ன?

பதில்: பற்றிலிருந்து ஆசை பிறக்கிறது (2/62). புலன்களுக்குரிய போகப் பொருட்களிலும், கர்மங்களிலும் பற்று அகன்றுவிட்டால் ஆசை தானாகவே அகன்றுவிடும். காரணம் இல்லாமல் காரியம் நடைபெறாது. ஆகவே பற்றை அகற்றுவது என்று சொல்லும்போது ஆசையை அகற்றுவது என்பதையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

கேள்வி: 'ஸர்வ ஸங்கல்ப ஸந்யாஸம்' என்றால் என்ன? எல்லா ஸங்கல்பங்களையும் துறந்த பிறகு, போகப் பொருட்களைத் தீண்டுவதோ, கர்மங்களைச் செய்வதோ எப்படி நடக்கும்?

பதில்: 'ஸங்கல்பங்களைத் துறப்பது' என்றால், மனதில் எண்ணத் துடிப்பே உண்டாகாது என்று பொருள் சொன்னால், யோகாரூட நிலையைப் பற்றி விவரிக்கவே முடியாது. அந்த நிலையை அடையாதவன், அதனுடைய தத்வத்தை அறியமாட்டான். எவன் இந்தத் தத்வத்தை அறிந்துவிட்டானோ, அவனால் அதைப் பற்றிச் சொல்ல முடியாது. பிறகு

யார்தான் வர்ணிப்பர்? இதைத் தவிர, எந்த மாமனிதனுக்கு ஆசை, ஸங்கல்பங்கள் இல்லாமலேயே எல்லாக் கர்மங்களும் செவ்வனே நடைபெறுகின்றனவோ, அவனே 'பண்டிதன்' என்று 4/19ல் தெளிவாகவே கூறினார். அங்கே புகழப்பட்ட மாமனிதன் யோகாரூடன் அல்லன் என்று கூற முடியாது. ஆகவே ஸங்கல்பம் இல்லாவிட்டால் செயல்பட முடியாது என்பது பொருள் அன்று. ஸங்கல்பங்களைத் துறப்பது என்றால், 'மனதில் எண்ணத் துடிப்பும், மன விழிப்பும் இரா' என்று பொருள் அன்று. மமகாரம், பற்று, வெறுப்பு இவற்றுடன் உலகியல் விஷயங்களைச் சிந்தனை செய்வதுதான் ஸங்கல்பம் ஆகும். இப்படிப்பட்ட ஸங்கல்பங்களை முழுமையாக த்யாகம் செய்வதுதான் 'ஸர்வ ஸங்கல்ப ஸந்யாஸம்' ஆகும். இப்படிப்பட்ட த்யாகம் கர்மங்களைச் செவ்வனே செய்வதற்குத் தடை ஆகாது. எவனுடைய புத்தியில் பகவானைத் தவிர வேறு எதனுடைய இருப்பும் தங்கி நிற்க வழி இல்லையோ, அவன் பகவத் பாவனையுடன் பொருட்களை ஏற்கிறான், த்யாகம் செய்கிறான். அச்செயலை ஸங்கல்பத்தினால் உண்டானதாகக் கூற முடியாது. இப்படிப்பட்ட செயல் ஞானிகளான மஹாத்மாக்களுக்கும் செய்ய இயலும். 'எந்தவிதமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தாலும், என்னிடமே செயல்படுகிறான்' என்று 6/31ல் இத்தகைய மஹாத்மா பற்றியே பகவான் சொல்கிறார்.

கேள்வி: மனிதன் போகங்களை அடைவதற்காகவே கர்மங்களைச் செய்கிறான், அவற்றில் ஈடுபடுகிறான். எனவே, போக விஷயங்களில் பற்றற்றிருந்தால் மட்டும் போதாதா? அவற்றைப் பெற்றுத் தருகின்ற கர்மங்களிலும் பற்றற்று இருக்கவேண்டும் என்று கூறுவதன் அவசியம் என்ன?

பதில்: போகங்களில் பற்று இல்லாவிட்டாலும், கர்மங்களில் பற்று இருக்கக் கூடும். பயன் விளைவிக்காத, வீணான செயல்களில் மனிதர்கள் பற்றுக் கொண்டிருப்பதையும் காண்கிறோம். ஆகவே, பற்று முற்றிலுமாக அற்றுப் போக வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக இவ்வாறு சொல்லத்தான் வேண்டும்.

பொருத்தம்: பகவானை அடைவதற்கு உபாயமான யோகாரூட நிலையைப் பற்றிக் கூறிவிட்டு, அதை அடைவதற்கான உற்சாகத்தைத் தந்து கொண்டே, மனிதன் செய்யவேண்டிய கடமைகள் என்னவென்று பகவான் கூறுகிறார்—

उद्धरेदात्मनात्मानं नात्मानमवसादयेत् ।
आत्मैव ह्यात्मनो बन्धुरात्मैव रिपुरात्मनः ॥ ५ ॥

உத்₃த₄ரேத₃ாத்மநாத்மாநம் நாத்மாநமவஸாத₃யேத் ।
ஆத்மைவ ஹ்யாத்மநோ ப₃ந்து₄ராத்மைவ ரிபுராத்மந: ॥ 5 ॥

ஆத்மநா – தானே, **ஆத்மாநம்** – தன்னை, **உத்₃த₄ரேத்** – (ஸம்ஸாரக் கடலிலிருந்து) உயர்த்திக் கொள்ள வேண்டும். **ஆத்மாநம்** – தன்னை(த்தானே), **ந அவஸாத₃யேத்** – வீழ்த்திக் கொள்ளக்கூடாது. **ஹி** – ஏனெனில், **ஆத்மா ஏவ** – தானேதான், **ஆத்மந:** – தனக்கு, **ப₃ந்து₄:** – நண்பன். (மேலும்), **ஆத்மா ஏவ** – தானேதான், **ஆத்மந:** – தனக்கு, **ரிபு:** – பகைவன்.

தானே தன்னை ஸம்ஸாரக் கடலிலிருந்து உயர்த்திக் கொள்ள வேண்டும் – தன்னைத்தானே வீழ்த்திக் கொள்ளக்கூடாது. ஏனெனில் தனக்குத் தானேதான் நண்பன். மேலும் தனக்குத் தானேதான் பகைவன்.

கேள்வி: 'தானே தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும்' என்று கூறுவதன் கருத்து என்ன? 'தானே தன்னை வீழ்த்திக் கொள்வது' என்றால் என்ன?

பதில்: ஜீவன் பன்னெடுங்காலமாக அஞ்ஞானத்திற்கு ஆட்பட்டு, துன்பமயமான ஸம்ஸாரக் கடலில் சுழன்று கொண்டிருக்கிறான். நல்லவும், தீயவுமான பலவிதப் பிறவிகளில்

சுழன்று பயங்கரமான பற்பல துன்பங்களை அனுபவிக்கிறான். ஜீவன் துன்பப்படுவதைப் பார்த்து, அருள்மிக்கவரான பகவான், தேவர்களுக்கும் கிட்டாததும், ஸாதனைகளுக்குப் பயன்படுவதுமான மனிதப்பிறவியை அந்த ஜீவனுக்கு அளித்து, ஓர் அரிய வாய்ப்பைத் தருகிறார். அவன் விரும்பினால், ஸாதனைகள் புரிந்து, ஒரே பிறவியில் ஸம்ஸாரக் கடலிலிருந்து விடுபட்டுப் பரமானந்த ஸ்வரூபமான பரமாத்மாவை எளிதாக அடைந்துவிடலாம். ஆகவே, மனிதனாகப் பிறந்தவன் இந்த அருமையான வாய்ப்பை வீணடிக்கக் கூடாது. கர்மயோகம், ஸாங்க்யயோகம், பக்தியோகம் முதலியவற்றில் ஏதாவது ஒரு ஸாதனையில் ஈடுபட்டு, தன் பிறவியைப் பயனுள்ளதாகச் செய்து கொள்ள வேண்டும். இதுதான் 'தன்னைத் தானே உயர்த்திக் கொள்வது' ஆகும்.

இதற்கு மாறாக ராக-த்வேஷங்கள், காம-க்ரோதங்கள், பேராசை, மோஹம் முதலிய மாசுகளில் சிக்கிப் பலவித இழி செயல்களைச் செய்து, அவற்றின் பயனாக மனிதப்பிறவியின் முக்கியக் குறிக்கோளான, 'பகவானை அடைவது' என்பதை விட்டு, பன்றி, நாய் முதலிய பிறவிகளுக்குத் தன்னை ஆளாக்கிக் கொள்வதுதான், 'தன்னை வீழ்த்திக் கொள்வதாகும்'. ஈசாவாஸ்ய உபநிஷத்தில், இப்படிப்பட்ட செயல் தற்கொலைக்கு ஒப்பாகும் என்று சொல்லப்படுகிறது.‡

இங்கு பகவான் தன்னைத் தானே உயர்த்திக் கொள்ள வேண்டுமென்று சொல்லி, "உன்னுடைய ப்ராரப்தம் கெட்டதாக இருக்கிறது என்பதால், உனக்கு மேன்மை கிடைக்காது என்று எண்ணிவிடாதே; உன்னுடைய மேன்மையும், வீழ்ச்சியும் ஊழ்வினையில் இல்லை; உன் கையில்தான் இருக்கிறது. ஸாதனை புரிந்து தாழ்வு என்ற படுகுழியிலிருந்து வெளிப்பட்டு மேன்மையின் உச்சியை அடைவாய்" என்று ஜீவனுக்கு ஆறுதல் கூறுகிறார். ஆகவே, மனிதன் மிகுந்த எச்சரிக்கையுடனும், முயற்சியுடனும் எப்பொழுதும் தன் மேன்மைக்காக இப்பொழுது இருக்கும் நிலையிலிருந்து மேலே உயர்வதற்காக, ராக-த்வேஷம், காம-க்ரோதங்கள், போகங்கள், சோம்பல், வீணான செயல்களில் ஈடுபடுதல், பாவச் செயல்கள் - இவற்றை அறவே விட்டொழித்து, புலனடக்கம், மனவடக்கம், ஸஹிப்புத்தன்மை, விவேகம், வைராக்யம் முதலிய நற்பண்புகளை வளர்த்துக் கொண்டு, போக நினைவுகளை அகற்றி, ச்ரத்தையுடனும், ப்ரேமையுடனும் பகவானையே சிந்தித்து, அதற்கு உதவியாக பஜனை, த்யானம், ஸேவை-ஸத்ஸங்கம் முதலியவற்றில் ஈடுபட்டு, பகவானை அடைய ஸாதனை புரிய வேண்டும். பகவானை அடையும்வரை ஒருகணம்கூட, கொஞ்சம்கூடப் பின்வாங்காமல், விடாமுயற்சியோடு செயல்படவேண்டும். பகவானுடைய அருளின் பலத்தினால் உறுதியும், வீரமும், திடநிச்சயமும் கொண்டு, நழுவாமல், மேலும் மேலும் மேன்மையடையும் வழியில் முன்னேறிக் கொண்டிருக்க வேண்டும். மனிதன் தன் ஸ்வபாவத்தையும், செயலையும் எவ்வளவு சீர்திருத்திக் கொள்கிறானோ, அவ்வளவு உயர்ந்துவிடுவான். ஸ்வபாவத்தையும், செயலையும், தூய்மைப்படுத்துவதே 'உயர்த்திக் கொள்ளுதல்' ஆகும். இதற்கு மாறாக ஸ்வபாவத்திலும், செயலிலும் குற்றங்களை வளர்ப்பது வீழ்ச்சிக்குக் காரணம் ஆகும்.

கேள்வி: 'மனிதன் தனக்குத்தானே நண்பன், தனக்குத்தானே பகைவன்' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: மனிதன் உலகியலில் பழகுவதால், பற்றுக் கொண்டு யாரை நண்பர்களாக ஏற்கிறானோ, அவர்கள் பந்தத்திற்குக் காரணம் ஆவதால், உண்மையில் நண்பர்களே அல்லர். ஸாதுக்கள், மஹாத்மாக்கள், தன்னலமில்லாத ஸாதகர்கள் - இவர்கள்தான் பந்தத்திலிருந்து

---

‡ அஸுர்யா நாம தே லோகா அந்தே₄ந தமஸாவ்ருதா: ।
தாꣳஸ்தே ப்ரேத்யாபி₄க₃ச்ச₂ந்தி யே கே சாத்மஹநோ ஜநா: ॥

(ஈஶோபநிஷத்₃ 3)

அவர்கள் நாய், பன்றி முதலிய பிறவிகளிலோ, நரகம் என்கிற அஸுரத்தன்மையுடைய லோகங்களிலோ, அஞ்ஞானமாகிற இருளினால் மூடப்படுகிறார்கள். தற்கொலைக்கொப்பான இந்தச் செயல்களில் ஈடுபடுபவர்கள் இறந்த பிறகு அஸுர லோகத்தை அடைவார்கள்.

விடுபடுவதற்கு உதவியாக இருப்பார்கள். இவர்கள்தாம் உண்மையான நண்பர்கள். ஆனால், முதலில் எவன் மனப்பூர்வமாக அவர்களிடம் ச்ரத்தையும், அன்பும் கொண்டு அவ்விதமே, அவர்களை உண்மையான நண்பர்களாகக் கருதுகிறானோ, அவர்களால் சொல்லப்பட்ட வழியில் செல்கிறானோ, அப்போதுதான் அவர்களுடைய நட்புறவு அவனுக்குக் கிடைக்கும். இந்த ரீதியில் பார்க்கும்போதுதான், தனக்குத் தானேதான் நண்பனாக முடியும் என்பது புரியும். யாரையாவது தன் மனதில் 'பகைவன்' என நினைத்தால், அதனால் தனக்கே கேடு விளையும் என்பதும் புரியும். ஏனெனில் யாரும், எவருக்கும் ஆன்மிக நிலையில் கேடு விளைவிக்க முடியாது. ஆகையால், தானேதான் தனக்குப் பகைவனாக ஆகிறான். உண்மையில் தன் மேன்மைக்காகப் பாடுபடுபவன் தனக்குத் தானே நண்பன். அதற்கு முரணாக நடப்பவன் தனக்குத் தானே பகைவன். தன்னைத் தவிர வேறு நண்பனோ, பகைவனோ இல்லை.

பொருத்தம்: **மனிதன் தனக்குத் தானே நண்பன்; தனக்குத் தானே பகைவன் என்று** மேலே சொன்னார். இதனைத் தெளிவுபடுத்துவதற்காக, எந்த இலக்கணங்களோடு **கூடியவன் தனக்குத் தானே நண்பன்;** எந்த இலக்கணங்களோடு **கூடியவன் தனக்குத் தானே பகைவன்** என்பதைக் கூறுகிறார்—

बन्धुरात्मात्मनस्तस्य येनात्मैवात्मना जितः ।
अनात्मनस्तु शत्रुत्वे वर्तेतात्मैव शत्रुवत् ॥ ६ ॥

பந்து₄ராத்மாத்மநஸ்தஸ்ய யேநாத்மைவாத்மநா ஜித: ।

அநாத்மநஸ்து ஶத்ருத்வே வர்தேதாத்மைவ ஶத்ருவத் ॥ 6 ॥

யேந ஆத்மநா – எந்த ஜீவாத்மாவினால், **ஆத்மா** – மனம், புலன்களுடன் கூடிய உடல், **ஜித:** – அடக்கி ஆளப்பட்டிருக்கிறதோ, **தஸ்ய ஆத்மந:** – அந்த ஜீவாத்மாவிற்கு, **ஆத்மா ஏவ** – தனக்குத் தானே (அவனே), **பந்து₄:** – நண்பன். **து** – ஆனால், **அநாத்மந:** – மனம், புலன்களுடன் கூடிய உடலை அடக்கி ஆளாதவன், **ஆத்மா ஏவ** – தனக்குத் தானே, **ஶத்ருவத்** – பகைவனைப்போல, **ஶத்ருத்வே** – பகைமை (தீமை) செய்வதில், **வர்தேத** – செயல்படுவான்.

எந்த ஜீவாத்மாவினால் மனம், புலன்களுடன் கூடிய உடல் அடக்கி ஆளப்பட்டிருக் கிறதோ, அந்த ஜீவாத்மா தனக்குத் தானே நண்பன். ஆனால் மனம், புலன்களுடன் கூடிய உடலை அடக்கி ஆளாதவன் தனக்குத் தானே பகைவனைப்போல பகைமை (தீமை) செய்வதில் செயல்படுவான்.

கேள்வி: மனம், புலன்களுடன் கூடிய உடலை அடக்கியாள்வது என்றால் என்ன? அவற்றை எவ்வாறு அடக்கியாள முடியும்? வெற்றியுடன் அடக்கியாளப்பட்ட உடல், மனம், புலன்களின் இலக்கணம் என்ன? இவ்விதமாக இவற்றை வென்று அடக்கிக் கொண்டவன் எப்படித் தனக்குத் தானே நண்பன் ஆகிறான்?

பதில்: உடலையும், புலன்களையும், மனதையும் நன்றாகத் தன்வசப்படுத்துவது தான் அவற்றை அடக்கியாள்வது ஆகும். விவேகத்துடன் பயிற்சி செய்வதாலும், வைராக்யத்தினாலும் இவற்றை அடக்க முடியும். பரமாத்மாவை அடைவதற்காக, ஒருவன் தன் உடல், புலன்கள், மனம் முதலியவற்றை ஸாதனையில் ஈடுபடுத்தும்போது அவை எளிதாகவே ஈடுபட்டால், மாறான வழியைத் திரும்பிக்கூடப் பார்க்காமலே இருந்தால், அவனுடைய லக்ஷ்யத்திற்கு அவை வசப்பட்டிருக்கின்றன என்று அறியலாம். உடல், புலன்கள், மனம் இவை தன்வசப்பட்டவன் எளிதாக ஸம்ஸாரக் கடலிலிருந்து தன்னைக் கடைத்தேற்றிக் கொண்டு அக்கரை சேர முடியும். பரமானந்த ஸ்வரூபமான பகவானை அடைந்து, செய்ய வேண்டியதைச் செய்து த்ருப்தியை அடைய முடியும். ஆகவே, இப்படிப்பட்டவன் 'தனக்குத் தானே நண்பன்' ஆகிறான்.

கேள்வி: உடல், புலன்கள், மனம் இவற்றை அடக்காதவனை 'அநாத்மா' என்று கூறுவதன் கருத்து என்ன? அவன் தன்னிடமே பகைவனைப் போல, பகைமையோடு நடந்து கொள்வான் என்றால் என்ன?

பதில்: உடல், புலன்கள், மனம் இவை எல்லாவற்றிற்கும் ஆத்மா என்ற பெயர் உண்டு. அவை ஒருவனுக்கு வசப்படாமல் கட்டுமீறிப் போய்க் கொண்டு இருந்தால், தம் இஷ்டப்படி போகங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தால், அவற்றை ஒருவன் தன்னுடைய லக்ஷ்யத்திற்கு அனுகூலமான நன்மை தரக்கூடிய ஸாதனைகளில் ஈடுபடுத்தாமலிருந்தால், அவன் 'அநாத்மா'; ஆத்மவான் அல்லன்.

இப்படிப்பட்டவன் உடல், புலன்கள், மனம் ஆகியவை போன போக்கில் சென்று, உடம்பு ஏற்றுக் கொள்ளத்தகாததை உண்ணும் நோயாளியைப் போல, தன்னுடைய மேன்மைக்குரிய ஸாதனைக்கு முரணாக நடந்து கொள்கிறான். அவன் அஹங்காரம், மமகாரம், ராக-த்வேஷம், காம-க்ரோதம், பேராசை, மோஹம் இவற்றிற்கு ஆட்பட்டு, கவனமற்று, சோம்பலுற்று, போகங்களில் ஆழ்ந்து, பாவங்கள் புரிந்து, நெருக்கமான பந்தத்தில் கட்டுப்படுகிறான். எப்படி ஒரு பகைவன் நம்முடைய ஸுக ஸாதனங்களைக் கெடுத்து, நம்மைத் துன்பத்தில் ஆழ்த்துகிறானோ, அதுபோல, நமது உடல், புலன்கள், மனம் முதலியன மேன்மைக்குரிய ஸாதனைகளைப் புரியவிடாமல் நம்மை போகங்களில் ஆழ்த்துகின்றன. மீண்டும், மீண்டும் தன்னைத் தானே நரகத்திலும், தாழ்ந்த பிறவிகளிலும் தள்ளி எல்லையில்லாக் காலம் வரை நம்மைத் துயரங்களை அனுபவிக்கச் செய்கின்றன. நம் உடல், புலன்கள், மனம் இவற்றிற்கு நம்மிடம் வெறுப்பு இல்லை. அவை நமக்குக் கெடுதி நினைக்கவில்லை. ஆயினும் அஞ்ஞானத்தினால் மோஹமடைந்த மனிதன், பற்றுதலுக்கு ஆட்பட்டுத் துன்பத்தை ஸுகம் என்றும், நலமில்லாததை நலம் என்றும் நினைத்துத் தன் மேன்மைக்குத் தடையாகத் தானே நடந்து கொள்கிறான். இதைத்தான், 'தனக்குத் தானே பகைவனைப் போல - பகைவன் நடந்து கொள்வதுபோல் நடந்து கொள்வான்' என்று குறிப்பிடுகிறார்.

பொருத்தம்: எவன் மனம், புலன் இவற்றோடு கூடிய உடலை வென்றுவிட்டானோ, அவன் தனக்குத்தானே எவ்விதம் நண்பனாகிறான் என்பதைத் தெளிவுபடுத்துவதற்காக, உடல், புலன்கள், மனம் வடிவிலான ஆத்மாவை வசப்படுத்துவதன் பயனைக் கூறுகிறார்—

जितात्मनः प्रशान्तस्य परमात्मा समाहितः ।
शीतोष्णसुखदुःखेषु तथा मानापमानयोः ॥ ७ ॥

ஜிதாத்மந: ப்ரஶாந்தஸ்ய பரமாத்மா ஸமாஹித: ।

ஶீதோஷ்ணஸுக₂து₃:கே₂ஷு தத₂ா மாநாபமாநயோ: ॥ 7 ॥

ஶீத உஷ்ண ஸுக₂ து₃:கே₂ஷு – தட்ப-வெப்பம், இன்ப-துன்பம் ஆகியவற்றில், **தத₂ா** – மேலும், **மாந அபமாநயோ:** – மான-அவமானம் இவற்றில், **ப்ரஶாந்தஸ்ய** – எவனுடைய மனநிலை மிகவும் அமைதியாக இருக்கிறதோ (அந்த), **ஜிதாத்மந:** – தன்னை அடக்கி வெற்றிகொண்ட மனிதனின் ஞானத்தில், **பரமாத்மா** – ஸத் சித் ஆனந்தமயனான பரமாத்மா, **ஸமாஹித:** – நன்கு நிலைத்து நிற்கிறார். (அதாவது அவனுடைய அறிவில் பரமாத்மாவைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை).

தட்ப-வெப்பம், இன்ப-துன்பம், மான-அவமானம் ஆகியவற்றில் எவனுடைய மனநிலை மிகவும் அமைதியாக இருக்கிறதோ, தன்னை அடக்கி வெற்றிகொண்ட அந்த மனிதனின் ஞானத்தில் ஸத் சித் ஆனந்தமயனான பரமாத்மா நன்கு நிலைத்து நிற்கிறார். அதாவது அவனுடைய அறிவில் பரமாத்மாவைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை.

கேள்வி: தட்ப-வெப்பம், இன்ப-துன்பம், மான-அவமானம் இவற்றில் மனநிலை அமைதியாக இருப்பது என்றால் என்ன?

பதில்: தட்ப-வெப்பம், இன்ப-துன்பம், மான-அவமானம் என்ற சொற்கள், இவை போன்ற மற்ற இரட்டைகளையும் குறிப்பிடுகின்றன. ஆகவே, இந்த ஸந்தர்பத்தில் உடல், புலன்கள், மனதோடு தொடர்பு கொள்கின்ற உலகியல் பொருட்கள், எண்ணங்கள், நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் சேர்த்துக் கூறுவதாகக் கொள்ள வேண்டும். அனுகூலமாகவோ, ப்ரதிகூலமாகவோ ஆன பொருட்கள், எண்ணங்கள், மனிதர்கள், நிகழ்ச்சிகள் இவை வந்து சேர்வதாலோ, பிரிந்து போவதாலோ மனதில் விருப்பு-வெறுப்பு, மகிழ்ச்சி-துயரம், ஆவல்-பயம், பொறாமை, குற்றம் காண்பது, காமம்-க்ரோதம், தடுமாற்றம் முதலிய எந்த விகாரங்களும் ஏற்படக்கூடாது. எந்த நிலையிலும் மனம் ஸமமாகவும், அமைதியாகவும் இருக்கவேண்டும். இதைத்தான் 'தட்ப-வெப்பம், இன்ப-துன்பம், மான-அவமானம் ஆகிய நிலைகளிலும் மனநிலை அமைதியாக இருப்பது' என்று கூறுகிறார்.

கேள்வி: 'ஜிதாத்மந:' என்ற சொல்லுக்கு என்ன பொருள்? இது யாரைக் குறிக்கிறது?

பதில்: உடல், புலன்கள், மனம் முதலியவற்றை முழுமையாகத் தன்வசப்படுத்தியவன் 'ஜிதாத்மா'. இப்படிப்பட்டவன், எப்பொழுதும், எல்லா நிலைகளிலும் பேரமைதியுடன் விகாரமின்றி (மாறுதலின்றி) இருக்க முடியும். ஸம்ஸாரக் கடலிலிருந்து தன்னை வெளியேற்றிக் கொண்டு பரமாத்மாவை அடைய முடியும். ஆகவே, அவன் தனக்குத் தானே நண்பன். இதைத்தான் 'ஜிதாத்மந:' என்ற சொல் குறிப்பிடுகிறது.

கேள்வி: இங்கே 'பரமாத்மா' என்ற சொல் எதைக் குறிப்பிடுகிறது? 'ஸமாஹித:' என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?

பதில்: 'பரமாத்மா' என்ற சொல், ஸத் சித் ஆனந்தமயமான பரப்ரம்மத்தைக் குறிப்பதாகும். மேலே சொல்லப்பட்ட இலக்கணங்கள் பொருந்தியவனுக்குப் பரமாத்மா எப்பொழுதும், எங்கும் நேரிடையாக நன்கு நிலைத்து நிறைந்து விளங்குகிறார் என்பதை 'ஸமாஹித:' என்ற சொல் உணர்த்துகிறது.

பொருத்தம்: **மனம், புலன்களோடு கூடிய சரீரத்தைத் தன்வசப்படுத்துவதன் பயன் பரமாத்மாவை அடைவது என்று கூறப்பட்டது. ஆகவே, பரமாத்மாவை அடைந்துவிட்ட மனிதனுடைய இலக்கணத்தை அறிய விருப்பம் ஏற்படுவதால், இப்போது இரண்டு ச்லோகங்கள் மூலமாக அவனுடைய இலக்கணங்களை விளக்கி, அவனைப் புகழ்ந்து கூறுகிறார்—**

ज्ञानविज्ञानतृप्तात्मा कूटस्थो विजितेन्द्रियः ।
युक्त इत्युच्यते योगी समलोष्टाश्मकाञ्चनः ॥ ८ ॥

ஜ்ஞாநவிஜ்ஞாநத்ருப்தாத்மா கூடஸ்தே₂ா விஜிதேந்த்₃ரிய: ।

யுக்த இத்யுச்யதே யோகீ₃ ஸமலோஷ்டாஶ்மகாஞ்சந: ॥ 8 ॥

ஜ்ஞாந விஜ்ஞாந த்ருப்தாத்மா – எவரது உள்ளம் ஞானத்தாலும், விஞ்ஞானத்தாலும் நிறைந்து த்ருப்தியாக இருக்கிறதோ, **கூடஸ்த₂:** – எவர் தம் நிலையிலிருந்து எந்தச் சூழ்நிலையிலும் விகாரமின்றி இருக்கிறாரோ, **விஜிதேந்த்₃ரிய:** – எவர் தம் புலன்களை நன்கு அடக்கி வசப்படுத்தியுள்ளாரோ (மேலும்), **ஸம லோஷ்ட அஶ்ம காஞ்சந:** – எவர் மண், கல், பொன் ஆகியவற்றில் ஸமபாவனை கொண்டு உள்ளாரோ, **யோகீ₃** – அந்த யோகி, **யுக்த:** – பகவானை அடைந்தவர், **இதி** – என்று, **உச்யதே** – அழைக்கப்படுகிறார்.

எவரது உள்ளம் ஞானத்தாலும் விஞ்ஞானத்தாலும் நிறைந்து த்ருப்தியாக இருக்கிறதோ, எவர் தம் நிலையிலிருந்து எந்தச் சூழ்நிலையிலும் விகாரமின்றி இருக்கிறாரோ, எவர் தம்

புலன்களை நன்கு அடக்கி வசப்படுத்தியுள்ளாரோ, மேலும் எவர் மண், கல், பொன் ஆகியவற்றில் ஸமபாவனை கொண்டு உள்ளாரோ, அந்த யோகி பகவானை அடைந்தவர் என்று அழைக்கப்படுகிறார்.

கேள்வி: இங்கு 'ஜ்ஞாந விஜ்ஞாந த்ருப்தாத்மா' என்ற சொல் யாரைக் குறிக்கிறது?

பதில்: பரமாத்மாவின் நிர்குண, நிராகார தத்வத்தின் ப்ரபாவத்தையும், பெருமையையும், அதன் உட்கருத்தையும் நன்கு அறிவது ஞானம் ஆகும். பரமாத்மாவினுடைய ஸகுண–நிராகார, ஸகுண–ஸாகார தத்வத்தின் லீலை, ரஹஸ்யம், பெருமை, குணம், ப்ரபாவம் முதலியவற்றின் உண்மையான ஞானத்தை 'விஞ்ஞானம்' என்கிறார். எவன் பரமாத்மாவின் நிர்குண–ஸகுண, நிராகார–ஸாகார தத்வங்களை நன்றாக உணர்ந்துள்ளானோ, எவனுடைய உள்ளம் மேலே சொல்லப்பட்ட இரண்டு தத்வங்களையும் உள்ளபடி அறிந்து, மிகவும் நிறைந்து இருக்கிறதோ, எவனுக்கு மேலும் அறியவேண்டியது ஒன்றும் இல்லையோ, அவன்தான் 'ஜ்ஞாந விஜ்ஞாந த்ருப்தாத்மா'.

கேள்வி: 'கூடஸ்த:' என்பதற்குப் பொருள் என்ன?

பதில்: பொற்கொல்லர்களிடமும், கருமார்களிடமும் உள்ள பட்டடைக்கல்லுக்குக் 'கூடம்' என்று பெயர். அதன் மேல் தங்கம், வெள்ளி, இரும்பை வைத்துச் சுத்தியால் அடிப்பார்கள். ஆனால் பட்டடைக்கல் உறுதியாக இருக்கும். அதுபோல எவன் பலவிதமான துயரங்கள் தாக்கும்போதுகூடத் தன் நிலையில் கொஞ்சம்கூடத் தடுமாறாமல் இருக்கிறானோ, எவனுடைய மனதில் கொஞ்சம்கூட விகாரம் உண்டாவதில்லையோ, எவன் எப்போதும் உறுதியான உணர்வுடன் பரமாத்ம ஸ்வரூபத்தில் நிலைத்துள்ளானோ, அவனைக் 'கூடஸ்தன்' என்கிறார்கள்.

கேள்வி: 'விஜிதேந்த்ரிய:' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

பதில்: 'உலகிலுள்ள எல்லா போகப் பொருட்களும் வெறும் மாயைத் தோற்றம்; நொடி நேரத்தவை' என்று உணர்ந்துவிட்டதன் காரணமாக, எவனுக்கு எந்த ஒரு பொருளிலும் சிறிதுகூடப் பற்று இல்லையோ, மேலும் எவனுடைய புலன்கள் போகப் பொருட்களில் எவ்விதச் சுவையையும் உணராமல் அவற்றிடமிருந்து விலகிவிட்டனவோ, அவ்விதமே உலக நன்மைக்காக எவன் தன்னுடைய விருப்பப்படி அவற்றை எந்த இடத்தில் ஈடுபடுத்தினாலும், அவை தம் விருப்பப்படி வேறு எங்கும் செல்லாமல் அங்கேயே ஈடுபடுகின்றனவோ, எவன் மனதில் அவை கலக்கத்தை உண்டு பண்ணுவதில்லையோ, எவனுடைய புலன்கள் அவன் வசத்தில் உள்ளனவோ, அவனே 'விஜிதேந்த்ரியன்' (புலன்களை வென்றவன்) ஆவான்.

கேள்வி: 'ஸம லோஷ்ட அச்ம காஞ்சந:' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

பதில்: மண், கல், தங்கம் முதலிய எல்லாப் பொருட்களிலும் பரமாத்மா இருக்கிறார் என்ற காரணத்தினால், இம்மூன்றையும் ஸமமாகப் பாவிக்கிறவன். அஞ்ஞானிகளைப்போல் தங்கத்தை விரும்புவதுமில்லை; கல்–மண் முதலியவற்றை வெறுப்பதுமில்லை. எல்லா வற்றையும் ஸமமாக, ஒரே மாதிரியாகக் கருதுபவன் 'ஸம லோஷ்ட அச்ம காஞ்சந:' என்றழைக்கப்படுவான்.

सुहृन्मित्रार्युदासीनमध्यस्थद्वेष्यबन्धुषु ।
साधुष्वपि च पापेषु समबुद्धिर्विशिष्यते ॥ ९ ॥

ஸுஹ்ருந்மித்ரார்யுத₃ாஸீநமத்₄யஸ்த₂த்₃வேஷ்யப₃ந்து₄ஷு ।

ஸாது₄ஷ்வபி ச பாபேஷு ஸமபு₃த்₃தி₄ர்விசிஷ்யதே ॥ ९ ॥

ஸுஹ்ருத் மித்ர அரி உத₃ாஸீந மத்₄யஸ்த₂ த்₃வேஷ்ய ப₃ந்து₄ஷு – தன்னலம் கருதாது அனைவருக்கும் ஹிதம் செய்பவன், நண்பன், பகைவன், உதாஸீனன் (ஒருசார்பு

மற்றவன்), நடுநிலையிலே நிற்பவன் (இருபிரிவினருக்கும் நன்மையை நாடுபவன்), வெறுக்கத் தக்கவன், உறவினர் ஆகியவர்களிடமும், **ஸாது₄ஷு ச** – நல்லோர்களிடத்தும், **பாபேஷு அபி** – பாவிகளிடத்தும்கூட, **ஸமபு₃த்₃தி₄:** – ஸமமான பாவனை கொண்டுள்ளவன், **விஶிஷ்யதே** – மிகவும் சிறந்தவன் ஆகிறான்.

தன்னலம் கருதாது அனைவருக்கும் ஹிதம் செய்பவன், நண்பன், பகைவன், உதாஸீனன் (ஒரு சார்புமற்றவன்), நடுநிலையிலே நிற்பவுன் (இரு பிரிவினருக்கும் நன்மையை நாடுபவன்), வெறுக்கத்தக்கவன், உறவினர் ஆகியவர்களிடத்தும் நல்லோர்களிடத்தும் பாவிகளிடத்தும்கூட ஸமமான பாவனை கொண்டுள்ளவன் மிகவும் சிறந்தவன் ஆகிறான்.

கேள்வி: 'ஸுஹ்ருத்', 'மித்ர' என்பவரிடையே என்ன வித்யாஸம்?

பதில்: ஸுஹ்ருத் – உறவுமுறை, உபகாரம் இவற்றை எதிர்பார்க்காமல் இயற்கையாகவே அன்பும், நலனும் செய்பவன். ஒருவருக்கொருவர் அன்பு கொண்டு தமக்குள் உதவி செய்து கொள்பவன் மித்ரன். அதாவது நண்பன்.

கேள்வி: 'அரி' (பகைவன்), 'த்வேஷ்ய' (வெறுக்கத்தக்கவன்) இவர்களிடையே என்ன வித்யாஸம்?

பதில்: ஏதோ ஒரு காரணத்தினால் நமக்குக் கெடுதி செய்ய நினைப்பவன் அரி – சத்ரு. எவன் (எவ்விதக் காரணமுமின்றி) இயல்பாகவே நமக்கு எதிராகச் செயல்படுவதால், வெறுப்புள்ளவனாகிவிட்டானோ, அவன் த்வேஷ்யன் (வெறுக்கத்தக்கவன்).

கேள்வி: 'உதாஸீனன்', 'மத்யஸ்தன்' இவர்களிடையே என்ன வித்யாஸம்?

பதில்: தமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருப்பவர்களை ஸமாதானம் செய்யும் முயற்சி செய்பவனை, ஒரு கட்சியிலும் சேராமல் அவ்விருவரின் நலனுக்காக நீதி கூறுபவனை 'மத்யஸ்தன்' என்கிறார். அவர்களிடம் எவ்விதமான தொடர்பும் கொள்ளாதவனை 'உதாஸீனன்' என்கிறார்.

கேள்வி: 'அபி' என்ற சொல்லை உபயோகிப்பதன் கருத்து என்ன?

பதில்: நண்பர்கள், மித்ரர்கள், மத்யஸ்தர்கள், உதாஸீனர்கள், ஸாதுக்கள், நல்ல நடத்தை உள்ளவர்கள், உறவினர்கள் முதலியவர்களிடம் மனிதர்களுக்கு இயல்பாக அன்பு இருக்கலாம். அதுபோல சத்ருக்கள், வெறுப்புள்ளவர்கள், பாவிகள் இவர்களிடம் வெறுப்பும், அருவருப்பும் இருக்கலாம். விவேகிகளுக்கும்கூட மேலே சொன்ன மக்களிடம் இயல்பாகவே, விருப்பு, வெறுப்பு இருப்பது போலக் காணப்படும். இவ்விதம் ஒன்றுக்கொன்று மிகவும் முரண்பட்ட இயல்புடைய மனிதர்களிடம் ராக–த்வேஷமும், வேற்றுமை மனப்பான்மையும் இல்லாதிருத்தல் மிகவும் கடினம். அவர்களிடம்கூட ஸமபாவனை இருந்துவிட்டால் பிறகு மற்ற இடத்திலும் ஸமபாவனை இருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? இதைத்தான் 'அபி' (கூட) என்ற சொல் குறிக்கிறது.

கேள்வி: 'ஸமபுத்தி:' என்றால் என்ன?

பதில்: எங்கும் பரமாத்மா இருக்கிறார் என்ற எண்ணம் இருப்பதால், முன் சொன்ன முற்றிலும் மாறுபட்ட இயல்புடைய மித்ர–சத்ருக்களிடமும், நல்லோர்–தீயோரிடமும் நடத்தை, இயல்பு, செயல் இவற்றின் வேற்றுமைகளால், எவனிடம் எவ்விதத் தாக்கமும் ஏற்படுவதில்லையோ, எவனுடைய புத்தியில் எந்த சமயத்திலும், எந்த ஒரு சூழ்நிலையிலும், எந்த ஒரு காரணத்துக்காகவும் வேற்றுமை உணர்ச்சி தோன்றுவதில்லையோ, அவன் ஸமபுத்தி உடையவன் என்றறிய வேண்டும்.

பொருத்தம்: **6வது ச்லோகத்தில் உடல், புலன்கள், மனம்–வடிவான ஆத்மாவை வெற்றி கொண்டவன், தனக்குத்தானே நண்பன் என்றார். 7வது ச்லோகத்தில் இந்த ஜிதாத்மா, பரமாத்மாவை அடைவதைப் பற்றிக் கூறுகிறார். 8,9ல் பரமாத்மாவை அடைந்தவனின் இலக்கணத்தைக் கூறி, அவன் பெருமைகளைப் புகழ்கிறார். பரமாத்மாவை**

அடைய ஜிதாத்மா என்ன செய்யவேண்டும்? எந்த ஸாதனையினால் விரைவில் பகவானை அடையலாம் என்பதற்கு விடையாக, த்யானயோகம் பற்றிப் பேச ஆரம்பிக்கிறார்—

योगी युञ्जीत सततमात्मानं रहसि स्थितः।
एकाकी यतचित्तात्मा निराशीरपरिग्रहः॥ १०॥

யோகீ$_3$ யுஞ்ஜீத ஸததமாத்மாநம் ரஹஸி ஸ்தி$_2$த: ।

ஏகாகீ யதசித்தாத்மா நிராஸீரபரிக்$_3$ரஹ: ॥ 10 ॥

யத சித்தாத்மா – மனம், புலன்களுடன் கூடிய உடலை அடக்கி, ***நிராஸீ:*** – எதிலும் ஆசையில்லாமல் (மேலும்), ***அபரிக்$_3$ரஹ:*** – (தனக்கென்று எதையும்) சேர்த்து வைத்துக் கொள்ளாத, **யோகீ$_3$** – யோகி, ***ஏகாகீ*** – தனி ஒருவனாக, ***ரஹஸி*** – தனியான இடத்தில், **ஸ்தி$_2$த:** – அமர்ந்து கொண்டு, ***ஆத்மாநம்*** – ஆத்மாவை, **ஸததம்** – இடைவிடாது, **யுஞ்ஜீத** – (பரமாத்மாவில்) இணைக்கவேண்டும்.

மனம், புலன்களுடன் கூடிய உடலை அடக்கி எதிலும் ஆசையில்லாமல், தனக்கென்று எதையும் சேர்த்து வைத்துக் கொள்ளாத யோகி தனி ஒருவனாகத் தனியான இடத்தில் அமர்ந்து கொண்டு ஆத்மாவை இடைவிடாது பரமாத்மாவில் இணைக்கவேண்டும்.

கேள்வி: *'நிராஸீ:' என்றால் என்ன பொருள்?*

பதில்: இவ்வுலகத்திய, பரலோகத்திய போகப் பொருட்கள் எதிலும், எவ்விதத்திலும், எந்த நிலையிலும் சிறிதுகூட விருப்பமோ, எதிர்பார்த்தலோ அற்றவன் 'நிராஸீ:' – ஆசையற்றவன்.

கேள்வி: *'அபரிக்ரஹ:' என்றால் என்ன பொருள்?*

பதில்: போகப் பொருட்களைச் சேர்த்து வைத்தல், 'பரிக்ரஹம்' எனப்படும். அவ்வியல்பு இல்லாதவனை 'அபரிக்ரஹ:' என்கிறார். இல்லறத்தானாக இருந்தால், எப்பொருளையும் தனக்கு மட்டும் வேண்டும் என்ற மமகாரத்துடன் (எண்ணத்துடன்) சேர்த்து வைத்துக் கொள்ளக் கூடாது. ப்ரம்மசாரி, வானப்ரஸ்தன், ஸந்யாஸி இவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் சாஸ்த்ரங்களுக்கு விரோதமாகப் பொருளைச் சேர்ப்பதாகத் தோன்றுவதுபோலக் கூடச் சேர்த்து வைத்துக் கொள்ளக் கூடாது. எந்த ஆசிரமத்தவனாக இருந்தாலும், தனக்கென்று சேர்த்து வைத்துக் கொள்ளாதவன் 'அபரிக்ரஹன்' ஆவான்.

கேள்வி: *இங்கே 'யோகீ' என்று யாரைக் குறிப்பிடுகிறார்?*

பதில்: இங்கு பகவான் த்யானயோகத்தில் ஈடுபடும்படி கூறிக் கொண்டு இருக்கிறார். அதனால் 'யோகீ' என்ற சொல் த்யானயோகத்திற்குத் தகுதி பெற்றவனைக் குறிக்கிறது. ஸித்தி பெற்றுவிட்ட யோகியை அன்று.

கேள்வி: *'ஏகாகீ' (தனி ஒருவனாக) என்று ஏன் கூறுகிறார்?*

பதில்: பல பேர் இருக்குமிடத்தில், 'த்யானப்பயிற்சி' என்பது நடக்காத செயல். வேறொருவர் இருந்தால்கூட உரையாடல் முதலியவற்றின் காரணமாக, த்யானத்திற்கு இடையூறு ஏற்படும். ஆகவே, தனி ஒருவனாக இருந்து த்யானயோகப் பயிற்சி செய்யவேண்டும். இதற்காகத்தான் 'ஏகாகீ' என்று அடைமொழி கொடுக்கிறார்.

கேள்வி: *'தனியான இடத்தில் அமர்ந்திருக்கவேண்டும்' என்று கூறுவதன் கருத்து என்ன?*

பதில்: காடு, மலை, குகை முதலிய ஏகாந்தமான இடங்கள் த்யானத்திற்கு உகந்தவை. எங்கே பலபேர்களுடைய நடமாட்டம் இருக்கிறதோ, அது த்யானயோக ஸாதனைக்குரிய இடம் ஆகாது. அதனால் இவ்வாறு சொல்லப்படுகிறது.

கேள்வி: இங்கு 'ஆத்மா' என்ற சொல் எதைக் குறிக்கிறது? அதைப் 'பரமாத்மாவிடம் செலுத்துவது' என்றால் என்ன?

பதில்: இங்கு ஆத்மா என்ற சொல் மனம், புத்தியாகிற அந்தக்கரணத்தைக் குறிக்கிறது. அதனைப் பரமாத்ம சிந்தனையில் தன்மயமாக ஆழ்த்துவதுதான் 'பரமாத்மாவிடம் செலுத்துவது' ஆகும்.

கேள்வி: 'ஸததம்' என்பதன் கருத்து என்ன?

பதில்: 'ஸததம்' என்ற சொல் 'யுஞ்ஜீத' என்ற வினையின் வினையுரிச்சொல்லாகும். தொடர்ந்திருப்பதைக் காட்டும் சொல்லாகும். த்யானம் செய்யும்பொழுது சிறிதுகூட இடையீடு ஏற்பட்டுவிடக் கூடாது என்பது இதன் கருத்து. இவ்விதம் இடையீடு இல்லாமல் த்யானத்தின் தொடர்ச்சி விட்டுப்போகாத வகையில், பரமாத்மாவை த்யானித்துக் கொண்டே இருக்கவேண்டும் என்பது கருத்து.

பொருத்தம்: **ஜிதாத்மா, த்யானயோக ஸாதனை செய்யவேண்டும் என்று கூறினார். இப்போது அந்த த்யானயோகத்தை விரிவாக விளக்கும் பொருட்டு, முதலில் இடம், ஆஸனம் இவற்றை விளக்குகிறார்—**

शुचौ देशे प्रतिष्ठाप्य स्थिरमासनमात्मनः।
नात्युच्छ्रितं नातिनीचं चैलाजिनकुशोत्तरम्॥ ११॥

ஶுசௌ தே₃ஶே ப்ரதிஷ்ட₂ாப்ய ஸ்தி₂ரமாஸநமாத்மந: ।
நாத்யுச்ச்₂ரிதம் நாதிநீசம் சைலாஜிநகுஶோத்தரம் ॥ 11 ॥

ஶுசௌ – தூய்மையான, ***தே₃ஶே*** – இடத்தில், (தரைமீது), ***சைல அஜிந குஶ உத்தரம்*** – தர்ப்பை, மான்தோல், துணி இவற்றை ஒன்றன்மேல் ஒன்றாக விரித்து, ***ந அத்யுச்ச்₂ரிதம்*** – மிக உயரமாக இல்லாமலும், ***ந அதிநீசம்*** – மிகத்தாழ்வாக இல்லாமலும், ***ஆத்மந:*** – தன்னுடைய, ***ஆஸநம்*** – இருக்கையை, ***ஸ்தி₂ரம்*** – அசைவற்றதாக, ***ப்ரதிஷ்ட₂ாப்ய*** – அமைத்துக் கொண்டு—

தூய்மையான இடத்தில் தரைமீது தர்ப்பை, மான்தோல், துணி இவற்றை ஒன்றின்மேல் ஒன்றாக விரித்து மிக உயரமாக இல்லாமலும் மிகத்தாழ்வாக இல்லாமலும் தன்னுடைய இருக்கையை அசைவற்றதாக அமைத்துக் கொண்டு—

கேள்வி: 'ஶுசௌ தேஶே' என்றால் என்ன கருத்து?

பதில்: த்யானயோக ஸாதனை புரியத்தக்க இடம் இயல்பாகவே பரிசுத்தமாக இருக்கவேண்டும். அந்த இடத்தைக் கூட்டித் துடைத்து அல்லது மெழுகித் தூய்மையாகவும், மாசற்றதாகவும் ஆக்கவேண்டும். கங்கை, யமுனை, காவேரி முதலிய புண்ய நதிக்கரை அல்லது மலைக்குகை, தேவாலயம், புனிதத்தலங்கள், பூங்கா, மாசற்ற காற்று வீசுகிற இடங்களில் எது எளிதாகக் கிடைக்கிறதோ, அந்த இடத்தில் தூயதான, புனிதமான, ஏகாந்தமான ஓர் இடத்தை த்யானயோகத்துக்கு ஸாதகன் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

கேள்வி: 'ஆஸனம்' மிக உயரமாகவோ, தாழ்வாகவோ இருக்கக் கூடாது; தர்ப்பம், மான்தோல், துணிகள் விரித்திருக்க வேண்டும் என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: அமர்வதற்கு வசதியாகப் பலகை அல்லது கல்லினால் செய்யப்பட்ட இடம் ஆஸனம் ஆகும். அந்த இடம் உயரமாக இருந்தால் த்யானத்திற்குத் தடையாகச் சோம்பலோ, தூக்கமோ நேரும்போது தடுமாறி விழுந்து காயம் ஏற்படலாம். மிகவும் தாழ்வாக இருந்தால் தரையின் ஈரம், சூடு, எறும்பு, புழுக்கள் இவற்றால் இடையூறு ஏற்படலாம். ஆகவே ஆஸனம் அதிக உயரமாகவோ, தாழ்வாகவோ இருக்கக் கூடாது. கல் அல்லது பலகையால் ஆன ஆஸனம் சொரசொரப்பாக இருந்தால் அதில் உட்காரும்போது கால்களுக்குக் கஷ்டம்

உண்டாகலாம். ஆகவே, அதற்கு மேல் தர்ப்பம், மான்தோல், துணி இவற்றை விரிக்கவேண்டும். மான்தோலுக்குக் கீழே தர்ப்பத்தை விரித்துவிட்டால் அது விரைவில் வீணாகாது. மேலே துணியை விரித்துவிட்டால், அதன் ரோமங்கள் உடலில் ஒட்டா. அதனால்தான் மூன்றுவிதமான விரிப்புகள் இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மான்தோல் – தானாக மரித்த மானுடையதாக இருக்கவேண்டும். வேட்டையாடப்பட்ட மானுடையதாக இருக்கக் கூடாது. ஹிம்ஸையின் மூலம் பெறப்பட்ட மான்தோல் த்யானத்திற்கு உதவாது. (மான்தோல் கிடைக்காத நிலையில் கம்பளி ஆஸனத்தைப் பயன்படுத்தலாம்).

கேள்வி: 'ஆத்மந:' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

பதில்: மேலே சொல்லப்பட்ட ஆஸனம் தன்னுடையதாக இருக்கவேண்டும். பிறருடைய ஆஸனத்தில் அமர்ந்து த்யானம் செய்யக் கூடாது என்று பொருள்.

கேள்வி: 'ஆஸனம் அசையாமல் இருக்க வேண்டும்' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: பலகை அல்லது கல்லினால் செய்யப்பட்ட ஆஸனம், பூமியின் மேல் அசையாதபடி இருத்தல் வேண்டும். ஆஸனத்தில் நொடிப்பு அல்லது சரிவு ஏற்பட்டால் த்யானம் கலைந்துவிடக் கூடும்.

பொருத்தம்: பரிசுத்தமான இடத்தில் ஆஸனம் அமைத்த பிறகு த்யானயோக ஸாதகன் என்ன செய்யவேண்டும் என்று சொல்கிறார்—

तत्रैकाग्रं मनः कृत्वा यतचित्तेन्द्रियक्रियः।
उपविश्यासने युञ्ज्याद्योगमात्मविशुद्धये ॥ १२ ॥

தத்ரைகாக்₃ரம் மந: க்ருத்வா யதசித்தேந்த்₃ரியக்ரிய: ।

உபவிஶ்யாஸநே யுஞ்ஜ்யாத்₃யோக₃மாத்மவிஶுத்₃த₄யே ॥ 12 ॥

தத்ர ஆஸநே – அந்த ஆஸனத்தில், ***உபவிஶ்ய*** – அமர்ந்து கொண்டு, ***யதசித்த இந்த்₃ரியக்ரிய:*** – மனம், புலன்களின் செயல்களை வசத்தில் வைத்துக்கொண்டு, ***மந:*** – மனதை, ***ஏகாக்₃ரம் க்ருத்வா*** – ஒருமுனைப்படுத்தி, ***ஆத்மவிஶுத்₃த₄யே*** – உள்ளத்தூய்மைக்காக, ***யோக₃ம்*** – யோகத்தை, ***யுஞ்ஜ்யாத்*** – பயில வேண்டும்.

அந்த ஆஸனத்தில் அமர்ந்து கொண்டு, மனம், புலன்களின் செயல்களை வசத்தில் வைத்துக் கொண்டு மனதை ஒருமுனைப்படுத்தி, உள்ளத்தூய்மைக்காக யோகத்தைப் பயில வேண்டும்.

கேள்வி: இங்கு ஆஸனத்தில் உட்காருவதற்கான விசேஷமான முறை பற்றி எதுவும் கூறாமல் 'அமர்ந்து' என்று பொதுவாகச் சொல்லியிருப்பதன் கருத்து என்ன?

பதில்: த்யானயோக ஸாதனைக்கு எப்படி உட்கார வேண்டுமோ, அந்த நியமங்களை அடுத்த ச்லோகத்தில் சொல்கிறார். அவற்றை அனுஸரித்து எந்த ஸாதகனுக்கு ஸ்வஸ்திகம், ஸித்தம், பத்மம் முதலிய ஆஸனங்களில் எது வெகுநேரம் அமர்ந்திருப்பதற்கு ஸுகமாக இருக்குமோ, அது அந்த ஸாதகனுக்கு உகந்தது. ஆகவே, இங்கு 'எப்படி உட்கார்வது' என்பது பற்றி விளக்காமல் பொதுப்படையாக 'அமர்ந்து' என்று சொல்லியிருக்கிறார்.

கேள்வி: 'யத சித்த இந்த்ரிய க்ரிய:' என்ற தொடருக்கு என்ன பொருள்?

பதில்: 'சித்தம்' என்ற சொல் உள்ளம் அதாவது அந்தக்கரணத்தைக் குறிப்பதாகும். மனம்–புத்திகளால் உலகாயத விஷயங்கள் சிந்திக்கப்பட்டு நிச்சயிக்கப்படுகின்றன. முற்றிலுமாக அச்சிந்தனைகளைத் துறந்து அவற்றிலிருந்து ஒய்வு பெறுவதே அந்தக்கரணத்தின் செயற்பாடுகளை வசத்தில் கொண்டு வருவதாகும். அவ்விதமே 'இந்த்ரிய' (புலன்கள்) என்ற சொல், செவி முதலான பத்துப் புலன்களைக் குறிக்கிறது. இவை எல்லாவற்றையும் கேட்டல்,

பார்த்தல் முதலானவற்றிலிருந்து தடுப்பதுதான், அவற்றின் செயல்களை வசத்திற்குக் கொண்டு வருதல் ஆகும்.

கேள்வி: 'மனதை ஒருமுனைப்படுத்துவது' என்றால் என்ன?

பதில்: த்யானிக்கப்படும் பொருள் மீது, மனதின் ஓட்டத்தைச் சிதறவிடாமல் ஈடுபடுத்துவதுதான் அதனை ஒருமுனைப்படுத்துவது ஆகும். இங்கு த்யானிக்கப்பட வேண்டிய பொருள் பரமாத்மாதான். அந்தப் பரமாத்மாவில் மனம் ஒன்றிவிட வேண்டும். இதையே 6/14லும் 'மச்சித்த:' என்ற அடைமொழியால் கூறுகிறார்.

கேள்வி: 'உள்ளத்தூய்மைக்காக த்யானயோகப் பயிற்சி செய்யவேண்டும்' என்று சொல்வதன் கருத்து என்ன?

பதில்: த்யானயோகப் பயிற்சியின் நோக்கம் உலகியல் ஸித்திகளைப் பெறுவதாகவோ, ஐசுவர்யத்தைப் பெறுவதாகவோ இருக்கக் கூடாது. பரமாத்மாவை அடையவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன், மனதில் உள்ள விருப்பு-வெறுப்பு முதலிய குற்றங்களையும், பாவச் செயல்களையும், மனத்தடுமாற்றத்தையும், அஞ்ஞானத்தையும் அழிப்பதற்காகவே த்யானயோகப் பயிற்சி செய்யவேண்டும் என்பது கருத்து.

கேள்வி: 'யோகம் பயில்வது' என்றால் என்ன?

பதில்: மேலே சொன்னவிதம் ஆஸனத்தில் அமர்ந்து உள்ளம், புலன்களின் செயல்களைத் தன்வசப்படுத்தி மனதைப் பரமேசுவரன்பால் ஈடுபடுத்தி, இடைவிடாது எப்பொழுதும் பரமாத்மாவைச் சிந்திப்பதுதான் யோகம் பயில்வதாகும்.

பொருத்தம்: **முன் ச்லோகத்தில் ஆஸனத்தில் அமர்ந்து த்யான யோகப்பயிற்சி செய்யவேண்டும் என்று சொன்னார். அதைத் தெளிவுபடுத்துவதற்காக, ஆஸனத்தில் எப்படி அமரவேண்டும்; ஸாதகனின் மனப்பாங்கு எப்படி இருக்கவேண்டும்; அவன் எந்தெந்த நியமங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்; எவ்விதம் யாரை த்யானம் செய்ய வேண்டும் முதலிய விஷயங்களை அடுத்து இரண்டு ச்லோகங்களால் விளக்குகிறார்—**

समं कायशिरोग्रीवं धारयन्नचलं स्थिरः ।
सम्प्रेक्ष्य नासिकाग्रं स्वं दिशश्चानवलोकयन् ॥ १३ ॥

ஸமம் காயஶிரோக்₃ரீவம் த₄ாரயந்நசலம் ஸ்தி₂ர: ।
ஸம்ப்ரேக்ஷ்ய நாஸிகாக்₃ரம் ஸ்வம் தி₃ஶஶ்சாநவலோகயந் ॥ 13 ॥

காய ஶிரோ க்₃ரீவம் – உடல், தலை, கழுத்து இவற்றை, **ஸமம்** – சீராகவும், **அசலம் ச** – அசைவற்றதாகவும், **த₄ாரயந்** – வைத்துக் கொண்டு, **ஸ்தி₂ர:**‡ – அசையாமல் ஸ்திரமாக இருந்துகொண்டு, **தி₃ஶ:** – மற்ற திசைகளை, **அநவலோகயந்** – பாராமல், **ஸ்வம்** – தன்னுடைய, **நாஸிகாக்₃ரம்** – நாசியின் நுனியின்மீது, **ஸம்ப்ரேக்ஷ்ய** – பார்வையை ஒருமுனைப்படுத்தி—

உடல், தலை, கழுத்து இவற்றைச் சீராகவும், அசைவற்றதாகவும் வைத்துக் கொண்டு, அசையாமல் ஸ்திரமாக இருந்துகொண்டு மற்ற திசைகளைப் பாராமல் தன்னுடைய நாசியின் நுனியின்மீது பார்வையை ஒருமுனைப்படுத்தி—

கேள்வி: உடல், தலை, கழுத்து இவற்றைச் சீராகவும், அசையாமலும் நிலைப்படுத்தி வைத்துக் கொள்வது எப்படி?

‡ பாதஞ்ஜல யோகஸூத்ரம் 2/46ல் **'ஸ்தி₂ரஸுக₂மாஸநம்'** – வெகுநேரம் ஸுகமாக நிலைத்து உட்கார ஸௌகர்யமானது ஆஸனம்.

பதில்: தொடைக்கு மேல் கழுத்துக்குக் கீழே உள்ள உடலின் பாகத்தைக் 'காயம்' என்கிறார். அதற்கு மேல் உள்ளது கழுத்து, அதற்கு மேல் இருப்பது தலை. இடுப்பும், வயிறும் முன்னோ, பின்னோ, இடதுபுறமோ, வலதுபுறமோ சாயாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். முதுகுத்தண்டை நேராகவும், கழுத்து சாயாமலும், தலையைத் திருப்பாமலும் ஒரே சீராக வைத்துக் கொண்டு அசையாமல் இருக்கவேண்டும். இதுதான் சீராகவும், அசையாமலும் இருப்பதாகும்.

கேள்வி: உடல் முதலியவற்றை அசையாமல் வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லிவிட்டு, மறுபடியும் ஸ்திரமாக இருக்கவேண்டும் என்று சொல்வதில் புதிய கருத்து உண்டா?

பதில்: உடல், தலை, கழுத்து இவை ஸமமாகவும், சீராகவும் இருந்தாலும், கைகால்கள் அசையலாம். ஆகவே ஸ்திரமாக இருக்கவேண்டும் என்று சொல்வதற்கு அவசியம் ஏற்படுகிறது. த்யான காலத்தில் கைகால்களை எப்படி வைத்துக் கொள்ள வேண்டுமோ, அப்படி அவை ஸ்திரமாக இருக்கவேண்டும். ஓர் அவயவம் அசைந்தாலும், த்யானத்திற்கு உதவியாகாது. எல்லா அவயவங்களும் அசைவற்று இருக்கவேண்டும் என்று கூறுகிறார்.

கேள்வி: 'மற்ற திசைகளைப் பார்க்காமல் நாசியின் நுனியில் பார்வையை ஒருமுனைப்படுத்தி' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: பார்வை, மூக்கின் நுனியில் நிலையாக இருக்கவேண்டும். கண்களை மூடவும் கூடாது. இங்குமங்கும் பார்வையைச் செலுத்தி மற்ற அவயவங்களையோ, பொருட்களையோ பார்க்கவும் கூடாது. மூக்கு நுனியைக்கூட மனம் ஒன்றிப் பார்க்கவேண்டும் என்பதில்லை. தடுமாற்றம், தூக்கம் ஏற்படக்கூடாது என்பதற்காகப் பார்வையை அங்குச் செலுத்த வேண்டுமே தவிர மனம் பரமேசுவரன்பால் லயித்து இருக்கவேண்டும்; மூக்கின் நுனியில் அன்று.

கேள்வி: இவ்விதமாக ஆஸனம் இட்டுக் கொண்டு அமரவேண்டும் என்று ஏன் கூறுகிறார்?

பதில்: த்யானயோக ஸாதனையில் தூக்கம், சோம்பல், தடுமாற்றம், தட்பவெப்பம் முதலிய இரட்டைகள் எல்லாம் இடையூறுகள் ஆகும். இந்த மாசுகளிலிருந்து மீள்வதற்கு இது நல்ல உபாயம். உடல், தலை, கழுத்து நேராக நிமிர்ந்து இருப்பதாலும், கண்கள் திறந்திருப்பதாலும், சோம்பலும், தூக்கமும் நம்மை ஆட்கொள்ள மாட்டா. இங்குமங்கும் மற்றப் பொருட்களைப் பாராமல் மூக்கின் நுனியில் பார்வையை நிறுத்தி இருப்பதால், வெளித் தடுமாற்றங்கள் ஏற்படா. ஆஸனம் ஸ்திரமாக அமைந்துவிட்டால், தட்பவெப்பம் முதலிய இரட்டைகளாலும் இடையூறு ஏற்படும் என்ற பயமில்லை. ஆகவே, த்யானயோக ஸாதனை புரியும்போது இவ்விதம் ஆஸனம் போட்டு உட்கார்வது மிகவும் உபயோகமாக இருக்கும். இதற்காகத்தான் பகவான் இப்படிக் கூறுகிறார்.

கேள்வி: இந்த மூன்று ச்லோகங்களால் கூறப்பட்ட ஆஸன முறை ஸகுண ப்ரம்ம த்யானத்தின் பொருட்டா அல்லது நிர்குண ப்ரம்ம த்யானத்தின் பொருட்டா?

பதில்: த்யானம் ஸகுணத்தைப் பற்றியதாக இருக்கட்டும் அல்லது நிர்குணத்தைப் பற்றியதாக இருக்கட்டும். அது ருசியையும், தகுதியையும் பொறுத்தது. இந்த ஆஸன முறை எல்லோருக்கும் அவசியம்தான்.

प्रशान्तात्मा विगतभीर्ब्रह्मचारिव्रते स्थितः ।
मनः संयम्य मच्चित्तो युक्त आसीत मत्परः ॥ १४ ॥

ப்ரஶாந்தாத்மா விக₃தபீ₄ர்ப்₃ரஹ்மசாரிவ்ரதே ஸ்தி₂த: ।
மந: ஸம்யம்ய மச்சித்தோ யுக்த ஆஸீத மத்பர: ॥ 14 ॥

ப்₃ரஹ்மசாரிவ்ரதே ஸ்தி₂த: – ப்ரம்மசர்ய வ்ரதத்தில் நிலைத்து நின்று, **விக₃தபீ₄:** – அச்சமின்றி, **ப்ரஶாந்தாத்மா** – நன்கு மனஅமைதி பெற்ற, **யுக்த:** – (த்யான காலத்தில்) விழிப்புணர்வோடு கூடிய யோகி, **மந:** – தன் மனதை, **ஸம்யம்ய** – அடக்கி, **மத்சித்த:** – என்னையே மனதில் நினைத்தவனாக, **மத்பர:** – என்னையே அடையத்தக்க சிறந்த கதி எனக் கொண்டு, **ஆஸீத** – நிலைபெற்று இருக்கவேண்டும்.

ப்ரம்மசர்ய வ்ரதத்தில் நிலைத்து நின்று அச்சமின்றி நன்கு மனஅமைதி பெற்ற, த்யானகாலத்தில் விழிப்புணர்வோடு கூடிய யோகி தன் மனதை அடக்கி என்னையே மனதில் நினைத்தவனாக என்னையே அடையத்தக்க சிறந்த கதி எனக் கொண்டு நிலைபெற்று இருக்கவேண்டும்.

கேள்வி: இங்கு 'ப்ரம்மசர்ய வ்ரதத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்' என்றால் என்ன பொருள்?

பதில்: 'ப்ரம்மசர்யம்' என்பதன் தத்வார்த்தம் வேறொன்றாக இருந்தாலும், உடலின் சுக்லத்தை(விந்துவை)க் கட்டுப்படுத்துவதுதான் அதன் முக்யமான அர்த்தம். அதுவே இந்த ஸந்தர்பத்திற்கும் ஏற்றது. மனித உடலில் சுக்லம் ஒரு விலைமதிக்க முடியாத பொருள். அந்த சுக்லத்தைக் கட்டுப்படுத்தாமல், உடல் வலிமையோ, மன வலிமையோ, ஆத்ம வலிமையோ பெற முடியாது. அந்த வலிமைகளைத் தேக்கி வைக்கவும் முடியாது. ஆகவே ஆரியப்பண்பாட்டின் நான்கு ஆசிரம நிலைகளிலும் முதலாவது ப்ரம்மசர்ய ஆசிரமமே ஆகும். அதுவே மற்ற மூன்று ஆசிரமங்களுக்கும் அடிப்படை. ப்ரம்மசர்ய ஆசிரமத்தில் ப்ரம்மசாரிகளுக்குப் பல கட்டுப்பாடுகள் உண்டு. அந்தக் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிப்பது சுக்லத்தைக் காப்பாற்றுவதில் மிகவும் உதவியாக இருக்கும். ப்ரம்மசர்யக் கட்டுப்பாடுகளை மேற்கொண்டு ஒருவன் உண்மையில் சுக்லத்தை நன்கு காப்பாற்றிவிட்டால், அந்த சுக்லத்தின் மூலம் உடலுக்குள் ஒரு தனிப்பட்ட மின்சார சக்தி உண்டாகிறது. அதனால் ஏற்படும் தேஜஸின் காரணமாக ப்ராணனும், மனதின் போக்குகளும் தாமாகவே நிலைத்துவிடும் அளவுக்கு அது ஆற்றல் மிக்கதாக இருக்கிறது. ஒரே முனைப்புடன் த்யானிக்க வேண்டிய பரமாத்மாவின்பால் இயல்பாகவே மனதின் ஓட்டம் திசை திரும்புகிறது. ஒருமுனைப்புடன் மனம் பரமாத்மாவில் லயிப்பதுதான் த்யானம்.

இக்காலத்தில் எவ்வளவு முயன்றாலும் த்யானம் நிலைப்பதில்லை என்பதற்கும், மனம் பகவானிடம் நிலைத்து இருப்பதில்லை என்பதற்கும் முக்யமான காரணம், சுக்லம் கட்டுப்படாததுதான். திருமணம் புரிந்து கொண்டு மனைவியுடன்கூட ஒருவிதக் கட்டுப்பாட்டுடன், அளவோடு உறவாடுவதுகூட ப்ரம்மசர்ய நிலைதான். அதுவும் த்யானத்திற்குப் பெரிதும் உதவும். த்யானயோக ஸாதனை புரியும் வரை முதலிலிருந்தே ப்ரம்மசர்யக் கட்டுப்பாடுகளைத் தளராமல் காப்பாற்றி வருபவனுக்கு விரைவாகவும், எளிதாகவும் த்யானயோகம் பயனளிக்கும்.

மனுஸ்ம்ருதி முதலிய நூல்களிலும், மற்ற சாஸ்த்ரங்களிலும், ப்ரம்மசாரிகள் கடைப்பிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகள் அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றில் முக்யமானவை – ப்ரம்மசாரி ஒவ்வொரு நாளும் நீராட வேண்டும்; சந்தனம் பூசிக் கொள்ளக் கூடாது; மை தீட்டிக் கொள்ளக் கூடாது; தைலம் தேய்த்துக் கொள்ளக் கூடாது; அத்தர் முதலிய வாஸனைப் பொருட்களைத் தீண்டக் கூடாது; பூமாலை அணியக் கூடாது; ஆடல்பாடல்களில் ஈடுபடக் கூடாது; குடை பிடித்துக் கொள்ளக் கூடாது; கட்டிலில் படுக்கக் கூடாது; சூதாட்டம் ஆடக் கூடாது; பெண்களை ஏறெடுத்தும் பார்க்கக் கூடாது; பெண்களைப் பற்றி வீண்பேச்சுப் பேசக் கூடாது; அளவோடு எளிய உணவை உண்ணவேண்டும்; மிருதுவான துணியை உடுத்தக் கூடாது; தெய்வம், ரிஷிகள், பெரியோர்களுக்குப் பணிவிடை செய்ய வேண்டும்; யாரிடமும் விவாதம் செய்யக் கூடாது; யாரையும் நிந்திக்கக் கூடாது; உண்மை பேச வேண்டும்; யாரையும் அவமதிக்கக் கூடாது; அஹிம்ஸாவ்ரதத்தை முழுமையாகப் பேண வேண்டும்; காம–க்ரோத லோபங்களை அறவே துறக்க வேண்டும்;

தனியாகப் படுக்க வேண்டும்; சுக்லம் ஒருபொழுதும் வெளிப்படக் கூடாது. இந்தக் கட்டுப்பாடுகளை நன்றாகக் கடைப்பிடிக்க வேண்டும். இது ப்ரம்மசர்ய வ்ரதம். இங்கு ப்ரம்மசர்ய வ்ரதம் என்று பகவான் சொல்வதன் மூலம் ப்ரம்மசர்ய ஆசிரம தர்மங்களையும் சுட்டிக்காட்டுகிறார். மற்ற ஆசிரமங்களில் உள்ளவர்களும் த்யானயோக ஸாதனை புரிய வேண்டுமானால், சுக்லத்தைக் காப்பது மிகவும் அவசியம். சுக்லத்தைக் காப்பாற்றுவதற்கு, மேலே சொன்ன கட்டுப்பாடுகள் மிகவும் உதவியானவை. இதுதான் ப்ரம்மசர்ய வ்ரதம். அதை திடமாகக் கடைப்பிடிப்பதே அதில் நிலைபெறுவதாகும்.

கேள்வி: 'விகதபீ:' என்றால் என்ன பொருள்?

பதில்: எங்கும் பரமாத்மாதான் இருக்கிறார். அந்தப் பரமாத்மாவைத்தான், த்யான யோகி த்யானம் செய்து தர்சிக்க விரும்புகிறான். அவன் பயப்படுவானேன்? ஆகவே, த்யானம் செய்யும்போது, ஸாதகன் பயமில்லாமல் இருக்கவேண்டும். மனதில் சிறிதளவு பயமிருந்தாலும்கூட, தனிமையில் ஜன நடமாட்டம் அற்ற இடத்தில் உட்கார்ந்தால், மனம் தடுமாற்றம் அடையும். ஆகவே, ஸாதகன் அப்பொழுது பகவான் ஸர்வ வல்லமை படைத்தவர்; எங்கும் நிறைந்தவர்; எப்பொழுதும் இருப்பவர்; அவர் எங்கும், எப்பொழுதும் இருக்கிறார்; அவர் இருக்கும்போது என்ன பயம் என்று மனதில் உறுதியாக நம்ப வேண்டும். ஒருகால் ப்ராரப்தத்தின் காரணமாக, த்யானம் செய்யும்போது மரணமே நேரிட்டாலும், அதன் விளைவு மங்களமாகவே இருக்கும். உண்மையான த்யானயோகி இந்த எண்ணத்தில் உறுதி கொள்ளவேண்டும். இதுதான் 'விகதபீ:' என்பதன் பொருள்.

கேள்வி: 'ப்ரஶாந்தாத்மா' என்றால் என்ன பொருள்?

பதில்: த்யானம் செய்யும்போது, உள்ளத்தில் ராக-த்வேஷம், மகிழ்ச்சி-துயரம், காம-க்ரோதம், தீய நினைவுகள், உலகியல் ஸங்கல்ப-விகல்பங்கள் இவை முற்றிலுமாக அகற்றப்படவேண்டும். வைராக்யத்தினால் மனதை முற்றிலும் தூய்மையாக்கி, அமைதியடையச் செய்து த்யானயோக ஸாதனை புரியவேண்டும். இதுவே மன அமைதி பெற்றவனின் அடையாளம்.

கேள்வி: 'யுக்த:' என்ற அடைமொழிக்கு என்ன பொருள்?

பதில்: த்யானம் செய்யும்போது ஸாதகன் தூக்கம், சோம்பல், ப்ரமாதம் (கவனமின்மை) முதலிய இடையூறுகளிலிருந்து தப்பித்து நன்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கொஞ்சம் அயர்ந்தாலும் மனமும், புலன்களும் அவனை ஏமாற்றி த்யானத்தில் பலவிதத் தடங்கல்களை ஏற்படுத்திவிடும். இதைத்தான் 'யுக்த:' (விழிப்புணர்வோடு கூடிய யோகி) என்ற சொல் குறிக்கிறது.

கேள்வி: 'மனதை அடக்குவது' என்றால் என்ன?

பதில்: ஒரு விஷயத்திலும் நிலை கொள்ளாமல் பலமுறை தடுத்தும்கூட முரட்டுத்தனமாக இருப்பதும், விஷயங்களில் அலைபாய்வதுமே மனதின் இயல்பு. இந்த மனதை நன்றாகத் தடுத்து நிறுத்தாவிட்டால், த்யானயோக ஸாதனை புரிய முடியாது. ஆகவே த்யானம் செய்யும்போது மனதை வெளிப்பொருட்களிலிருந்து முற்றிலுமாகத் தடுத்து, தன்னுடைய லக்ஷ்யத்தில் முழுமையாகக் கொண்டு வருதல், அதாவது பகவானிடம் தன்மயம் ஆகிவிடுவதுதான் மனதை அடக்குவதாகும்.

கேள்வி: 'மச்சித்த:' என்றால் என்ன பொருள்?

பதில்: த்யானிக்கப்படும் பொருளை நோக்கிச் சித்தம் ஒருங்கே முழுமையாக இழைவதுதான் த்யானம் ஆகும். இங்கு த்யானிக்கப்பட வேண்டிய பொருள் எதுவாக இருக்கலாம் என்று கேட்டால், பகவான், 'உன் உள்ளத்தை என்னிடம் ஈடுபடுத்து' என்கிறார். மனம் எந்தப் பொருளில் ப்ரேமை கொண்டிருக்கிறதோ, அந்தப் பொருளில் அது இயல்பாக இணைந்து கொள்ளும். ஆகவே, த்யானயோகி 'பரமாத்மா நமக்கு மிகவும் நன்மையைச் செய்பவர்; உற்ற நண்பர்; நட்புக்குரியவர்' என்று பகவானுடைய குணங்கள், ப்ரபாவங்கள், தத்வம், ரஹஸ்யங்கள் இவற்றை அறிந்து ப்ரபஞ்சத்தில் உள்ள பிற பற்றை ஒழித்து

பகவானையே த்யானப் பொருளாகக் கொள்ள வேண்டும். வேறு நினைவின்றி, சித்தத்தை பகவானிடமே நிலைநிறுத்துகின்ற பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

கேள்வி: பகவானையே அடையத்தக்க சிறந்த கதியெனக் கொள்வது எப்படி?

பதில்: பகவானைத் தன்னுடைய த்யானத்திற்குப் பொருளாகக் கொண்டு, அவருடைய த்யானத்திலேயே சித்தத்தை ஈடுபடுத்த விரும்புகிறவர்கள், அவரையே புகலாகவும் கொண்டவர்கள்தானே! ஆகவே 'மத்பர:' என்ற சொல்லின் மூலமாக "த்யானயோக ஸாதகன் என்னையே (பகவானையே) அடைய வேண்டிய மேலான நிலை, மிக்குயர்ந்த த்யானத்திற்குரிய செம்பொருள், உயர்ந்த அடைக்கலம், மகேசுவரன், எல்லோரைக் காட்டிலும் பேரன்புக் குரியவன் என்று கருதி, இடைவிடாது என்னையே அண்டியிருந்து, என்னையே தன்னுடைய ஒரே காப்பாளன், உதவியாளன், யஜமானன், உயிர், மூச்சு, சொத்து என்று எண்ணி, என்னுடைய ஒவ்வொரு செயலிலிலும் மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டும்" என்ற கருத்தை வெளியிடுகிறார். இதற்குப் பெயர்தான் 'பகவானை அடைக்கலமாகக் கொள்வது' ஆகும்.

கேள்வி: இங்கே கூறப்படும் த்யானயோகம் ஸகுண பகவானைப் பற்றியதா அல்லது நிர்குண ப்ரம்மம் பற்றியதா? த்யானம் செய்யும்போது பேத பாவத்துடன் அதாவது தான் வேறு, பகவான் வேறு என்ற எண்ணத்துடன் செய்யவேண்டுமா? அல்லது தானும், பகவானும் ஒன்றே என்ற அபேத எண்ணத்துடன் செய்யவேண்டுமா?

பதில்: இந்த ச்லோகத்தில் 'மச்சித்த:', 'மத்பர:' என்ற சொற்கள் உள்ளன. ஆகவே, இங்கு நிர்குண ப்ரம்மத்தையும், அபேத பாவ த்யானத்தையும் பற்றிய பேச்சில்லை. அதனால், இங்கு உபாஸிக்கப்படுகிற பரமாத்மா வேறு, உபாஸிக்கிறவன் வேறு என்ற வேற்றுமை உணர்வுடன், ஸகுண பகவானை அணுகும் த்யான முறை கூறப்பட்டிருக்கிறது என்று அறிய வேண்டும்.

கேள்வி: இங்கு ஸகுண த்யான முறை சொல்லப்பட்டிருக்கிறது என்பது இருக்கட்டும். ஆனால் இந்த ஸகுண த்யானம் எல்லா வல்லமையும் படைத்த, எல்லாவற்றிற்கும் ஆதாரமான பகவானுடைய நிராகார உருவத்தைப் பற்றியதா அல்லது பரமசிவன், **ஸ்ரீ**விஷ்ணு, **ஸ்ரீ**ராமன், **ஸ்ரீ**க்ருஷ்ணன் போன்ற உருவத்தோடு கூடிய ஏதேனும் ஒரு பகவத் ஸ்வரூபத்தைப் பற்றியதா?

பதில்: பகவானுடைய கல்யாண குணங்கள், ப்ரபாவங்கள், தத்வம், ரஹஸ்யம்‡ இவற்றை அறிந்து, மனிதன் தன்னுடைய விருப்பம், இயல்பு, தகுதிக்கேற்றவாறு எந்த

---

‡ பகவானுடைய கல்யாண குணங்கள், ப்ரபாவம், தத்வம், ரஹஸ்யம் இவ்வளவுதான் என்று அறுதியிட்டுக் கூற முடியாது. இது விஷயமாக எவ்வளவு சொன்னாலும், சூரியனுக்கு தீபாராதனை செய்வது போலத்தான் ஆகும். ஆயினும் பகவானின் குணங்கள் முதலியவற்றில் சிறிதளவாவது நினைப்பது, கேட்பது, கீர்த்தனம் செய்வது மனிதனை மிகவும் தூய்மையாக்கும். இதனால்தான் அவருடைய கல்யாண குணம் முதலியவற்றை நூலாசிரியர்கள் வர்ணிக்கிறார்கள். அந்த நூல்களில் சொல்லப்பட்டவற்றில் கல்யாண குணங்கள் முதலானவற்றை இவ்வாறு அறிந்து கொள்ள வேண்டும்.

முடிவற்றதும், எல்லையற்றதும், முற்றிலும் தனித்தன்மை வாய்ந்ததுமான ஸமபாவனை, அமைதி, இரக்கம், அன்பு, பொறுமை, இனிமை, வாத்ஸல்யம், ஆளுமை, பெருந்தன்மை, நட்பு முதலியவை பகவானுடைய 'கல்யாண குணங்கள்'. முழுமையான ஆற்றல், ஐசுவர்யம், ஆன்மிக ஒளி, சக்தி, ஸாமர்த்யம், நிகழ முடியாததையும் நிகழ்த்திக் காட்டுதல் முதலியன பகவானுடைய 'ப்ரபாவங்கள்'. எவ்விதம் பரமாணு, நீராவி, மேகம், மழைத்துளிகள், பனி முதலியன எல்லாம் தண்ணீர் தானோ, அதுபோல ஸகுண-நிர்குண, ஸாகார-நிராகார, வ்யக்த-அவ்யக்த, ஜட-சேதன, அசையாதன-அசைவன, ஸத்-அஸத் முதலியவை எத்தனை உள்ளனவோ, அவ்விதமே எவை எவற்றிற்கு அப்பாலும் இருக்கின்றனவோ, அவை எல்லாம் பகவானே ஆகும். இது 'தத்வம்'. பகவானைக் காண்பது, அவருடன் உரையாடுவது, அவரைத் தொடுவது, சிந்திப்பது, கீர்த்தனம் செய்வது, அர்ச்சனை செய்வது, வணங்குவது, துதிகளால் போற்றுவது முதலியவற்றால் பாவிகளும்கூட மிகவும் புனிதர்களாக ஆகிவிடுகிறார்கள். பிறப்பற்ற, அழிவில்லாத, ஸர்வலோக மகேசுவரனான, எல்லாம் அறிந்த, முழுமையான சக்தி படைத்தவரும், எல்லோரிடமும் ஸமபாவனையோடு இருக்கிறவருமான பகவானே தெய்விக அவதாரத்தை ஏற்று வெளிப்படுகிறார். மேலும் அவருடைய தெய்விக குணங்கள், ப்ரபாவங்கள், தத்வம் முதலியன உண்மையில் சிந்தனைக்கு எட்டாதவை; எல்லையற்றவை; தெய்விகமானவை. அதாவது அவரைப் பற்றி, அவரைத் தவிர வேறு யாரும் அறியக்கூட முடியாது. இது அவருடைய 'ரஹஸ்யம்' ஆகும்.

ஸ்வரூபத்தில் எளிதாக மனம் லயிக்குமோ, அந்த ஸ்வரூபத்தை த்யானம் செய்யலாம். ஏனெனில், பகவான் ஒருவர் ஆயினும் எல்லா உருவங்களும் அவரேதான். ஆகவே, ஏதோ ஒரு ஸ்வரூபத்தை மட்டும் குறிப்பிட்டு இந்த த்யானயோகம் சொல்லப்படுகிறது என்று நினைத்துக் கொள்ளக் கூடாது.

இப்பொழுது ஸாதகர்களுக்கு உதவியாக, த்யானத்திற்குரிய சில ஸ்வரூபங்களை வர்ணிப்போம்.

த்யானத்தில் அமர்ந்த பகவான் சிவபெருமானுடைய ஸ்வரூப த்யானம்

ஹிமாலயம் – கௌரிஸங்கர சிகரம் – முற்றிலும் தனிமையான இடம். அங்கு சிவபெருமான் பத்மாஸனத்திலே த்யானத்தில் அமர்ந்திருக்கிறார். அவருடைய திருமேனி வெள்ளைவெளேரென்று இருக்கிறது. அதில் மெல்லிய சிவப்பு நிறம் படர்ந்திருக்கிறது. அவருடைய மேனியின் மேல்பாகம் அசைவற்று நேரே நிமிர்ந்திருக்கிறது. விசாலமான நெற்றியில் விபூதியின் அழகான மூன்று கீற்றுகள் விளங்குகின்றன. சிவந்த சடை மகுடம்போல மேலே தூக்கி ஒரு ஸர்ப்பத்தினால் கட்டப்பட்டிருக்கிறது. இரண்டு காதுகளிலும் ருத்ராக்ஷ மாலைகள். மேலே போர்த்திக் கொண்டிருக்கும் யானைத்தோலின் மீது கழுத்தின் நீல நிறம் பரவிப் பளபளக்கிறது. அவருடைய மூன்று கண்களின் பார்வையும் மூக்கு நுனியில் குறியாக இருக்கிறது. அப்படிக் கவிந்து பார்க்கும் அசைவற்ற கண்களிலிருந்து வீசும் ஒளி அங்கும், இங்கும் பாய்கிறது. இரு கைகளும் மடியில் வைக்கப்பட்டு, விரிந்த தாமரை போலக் காணப்படுகின்றன. அவர் ஸமாதி நிலையில் உடலின் உள்ளே ஸஞ்சரிக்கும் வாயுவைத் தடுத்து நிறுத்தி இருக்கிறார். அவரைப் பார்த்தால் ஆரவாரமில்லாமல் பொழிகின்ற நீருண்டமேகமோ, அலை அடங்கிய அமைதியான பெருங்கடலோ, காற்று இல்லாத இடத்தில் சிதறாத ஜோதிமயமான தீபச்சுடரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

பகவான் ஸ்ரீவிஷ்ணுவின் த்யானம்

நம்முடைய உள்ளத்தாமரையிலோ அல்லது நம் எதிரே கொஞ்சம் உயர்ந்த ஒரு பீடத்திலோ சிவந்த ஆயிரம் இதழ்கள் கொண்ட ஒரு தாமரை மேல் பகவான் ஸ்ரீவிஷ்ணு விளங்குகிறார். நீலமேகம் போன்ற மனங்கவர் நீலவண்ணத் திருமேனி; எல்லா அவயவங்களும் பேரெழிலுடன் பலவித அணிகலன்களால் அழகுற மிளிர்கின்றன. அவருடைய மேனியிலிருந்து தெய்விக நறுமணம் பரவுகிறது. மிகவும் அமைதியான, அழகான தாமரை முகம்; நீண்டு அகன்ற மனதைக் கவரும் நான்கு புஜங்கள்; அழகான, கவர்ச்சியான கழுத்து; மிகவும் அழகான, உருண்டையான கன்னம்; மனதைக் கவரும் அழகிய புன்னகை; சிவந்த உதடுகள்; மிக்க அழகான, கூரான நாசி; இரு செவிகளிலும் இலங்கும் இன்னொலி எழுப்பும் மகர குண்டலங்கள்; அழகான முகவாய்; தாமரை போன்ற அகன்ற மலர்ந்த கண்கள். அந்தக் கண்களிலிருந்து இயல்பாக தயை, பேரன்பு, அமைதி, ஸமநோக்கு, ஞானம், ஆனந்தம், ஒளி – எல்லாம் ஓயாமல் பெருகுகின்றன. உயர்ந்த தோள்கள், கார்வண்ண நீலத்தாமரையொத்த வண்ணத்து மேனியில் தங்கநிறமான பீதாம்பரம் அழகாக விளங்குகிறது. லக்ஷ்மியின் இருப்பிடமான மார்பில் ஸ்ரீவத்ஸம் என்ற மறு; வலது மேல் கையில் அழகான ஒளிமிகுந்த கிரணங்களுடன் கூடிய சக்ரம்; வலது கீழ்க் கையில் கௌமோதகி என்ற கதாயுதம்; இடது மேல் கையில் வெற்றி முழக்கம் செய்கின்ற அழகான, வெள்ளை வெளேரென்ற, பாஞ்சஜன்யம் என்ற சங்கம்; இடது கீழ்க் கையில் சிவந்த தாமரை அழகாக விளங்குகிறது. கழுத்தில் ரத்னமயமான ஹாரங்கள்; மார்பில் துளஸியுடன் கூடிய வனமாலை, வைஜயந்திமாலை, கௌஸ்துபமணி இவை அழகுற விளங்குகின்றன. திருவடிகளில் ரத்னங்கள் இழைத்த கலகலவென ஒலிக்கின்ற சிலம்புகள்; திருமுடியில் ப்ரகாசிக்கின்ற கிரீடம்; விசாலமான, மேடான நெற்றியில் அழகான மேல் நோக்கின திலகம்; கைகளில் ரத்ன கடகங்கள்; இடுப்பில் ரத்னம் பதித்த மேகலை; நான்கு புஜங்களிலும் மேல்புறம் அங்கதங்கள்; விரல்களில் ரத்ன மோதிரங்கள்; கன்னங்கரேலென்று சுருள்சுருளான குழற்கற்றை; நாற்புறமும் கோடிக்கணக்கான சூரியர்களைப் போன்ற ஒளி குளிர்ந்து பரவுகிறது. எங்கும் அன்பும், ஆனந்தமுமே கரையற்ற கடலாகப் பொங்கிக் கொண்டு வருகின்றன.

பகவான் ஸ்ரீராமருடைய த்யானம்

மிகவும் அழகான, விசாலமான உயர்ந்த ரத்னங்கள் இழைத்த சிங்காதனம்; பகவான் ஸ்ரீராமன் ஸீதாதேவியோடு அதில் வீற்றிருக்கிறார். புது அறுகம்புல் போன்ற பசுமையான நிறம்; தாமரை இதழ் போன்ற அகன்ற கண்கள்; மிக அழகிய முக மண்டலம்; விசாலமான நெற்றியில் மேல்நோக்கிய திலகம்; சுருள்சுருளான கேசங்களின் மேல் சூரியனைப்போல ஒளிவீசும் ரத்ன கிரீடம்; முனிவர்களின் மனதைக்கூடக் கொள்ளை கொள்ளும் பேரெழில்; திவ்ய ஒளிமயமான திருமேனியில் பீதாம்பரம்; கழுத்தில் ரத்ன மாலைகள்; தெய்விகமான மலர் மாலைகள்; மணம் கமழும் சந்தனம்; கைகளில் வில்லும், அம்பும்; சிவந்த உதடுகள்; அதில் மேவும் இனிய புன்னகை ஒளி; இடதுபுறம் ஸீதாதேவி வீற்றிருக்கிறாள்; தங்கத் திருமேனியாள்; நீலவர்ணச் சேலை உடுத்தியிருக்கிறாள். தாமரைக் கையில் விளங்கும் செந்தாமரை; தெய்விகமான ஆபரணங்கள்; எங்கும் காணக் கிடைக்காத மனம் கவரும் காட்சி.

பகவான் ஸ்ரீக்ருஷ்ணனின் த்யானம்

(1)

ப்ருந்தாவனத்தில் யமுனைக்கரை. அசோக மரத்தின் புதிய இலைகளால் வேயப்பட்ட ஒரு கொடி வீடு. அங்கே தன் தோழர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கிறார் கண்ணன். நீருண்ட மேகத்தையொத்த பளபளப்பான நீலத்திருமேனி; இடுப்பில் தங்கநிறமான பீதாம்பரம்; கழுத்தில் அழகான வனமாலை; அதிலிருந்து மலர்களும், துளஸியும் நறுமணம் வீசுகின்றன; மார்பில் வைஜயந்திமாலை அழகாக விளங்குகிறது; அழகான கன்னங்கரேலென்ற சுருள்சுருளான கேசங்கள் நெற்றியிலும், கன்னங்களிலும் புரள்கின்றன; மூவுலகையும் மயக்கக்கூடிய அழகான தாமரை போன்ற முகம்; மிகவும் இனிய புன்சிரிப்பு; தலையில் ஒய்யாரமான மயில்பீலி; காதுகளில் ரத்னகுண்டலங்களின் ஒளி அழகிய உருண்டையான கன்னங்களில் ப்ரதிபலிக்கின்றது; ஒவ்வொரு அவயவத்திலிருந்தும் அழகு பெருகுகின்றது; காதுகளில் செம்பருத்திப் பூவைச் செருகிக் கொண்டு இருக்கிறார்; உயர்ந்த மலைக்கசிவுகளான தாதுக்களாலும், பல வர்ணங்களிலான இலைத்தளிர்களாலும் உடல் அலங்கரிக்கப் பட்டிருக்கிறது. மார்பில் ஸ்ரீவத்ஸம் என்ற மறு; கழுத்தில் கௌஸ்துபமணி; வளைந்த் புருவங்கள்; அழகிய சிவந்த உதடுகள்; தாமரை போன்று அகன்று விளங்கும் ஒய்யாரமான கண்கள்; அவற்றிலிருந்து ஆனந்தமும், பேரன்புமான, மிருதுவான, ஒளிப் பெருக்கு வெளிப்பட்டுப் பார்ப்போரைத் தன்பால் ஈர்த்துக் கொண்டிருக்கின்றது. பார்க்கின்றவர்கள் உள்ளங்களிலெல்லாம் ஆனந்தமும், ப்ரேமையும் கடல்போலப் பொங்கிக் கொண்டிருக்கின்றன. மேனி மூன்று நொடிப்புகளின் மிடுக்கோடு விளங்குகிறது. அவருடைய பரபரப்பான சின்னஞ்சிறு விரல்கள் புல்லாங்குழலின் த்வாரங்களில் மாறி மாறிப் பதிந்து இனிய இசையை எழுப்புகின்றன.

பகவான் ஸ்ரீக்ருஷ்ணனின் மற்றொரு த்யானம்

(2)

குருக்ஷேத்ரத்தில் யுத்தகளம், நாற்புறத்திலும் வீரர்கள் சூழ்ந்திருக்கிறார்கள். அவர்களின் நடுவே அர்ஜுனனுடைய ஒளிமயமான பெரிய ரதம்; ரதத்தின் அகன்ற கொடியில் சந்த்ரனும், நக்ஷத்ரங்களும் ஒளி வீசுகின்றன; அதன் மத்தியில் ஆஞ்ஜநேயர் வீற்றிருக்கிறார்; பக்கத்தில் பல கொடிகள் பறக்கின்றன. ரதத்தின் முன் தட்டில் பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் வீற்றிருக்கிறார். கருநீல வர்ணம்; அழகின் எல்லை; வீரத்தோற்றம்; கவசம் அணிந்திருக்கிறார். திருமேனியில் பீதாம்பரம் அழகு பெற்று விளங்குகிறது. முகமண்டலம் மிகவும் தெளிவாகவும், அமைதியாகவும் காணப்படுகிறது. ஞானத்தின் பேரொளி அவயவங்களிலெல்லாம் பரவி நிற்கிறது. விசாலமான செவ்வரி படர்ந்த கண்களில் ஞானஒளி வீசுகிறது. ஒரு கையில் குதிரைகளின் கடிவாளங்கள்; மற்றொரு கைப் பெருவிரலும், ஆள்காட்டி விரலும் இணைந்து ஞான முத்திரை காட்டுகின்றன. ஆழ்ந்த, அமைதியான பெருமிதத்தோடு அர்ஜுனனுக்கு கீதோபதேசம் நடைபெறுகிறது. உதடுகளில் இனிய புன்னகை மின்னுகிறது. கண்கள், சொல்ல

விரும்பும் கருத்துக்களை முன் கூட்டியே தெரிவித்து, அர்ஜுனனுடைய ஸந்தேஹங்களைத் தெளிவித்துக் கொண்டிருக்கின்றன.

பொருத்தம்: **இவ்வாறு செய்யப்படும் த்யானயோக ஸாதனையின் பயனைக் கூறுகிறார்—**

युञ्जन्नेवं सदात्मानं योगी नियतमानसः।
शान्तिं निर्वाणपरमां मत्संस्थामधिगच्छति॥ १५॥

யுஞ்ஜந்நேவம் ஸதா₃த்மாநம் யோகீ₃ நியதமாநஸ: ।
ஶாந்திம் நிர்வாணபரமாம் மத்ஸம்ஸ்தா₂மதி₄க₃ச்ச₂தி ॥ 15 ॥

நியதமாநஸ: – மனதைத் தன்வசப்படுத்திய, **யோகீ₃** – யோகி, **ஏவம்** – இவ்விதம், **ஆத்மாநம்** – ஆத்மாவை, **ஸதா₃** – இடையறாது, **யுஞ்ஜந்** – (பரமேசுவரனான என்னுடைய ஸ்வரூபத்தில்) இணைத்துக் கொண்டு, **மத்ஸம்ஸ்தா₂ம்** – என்னிடம் விளங்குகின்ற, **நிர்வாணபரமாம்** – பரமானந்தத்தின் பெருநிலையாகிய, **ஶாந்திம்** – அமைதியை, **அதி₄க₃ச்ச₂தி** – அடைகிறான்.

மனதைத் தன்வசப்படுத்திய யோகி இவ்விதம் ஆத்மாவை இடையறாது பரமேசுவரனான என்னுடைய ஸ்வரூபத்தில் இணைத்துக் கொண்டு என்னிடம் விளங்குகின்ற பரமானந்தத்தின் பெருநிலையாகிய அமைதியை அடைகிறான்.

கேள்வி: இங்கு 'யோகீ' என்ற சொல்லுடன் 'நியதமாநஸ:' என்ற அடைமொழி சேர்க்கப்பட்டிருப்பதன் பொருள் என்ன?

பதில்: எவனுடைய மனம், அந்தக்கரணம் நன்கு வசப்பட்டுள்ளனவோ, அவனை 'நியதமாநஸ:' என்கிறார். அவன்தான் மேலே சொன்னவாறு, த்யானயோக ஸாதனையைப் புரிய முடியும். இதைச் சுட்டிக்காட்டுவதற்காக 'யோகீ' என்ற சொல்லுடன் 'நியதமாநஸ:' என்ற அடைமொழியைச் சேர்க்கிறார்.

கேள்வி: இவ்விதம் ஆத்மாவை, பரமாத்ம ஸ்வரூபத்தில் இடையறாது இணைப்பது என்றால் என்ன?

பதில்: மேலே சொன்னவிதம் மனம், புத்தி இவற்றின் மூலம், எண்ணெய் ஒழுக்குப்போல, இடைவிடாது பகவானுடைய ஸ்வரூபத்தைச் சிந்தித்து, அச்சிந்தனையில் உறுதியாக இருந்து தன்மயமாக்கிவிடுவதுதான் 'ஆத்மாவைப் பரமாத்ம ஸ்வரூபத்திலேயே இணைப்பது' ஆகும்.

கேள்வி: 'என்னிடம் விளங்குகின்ற பரமானந்தத்தின் பெருநிலையான அமைதியை அடைகிறான்' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: '**நைஷ்டிகீ ஶாந்தி**' என்று 5/12லும், '**ஶாஶ்வதீ ஶாந்தி**' என்று 9/31லும், '**பரா ஶாந்தி**' என்று 18/62லும் பரமாத்மாவை அடைவது; தெய்விகப் பரம்பொருளை அடைவது; பரமகதியை அடைவது என்றெல்லாம் சொல்லப்படுகின்றனவே, அந்த சாந்தியைத்தான் இங்கு விளக்குகிறார். இந்த சாந்தி இணையற்ற, அளவற்ற, ஆனந்தத்தின் எல்லை நிலையாகும். இது பரமதயாளுவான, உற்ற நண்பனான, ஆனந்தக் கருவூலமான, ஆனந்தமயமான பகவானிடம் என்றும் இடைவிடாது நிறைந்து இருக்கிறது. அசையாமலும், உறுதியாகவும் த்யானயோக ஸாதனை புரிபவன் இந்த அமைதியை அடைகிறான்.

பொருத்தம்: **த்யானயோக முறையையும், பயனையும் கூறினார். இனி த்யானயோகிக்குரிய உணவு, உறக்கம், நடமாட்டம் இவற்றின் நியமங்கள் எப்படி இருக்க வேண்டுமென்பதை இரண்டு ச்லோகங்களில் கூறுகிறார்—**

नात्यश्नतस्तु योगोऽस्ति न चैकान्तमनश्नतः।
न चाति स्वप्नशीलस्य जाग्रतो नैव चार्जुन॥ १६॥

நாத்யஶ்நதஸ்து யோகோ₃ऽஸ்தி ந சைகாந்தமநஶ்நத: ।

ந சாதி ஸ்வப்நஶீலஸ்ய ஜாக்₃ரதோ நைவ சார்ஜுந ॥ 16 ॥

அர்ஜுந – அர்ஜுன! **யோக₃:** – (இந்த) யோகம், **அத்யஶ்நத: து** – மிகுதியாக உண்பவனுக்கும், **ந அஸ்தி** – கைகூடாது. **ஏகாந்தம்** – அறவே, **அநஶ்நத: ச** – உண்ணாமல் இருப்பவனுக்கும், **ந** – கைகூடாது. **அதிஸ்வப்நஶீலஸ்ய ச** – மிகுதியாக உறங்கும் இயல்புடையவனுக்கும், **ந** – கைகூடாது. **ஜாக்₃ரத: ஏவ ச** – எப்போதும் விழித்துக் கொண்டேயிருப்பவனுக்கும், **ந** – கைகூடாது.

அர்ஜுன! இந்த யோகம் மிகுதியாக உண்பவனுக்கும் கைகூடாது. அறவே உண்ணாமல் இருப்பவனுக்கும் கைகூடாது. மிகுதியாக உறங்கும் இயல்புடையவனுக்கும் கைகூடாது. எப்போதும் விழித்துக் கொண்டேயிருப்பவனுக்கும் கைகூடாது.

கேள்வி: இங்கு 'யோகம்' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

பதில்: பரமாத்மாவை அடைவதற்கான அத்தனை உபாயங்களையும் 'யோகம்' என்று கூறலாம். ஆனால் இது த்யானயோகம் பற்றிய ஸந்தர்பம். ஆகவே, இந்த இடத்தில் 'யோகம்' என்றால் த்யானயோகம் என்று பொருள். அது துயரங்கள் அனைத்தையும் அடியோடு அழித்து, பரமானந்த அமைதிக் கடலான பரமாத்மாவிடம் கொண்டு சேர்க்கும்.

கேள்வி: மிகுதியாக உண்பவனுக்கும், அறவே உண்ணாதவனுக்கும் த்யானயோகம் ஏன் கை கூடாது?

பதில்: அள்ளி அள்ளித் திணித்துச் சாப்பிடுவதால் தூக்கமும், சோம்பலும்தான் அதிகமாகும். ஜீரண சக்தியும் குறையும். இயல்பான ஜீரண சக்திக்கும் அதிகமாக உண்டால் உணவு வயிற்றில் தங்கிப் பலவித நோய்களை உண்டாக்கும். அறவே உண்ணாமல் இருந்தாலும், அவனுடைய புலன்கள், ப்ராணன், மனம் ஆகியன சோர்ந்து போய்விடும். பிறகு ஆஸனத்தில் நிலைத்து உட்கார்ந்திருக்க முடியாது. பரமாத்மாவிடம் மனதைச் செலுத்த முடியாது. இவ்விதம் த்யானப் பயிற்சியில் இடையூறு ஏற்படுகிறது. ஆகவே த்யானயோகி கட்டாயம் எளிதாக ஜீரணிக்கும் அளவுக்கு உண்ணவேண்டும். அதிகமாகவும் உண்ணக் கூடாது; உண்ணாமலே பட்டினி கிடக்கவும் கூடாது.

கேள்வி: மிகுதியாக உறங்குபவனுக்கும், எப்போதும் விழித்திருப்பவனுக்கும் த்யான யோகம் ஏன் ஸித்திக்காது?

பதில்: போதிய அளவு தூங்கினால் உடலில் களைப்பு அகலும். உடலில் புத்துணர்ச்சி உண்டாகும். அளவுக்கு அதிகமாகத் தூங்கினால் தமோகுணம்தான் வளரும். எப்போதும் சோம்பல் சூழ்ந்திருக்கும்; நிலையாக உட்காருவதும் கஷ்டமாக இருக்கும். மேலும், அதிக நேரம் தூங்கினால் மனித வாழ்க்கையின் பொன்னான காலம் வீணாகிவிடுகிறது. அதுபோல் விழித்துக் கொண்டே இருந்தால் களைப்பு மேலிடுகிறது; ஒருகாலும் புத்துணர்ச்சி ஏற்படாது. உடல், புலன்கள், ப்ராணன் இவை சோர்ந்து போய்விடும். உடலில் பலவித வியாதிகள் உண்டாகும். எப்பொழுதும் தூக்கமும், சோம்பலும் தொடர்ந்து இருக்கும். ஆகவே அதிகம் தூங்குவது, எப்போதும் விழித்து இருப்பது இவை இரண்டுமே த்யானயோக ஸாதனைக்கு இடையூறுகள். த்யானயோகத்திற்கு இடையூறு நேராதவாறு த்யானயோகிக்கு உடல்நிலை சீராக இருக்க வேண்டும். இதன் பொருட்டு அவன் தன் உடல்நிலை, இயல்பு, சீர்மை, வயது இவற்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தேவைக்கு அதிகமாகத் தூங்கக் கூடாது. எப்போதும் விழித்திருக்கவும் கூடாது.

युक्ताहारविहारस्य युक्तचेष्टस्य कर्मसु।
युक्तस्वप्नावबोधस्य योगो भवति दुःखहा॥१७॥

யுக்தாஹாரவிஹாரஸ்ய யுக்தசேஷ்டஸ்ய கர்மஸு ।

யுக்தஸ்வப்நாவபோ$_3$த$_4$ஸ்ய யோகோ$_3$ ப$_4$வதி து$_3$:க$_2$ஹா ॥ 17 ॥

து$_3$:க$_2$ஹா – துக்கத்தைப் போக்குகின்ற, **யோக$_3$:** – யோகம், **யுக்த ஆஹார விஹாரஸ்ய** – அளவோடு உண்டு நடமாடுகின்றவனுக்கும், **கர்மஸு** – கர்மங்களில், **யுக்தசேஷ்டஸ்ய** – உரிய முயற்சி செய்கின்றவனுக்கும், **யுக்த ஸ்வப்ந அவபோ$_3$த$_4$ஸ்ய** – அளவோடு உறங்கி விழித்திருப்பவனுக்கும் மட்டுமே, **ப$_4$வதி** – கைகூடுகிறது.

துக்கத்தைப் போக்குகின்ற யோகம் அளவோடு உண்டு நடமாடுகின்றவனுக்கும் கர்மங்களில் உரிய முயற்சி செய்கின்றவனுக்கும் அளவோடு உறங்கி விழித்திருப்பவனுக்கும் மட்டுமே கைகூடுகிறது.

கேள்வி: 'அளவோடு உண்டு நடமாடுபவன்' யார்?

பதில்: உண்கின்ற, பருகுகின்ற பொருட்களுக்கு ஆஹாரம் என்றும், இங்குமங்கும் சுற்றி நடமாடும் செயலுக்கு விஹாரம் என்றும் பெயர். இவை இரண்டையும் தகுந்த முறையில், போதுமான அளவு எவன் ஏற்கிறானோ, அவனை 'யுக்தாஹாரவிஹார:' என்று கூறுவர். உண்கின்ற, பருகுகின்ற பொருட்கள் தன்னுடைய வர்ணத்திற்கும், ஆசிரமத்திற்கும் ஏற்றபடி உண்மையானதும், ந்யாயமானதுமான முறையில் ஸம்பாதிக்கப்பட்டனவாகவும், அறநூல்களுக்கேற்பவும், ஸாத்விகமானவையாகவும் இருக்கவேண்டும் (17/8). ரஜோ குணத்தையும், தமோகுணத்தையும் வளர்ப்பனவாக இருக்கக் கூடாது; தூய்மையாகவும், தன்னுடைய இயல்பு, நிலை, ருசிக்கு முரண்படாதவாறும், யோக ஸாதனையில் உதவுவனவாகவும் இருக்கவேண்டும். அவை அவனுடைய சக்தி, உடல்நலம், ஸாதனை புரிவது இவற்றிற்கு நலம் செய்யப் போதுமான அளவுக்கு இருக்கவேண்டும். இதைப்போல நடமாட்டமும், தனக்கு அவசியமானதும், நலன் பயக்குமளவுக்கும் மட்டுமே இருக்கவேண்டும்.

இவ்விதம், கட்டுப்பாடானதும், பொருத்தமானதுமான உணவினாலும், நடமாட்டத்தினாலும் உடல், புலன்கள், மனம் இவற்றில் ஸத்வகுணம் பெருகுகிறது; அதனால் மாசற்ற தன்மை, மகிழ்ச்சி, விழிப்புணர்ச்சி ஆகியவை பெருகுகின்றன. அதனால் த்யானயோகம் எளிதாகக் கைகூடுகிறது.

கேள்வி: 'கர்மங்களில் உரிய முயற்சி செய்கிறவன்' என்றால் என்ன?

பதில்: வர்ணம், ஆசிரமம், உடல்நலம், வயது, சூழ்நிலை முதலியவற்றுக்கேற்றவாறு, எவனுக்கு எவ்விதக் கர்மங்கள் சாஸ்த்ரங்களில் கூறப்பட்டிருக்கின்றனவோ, அவற்றிற்குப் பெயர் 'கர்மம்' ஆகும். அந்தக் கர்மங்களைத் தக்க முறையில் தக்க அளவுக்கு, தகுதிக்கேற்றபடி நடத்துவதுதான் கர்மங்களில் உரிய முயற்சி செய்வதாகும். கடவுள் பக்தி, தேவ பூஜை, ஏழை–எளியோர்க்குத் தொண்டு, தாய்–தந்தையர், ஆசிரியர் முதலிய பெரியோர்களுக்குப் பூஜை, வேள்வி, தானம், தவம், வாழ்க்கை ஸம்பந்தமான கர்மம் – அதாவது கல்வி கற்றல்–கற்பித்தல், வணிகம் முதலிய செயல்கள்; ஸ்நானம், சௌசம் முதலிய கர்மங்கள்; இவை போன்ற அனைத்துக் கர்மங்களும் அறநூல்களில் கூறப்பட்டனவாகவும், பெரியோர்களால் அங்கீகரிக்கப்பட்டனவாகவும், வேறொருவருக்குக் கேடு விளைவிக்காமல் தன்னையே சார்ந்திருப்பதில் உதவியாக இருப்பனவாகவும், பிறருக்குக் கஷ்டமோ, சுமையோ கொடுக்காதனவாகவும், த்யான யோகத்திற்கு உதவி செய்வனவாகவும் இருக்கவேண்டும். இந்தச் செயல்களின் அளவும் அவனுக்கு அவசியமானதாக, ந்யாயமானபடி, உடலைப் பேணுவதற்குத் தேவையானதாக இருக்கவேண்டும். அதனால் த்யானயோகத்திற்குப் போதுமான அளவு நேரம் கிடைக்கும். இப்படிச் செய்வதனால் உடல், புலன்கள், மனம் நல்ல நிலையில் இருக்கும்; த்யானயோகம் எளிதாகக் கைகூடும்.

கேள்வி: 'அளவோடு உறங்கி, விழித்திருப்பது' என்றால் என்ன?

பதில்: பகலில் விழித்திருந்து, இரவின் முன்யாமத்திலும், பின்யாமத்திலும் விழித்திருந்து, நடுவில் இரண்டு யாமங்கள் அதாவது (ஆறு மணி நேரம்) உறங்குவது, போதுமான அளவு தூங்கி விழிப்பதாகும். ஆறு மணி நேரம் தூங்கித்தான் ஆகவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. த்யானயோகி தன்னுடைய இயல்புக்கும், உடல்நிலைக்குமேற்றவாறு கட்டுப்பாடுகளை அமைத்துக் கொள்ளவேண்டும். இரவு ஐந்து அல்லது நான்கு மணி நேரம் தூங்கினாலும் போதும். ஆனால் த்யான காலத்தில் தூக்கம், சோம்பல் – இவை வராமலும், உடல் நலத்தில் எந்தவிதமான குறைவு வராமலும், ஆறு மணி நேரமோ, ஐந்து மணி நேரமோ, நான்கு மணி நேரமோ தூங்க வேண்டும்.

இந்த ச்லோகத்தில் வரும் 'யுக்த' என்ற சொல்லுக்கு, உணவு, நடமாட்டம், கர்மம், தூக்கம், விழிப்பு – இவை சாஸ்த்ரங்களுக்கு முரணாக இராமல், அவனுடைய ஸ்வபாவம், உடல்நலம் இவற்றிற்கு ஏற்றவாறு உகந்ததாகவும், அவசியமான அளவிலும் இருக்கவேண்டும் என்பது பொருள்.

கேள்வி: இங்கு 'யோக:' என்ற சொல்லுக்கு 'து:கஹா' (துக்கத்தைப் போக்குகின்ற) என்ற அடைமொழி கொடுப்பதன் கருத்து என்ன?

பதில்: த்யானயோகத்தில் ஸித்தி பெற்றுவிட்ட த்யானயோகிக்குப் பரமானந்தமும், பரமசாந்தியும் நிறைந்த எல்லையற்ற கடலான பரமாத்மா கிடைத்துவிடுகிறார். அதனால் அவருடைய துக்கங்களெல்லாம் அவற்றின் வேரோடு, முற்றிலுமாக அழிந்து போய் விடுகின்றன. பிறப்பு–இறப்பு என்ற ஸம்ஸார துக்கத்தை அவர் எந்த நிலையிலும் எதிர் நோக்க வேண்டியே இருக்காது. கனவில்கூட அவருக்குக் கவலை, சோகம், பயம், படபடப்பு இவை உண்டாகா. எவ்விதத்திலும், எந்த நேரமும் ஆனந்தமயமான பெருங்கடலில் ஆழ்ந்திருப்பார். 'துக்கம் அடியோடு ஒழிவது' என்ற இந்தப் பயனைக் குறிப்பிடுவதற்காகவே 'யோக'த்திற்கு 'து:கஹா' என்ற அடைமொழியைக் கொடுக்கிறார்.

பொருத்தம்: **த்யானயோகத்திற்கு உபயோகமான உணவு, நடமாட்டம் முதலிய கட்டுப்பாடுகளைப் பற்றிச் சொன்ன பிறகு, நிர்குண–நிராகாரத்தை த்யானிக்கும் யோகியின் இறுதியான நிலையின் இலக்கணம் என்று சொல்கிறார்—**

यदा विनियतं चित्तमात्मन्येवावतिष्ठते।
निःस्पृहः सर्वकामेभ्यो युक्त इत्युच्यते तदा॥ १८॥

யத₃ா விநியதம் சித்தமாத்மந்யேவாவதிஷ்ட₂தே ।

நி:ஸ்ப்ருஹ: ஸர்வகாமேப்₄யோ யுக்த இத்யுச்யதே தத₃ா ॥ 18 ॥

விநியதம் சித்தம் – முற்றிலும் தன் வசப்படுத்தப்பட்டுள்ள உள்ளம், **யத₃ா** – எப்பொழுது, **ஆத்மநி ஏவ** – பரமாத்மாவினிடமே, **அவதிஷ்ட₂தே** – நன்கு நிலைபெற்றிருக் கிறதோ, **தத₃ா** – அப்பொழுது, **ஸர்வகாமேப்₄ய:** – அனைத்து போகங்களிலிருந்தும், **நி:ஸ்ப்ருஹ:** – பற்று நீங்கிய மனிதன், **யுக்த:** – யோகத்தில் முதிர்ந்த நிலைபெற்றவன், **இதி** – என்று, **உச்யதே** – அழைக்கப்படுகிறான்.

முற்றிலும் தன் வசப்படுத்தப்பட்டுள்ள உள்ளம் எப்பொழுது பரமாத்மாவினிடமே நன்கு நிலைபெற்றிருக்கிறதோ அப்பொழுது அனைத்து போகங்களிலிருந்தும் பற்று நீங்கிய மனிதன் யோகத்தில் முதிர்ந்த நிலைபெற்றவன் என்று அழைக்கப்படுகிறான்.

கேள்வி: 'சித்தம்' என்ற சொல்லுடன் 'விநியதம்' என்ற அடைமொழியைச் சேர்த்ததன் பயன் என்ன? 'பரமாத்மாவில் நன்கு நிலைத்திருப்பது' என்றால் பொருள் என்ன?

பதில்: முற்றும் வசப்பட்ட சித்தம்தான் பரமாத்மாவில் அசையாமல் நிலைபெற முடியும். இந்த விஷயத்தைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் 'விநியதம்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டிருக்கிறது. வீணான செயல்களில் ஈடுபடுவது, சோம்பல், பிரமை, விக்ஷேபம் இவை சித்தத்திலிருந்து முற்றிலும் விலகி, அது பரமாத்மாவிடமே அசையாமல் நிலைபெறுவதென்றால், பரமாத்மாவைத் தவிர வேறு ஒரு எண்ணமும் சிறிதுகூட இருக்காது என்று பொருள். இதுவே, 'பரமாத்மாவில் நன்றாக நிலைத்திருப்பது' என்பதாகும்.

கேள்வி: 'அனைத்து போகங்களிலிருந்தும் பற்று நீங்கியவன்' என்றால் என்ன?

பதில்: பரமசாந்தியான பரமானந்தத்தின் பெருங்கடலான பரமாத்மாவிடமே ஒன்றி நிலை பெற்று விடுவதாலும், இவ்வுலக-மேலுலக போகங்கள் அநித்யமானவை; நொடி நேரத்தவை; நாசமடையக் கூடியவை என்பதால், அவற்றில் முற்றிலுமாக வைராக்யம் ஏற்பட்டுவிட்டதாலும், எந்த உலகியல் பொருளிலும் சிறிதளவுகூடத் தேவையோ, எதிர்பார்ப்போ இல்லாமைதான் 'அனைத்து போகங்களிலிருந்தும் பற்று நீங்குதல்' ஆகும்.

கேள்வி: இங்கு 'யுக்த:' என்றால் என்ன பொருள்?

பதில்: இங்கு 'யுக்த:' என்ற சொல், த்யானயோகத்தின் பூரண நிலையை அடைந்துவிட்டவனைக் குறிக்கும். ஸாதனைகளை இடைவிடாது புரிந்துவிட்ட யோகியிடம், மேலே கூறிய இரண்டு அடையாளங்களும் நன்றாக வெளிப்படுமேயானால், அவன் த்யானயோகத்தின் முதிர்ந்த நிலையை அடைந்துவிட்டான் என்று அறியலாம்.

பொருத்தம்: வசப்பட்டுவிட்ட சித்தம் த்யான காலத்தில் பரமாத்மாவில் மட்டுமே அசையாமல் நிலைத்து இருக்கும்போது, அந்தச் சித்தத்தின் நிலை எவ்வாறு இருக்கும் என்பதை வர்ணிக்கிறார்—

यथा दीपो निवातस्थो नेङ्गते सोपमा स्मृता।
योगिनो यतचित्तस्य युञ्जतो योगमात्मनः ॥ १९ ॥

யதா₂ தீ₃போ நிவாதஸ்தே₂ா நேங்க₃தே ஸோபமா ஸ்ம்ருதா ।
யோகி₃நோ யதசித்தஸ்ய யுஞ்ஜதோ யோக₃மாத்மந: ॥ 19 ॥

நிவாதஸ்த₂: — காற்று வீசாத இடத்தில் இருக்கும், **தீ₃ப:** — விளக்கின் சுடர், **யதா₂** — எப்படி, **ந இங்க₃தே** — அசையாமல் இருக்குமோ, **ஸா உபமா** — அதே உவமை, **ஆத்மந:** — பரமாத்மாவின், **யோக₃ம்** — த்யானத்தில், **யுஞ்ஜத:** — ஈடுபடுகின்ற, **யோகி₃ந:** — யோகியினுடைய, **யதசித்தஸ்ய** — வெற்றி கொள்ளப்பட்ட மனதிற்கும், **(உபமா** — உவமையாக), **ஸ்ம்ருதா** — சொல்லப்பட்டது.

காற்று வீசாத இடத்தில் இருக்கும் விளக்கின் சுடர் எப்படி அசையாமல் இருக்குமோ, அதே உவமை பரமாத்மாவின் த்யானத்தில் ஈடுபடுகின்ற யோகியினுடைய வெற்றி கொள்ளப்பட்ட மனதிற்கும் உவமையாகச் சொல்லப்பட்டது.

கேள்வி: இங்கு 'தீபம்' என்றால் எது? அசைவற்று இருப்பதற்கு உவமையாக மலை முதலியவற்றைச் சொல்லாமல் தீபத்தைச் சொல்வதன் கருத்து என்ன?

பதில்: 'தீபம்' என்பது ஒளி வீசுகின்ற விளக்கின் சுடரைக் குறிக்கும். மலை முதலியவற்றிற்கு ஒளி கிடையாது. மேலும், அவை இயல்பாகவே அசையாதவை. அவற்றுடன் மனதை ஒப்பிடுவது இங்குப் பொருந்தாது. தீப ஒளியோ சித்தத்தைப் போன்று ப்ரகாசமாகவும், சஞ்சலமாகவும் இருப்பதால், மனதிற்கு நிகராகிறது. காற்று வீசாத இடத்தில் தீப ஒளி அசையாது. அதுபோல வசப்பட்ட சித்தம் த்யான காலத்தில் சஞ்சலமடையாது இருக்கும். அது அசையாத தீபச்சுடரைப் போல ஸமமாக ஒளி வீசிக் கொண்டிருக்கும்.

அதனால்தான் மலை முதலிய ஒளியற்ற, அசைவற்ற பொருட்களை உவமையாகக் கொடுக்காமல், தீபச்சுடர் உவமையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கேள்வி: 'சித்த' என்ற சொல்லுடன் 'யத' என்ற சொல்லைச் சேர்க்காமல், வெறுமனே 'சித்தஸ்ய' என்று மட்டும் சொன்னாலும், அதே பொருள் ஏற்படக் கூடுமானாலும், 'யதசித்தஸ்ய' என்ற சொற்பிரயோகம் செய்யப்பட்டிருப்பதன் கருத்து என்ன?

பதில்: வசப்படுத்தப்பட்ட (வெற்றி கொள்ளப்பட்ட) சித்தம்தான் பரமாத்ம ஸ்வரூபத்தில் அசையாமல் நிலைத்திருக்கும். வசப்படாத சித்தம் நிலைக்காது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக, 'யத' என்ற சொல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பொருத்தம்: **இவ்விதம் த்யானயோகத்தில் முடிவான நிலையை அடைந்து விட்டவனின் இலக்கணத்தையும், அவன் வெற்றி கொண்ட சித்தத்தின் இலக்கணத்தையும் கூறிய பிறகு, இனி வரும் மூன்று ச்லோகங்களில் த்யானயோகத்தின் மூலமாக ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மாவை அடைந்துவிட்டவனின் நிலையை விளக்குகிறார்—**

यत्रोपरमते चित्तं निरुद्धं योगसेवया।
यत्र चैवात्मनात्मानं पश्यन्नात्मनि तुष्यति॥२०॥

யத்ரோபரமதே சித்தம் நிருத்₃த₄ம் யோக₃ஸேவயா ।

யத்ர சைவாத்மநாத்மாநம் பஶ்யந்நாத்மநி துஷ்யதி ॥ 20 ॥

யோக₃ஸேவயா – யோகப்பயிற்சியினால், **நிருத்₃த₄ம்** – கட்டுண்ட, **சித்தம்** – சித்தம், **யத்ர** – எந்த நிலையில், **உபரமதே** – ஓய்ந்து நிற்கிறதோ, **ச** – மேலும், **யத்ர** – எந்த நிலையில் (பரமாத்ம த்யானத்தால் தூய்மை பெற்ற), **ஆத்மநா** – நுண்ணிய புத்தியினால், **ஆத்மாநம்** – பரமாத்மாவை, **பஶ்யந்** – நேரில் கண்டு, **ஆத்மநி ஏவ** – ஸத் சித் ஆனந்தமயனான பரமாத்மாவிலேயே, **துஷ்யதி** – மகிழ்ந்து கொண்டிருக்குமோ—

யோகப்பயிற்சியினால் கட்டுண்ட சித்தம் எந்த நிலையில் ஓய்ந்து நிற்கிறதோ, மேலும் எந்த நிலையில் பரமாத்ம த்யானத்தால் தூய்மை பெற்ற நுண்ணிய புத்தியினால் பரமாத்மாவை நேரில் கண்டு ஸத் சித் ஆனந்தமயனான பரமாத்மாவிலேயே மகிழ்ந்து கொண்டிருக்குமோ—

கேள்வி: 'யோகப் பயிற்சியினால் கட்டுண்ட சித்தத்தை' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: த்யானயோகப் பயிற்சிதான் யோக ஸேவை. அந்த த்யானயோகப் பயிற்சியைத் தொடர்ந்து செய்து முதிர்ச்சி பெற்ற மனம் பரமாத்மாவிடம் ஒருங்கே நிலைபெறும். அதையே 'நிருத்தம்' (கட்டுண்ட) என்று கூறுகிறார்.

கேள்வி: 'இப்படிப் பரமாத்ம ஸ்வரூபத்தில் கட்டுண்ட சித்தம் ஓய்வடைவது' என்றால் என்ன?

பதில்: யோகியின் சித்தம் பரமாத்ம ஸ்வரூபத்தில் கட்டுப்பட்டு நிலைபெற்று விட்டால், அது உலகியலிலிருந்து முழுமையாக ஓய்வு பெற்றுவிடும். பிறகு, அவனுடைய உள்ளத்தில் உலகியலுக்குக் கொஞ்சமும் இடம் இராது. உலகத்தின் பார்வையில், அவனுடைய சித்தம் ஸமாதி நிலையில் உலகியலிலிருந்து ஓய்வு பெற்றதாகவும், விவஹார காலத்தில் உலகியல் நினைவுடனும் இருப்பதாகத் தோன்றினாலும், உண்மையாக உலகியலில் அவனுக்குக் கொஞ்சம்கூடத் தொடர்பு இருக்காது. இதைத்தான் 'எக்காலத்திலும், எந்நிலையிலும் உலகியலிலிருந்து ஓய்வடைவது' என்று கூறுகிறார்.

கேள்வி: இங்கு 'யத்ர' (எந்த நிலையில்) என்று எதைக் குறிப்பிடுகிறார்?

பதில்: எந்த நிலையில் த்யானயோக ஸாதகன் பரமாத்மாவிடம் ஒன்றிப் போய் விடுகிறானோ, அதாவது அவன் பரமாத்மாவின் தர்சனம் பெறுகிறானோ, மேலும் உலகியலிலிருந்து முற்றிலுமாக அவனுடைய தொடர்பு விட்டுப் போகிறதோ, 23வது ச்லோகத்தில் 'யோகம்' என்ற பெயரால் பகவான் எதை அழைக்கிறாரோ, அந்தச் சிறப்பான நிலையை 'யத்ர' என்ற சொல் இங்கே குறிக்கிறது.

கேள்வி: 'ஏவ' என்று அழுத்தம் கொடுப்பதன் கருத்து என்ன?

பதில்: பரமாத்மாவை தர்சித்துவிட்டதால் ஏற்பட்ட ஆனந்தத்தைத் தவிர உலகியல் இன்பத்திற்குக் காரணமானவற்றைத் தவிர்ப்பதை அழுத்தமாகச் சொல்வதற்காக, 'ஏவ' என்ற சொல் தரப்பட்டுள்ளது. பரமானந்த, பரமசாந்திக் கடலான பரமாத்மாவின் நேரிடை அனுபவம் பெற்ற யோகி எப்பொழுதும் அதே ஆனந்தத்தில் திளைத்திருப்பார். உலகியல் ஸுகம் எதுவும் அவருக்குத் தேவையில்லை என்பது கருத்து.

கேள்வி: பரமாத்மாவின் நேரிடை அனுபவத்தைக் கொடுக்கக் கூடிய த்யானப் பயிற்சியை எவ்விதம் செய்வது?

பதில்: தனிமையில் முன் சொன்னவிதம் சௌகர்யமாக அமர்ந்து மனதிலிருந்து ஸகல ஸங்கல்பங்களையும் அகற்றி, கீழ்க்குறித்தபடி தாரணை செய்யவேண்டும். "விஞ்ஞான மயமான, ஆனந்தம் நிரம்பிய பூரணப்ரம்மம் பரமாத்மாதான். அவரைத் தவிர வேறு பொருளே இல்லை. அவரே எங்கும் நிறைந்திருக்கிறார். இப்படி அறிவது கூட அவரேதான். அவரே ஞான வடிவினர். அவர் ஸநாதனர்; மாறுதலற்றவர்; எல்லையற்றவர்; கரை காண முடியாதவர்; அளவற்றவர்; பகுதியற்றவர்; அப்பழுக்கற்றவர். மனம், புத்தி, அஹங்காரம், பார்ப்பவன், பார்ப்பது, பார்க்கப்படுவது என்பதெல்லாம் அவர் மேல் ஏறிடப்பட்ட தோற்றங்கள். உண்மையில் ப்ரம்மத்தின் ஸ்வரூபம் மட்டும் தான் இருக்கிறது. அவர் ஆனந்தமயமானவர்; வர்ணனைக்கு எட்டாதவர். அவருடைய ஸ்வரூபமும் ஆனந்தமயமே; அது குறைவற்ற பூரணம், நித்யம், ஸநாதனம், பிறப்பற்றது, அழிவற்றது, உயர்ந்தது, முடிவானது, ஸத்தானது, சேதனமானது, விஞ்ஞான மயமானது, மாறுதலற்றது, அசைவற்றது, நிலையானது, நோயற்றது, அறிவுமயமானது, முடிவற்றது, சாந்தமானது." இவ்விதம் திரும்பத் திரும்பச் சிந்தனை செய்து, மனதில் உறுதி ஏற்படவேண்டும். அந்த ஆனந்த ஸ்வரூபம் தவிர வேறொன்றும் இல்லை. ஏதாவது ஸங்கல்பம் எழுந்தால் அதுவும் அந்த ஆனந்தத்தில் எழுந்ததுதான். அதுவும் ஆனந்தமயம்தான். இப்படி ஆனந்தத்தில் கரைந்துவிட வேண்டும். தாரணை செய்து எல்லா ஸங்கல்பங்களும் ஆனந்தமயமான, அறிவுமயமான பரமாத்மாவிடம் மறைந்துவிட்டால், ஆனந்தமயமான பரமாத்ம ஸ்வரூபத்தைத் தவிர வேறு ஸங்கல்பம் ஒன்றும் இராது. ஆகவே, அந்த ஸாதகன் பரமாத்மாவில் அசையாமல் நிலைபெறுவான். இப்படி அன்றாடம் தவறாமல் த்யானம் செய்து, தானும் உலகியலும் இருப்பதுகூட ப்ரம்மத்தைத் தவிர வேறு நிலை அன்று என்ற உணர்வுடன், எப்பொழுது எல்லாமே பரமானந்தமயமாகவும், சாந்திமயமான ப்ரம்மமாகவும் ஆகிறதோ, அப்பொழுது பரமாத்மாவின் நேரிடை அனுபவம் ஸாதகனுக்கு இயல்பாக அமைந்துவிடுகிறது.

सुखमात्यन्तिकं यत्तद्बुद्धिग्राह्यमतीन्द्रियम्।
वेत्ति यत्र न चैवायं स्थितश्चलति तत्त्वतः॥२१॥

ஸுக₂மாத்யந்திகம் யத்தத்₃பு₃த்₃தி₄க்₃ராஹ்யமதீந்த்₃ரியம் ।
வேத்தி யத்ர ந சைவாயம் ஸ்தி₂தஶ்சலதி தத்த்வத: ॥ 21 ॥

அதீந்த்₃ரியம் – புலன்களுக்கு அப்பாற்பட்ட, **பு₃த்₃தி₄க்₃ராஹ்யம்** – தூய்மையான நுண்ணிய புத்திக்கு மட்டும் புலப்படும், **யத்** – எந்த, **ஆத்யந்திகம்** – முடிவற்ற, **ஸுக₂ம்** – ஆனந்தம் உண்டோ, **தத்** – அதை, **யத்ர** – எந்த நிலையில், **வேத்தி** – அனுபவிக்கிறானோ, **ச** – மேலும், **(யத்ர** – எந்த நிலையில்), **ஸ்தி₂த:** – நிலைபெற்று,

அயம் – இந்த யோகி, ***தத்த்வத:*** – பரமாத்ம ஸ்வரூபத்திலிருந்து, **ந ஏவ சலதி** – விலகுவதே இல்லையோ—

புலன்களுக்கு அப்பாற்பட்ட தூய்மையான நுண்ணிய புத்திக்கு மட்டும் புலப்படும் எந்த முடிவற்ற ஆனந்தம் உண்டோ அதை எந்த நிலையில் அனுபவிக்கிறானோ மேலும் எந்த நிலையில் நிலைபெற்று இந்த யோகி பரமாத்ம ஸ்வரூபத்திலிருந்து விலகுவதே இல்லையோ—

கேள்வி: 'ஆத்யந்திகம்', 'அதீந்த்ரியம்', 'புத்திக்ராஹ்யம்' என்று ஸுகத்திற்கு கூறப்பட்ட அடைமொழிகளின் பொருள் என்ன?

பதில்: 18/36 முதல் 39 வரை ஸாத்விக, ராஜஸ, தாமஸம் என்ற மூன்றுவிதமான ஸுகங்களைப் பற்றிய விளக்கம் உள்ளது. அவற்றைக் காட்டிலும் பரமாத்ம அனுபவ ஸுகம் முற்றிலும் மாறுபட்டது என்று காட்டுவதற்காகத்தான், மேலே குறிப்பிட்ட மூன்று அடைமொழிகளைக் கொடுத்திருக்கிறார். பரமாத்ம அனுபவ ஸுகம் என்பது உலகியல் ஸுகங்களைப் போல நொடி நேரத்ததோ, அழிவதோ, துயரத்துக்குக் காரணமாவதோ, துன்பம் கலந்ததோ அன்று. அது ஸாத்விக ஸுகத்தைக் காட்டிலும் மிக மேன்மையானது, மாறுபட்டது. எப்பொழுதும் சீராக ஒரே ரஸமாக நிலைத்து நிற்பது. ஏனெனில் அது பரமாத்மாவின் ஸ்வரூபமே. அதைத் தவிர வேறு பொருள் இல்லை. இதைச் சுட்டிக்காட்டுவதற்காக 'ஆத்யந்திகம்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டுள்ளது. போக விஷயங்களால் ஏற்படும் ராஜஸ ஸுகத்தைப்போல இந்த ஸுகம் புலன்களால் அனுபவிக்கப்படுவது அன்று. புலன்களுக்கு அகப்படாத பரப்ரம்மத்தைத்தான் இங்கு ஸுகமென்கிறோம். இதை 'அதீந்த்ரியம்' என்ற அடைமொழி குறிப்பிடுகிறது. அந்த ஸுகம், தானே எப்பொழுதும் அறிவு மயமானது. மாயையின் எல்லைக்கு முற்றிலும் அப்பாற்பட்டதாதலால், புத்திகூட அதை எட்ட முடியாது. இருப்பினும் அழுக்கற்ற தூய கண்ணாடியில் ஆகாயத்தின் ப்ரதிபிம்பம் தானாகவே விழுவதுபோல பஜனை, த்யானம், விவேகம், வைராக்யம் முதலிய பயிற்சிகளினால் அசைவற்றுவிட்ட நுண்ணிய பரிசுத்தமான புத்தியில், அந்த ஆன்மிக ஸுகத்தின் எதிரொளி புத்தியின் முயற்சி எதுவுமில்லாமலே விழுகிறது. அதனால் அதை 'புத்திக்ராஹ்யம்' (புத்தியினால் ஏற்கப்படுவது) என்கிறார்.

பரமாத்ம த்யானத்தினால் உண்டாகும் ஸாத்விக ஸுகம்கூடப் புலன்களுக்கு அப்பாற்பட்டு, புத்தியினால் ஏற்கப்பட்டு, அழிவற்ற ஸுகத்திற்குக் காரணமாவதால், மற்ற உலகியல் ஸுகங்களைக் காட்டிலும் மிகவும் மாறுபட்டதாகும். ஆனால் அது த்யான காலத்தில் மட்டும் இருக்கும். எப்பொழுதும் ஒரே ரஸமாக இருக்காது. சித்தத்தின் ஒரு நிலைதான் அது. ஆகவே, அதை 'ஆத்யந்திகம்' அல்லது 'அக்ஷய ஸுகம்' என்று சொல்வதில்லை. அவ்விதமாக பரமாத்ம ஸ்வரூபத்தை த்யானம் செய்வதன் காரணமாக, த்யான காலத்தில் மட்டும் அனுபவிக்கப்படும் ஸுகம்கூட, த்யானத்தினால் உண்டாகும் ஸுகத்தின் பயனே ஆகும். அதனாலேயே இது அதிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. இவ்வாறு மூன்று அடைமொழிகளைக் கொடுத்து, ஸாத்விக ஸுகத்தைப்போல, இந்த ஸுகம் அனுபவத்திற்கு வரக் கூடியது அன்று என்ற விஷயத்தை இங்கே தெளிவுபடுத்தியிருக்கிறார். அதாவது இந்த ஸுகம் த்யானிப்பவன், த்யானம், த்யானப் பொருள் இவை ஒன்றாக ஆனபின், தானாகவே தோன்றும் பரமாத்மாவினுடைய ஸ்வரூபமே ஆகும்.

கேள்வி: 'தத்வத்திலிருந்து விலகுவதில்லை' என்று கூறுவதன் உட்கருத்து என்ன? 'ஏவ' என்று அழுத்திக் கூறுவதன் கருத்து என்ன?

பதில்: தத்வம் என்றால் பரப்ரம்மம். அதிலிருந்து தனித்துப் போகாமல் இருப்பதுதான் 'விலகாமல் இருப்பது' என்பதாகும். பரமாத்மாவின் நேரிடை அனுபவம் பெற்ற பிறகு, யோகி அதிலேயே அசையாமல் நிலைத்து நிற்பதால், ஒருபொழுதும் எந்த நிலையிலும் பரமாத்மாவைப் பிரிந்து இருப்பதில்லை என்ற கருத்தை வெளிப்படுத்துவதற்காகத்தான் 'ஏவ' என்ற சொல் கையாளப்பட்டிருக்கிறது.

यं लब्ध्वा चापरं लाभं मन्यते नाधिकं ततः।
यस्मिन्स्थितो न दुःखेन गुरुणापि विचाल्यते॥ २२॥

யம் லப்₃த்₄வா சாபரம் லாப₄ம் மந்யதே நாதி₄கம் தத: ।

யஸ்மிந்ஸ்தி₂தோ ந து₃:கே₂ந கு₃ருணாபி விசால்யதே ॥ 22 ॥

யம் லாப₄ம் – பரமாத்மாவை அடைவதாகிற எந்தப் பேற்றை, **லப்₃த்₄வா** – பெற்றதும், **தத:** – அதைக் காட்டிலும், **அபரம்** – வேறொரு பேற்றை, **அதி₄கம்** – உயர்வானதென்று, **ந மந்யதே** – கருதமாட்டானோ, **ச** – மேலும், **யஸ்மிந்** – பரமாத்மாவுடன் ஒன்றிவிட்ட எந்நிலையில், **ஸ்தி₂த:** – நிலைபெற்ற யோகி, **கு₃ருணா** – மிகப்பெரிய, **து₃:கே₂ந அபி** – துயரத்தால்கூட, **ந விசால்யதே** – கலங்க மாட்டானோ—

பரமாத்மாவை அடைவதாகிற எந்தப் பேற்றைப் பெற்றதும் அதைக் காட்டிலும் வேறொரு பேற்றை உயர்வானதென்று கருதமாட்டானோ, மேலும் பரமாத்மாவுடன் ஒன்றிவிட்ட எந்நிலையில் நிலைபெற்ற யோகி மிகப்பெரிய துயரத்தால்கூடக் கலங்கமாட்டானோ—

கேள்வி: இந்த ச்லோகத்தில் 'யம்' என்பது எதைக் குறிக்கிறது? அதை அடைந்த பிறகு அதைக்காட்டிலும் பெரியதாக வேறு பேற்றை நினைக்க மாட்டான் என்று கூறுவானேன்?

பதில்: அடுத்து வரும் ச்லோகத்தில், 'துக்கத்தின் சேர்க்கையிலிருந்து பிரிதல்' என்ற விஷயத்தை, யோகத்தின் பெயரால் சொல்லப் போகிறார். அந்த பரமாத்ம ஸாக்ஷாத்காரரூபமாகிற தனிப்பட்ட நிலையை, 'யம்' என்ற சொல் குறிக்கிறது. இந்த நிலையில், யோகி பரமானந்த பரமசாந்தியின் கருவூலமான பரமாத்மாவை அடைந்துவிடுவதால் அவன் பூர்ணகாமன் ஆகிறான். அவனுடைய பார்வையில் இவ்வுலகிலும், பரலோகத்திலும் அடையக்கூடிய எல்லா போகங்களும், மூவுலக அரசும், ஐசுவர்யமும், உலகளாவிய பெருமையும், புகழும் உலகியல் ஸுகத்திற்கு ஸாதனங்களான இவையனைத்தும் நொடியில் அழிபவை; அநித்யமானவை; ரஸமற்றவை; தவிர்க்கப்பட வேண்டியவை; துச்சமானவை; அற்பமானவை என்று ஆகின்றன. உலகியல் பொருள் எதையும் அவன் பெற விரும்பமாட்டான் என்னும்போது, அவற்றைப் பெரிதாக நினைப்பானா?

கேள்வி: 'மிகப் பெரும் துயரத்தால்கூடக் கலங்க மாட்டான்' என்று கூறுவதன் பொருள் என்ன?

பதில்: பரமாத்மாவை அடைந்துவிட்ட யோகிக்கு மிகப் பெரும் போகங்களும், ஐசுவர்யங்களும், ரஸமற்றவையாகவும், துச்சமானவையாகவும் தோன்றுகின்றன. யோகி அவற்றை அடைய விரும்புவதில்லை. அவை கிடைத்தாலும், கைவிட்டுப் போனாலும் லக்ஷ்யம் செய்வதில்லை. தன்னுடைய நிலையிலிருந்து கொஞ்சமும் கலங்குவதில்லை. அதேபோல மிகப் பெரிய துக்கம் வந்தாலும் கலங்காமல் இருப்பான். இங்கு 'து:கேந' என்பதுடன் 'குருணா', 'அபி' என்ற சொற்களைச் சேர்த்து, "ஸாதாரண துக்கங்கள் கிடக்கட்டும். அவற்றை தைர்யமுடையவனும், ஸஹிப்புத்தன்மை உள்ளவனும்கூடத் தாங்கிக் கொள்ள முடியும். இந்த நிலை அடைந்துவிட்ட யோகியோ மிகவும் பயங்கரமான, பொறுக்க முடியாத துக்கங்களிலும் தன்னுடைய நிலையில் முற்றிலும் உறுதியாக, அசையாமல் நிற்கிறான்" என்ற கருத்தை பகவான் உணர்த்த விரும்புகிறார். ஆயுதங்களைக் கொண்டு அவயவங்களை வெட்டினாலும் சரி, மிகவும் பொறுக்க முடியாத குளிரோ, வெப்பமோ, மழையோ, மின்னலோ, உடலுக்குக் கஷ்டம் வருமாறு தாக்கினாலும், பொறுக்க முடியாத நோயின் துன்பமானாலும், மிகவும் ப்ரியத்திற்குப் பாத்திரமான மனிதரோ, பொருளோ தன்னை விட்டுப் பிரிந்தாலும் சரி, உலகியல் காரணமாக அவமானம், நிந்தை, புறக்கணிப்பு ஏற்பட்டாலும், இவை எல்லாமே ஒன்றாகச் சேர்ந்து வந்தாலும், எந்த நிலையிலும் அவன் கலங்குவதில்லை. இதற்குக் காரணம் பரமாத்மாவின் நேரிடை அனுபவம் பெற்ற பிறகு, உண்மையில் அந்த யோகிக்கு இவ்வுடலுடன் எந்தத் தொடர்பும் இருப்பதில்லை. உலகத்தினர்